A

# HISTORY OF ENGLAND

(IN TAMIL)

## PART II

## 1603—1929

20 JUN 1930

BY

R. NATESA AIYER, B.A., L.T.,
Senior History Assistant,
TOWN HIGH SCHOOL, KUMBAKONAM

---

Registered] 1930 [Price As. 12

# இங்கிலாந்தின் சரித்திரம்

## (இரண்டாம் பாகம்)

**1603–1929**

(For FORMS V & VI)

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்
தலைமைச் சரித்திர ஆசிரியர்
R. நடேச அய்யர்
இயற்றியது

பதிவு செய்தது]  1930  [விலை அணா 12

PRINTED AT

THE ROYAL PRINTING WORKS,

MOUNT ROAD, MADRAS.

186201

சென்னை-600 008

# முகவுரை

மனிதராகப் பிறந்தவர் ஒவ்வொருவரும் தமது அறிவைப் பெருக்கிக்கொள்ள முயல வேண்டியது மிகவும் அவசியமானது. அங்ஙனம் அறிவு பெருகத் துணை செய்வது சரித்திர நூல்கள். அவையும் தாய் மொழியில் அமைந்திருப்பது பலருக்கும் பயன் படுவதாகும்.

மனிதப்பிறப்பினுள் மாணுக்கர்களே பிற்காலத்தில் விசேஷப் பொறுப்பை வகிக்க வேண்டியவர்கள். ஒரு நாட்டின் முன்னேற்றம், அந்த நாட்டினரிடைத் தோன்றியுள்ள சமூகம், அரசியல், கைத்தொழில், வியாபாரம் ஆகியவற்றின் முற்போக்கைப் பொறுத்ததாயின், அந்த முற்போக்கிற்குற்ற வழிகளைத் தெரிவித்து வளர்ப்பது சரித்திர நூற்பயிற்சியே. அந்தச் சரித்திரத் தொகைகளில் மிகச்சிறந்தது இங்கிலாந்தின் சரித்திரமே.

நமது நாட்டிலே வருஷந்தோறும் சற்றேறக்குறைய பதினெண்ணுயிரம் பிள்ளைகள் S. S. L. C. பரீக்ஷைக்குக் கற்பிக்கப்படுகிறுர்கள். புதிய S. S. L. C. பரீக்ஷையின் அமைப்புப்படி எல்லாப் பிள்ளைகளும் இங்கிலாந்தின் சரித்திரத்தைப் படித்தாகவேண்டும். இதனை யன்றி C. Group என்ற பிரிவிலே சிறப்பாகவும் படிக்கலாம்.

இந்தப் புத்தகம் எனது மிக நீண்டகாலத்துச் சரித்திர போதனை செய்ததின் பயனுக வெளியிடப்படுகிறது. இதில் மாணுக்கர்களுக்குப் பெரிதும் இன்றியமையாதனவாகிய எல்லாச் சரித்திர சம்பந்தமான செய்திகளும்

குறைவின்றிக் கூறப்பட்டுள்ளன. தொடர்ச்சியாகக் கூறுவதற்குத் தடை செய்யக்கூடியனவும், சரித்திர ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவும் ஆகிய வேறு பல விஷயங்கள் "ஞாபகக் குறிப்பு" என்ற தலைப்பிலே அத்தியாயங்களின் கடைசியிலே சேர்க்கப்பட்டுள்ளன. ஒரே விஷயம் அவசியங்கருதியும், மாணாக்கர்களின் மனத்தே இனிது பதிய வேண்டியது கருதியும் அவசியமான இடங்களில் திரும்பியும் கூறப்பட்டுள்ளன. சரித்திரக் கல்விக்கு இன்றியமையாதனவாகிய பல படங்களும், வம்சாவளிகளும், உருவப் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இச் சரித்திரத்தின் முதல் பாகம் நாலாவது பாரத்து மாணவர்களுக்கும் இரண்டாம் பாகம் ஐந்தாவது ஆறுவது பாரத்து மாணவர்களுக்குமாக இயற்றப்பட்டன.

பல நண்பர்களுடைய வற்புறுத்துதலின்பேரில் மிகச் சுருங்கிய காலத்தில் அவசரமாக இந்தப் புத்தகம் எழுதி வெளியிடப்படுதலின் இதில் பல குறைபாடுகள் காணப்படலாம். அவற்றை அன்பர்கள் எடுத்துக் காட்டினால் வந்தனத்துடன் அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்வேன்.

இப்புத்தகத்தை வெளியிடுவதில் உதவி செய்த எங்கள் பாடசாலை தமிழ் பண்டிதர்களாகிய ம-া-া-ஸ்ரீ அ. பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கும், ம-া-া-ஸ்ரீ ஊ. சா. வேங்கிடராமய்யர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

எனது இந்த முயற்சியை ஆதரித்து நான் செய்யக் கருதியிருக்கும் வேறு பல தமிழ் வெளியீடுகளையும் வெளியிட முயலுமாறு ஊக்கமளிக்கும்படி ஆசிரியன்மார்களை வேண்டிக்கொள்கிறேன்.

R. நடேச அய்யர்.

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| I. | முதலாவது ஜேம்ஸ் ... ... | 1 |
| II. | முதலாவது சார்லஸ் ... ... | 19 |
| III. | முதலாவது சார்லஸ் (தொடர்ச்சி) ... | 28 |
| IV. | கிராம்வெல் ... ... ... | 44 |
| Va. | இரண்டாவது சார்லஸ் ... .. | 53 |
| Vb. | இரண்டாவது ஜேம்ஸ் ... ... | 58 |
| VI. | மூன்றாவது வில்லியம் ... ... | 65 |
| VII. | ஆன் மகாராணி ... ... | 81 |
| VIII. | முதலாவது ஜார்ஜ் ... ... | 92 |
| IX. | இரண்டாவது ஜார்ஜ் ... ... | 97 |
| X. | மூன்றாவது ஜார்ஜ் ... ... | 116 |
| XI. | மூன்றாவது ஜார்ஜ் (தொடர்ச்சி) ... | 129 |
| XII. | தொழிற்புரட்சி ... ... | 147 |
| XIII. | நான்காவது ஜார்ஜ் ... ... | 152 |
| XIV. | நான்காவது வில்லியம் ... ... | 157 |
| XV. | விக்டோரியா மகாராணி ... ... | 161 |
| XVI. | விக்டோரியா மகாராணி (தொடர்ச்சி) ... | 176 |
| XVII. | ஏழாவது எட்வர்ட்-ஐந்தாவது ஜார்ஜ் ... | 185 |

| என் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| XVIII. | குடியேற்ற நாடுகள்—புதிய தந்திரம்—கானடா — ஆஸ்திரேலியா — நியூஸீலெண்டு—அயர்லாண்டு—தென் ஆப்பிரிக்கா—எகிப்த்-ஸூடான்—இந்தியா ... | 195 |
| XIX. | மக்களின் நிலைமை ... ... | 212 |
| XX. | ஐரோப்பிய மஹா யுத்தம்... ... | 218 |

# படங்கள்

1. பெரிய உள்நாட்டுப் போர் படம்.
2. அயர்லாந்துக் கலகம்.
3. ஸ்பானிஷ்வார்ச் போர்.
4. "நாற்பத்தைந்து."
5. அமெரிக்கா சுயாதீனப் போர்.
6. பிரஞ்சுப் புரட்சிப் போர்.
7. தீபகல்பப் போர்.
8. க்ரிமியாப் போர்.
9. போயர் சண்டை.

20 JUN 1930

# உருவப்படங்கள்

1. ஐந்தாவது ஜார்ஜ் மன்னர்.
2. க்ராம்வெல்.
3. வால்போல்.
4. நெல்ஸன்.
5. வெல்லிங்டன்.
6. விக்டோரியா மகாராணி.
7. கிளாட்ஸ்டன்.
8. டிஸ்ரேலி.
9. ஏழாம் எட்வேர்ட்.



ஐந்தாவது ஜார்ஜ்

உ

கடவுள் துணை

# இங்கிலாந்தின் சரித்திரம்.

## (இரண்டாம் பாகம்.)

### முதலதிகாரம்.

---

### ஸ்டூவர்ட் குடும்பம்.

### முதலாவது ஜேம்ஸ் 1603-25.

இங்கிலாந்தின் சிறந்த அரசியாக இருந்து அதனை இதுவரையில் (1558—1603) ஆண்டுவந்தவர் எலிஜபெத் மகாராணியார்.* அவர் 1603ம் வருஷம் மார்ச்சு மாதம் 23-ம் தேதியில் இறைவனடியைச் சேர்ந்தார்.

எலிஜபெத் மகாராணிக்குக் குழந்தைகள் இல்லாத பக்ஷத்தில் தனது இளைய சகோதரியின் வார்சுகள், இங்கிலாந்தின் பட்டத்திற்கு வரவேண்டும் என்பது எட்டாவது ஹென்ரியின் ஏற்பாட்டின்படி வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், தான் சாகும்காலத்தில் தனக்குப் பிறகு ஸ்காட்லாண்டு தேசத்து அரசனாகிய ஆறாவது ஜேம்ஸ் வரவேண்டுமென்று எலிஜபெத் தீர்மானித்திருந்தாள். ஜனங்களும் இந்தத் தீர்மானத்தை ஒப்பினமையால் அவனும் இங்கிலீஷ் அரசனான முதலாவது ஜேம்ஸ் ஆனான். இவன் எட்டாவது ஹென்ரியின் மூத்த சகோதரி மார்க்காரேட் என்பவளுடைய சந்ததியாவான்.

---

*இந்த முன்னை வரலாறு 'முதற்பாகம்' என்ற தனிப் புத்தகத்தில் இருக்கிறது.

20. JUN 1930

## ஸ்டுவர்ட் குடும்பம்.

| | | | |
|---|---|---|---|
| முதலாவது ஜேம்ஸ் | ... | ... | 1603-1625 |
| முதலாவது சார்லஸ் | ... | ... | 1625-1649 |
| குடியரசு ... | ... | ... | 1649-1660 |
| இரண்டாவது சார்லஸ் | ... | ... | 1660-1685 |
| இரண்டாவது ஜேம்ஸ் | ... | ... | 1685-1688 |
| மூன்ருவது வில்லியமும் மேரியும் | | ... | 1689-1702 |
| ஆன் ... | ... | .... | 1702-1714 |

## ஹானேவர் குடும்பம்.

| | | | |
|---|---|---|---|
| முதலாவது ஜார்ஜ் | ... | ... | 1714-1727 |
| இரண்டாவது ஜார்ஜ் | ... | ... | 1727-1760 |
| மூன்ருவது ஜார்ஜ் | ... | ... | 1760-1820 |
| நான்காவது ஜார்ஜ் | ... | ... | 1820-1830 |
| நான்காவது வில்லியம் | ... | ... | 1830-1837 |
| விக்டோரியா மகாராணி | ... | ... | 1837-1901 |

## வேக்ஸிகோபர்க் அரசர்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஏழாவது எட்வர்ட் | ... | ... | 1901-1910 |
| ஐந்தாவது ஜார்ஜ் (வின்சர் வம்சம் என்று இப்பொழுது மாற்றி அழைக்கப்படுகிறது.) | | | 1910 |

ஏழாவது ஹென்ரி 1485—1509.

எட்டாவது ஹென்ரி 1509—1547

நான்காவது ஜேம்ஸ் = மார்க்காரெட் = ஆங்கஸ் பிரபு

ஐந்தாவது ஜேம்ஸ்

மார்க்காரெட்-லென்ணாக்ஸ் பிரபு

ஸ்காட்லெண்டு அரசி மேரி =

டாண்லி பிரபு

சார்லஸ்

அரெபெல்லா ஸ்டுவர்ட் = சேமோர்

ஆறாவது ஜேம்ஸ் (ஸ்காட்லெண்டு) அல்லது முதலாவது ஜேம்ஸ் (இங்கிலாந்து)

20 JUN 1930

## ட்யூடர் வல்லரசின் முடிவு.

ட்யூடர் அரசர்களின் காலத்தில் உள்நாட்டுக் கலகத்தை அடக்கும் பலமுள்ள அரசர்கள் வேண்டுவதாயிருந்தது. இங்கிலீஷ்காரர் தங்களுடைய வியாபாரத்தை அமெரிக்காவிலும் வெளியிடங்களிலும் நடத்த வேண்டுமானுல் அதற்கு இங்கிலாந்தின் அரசர்கள் ஸ்பெயினை அடக்க வல்லவர்களாக இருத்தல் வேண்டும். இவற்ருல் ட்யூடர் வல்லரசு அவசியமாயிருந்தது. எலிஜபெத் மகாராணி இறக்கு முன் மேற்கூறிய எண்ணங்கள் நிறைவேறிவிட்டமையால் இனி வல்லரசு அவசியமில்லை. மேலும், எலிஜபெத் காலத்தில் மதபேதகர்கள் உண்டானுர்கள். அவர்கள் கடவுளைத் தங்கள் இஷ்டம்போல் தொழ முடியாதவர்களானுர்கள். பிறகு பார்லிமெண்டுடன் சேர்ந்து அவ்வுரிமையை அடையலாம் என்கிற எண்ணம் அவர்களுக்கு வந்தது. மேலும் ஜனங்களும் ராஜீய விஷயங்களில் தங்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்று எண்ணிவந்தார்கள். அரசர்களும் தங்களுடைய உரிமைகளை விட மனமில்லாதவர்களாயிருந்தார்கள். ஆதலால், பார்லிமெண்டுக்கும் அரசர்களுக்கும் ஸ்டுவர்ட் அரசர்காலத்தில் விவாதம் ஏற்படுமென்பது நிச்சயமாகிவிட்டது. இதனுல் ஸ்டுவர்ட் அரசர்கள் காலத்தை 'அரசர்களுக்கும் பார்லிமெண்டுக்கும் விவாத காலம்' என்பார்கள்.

## ட்யூடர் காலத்தில் ஏன் விவாதமில்லை ?

ட்யூடர் அரசர்கள் வலிமையுள்ளவர்களாகவும், யூகமுள்ளவர்களாகவுமிருந்தார்கள். ஸ்டுவர்ட் அரசர்கள் இவைகளில்லாதவர்களா யிருந்தார்கள். முதலாவது ஜேம்ஸும் அவனுடைய சந்ததியார்களும் 'ராஜ்யம் தங்களுக்குக் கடவுளால் ஆளக்கொடுக்கப்பட்ட தாதலினுல் தாங்

கள் கடவுளுக்கு வகை சொல்லவேண்டியவர்களே ஒழி யப் பார்லிமெண்டு தங்களை ஒன்றும் கேட்க அதிகார முள்ளதாகாது. தங்களுக்கு விருப்பமிருந்தால் பார்லிமெண் டைக் கூட்டலாம்; இல்லாவிட்டால் கூட்டவேண்டுவதில்லை' என்று எண்ணினார்கள். இதைத்தான் 'கடவுள் உரிமை' என்பார்கள். ட்யூடர் அரசர்கள் இக் கொள்கையைக் கொள்ளவில்லை. மேற் கூறிய உரிமையைக் கொண்டாடு வதில் மதஸ்தாபகர்கள் இவர்களுக்கு உதவியாயிருந்தார் கள். ஆதலால், கோவிலுக்குக் குருமார்கள் எவ்வளவு அவ சியமோ அவ்வளவு ராஜ்யத்திற்கு அரசர்கள் அவசியமாகும் (No bishop-no king) என்றான் அரசன். ட்யூடர் அரசர் களுக்குப் பணத் தேவையில்லை. ஆனால் ஸ்டுவர்ட் அரசர்க் குப் பணத்தேவை அதிகமாயிருந்தமையால் பார்லிமெண் டுக்கும் அரசர்களுக்கும் விவாதம் உண்டாயிற்று. ட்யூடர் அரசர்கள் காலத்தில் ஜனங்களுக்கு வியாபாரமே முக்கிய கருத்தாகும். ஸ்டுவர்ட் அரசர்கள் காலத்தில் ஜனங்களுக்கு ராஜ்ஜியத்தில் அதிகாரம் வேண்டுமென்பது முக்கிய எண்ணமாகும். அரசர்களுக்கு அதைக்கொடுக்க மனமில்லா ததால் சண்டை ஏற்படும் என்பது நிச்சயமாகும்.

ஸ்டுவர்ட் அரசர்கள் 'கடவுள் உரிமை'யைக் கொண்டா டித் தம்முடைய இஷ்டம்போல் ஆண்டுவந்த ஆக்ஷியைத் 'தன்னரசு' முறை என்பார்கள். ஆனால், இவர்கள் ஆளுகைக் கும் ட்யூடர் ஆட்சிக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ட்யூடர் அரசர்கள் பார்லிமெண்டைக் கேட்காமலும், சட்டங்களுக் கும் தேசவழக்கத்திற்கும் விரோதமாகவும் ஒன்றையும் செய்வதில்லை. பார்லிமெண்டும் அக்காலத்தில் இவர்கள் சொல்படி நடந்துவந்தது. அவர்களும் ஜனங்களுடைய க்ஷே மத்தைக் கருதி ஆண்டுவந்தார்கள். ஆனால், ஸ்டுவர்ட் அர சர்கள் பார்லிமெண்டைக் கூட்டாமலும், கடவுள் உரிமை

யைக் கொண்டாடித் தேசவழக்கங்களையும் சட்டங்களையும் மறுத்தும் கொடுமையாக ஆண்டுவந்தார்கள்.

## ஹாம்ப்டன் கோர்ட் ஆலோசனைச் சங்கம்.

அரசன், இங்கிலாந்திற்கு வருவதற்கு முன் ஸ்காட்லெண்டில்இருந்த பரிசுத்த மதக்கொள்கையில் வளர்ந்தவன். மதப்புத்தகங்களைப் படித்திருந்த போதிலும் உலக நடவடிக்கைகளில் முற்றிலும் தெரியாதவனுயிருந்தான். இவன் ஸ்காட்லெண்டில் இருந்தவன் ஆதலால் பரிசுத்தர்கள் தங்களுடைய வேண்டுகோள்களைக் கொடுப்பான் என்று ஆயிரம் கையெழுத்துள்ள விண்ணப்பத்தைச்செய்துகொண்டு பாவனைகளைத்தள்ளும்படி வேண்டினார்கள். அவன் இதை ஆலோசிக்க 'ஹாம்ப்டன் கோர்ட் சங்கம்' ஒன்றை ஏற்படுத்தினன். இதில் 'அதிகாரம் பெற்ற வேத புஸ்தகம்' வெளிப்பட்டது ஒன்று தவிர வேறு ஒன்றும் முடியவில்லை.

## இங்கிலாந்தும் ஸ்காட்லெண்டும்.

ஜேம்ஸ் க்ரேட்பிரடனின் முதலரசன் ஆனன். ஆனபோதிலும் இவன் தனிப் பார்லிமெண்டுகளை வைத்து ஆண்டு வந்தான். இரண்டு பார்லிமெண்டுகளை ஒன்று சேர்க்க முயன்ற இவனுடைய முயற்சி வீணாய் விட்டது. இருதேசத்தவர்களும் ஒருவரை ஒருவர் நம்பாதவர்களாய் இருந்தார்கள். ஆனல் இங்கிலாந்தில் பிறந்த ஸ்காட்ஸ்கள் ஜேம்ஸ் பட்டம் அடைந்தபின் இங்கிலீஷ்காரர்களுக்குள்ள உரிமையை அடைந்தார்கள்.

ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்ததும் ஸெஸில் என்பவனை மந்திரியாக நியமித்தான். இதில் இஷ்டமில்லாத ஸர். வால்டர் ரெலே, அரபெல்லா ஸ்டுவர்ட்டைப் பட்டத்தில் வைக்க முயன்றான். காதொலிக்குகள், பலத்தினல் உரிமைகளை

அடைய யோசித்தார்கள். முன் சொன்னது பெரியசதி என்றும், பின் சொன்னது சிறியசதி என்றும் சொல்லப் படும். இதில் சம்பந்தப் பட்டவர்கள் கொடுமையான தண்டனையை அடைந்தார்கள். ரலே சிறையிலிருக்கும் போது அரசனுக்குத் தென் அமெரிக்காவிலிருந்து தங்கம் கொண்டு வருவதாகச் சொன்னதின்பேரில் அவன் சிறையி லிருந்து விடுவித்து அனுப்பப்பட்டான். ஆனால், ஸ்பானிஷ் காரர்களுடன் சண்டை போட்டதற்கு உதவியாக ஒன்றுமில்லாமல் திரும்பி வந்தவுடன் கோபங் கொண்டு கொலை செய்யப்பட்டான். இவன்தான் உருளைக்கிழங்கை யும் புகையிலையையும் அமெரிக்காவிலிருந்து முதலில் இங்கிலாந்திற்குக் கொண்டுவந்தவன்.

வேடிமருந்துச்சதி 5. நவ. 1605. ஜேம்ஸ் காதொலிக் மதத்தில் வைராக்கியமுள்ள ஸ்காட்லெண்டு அரசியான மேரியின் புதல்வன். ஆதலால் காதொலிக்குகள் தங்களுக்கு இஷ்டம்போல் கடவுளைத்தொழ அனுமதி கொடுப்பா னென்று எண்ணி அவனுடைய வரவை நல்வரவாகப் போற் றினார்கள். ஆனால் இவன் இங்கிலாந்திற்கு வந்தபின் இங்கி லீஷ்காரர்களைச் சந்தோஷப்படுத்த ஆங்கிளிகன் மதத் தைத் தழுவிவந்தான். இவனுக்கு மனத்தில் காதொலிக்கு களுக்குச் சாதகம் செய்ய வேண்டும் என்ற எண்ணமிருந்த போதிலும் பார்லிமெண்டில் பரிசுத்தர்கள் பெரும்பான்மை யாயிருந்தமையால் எதுவும் செய்வது அசாத்தியமாகியது. மதவிஷயத்தில் தன்னை மேலானவன் என்று ஒப்பாததால் காதொலிக்குகளுக்கு விரோதமாயிருந்த சட்டங்களைப் பார்லிமெண்டுடன் சேர்ந்து கொண்டு கட்டாயப் படுத்தி னான். இதில் கஷ்டமடைந்த காதொலிக்குகளில் கைபாக்ஸ் (Guyfawkes) முதலான சிலர் கூடி அரசனையும் பார்லி மெண்டையும் வெடிமருந்தால் தொலைக்கச் சதியாலோசனை

செய்தனர். பார்லிமெண்டுக் கட்டடத்தின் கீழே உள்ள அறைகளை வாடகைக்கு வாங்கி வெடிமருந்தை அவைகளில் சேர்த்து நவம்பர் மீ 5ல் பார்லிமெண்டு கூடும் தினத்தில் கொளுத்துவதாக யோஜனை முடிந்திருந்தது. இந்தக் கூட்டத்திலே சேர்ந்த ஒருவன் தனது சினேகிதனை ஒரு பார்லிமெண்டுமெம்பருக்கு அன்றைத்தினம் அங்கு வராமலிருக்குமாறு எழுதின கடிதத்திலிருந்து விஷயம் வெளியாகி அச்சதியில் சம்பந்தப் பட்டவர்கள் பிடி பட்டார்கள். குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை ஏற்பட்டதுமல்லாமல் இது முதல் காதொலிக்குகளுக்கு விரோதமாகக் கடினமான பல சட்டங்களும் ஏற்படுத்தப் பட்டன. பிறகு நடக்கும் சதிகளில் இவர்கள் சம்பந்தம் இருக்குமோ என்று சந்தேகமும் இருந்து கொண்டிருந்தது. இங்கிலாந்தில் பள்ளிக்கூடங்களில்மாணுக்கர்கள்நவம்பர் 5-ம் தேதி நடந்தவெடிமருந்துச் சதியைச் செய்யுள் மூலமாய் மனப்பாடம் செய்வதுண்டு.

பரிசுத்தயாத்திரிகர்கள் 1620. ஜேம்ஸ் 25 வருஷ காலம் ஸ்காட்லெண்டி லிருந்தமையால் தங்களை இஷ்டம் போல் கடவுளைத் தொழ விடுவானென்று தாங்கள் எண்ணினது வீணான காரியமென்பதைப் பரிசுத்தர்கள் தங்களுடைய விண்ணப்பத்தின் கதியிலிருந்து நன்கு தெரிந்து கொண்டார்கள். ஹாலெண்டுக்குச் சென்று திரும்பி வந்ததும் இன்னும் அநேகருடன் சேர்ந்து கடவுளை இஷ்டம் போல் தொழ வேண்டி மே ப்ளவர் (May-flower) என்ற கப்பலில் ஏறி யாத்திரை செய்து அமெரிக்காவில் இறங்கி அங்கே குடியேறினர்கள். அந்த நாடுகளை நியூ இங்கிலாந்து நாடுகளென்று நாம் அழைக்கிறோம். முன்னே சென்றிருந்தவர்களின் சந்ததியார்கள், அவர்களுடைய மத விசுவாசத்தை மதித்து அவர்களைப் பரிசுத்த யாத்திரிகர்கள் என்று அழைப்பார்கள்.

**அல்ஸ்டர் குடியேற்றம் 1611.** எலிஜபெத் மகாராணி காலத்தில் தான் அயர்லாந்து முற்றிலும் இங்கிலீஷ் ஆளு கையின் கீழ்வந்தது. ஜேம்ஸ் எலிஜபெத்தைப் பார்த்துக் கொண்டு, தானும் இங்கிலீஷ்காரர்களை அயர்லாந்தில் குடி யேறும்படி செய்தாலொழிய அயர்லாந்தை ஆளுவது கஷ்ட மென்பதைக் கண்டுகொண்டான். ஆகையால் இங்கிலீஷ்ப் பிராடெஸ்டெண்டுகளுக்கு அயர்லாந்தின் வடபாகமாகிய அல்ஸ்டரில் உள்ள நிலங்களைக் கொடுத்து அவர்களைக் குடி யேறச்செய்தான். அங்குள்ள ஐரிஷ் காதொலிக்குகள் தங்க ளுடைய நிலங்கள் அவ்வளவு செழுமையுள்ளனவாக இல்லா விடினும் அவற்றைத் தங்களைவிட்டுப் பறித்ததனால் மிகவும் வருத்தம் கொண்டார்கள். மேலும் இப்படி மதத்திலும் ஜாதியிலும் வேறுபாடுள்ள இங்கிலீஷ் பிராடெஸ்டெண்டு கள், பெரும்பான்மையோர்களாகிய கெலடிக்கதொலிக்கு களுக்கு மத்தியில் இருப்பது இருதிறத்தாருக்கும் கஷ் டத்தை உண்டாக்கியது. இதுமுதல் நானூறு வருஷகாலங் கள் இங்கிலீஷ் துரைத்தனத்தார் அயர்லாந்தை ஆளுவதில் பட்ட கஷ்டம் இவ்விஷயத்திலிருந்து தான் என்பது நன்கு புலப்படும். 1922-ம் வருஷத்தில் அயர்லாந்திற்குச் சுயராஜ் ஜியம் கொடுத்த பிறகு தான் இங்கிலீஷ் மந்திரிகளுக்கு மனக்கவலை நீங்கியது.

**ஜேம்ஸும் பார்லிமெண்டும்.** ஜேம்ஸ் 22 வருஷம் ஆண் டான். இக்காலத்தில் நான்கு முறைகளிலே பார்லிமெண்டு களைக் கூட்டினான். அவன் ஏற்கனவே சொல்லிவந்தபடி இங்கிலாந்து, ஸ்காட்லெண்டு ஆகிய இரண்டு பார்லிமெண்டு களையும் ஒன்று சேர்க்க முயன்றபோதிலும், பார்லிமெண்டு கள் சம்மதிக்கவில்லை. மதவிஷயத்திலும், அரசனுக்கும் பார்லிமெண்டுக்கும் ஒற்றுமை குறைவாக விருந்தது. ஜேம்ஸ் இங்கிலாந்திற்கு வந்தபின் ஆங்கிளிகன் மதத்தில்

சேர்ந்துகொண்டான். குருமார்கள் "கடவுள் உரிமை"யை ஆதரித்ததால் "குருமார்கள் இல்லையேல் மதமும் இல்லை; அரசனில்லையேல் ராஜாங்கமும் இல்லை" என்றும், பரிசுத்தர்கள் இதற்கு விரோதமாகையால் அவர்களைத் தேசத்தை விட்டுத் துரத்தச் சித்தமாகவிருப்பதாகவும் சொல்லி வந்தான். பார்லிமெண்டார் பரிசுத்தர்களிடத்தில் அனுதாபம் காண்பித்தார்கள். அரசன் பண விஷயத்தில் உதாரியாகவிருந்து அதிக வரிகளைப் போடக் கூடாது என்று பார்லிமெண்டு சொல்லி வந்தது. அரசனோ தன்னுடைய உரிமையைக் கூறிக்கொண்டு இஷ்டம் போல நடத்த முயன்றான். முடிவில் வெளியூர் விஷயங்களில் அரசன் பார்லிமெண்டின் புத்திமதியைக் கேட்க விருப்பமில்லாதவனாயிருந்தான். விவரமாய்க் கவனித்துப் பார்ப்போமானால் முதல் இரண்டு பார்லிமெண்டுகள் உள்ளூர் விஷயத்தையும், பின் இரண்டும் வெளியூர் விஷயத்தையும் ஆராய்ச்சி செய்தன என்று சொல்லலாம்.

முதல் பார்லிமேண்டு 1604-11. முதல் பார்லிமெண்டு, அரசன் தன்னுடைய இஷ்டம் போல் ஏற்றுமதி இறக்குமதி வரிகளைப் போடக் கூடாது என்ற நிபந்தனைகளை 1362-ம் வருஷத்தில் ஏற்படுத்தியது. வெகு காலமாக அரசர்களும் அநேக வழிகளில் வருமானங்களை அடைந்து வந்தார்கள். உம்பள முறைப்படி பிரபுக்கள் அளிக்கும் காணிக்கைகள், அரண்மனை நிலங்களின் வருமானம், ஆயுள் முழுவதும் அடையக் கூடிய ஏற்றுமதி-இறக்குமதி வரிகள், கட்டாயக் கடன்கள், பட்டம் அளித்தல் முதலியனவே மேற் கூறிய வழிகளாம். இம்முறையில் ஏற்றுமதி இறக்குமதி வரிகளைப்பற்றி ஒரு விவாதம் ஏற்பட்டது. குறிப்பிட்ட சாமான்களுக்கு வழக்கமாக ஏற்பட்ட

திட்டத்தின்படி வரி வசூல் செய்யும் பக்ஷத்தில் எவ்விதமான ஆக்ஷேபனையும் ஏற்படக்காரணமில்லை. ஆனால் அரசன் தான் அப்போது கொண்டாடிவந்த உரிமைப்படி எல்லாவித சாமான்களுக்கும் தன்னுடைய இஷ்டம்போல் வரி விதிக்கும் பாத்தியம் தனக்கு உண்டு என்று சொல்லிக்கொண்டு, சிறிய ஆசியாவிலிருந்து வந்து இறங்கின ஒருவகைப் பழத்தின் வற்றலுக்குப் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் வரிபோட்டான். இப் படிச் செய்வது பெரிய உரிமைப் பத்திரத்திற்கு மாறுதலாகும் என்று கருதிய பார்லிமெண்டு இவ்வரியைப் 'புதுச் சுமத்தல்' (New imposition) என்று கூறியது. அரசன் தனக்கு வரும் உம்பள முறை வருமானத்தை வருஷாந் தரப் பணத்தைப்பெற்றுப் பார்லிமெண்டிற்கு விற்று விடுவதாக விலை கூறினான். ஆனால் இது நிறைவேறவில்லை.

இரண்டாவது பார்லிமேண்டு 1614. அரசனின் சினேகிதர்கள் ஒரு சாதகமான பார்லிமெண்டை அமைப்பதாகச் சொல்லி யிருந்த போதிலும், இப் பார்லிமெண்டு அரசனிடத்தில் இருந்த கோபத்தினால் ஒரு வேலையையும் செய்ய இடங் கொடுக்கவில்லை. ஆகையால், இதைப் 'பதனிழந்த பார்லிமெண்டு' என்பார்கள்.

1612-ம் வருஷத்தில் அரசன் செங்கோல் செலுத்தும் வழியை மாறும்காலம் என்று சொல்லலாம். இதுவரையிலும் அரசன் மந்திரி ஸெஸிலின் (Robert Cecil) புத்தி மதிப் படி அரசு செலுத்திவந்தான். ஸெஸில் அனுபோக

## ட்யூடர்—ஸ்டுவர்ட் வம்சங்கள்.

- எழாவது ஹென்ரி
  - எட்டாவது ஹென்ரி
    - ஆருவது எட்வர்ட்
    - ட்யூடர் மேரி
    - எலிஜபெத்
  - மார்காரெட்-நான்காவது ஜேம்ஸ் (ஸ்காட்லாண்டு)
    - ஐந்தாவது ஜேம்ஸ்
      - ஸ்காட்லெண்டு மேரி—டாண்லி பிரபு
        - ஆருவதுஜேம்ஸ்(ஸ்காட்லெண்டு) அல்லது முதலாவது ஜேம்ஸ் (இங்கிலாந்து)
          - முதலாவது சார்லஸ்
          - எலிஜபெத்-பிரடெரிக் (பாலாடினேட்)
            - ரூபர்ட்
            - சோபையா (ஹானேவர்)

மும், சாமர்த்தியமும் உள்ளவனுதலால், அரசனை இஷ்டம் போல்அதிகமாகப் போகாவண்ணம் தடுத்துவந்தான். வெளி நாட்டிலும், இங்கிலாந்தின் மதிப்புக் குறையாம லிருக்கச் செய்தான். இவனுடைய முயற்சியால் அரசனின் பெண்ணுன எலிஜபெத் ஜர்மனியிலிருக்கும் ப்ராடெஸ்டெண்டான பிரெடரிக்கை மணம்புரிந்து கொண்டாள். இவன் தானிருந்தவரையிலும் எலிஜபெத் மகாராணியின் வழியாகிய பிரான்சுடன் சிநேகமும், ஸ்பெயினுடன் பகையுமில்லாமலிருத்தல் என்ற தந்திரத்தை அனுசரித்து வந்தான். இவன் 1612-ம் வருஷத்தில் இறந்ததும் அரசன் ஒன்றும் தெரியாத சிநேகிதர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டான். உள்நாட்டு விஷயங்களைச் சரிவரநடத்தத் திறமையில்லாமையால் இங்கிலாந்தின் கீர்த்திக்கு வெளியிடங்களில் குறைவுவந்தது. இதுமுதல் அரசனும் தன்னுடைய மகனுன சார்லஸுக்கு ஸ்பெயின்தேசத்தரசன் மகளை மணம் புரியக் கருதினுன். ஆனுல், ஜனங்களுக்கு அரசனுடைய வழி சரியாய்த் தோன்ற வில்லை. அரசனுக்குப் பணத்திற்கிருந்த கஷ்டம், ஸர். வால்டர் ரெலே (Raleigh) என்பவனை அமெரிக்காவுக்கு அனுப்பும்படி செய்தது. அவன் ஏற்கனவே பெரிய சதி (Main plot) யில் சம்பந்தப்பட்டதற்குத் தண்டிக்கப்பட்டவன். தென் அமெரிக்காவிலிருந்து தங்கம் கொண்டுவருவதாகச் சொன்னதின்பேரில் ரெலே விடுவிக்கப்பட்டான். இவன்போகும்போது ஸ்பானிஷ் காரர்களுடன் விரோதித்துக் கொள்ளக் கூடாது என்கிற நிபந்தனையின் பேரில் அனுப்பப்பட்ட போதிலும், இவன் பணமில்லாமல் வந்தமையாலும், ஸ்பெயினுடன் விரோதித்துக்கொண்டுதிரும்பினமையாலும் அரசன் பழைய குற்றத்தைக்கொண்டு கொலைத் தண்டனையை நிறைவேற்றினுன். இப்படி ஸ்பெயினுக்காக ரெலே இரையானுன்.

மூன்றுவது பார்லிமேண்டும் (1261), முப்பது வருஷப் போரும். 1618-ம் வருஷத்தில் ஐரோப்பாவிலுள்ள பிராடெஸ்டெண்டுகள் ஜேம்ஸின் மருமகனுகிய பிரெடரிக்குக்குப் பொஹிமியாப் பட்டத்தை அளித்தார்கள். ஆனுல், காதொலிக்குகள் ஸ்பெயினின் உதவியால் காதொலிக் பெர்டினெண் (Ferdinand) டைப் பொஹிமியாவின் அரசனுகக் கொண்டாடி வந்தார்கள். இங்கிலீஷ் அரசனுக்கு ஸ்பெயினின் மனஸ்தாபம் கூடாது என்று இருந்தமையால் பிரெடரிக் ஒருவித உதவியையும அடையவில்லை. இம் மதச்சண்டை முப்பது வருஷ காலம் நடந்தமையால் இதை முப்பது வருஷத்து (1618-48)ப் போர் என்று சொல்லுவார்கள். இங்கிலீஷ் ஜனங்களுக்குப் பிரெடரிக்குக்கு உதவி புரியவேண்டுமென்று இருந்தமையால் அநேகர்கள் ஜர்மனிக்குச் சென்றுர்கள். ஆனுல் பிரெடரிக் சண்டையில் தோல்வியுற்றதுடன் தனது சொந்த ராஜ்ஜியத்தையும் இழக்கும் தருணம் வந்தது. இப்போது அரசன் உதவி புரியப் பார்லிமெண்டைக் கூட்டினுன். சுமார் $6\frac{1}{2}$ வருஷகாலமாகக் கட்டாயக் கடன், ஏற்றுமதி இறக்குமதி வரிகள், பாரொனெட் (Baronet) புதுப் பட்டம் என்றவற்றைச் சிருஷ்டிசெய்து இவைகளால்பொருள்தேடிக்கொண்டு அரசன் பார்லிமெண்டைக் கூட்டாமல் காலம் கழித்தான். இந்தப் பார்லிமெண்டு அரசன் எண்ணத்திற்கு மாறுனது. சண்டையின் விவரத்தையும், தனது மகனுக்கு ஸ்பெயின் அரசனது மகளை மணம் புரிய எண்ணினதையும் பார்லிமெண்டுக்கு அரசன் சொல்லச் சம்மதிக்காததலால் பார்லிமெண்டும் பேச்சுச் சுயாதீனத்தைப் பற்றி ஒரு தீர்மானம் செய்தது. அரசன் இதில் கோபம் கொண்டு தீர்மானப் புஸ்தகப் பக்கத்தைக் கிழித்து விட்டான். மேலும், அரசனின் மந்திரிகளைப் பார்லிமெண்டு குற்றம் சாட்டிற்று.

பேகன் என்ற நியாயாதிபதி லஞ்சம் வாங்கினதாகவும், மாம்பீசன் 'அரசனது பொருள் விற்கும் தனி உரிமை'யை திரும்பக்கொண்டுவந்ததாகவும் அவ்விருவர்களும் குற்றம் சாட்டப் பட்டார்கள். அரசன் வெறுப்பினால் பார்லிமெண்டைக் கலைத்தான்.

நான்காவது பார்லிமெண்டு 1624. ஜேம்ஸ் தனது மகன் சார்லஸுக்கு ஸ்பானிஷ் அரசன்மகளை மணம்புரிந்துகொள்ளவேண்டி மகனையும், சிநேகிதனை பக்கிங்ஹாம் பிரபுவையும் ஸ்பெயினுக்கு அனுப்பினான். ஸ்பானிஷ் அரசன் சம்மதியாததால், அரசன் கோபம் கொண்டு ஸ்பெயினுடன் போர் புரிய நிச்சயித்தான். இதை எதிர்த்த அரசனுடைய பொக்கிஷ மந்திரி(Earl of Middlesex)யைப் பார்லிமெண்டு குற்றம் சாட்டிற்று. 'அரசனின்பொருள் விற்கும் தனி உரிமை' யைமுற்றிலும் சட்டத்திற்கு விரோதம் என்று கூறிய பார்லிமெண்டு ஸ்பெயினுடன் சண்டை செய்வதற்கு வேண்டிய உதவியை அரசனுக்கு அளித்தது. இந்த ஒரு பார்லிமெண்டுதான் அரசனுடன் விவாதிக்காமல் சிநேகத்துடன் நடித்தது. ஜேம்ஸும் தனது மகன் சார்லஸுக்குப் பிரஞ்சு அரசனின் சகோதரியாகிய மேரியா என்பவளை மணந்து கொள்வதாக உடன்படிக்கை செய்தான். தனது சகோதரி காதொலிக் மதத்தைத்தழுவவும், இங்கிலாந்தில் உள்ள காதொலிக்குகளுக்குக் கடவுளைத் தொழவும் அரசன் சுயாதீனம் அளித்தால், பிரஞ்சு மன்னனும் ஸ்பெயினுடன் சண்டைசெய்ய உதவி அளிப்பதாக வாக்கு அளித்தான்.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத்தேதிகள்.

| | | |
|---|---|---|
| ஹாம்ப்டன் கோர்ட், மத ஆலோசனைச்சங்கம் | ... | 1604 |
| வெடிமருந்துச்சதி | ... | 1605 |
| வெர்ஜினியா ஸ்தாபிக்கப்பட்டது | ... | 1607 |

| | | |
|---|---|---|
| அல்ஸ்டரில் குடியேறினது | ... | 1611 |
| ரெலே கொலை செய்யப்பட்டது | ... | 1618 |
| பரிசுத்த யாத்திரிகர்களின் பிரயாணம் | ... | 1620 |
| பேகன் குற்றம் சாட்டப் பட்டது | ... | 1621 |

## முக்கியச் செய்திகள்.

1. இந்தியா. 1615ம் வருஷத்தில் முதலாவது ஜேம்ஸ் ஸர்.தாமஸ்ரோ என்பவனை டில்லிச் சக்கிரவர்த்தி ஜஹாங்கீரிடம் இங்கிலாந்தின் தூதனுய் அனுப்பினுன். கிழக்கு இந்தியக் கம்பெனியார் வியாபார உரிமையைஅடைய ரோ சக்கிரவர்த்தியினிடம் உடன்படிக்கை செய்யமுயன்றது பயன்படவில்லை. ஆனபோதிலும் இவன் தனது தேசத்திற்குத் திரும்பியபின் இந்தியாவில் வியாபாரத்தைச் சமாதானமாகவும், சிநேகமாகவும் நடத்த வேண்டுமென்று சொன்னுன்.

2. பட்டம் அளித்தல். ஜேம்ஸ் 1000 பவுன் கொடுத்தவர்களுக்குப் பாரொனெட் (Baronet) பட்டத்தை அளித்து வந்தான்.

3. இறக்குமதிவரி (Tonnage-Poundage). இங்கிலாந்தில் இறக்குமதியாகும் ஒவ்வொருடன் சாராயத்திற்கும், ஒவ்வொரு பவுன் நிறையுள்ள ரோமத்திற்கும் துறைமுகத்தில் வரிபோடுவது வழக்கம். சாமான்களும் வரிகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்தவரி, முறையை மீறிப் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் அரசன் போட்டவரியாதலின் இதனைச் சம்மதமில்லாவரி (Imposition) என்பார்கள்.

4. ஸர். வால்டர்ரேலே. பெரிய சதியில் தண்டிக்கப்பட்டுச் சிறையிலிருக்கும் போது இவன் 'உலக சரித்திரத்தை' எழுதினுன்.

5. பேகன் (1561-1626). இவன் எலிஜபெத் மகாராணி, முதலாவது ஜேம்ஸ் என்ற இருவர்களின் காலத்தில் இருந்தான்; நன்கு கல்வியைக் கற்று அரசனுடைய தயவால் ராஜ்ஜியத்தில் பெரிய பதவியை அடைந்தான். இவன் நியாயாதிபதிப் பதவியை வகித்த காலத்தில் கக்ஷிக்காரர்களிடம் லஞ்சம் பெற்றதாக இவனுடைய விரோதிகள் இவனைக் குற்றஞ் சாட்டினார்கள். பேகன் அதனை ஒப்புக் கொண்டதால் தண்டிக்கப் பட்டான். ஆனால், அரசன் அவனை மன்னித்தான். அக்காலத்தில் நியாயாதிபதிகள் லஞ்சம் வாங்குவது வழக்கமாயிருந்தது. ஆனாலும் இப்படிக் கல்வி கற்றவன் லஞ்சம் வாங்கினது ஆச்சரியப் படத் தகுந்தது. பேகன் பணம் வாங்கினதால் நியாயம் தவறவில்லை என்றான். இவன் எழுதிய முக்கியமான புஸ்தகங்கள்: 'கட்டுரைகள்' (Essays)—கல்வித் தேர்ச்சி (Advancement of learning) என்பன ஆகும்.

6. முதலாவது ஜேம்ஸ் நன்கு கற்றிருந்த போதிலும் அரசர்கள் செய்யக் கூடாத வழிகளைப் பின்பற்றியதால், பிரஞ்சுமன்னன் இவனைப் 'படித்த முட்டாள்' என்றான்.

7. முதலாவது ஜேம்ஸ் காலத்திற்கும், இக்காலத்திற்கும் (1930) இருக்கும் துரைத்தனமார்க்கங்களின் வித்தியாசங்கள் வருமாறு:—

a. ஜேம்ஸ் தானே மந்திரிகளை நியமித்தான். இக்காலத்தில் பொது ஜனசபை அரசனின் மந்திரிகளை நியமிக்கிறது. ஆனால், அரசன் அவர்களை வரவேற்கிறான்.

b. ஜேம்ஸ் பார்லிமெண்டைக் கூட்டுவதையும் கலைப்பதையும் தனது இஷ்டம்போல் செய்தான். ஆனால், இப்போது பார்லிமெண்டு ஒவ்வொரு வருஷமும் கூடுகிறது.

c. ஜேம்ஸின் மந்திரிகள் அரசன் சொற்படி நடந்து வந்தார்கள். ஆனால், ஐந்தாவது ஜார்ஜின் மந்திரிகள் தாங்கள் செய்யும் காரியங்களுக்குப் பார்லிமெண்டுக்கு வகை சொல்ல வேண்டும்.

d. ஜேம்ஸின் வருமானம் அரசனது நில வரும்படி, உம்பளமுறை, கொடை, ஏற்றுமதி இறக்குமதி வரிகள் இவைகளால் வந்தது. ஜார்ஜின் வருமானம் அந்தந்த வருஷத்திய வரவு செலவு திட்டத்தைப் பொறுத்ததே யாகும். அதற்கும் பார்லிமெண்டு அனுமதி அளிக்க வேண்டும்.

e. ஜேம்ஸ் எந்த மசோதாவையும் தள்ளிவிடலாம். ஜார்ஜ் மசோதவைத் தள்ளும் அதிகாரத்தை உபயோகப் படுத்துவதில்லை.

f. பிரபுக்கள் சபை ஜேம்ஸ் காலத்தில் அரசனுக்கு உதவியாயிருந்ததால், அரசன் இஷ்டம் போல் நடந்தான். இப்போது பிரபுக்கள் சபை பொதுஜன சபைக்கு மீறி நடக்க முடியாததாகும்.

g. ஜேம்ஸ் தன்னிஷ்டம் போலப் பார்லிமெண்டைக் கூட்டுவதையும், கலைப்பதையும் செய்து வந்தான். இப்பொழுது பிரதான மந்திரியே பார்லிமெண்டைக் கூட்டுவதும், கலைப்பதும் வழக்கமாயிருக்கிறது. ஆனால், அரசனிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.

## கேள்விகள்.

1. 'கடவுள் உரிமை' என்றால் என்ன வென்பதை விளக்கிச் சொல்லுக.

2. இங்கிலாந்தையும், ஸ்காட்லெந்தையும் சேர்க்கச் செய்த முயற்சி எவ்வளவு பயன்பட்டது?

3. முதலாவது ஜேம்ஸ் பணம் சம்பாதித்த வழிகளைச் சொல்லுக.

4. ஸர். வால்டர் ரெலே ஏன் கொலை செய்யப் பட்டான்?

5. அரசனுக்கும், பார்லிமெண்டுக்கும் எந்த எந்த விஷயங்களைப் பற்றி விவாதம் உண்டாயிற்று?

6. ஸ்டுவர்ட் அரசர்களின் வம்சாவளியைக் குறித்துக் காட்டுக.

---

## இரண்டாவததிகாரம்.

### முதலாவது சார்லஸ் 1625-49.

சார்லஸின் குணம். இவன் பார்வைக்குத் தகப்பன் அவ்வளவு அழகு வாய்ந்தவனன்று. ஆனால் இவன் எல்லா விதத்திலும் ராஜன்போல் நடிப்பான். ஜேம்ஸ் படிப்பில் தேர்ந்தவன். அவன் மகனான இவன் படிப்பில் அவ்வளவு தேர்ச்சியுள்ளவனல்ல. ஜேம்ஸ் கபடமற்றவன். சார்லஸோ வெகு கபடமுள்ளவன்; ஒருவருக்கும் அவனது வார்த்தையில் நம்பிக்கை உண்டாவதில்லை. ஜேம்ஸின் காலமுதல் பரிசுத்தர்களும், பார்லிமெண்டு சபையினரும் அரசனுக்கு விரோதகக்ஷியில் இருந்துவந்தார்கள். சார்லஸ் பட்டத்திற்கு வந்தவுடன் ஏற்கனவே முடிவாயிருந்தபடி பிரஞ்சு அரசனது சகோதரியை மணம் புரிந்து கொண்டான்.

முதல் பார்லிமேண்டு 1625. முப்பது வருஷத்துப் போரை நடத்தப் பணம் தேவையாய் இருந்தது. இங்கிலாந்து ஸ்பெயினுடன் போர்புரிவதால் பார்லிமெண்டும் ஆக்ஷேபணை யில்லாமல் கொடை யளிக்குமென்று சார்லஸ் எண்ணியிருந்தான். ஆனால், அரசனுடைய கலியாண உடன்படிக்கைப்படி அவன் தனது மனைவியைக் காதொலிக்

மதத்தைத் தொழவும், இங்கிலாந்திலுள்ள காதொலிக்கு களுக்குக் கடவுளைத் தொழவும் சுயாதீனம் கொடுத்தது பார்லிமெண்டாருக்கு முற்றிலும் விருப்ப மில்லாத செய்கையாதலால், வெகுகாலமாக அரசர்களுக்குப் பட்டம் தரித்த உடன் ஏற்றுமதி, இறக்குமதி வரிகளை ஆயுள் முழு வதும் அளிப்பது என்றிருந்த வழக்கத்தை மாற்றி ஒரு வருஷத்திற்குத் தான் அந்த வரி கொடுக்கப்படும் என்று அவர்கள் உத்தரவு செய்தார்கள். மேலும், பக்கிங்ஹாம் பிரபு போர் நடத்துவது சரியாக இல்லையென்றதும் பார்லி மெண்டாருடைய அதிருப்திக்குக் காரணமாகியது. சார்லஸ் இதைக் கண்டு பார்லிமெண்டைக் கலைத்துவிட்டான். இதி லிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் பார்லி மெண்டுக்குப் பணத்தைப் பற்றி உத்தரவு செய்யும் உரிமை யிருந்தால் அது ஜனங்களுக்கு இருக்கும் குறைகளைத் தீர்த்துக் கொள்ளத் தக்க ஒரு வழி (Redress of grievances before Supplies) ஆகும் என்பது.

இரண்டாவது பார்லிமெண்டு 1626. இதற்குள் ஸ்பெயினுக்கு அனுப்பிய கப்பல்படை கெடிஸ் துறை முகத்தில் மூழ்கிற்று. மறுபடியும் கப்பல் படையை அனுப்பப் பணம் தேவையாயிருந்தது. இதற்கு அரசன் இரண்டாம் முறை பார்லிமெண்டைக் கூட்டினன். ஆனால் பார்லிமெண்டு சபையார் கெடிஸ் துறை முகத்தில் நடந்த ஆபத்திற்குப் பக்கிங்ஹாம் பிரபுவைக் குற்றஞ் சாட்டினார் கள். கக்ஷித் துரைத்தனமில்லாத காலத்தில் ஜனங்களுக்கு ராஜங்கத்தார் மேல் குறை சொல்ல வேண்டியிருந்தால் அர சனுடைய மந்திரிகளைப் பொதுஜன சபையில் குற்றஞ் சாட்டுவது வழக்கமாகும். இங்கு ஏற்படும் தீர்மானத்தைக் கொண்டு பிரபுக்கள் சபையில் விசாரணைநடந்து தீர்ப்பு ஏற்

படும். அதற்கு அரசனுடைய கையெழுத்து வேண்டுவதில்லை. சார்லஸ் தனது மந்திரியின் தகுதியைச் சொல்லத்தான் மாத்திரம் தகுதியுள்ளவனே ஒழியப் பார்லிமெண்டு தகுதியுள்ளதன்று என்றான். மந்திரியைத் தப்புவிக்க அரசன் பார்லிமெண்டைக் கலைத்து விட்டான்.

மூன்றாவது பார்லிமேண்டும் உரிமை விண்ணப்பமும் 1628. இப்படி இரண்டு பார்லிமெண்டுகளும் விரோதமாய் இருப்பதைக் கருதிப் பணம் கிடைக்கும் வழிகளை அரசன் தேடினான். பிரான்சு உதவிபுரியவில்லை. மேலும், பிரஞ்சு மன்னன் பிராடெஸ்டெண்டு மதஸ்தர்களைக் கஷ்டப்படுத்தி வந்தான். இவர்களுக்கு உதவி புரியப் பக்கிங்ஹாம் படையனுப்ப ஏற்பாடு செய்தான். மேற்கூறியதிலிருந்து இங்கிலாந்துக்குப் பிரான்சு, ஸ்பெயின் என்ற இரு தேசங்களுடனும் போர் புரிய வேண்டியிருந்தது. பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் அரசன் கட்டாயக் கடன்களை வசூல் செய்தான். கொடுக்காதவர்களை விசாரணையில்லாமலே அரசன் சிறையில் அடைத்தான். அமைதியான காலத்தில் ராணுவச் சட்டத்தை ஏற்படுத்தினான். பிரபுக்கள் வீட்டில் ராணுவங்களை வைத்துக் காப்பாற்றும்படி செய்தான். இவ்வழிகளினாலும் போதுமான பணம் கிடைக்காததால் சார்லஸ் மூன்றாவது பார்லிமெண்டைக் கூட்டினான். பார்லிமெண்டில் தலைவர்களான எலியட், பிம், வெண்ட்வர்த் என்ற மூவர்களும் ஜனங்களை விசாரணை யில்லாமல் சிறையில் அடைப்பது முதலிய செய்கைகளால் அரசன் ஜனங்களுடைய சுயேச்சையைக் கெடுக்கிறான் என்று எண்ணி அதைத் தடுக்க ஓர் உரிமை விண்ணப்பத்தைத் தயார் செய்தார்கள் பணத்தேவையால் அரசன் அதற்குச் சம்மதம் கொடுத்தான். உண்மையில் அரசனுக்கு அதன்படி நடக்க எண்ணமில்லாமலிருந்தது.

அதன் ஷரத்துக்கள் :—

1. அரசன் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் கட்டாயக் கடன்கள் முதலிய வரிகளைப் போடுவது கூடாது.

2. ஜூரிகளுடன் கூடிய விசாரணையில்லாமல் எவரையும் சிறையில் அடைக்கக்கூடாது.

3. அமைதிக்காலத்தில் ராணுவச் சட்டத்தை ஏற்படுத்தலாகாது.

4. பிரபுக்கள் வீட்டில் ராணுவத்தை ஆதரிக்குமாறு சுமத்தி வைக்கலாகாது. மேற் கூறியவைகள் இங்லீஷ்காரருடைய சுயேச்சைக்கு முக்கியமானவை யாதலால் இந்தப் பத்திரத்தை இரண்டாவது பெரிய உரிமைப் பத்திரம் என்பார்கள்.

பக்கிங்ஹாம் பிராடெஸ்டெண்டுகளுக்கு உதவி செய்யப் பிரான்சுக்குச் செல்லத் தயாராயிருந்த போது எவனோ ஒருவன் அவனைக் கொன்று விட்டான். இது முதல் வெண்ட்வர்த் என்பவன் அரசன் பக்கத்தில் சேர்ந்தான். இவனும் பக்கிங்ஹாமும் விரோதிகளாவார்கள். மேலும், பார்லிமெண்டு ஆளும் விஷயத்தில் அரசனுக்கு இருக்கும் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள எண்ணுவது சரியன்று என்று வெண்ட்வர்த் எண்ணங் கொண்டவனுயிருந்தான். அரசனும் உரிமை விண்ணப்பத்திற்கு விரோதமாகப் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் ஏற்றுமதி, இறக்குமதி வரிகளைப் போட்டான். ஆர்மீனியன் மதஸ்தர் (ஒரு வகை ஆங்கிளிகர்கள்) களைப் பெரிய உத்தியோகத்தில் அமர்த்தினுன். இவற்றைக்கண்ட மூன்ருவது பார்லிமெண்டு இரண்டாம் முறையாகக் கூடி மூன்று முக்கியமான தீர்மானங்களைச்செய்தது. “பார்லி

மெண்டின் உத்தரவில்லாமல் ஏற்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி வரிகளைக் கொடுப்பவர்களும், வசூல் செய்பவர்களும், மத மாறுதல்களுக்குச் சம்மதிப்பவர்களும் ராஜ்ஜிய விரோதிகளாவார்கள்" என்பது அவற்றின் சாரம். பார்லிமெண்டின் மெம்பர்கள் தங்களுடைய அக்கிராசனுதிபதியை நாற்காலியில் பிடித்து வைத்துக் கொண்டு அரசன் பார்லிமெண்டைக் கலைக்க அனுப்பின உத்தரவை மீறி இந்தத் தீர்மானங்களைச் செய்தார்கள். இதற்காக அரசன் எலியட்டையும், மற்றும் சிலரையும் சிறையில் அடைத்தான். எலியட்டும், ஜனங்களுடைய சுயேச்சைக்காகச் சிறையில் உயிரை இழந்தான்.

இதுமுதல் சார்லஸ் பார்லிமெண்டின் உதவி யில்லாமலே ஆள நினைத்தான். மேற்கூறிய மூன்று பார்லிமெண்டுகளிலும் நடந்த விவாதங்களிலிருந்து நான்கு விஷயங்களைப்பற்றி அரசனுக்கும் பார்லிமெண்டிற்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன.

(a) ஜேம்ஸின் ஆளுகையில் இருந்ததுபோல் மதத்தைப்பற்றி அவ்வளவு கஷ்டம் ஏற்பட்டது. சார்லஸ் ஆங்கிளிகன் மதத்தை அனுசரித்தாலும் அவனுடைய மனைவி காதொலிக் மதத்தைத் தழுவினவளாயிருந்தாள். இதனால் தான் அரசன் காதொலிக்குகளின் சார்பாக இருக்கும்படி நேர்ந்தது. பார்லிமெண்டு, பெரும்பாலும் பரிசுத்தர்கள் அடங்கியதாகவும், காதொலிக்குகளுக்கு விரோதமானதாகவும் இருந்தது.

(b) பார்லிமெண்டு, அரசனுடைய மந்திரிகளிடத்தில் சிறிதேனும் நம்பிக்கை கொள்ளாமலிருந்தது. முதல் நான்கு வருடங்களில் பக்கிங்ஹாம் பிரபுவினிடத்திலும், பிறகு ஸ்ட்ராப்போர்ட் பிரபுவினிடத்திலும், பெரியபாதிரி லாட் என்பவனிடத்திலும் பார்லிமெண்டு தனது வெறுப்

பைக் காண்பித்தது. ஆனால் அரசனோ தன்னுடைய மந்திரிகளைப்போல் சாமர்த்தியமுள்ளவர்கள் வேறு எவருமில்லையென்று எண்ணியதுடன், பார்லிமெண்டார் அவர்களைக் குற்றம் சாட்டுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றும் சொல்லி வந்தான்.

(c) வெளிநாட்டு விஷயங்களில் அரசன் இங்கிலாந்தின் மதிப்பைக் குறைத்துவிட்டான் என்று பார்லிமெண்டு எண்ணியதுடன், அரசி வெளிநாட்டாருடன் செய்த கபடச் செய்கையால் அது முற்றிலும் கெடுதலில் முடிந்தது என்றும் கருதியது.

(d) எல்லாவற்றிலும் மேலானது அரசனுடைய உரிமையும், ஜனங்களுடைய உரிமையும் முக்கியமான விவாதத்திற்கு உள்ளாகியதே. அரசன் 'கடவுள் உரிமை'யைக் கொண்டாடிக் கொண்டும், பார்லிமெண்டு சபையார் பெரிய உரிமைப் பத்திரத்தைப் பெரிதாக எண்ணிக் கொண்டும் விவாதம் செய்து வந்தார்கள்.

**பதினோரு வருஷத்திய கொடுங்கோன்மை 1629-40.** இக்காலத்தில் அரசனுக்கு முக்கிய மந்திரிகளாக ராஜீய விஷயங்களிலும் மதவிஷயத்திலும் ஸ்ட்ராப்போர்ட் பிரபு (வெண்ட்வர்த்)வும், பெரியபாதிரி லாட் என்பவரும் இருந்து வந்தார்கள். பக்கிங்ஹாம் இறந்தபிறகு வெண்ட்வர்த் (Wentworth) அரசன் கக்ஷியில் சேர்ந்தான். அரசனும் அவனைப் பிரபுப் பதவிக்கு உயர்த்தி ஸ்ட்ராப்போர்ட் பிரபு என்று அழைக்கலானான். பணத்தைக் கண்டுபிடிக்க அரசன் பலவழிகளைத் தேடினான். அந்தவழிகள் சட்டத்திற்கு ஒத்திருந்தபோதிலும் இங்கிலாந்தின் துரைத்தன முறைக்கு விரோதமானவை. ஸ்பெயின், பிரான்சு ஆகிய தேசங்களுடன் அரசன் சமாதானம் செய்துகொண்டனன்.

துரைத்தனத்தின் ஒவ்வொரு இலாகாவிலும் செட்டு ஏற் பட்டது. நக்ஷத்திரமண்டபம், ஹைகமிஷன் கோர்ட், வடக்குக்கவுன்சில் முதலிய அரசுரிமைக் கோர்ட்டுகள் திரும்ப உண்டாக்கப்பட்டன. ஐம்பது பவுன் வருமான முள்ள பிரபுக்கள் நைட் (Knight) பட்டத்தை அடைய வேண்டுமென்று விதி ஏற்பட்டது. அடையாதவர்களுக்குக் கோர்ட்டுகள் அபராதம் விதித்து வந்தன. கட்டாயக் கடன் கள், பொருள் விற்கும் தனி உரிமை, ஏற்றுமதி இறக்கு மதி வரிகள் என்ற இவ்வழிகளாலும் பணத்தை அரசன் அடைந்துவந்தான். கானக நிலங்களை அனுபவித்தவர் களுக்கு அரசன் அபராதம் விதித்தான்.

கப்பற்பணம். சார்லஸ் 1634ம் வருஷத்தில் ஆப்பிரிக்கா விலிருந்து சமுத்திரக் கொள்ளைக்காரர்கள் இங்கிலாந்தைத் தாக்குவார்கள் என்று சொல்லிக் கீழ்கடற் கரைப் பட்டினங்களின் மேல் வரியைப் போட்டான். சமுத்திர மார்க்கமாய்த் தேசத்திற்கு அபாயம் ஏற்படும் எனத் தோன்றினால் கடற்கரைப் பட்டினங்களுக்கு இந்த வரியை விதித்து அதைக்கொண்டு ராஜாங்கத்தார் கப்பல் கட்டுவது வழக்கம். 1635-ம் வருஷத்தில் சார்லஸ் இவ்வரியை உள் நாட்டிலும் போட்டான். பிறகு இது ஸ்திரமாகவும் ஏற்ப ட்டு விட்டது. தேசத்திற்கு அபாயமில்லாத காலத்திலுங் கூடக் கடற்கரைப் பட்டினங்களிலும், உள்நாட்டிலும் இவ் வரி வசூல் செய்யப்பட்டது. அரசன் அப்பணத்தைத் தனது சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டதனால் ஜனங்கள் இவ்வரியை 'அநீதிவரி' என்று கூறி எடுத்து விடுமாறு முறையிட்டார்கள். ஹாம்ப்டன் (Hampden) இவ்வரியைக் கொடுக்க மாட்டேன் என்று 1637-ம் வருஷத் தில் சொல்ல அவன் குற்றம் சாட்டப் பட்டான். விசாரணை செய்த பன்னிரண்டு நியாயாதிபதிகளில் பெரும்பான்மை

யோர் அரசனது சார்பாகத் தீர்ப்புச்செய்தபோதிலும் ஜனங்களுக்கு ஹாம்ப்டன் ஒரு வீரனாகவே தோன்றினான். இங்கே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். என்னவென்றால், இக்காலத்தில் அரசனுக்கு நியாயாதிபதிகளை நியமிக்கவும், எடுக்கவும் அதிகாரம் இருந்தது. 1701-ம் வருஷத்திய வார்சு நிர்ணயச் சட்டப்படி அரசன் நியாயாதிபதிகளைத் தள்ளப் பார்லிமெண்டு சபைகளின் சம்மதத்தைப் பெற வேண்டியவனானான்.

அயர்லாந்து. 1632-ம் வருஷத்தில் வெண்ட்வர்த் அயர்லாந்திற்கு ராஜப்பிரதிநிதியாகச் சென்று அங்கு நிலையான ராணுவத்தைக் கொண்டு 'திறமான' (Thorough) ஆளுகையை ஏற்படுத்தினான். வியாபாரத்தையும், உள்நாட்டுத் தொழிலையும் விருத்தி செய்து தேசத்திற்கு முன் இருந்ததைவிட அதிக க்ஷேமத்தைக் கொடுத்தான். ஆனால் அவனுடைய ஆளுகை வெகு கடுமையாக இருந்தது.

## ஸ்காட்லாந்தும்—குருமார்களின் போரும்.

வில்லியம்லாட் இங்கிலாந்தில் கோவிலுக்குக் குருமார்களின் ஆளுகையையும், இங்கிலீஷ் தோத்திரப் புத்தகத்தை அனுசரிக்க நக்ஷத்திரமண்டபச் சபையையும், ஹைகமிஷன் கோர்ட்டையும் உபயோகித்தான். ப்ரின் (Prynne) என்ற பரிசுத்தன், மத விஷய தந்திரத்தைக் கண்டித்து எழுதினதற்கு நக்ஷத்திர மண்டப நியாயாதிபதிகள் அவனுடைய காதுகளை அறுத்து விடும்படி தீர்ப்புச் செய்தார்கள். ஆனால் ஸ்காட்டுலந்தில்தான் லாடின் தந்திரத்திற்கு அதிக விரோதம் ஏற்பட்டது. ஸ்காட் ஜனங்கள் பரிசுத்த மதத்தைச் சார்ந்தவர்களானதால் இங்கிலீஷ் தோத்திரப் புத்தகத்தையும், குருமார்களின் ஆளுகையையும் தங்களது தேசத்தில் கொண்டு வருவதை எதிர்க்க அவர்கள் 1638-ம் வருஷத்தில் ஓர் உடன் படிக்கை

(Solemn league and Covenant) யைச் செய்து கொண்டார்கள். அவர்களுடைய பொது ஜனசபை குருமார்களின் ஆளுகையைத் தள்ளிப் பரிசுத்தமதம்தான் ஸ்காட்லெந்தின் மதம் என்ற தீர்மானத்தையும் செய்தது. இதைச் சார்லஸ் ஒப்புக் கொள்ளாததால் முதல் குருமார்களின் போர் ஏற்பட்டது. சார்லஸ், குருமார்களுடைய உரிமைக்காக இப்போரை நடத்தியதால் இதற்குக் குருமார்களின் போர் (Bishops' War) என்ற பேர்வந்தது. அரசன் 1639 வருஷத்தில் பர்விக் சமாதானத்தைச் (Treaty of Berwick) செய்து கொண்டு அதன் படி எல்லா விவாதங்களையும், பொது சபையும் பார்லிமெண்டுமே தீர்க்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டான். ஸ்ட்ராப்போர்ட்டின் புத்திமதியின் பேரில் சார்லஸ் ஸ்காட்லெந்திற்கு விரோதமாக இங்கிலீஷ்ப் பார்லிமெண்டின் உதவியை அடைவதற்குப் பார்லிமெண்டைக் கூட்டினான். ஆனால், பார்லிமெண்டு இங்கிலாந்தின் குறைகளைத் தீர்க்குமாறு அரசனை வற்புறுத்தியதால் அரசன் இப்பார்லிமெண்டையும் கலைத்துவிட்டான். இதற்குத்தான் குறுகிய பார்லிமெண்டு (Short Pārliament) என்று பேர் ஏற்பட்டது. அரசன் இரண்டாம்முறை ஸ்காட்லெண்டின் மேல் படையெடுத்தான். நியூபரன் (Newburn) என்கிற இடத்தில் தோல்வியுற்று 1640-ம் வருஷத்தில் ரிப்பன் சமாதானத்தைச் (Treaty of Ripon) செய்து கொண்டான். அதன்படி ஸ்காட்லந்தின் துருப்புக்கள் பார்லிமெண்டு கூடும் வரையில் இங்கிலாந்தில் இருப்பது என்றும், அவற்றின் செலவைச் சார்லஸ் கொடுப்பது என்றும் ஏற்பட்டது. பிரபுக்கள் புத்தி கூறியதின் பேரில் அரசன் இங்கிலீஷ்ப் பார்லிமெண்டைக் கூட்டினான். இப்படி இரண்டாவது குருமார்களின் போர் முடிவுக்கு வந்தது.

## மூன்றாவததிகாரம்.

### (முதலாவது சார்லஸ்—தொடர்ச்சி)

நீடித்த பார்லிமேண்டு. முன் பார்லிமெண்டுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிவிக்கவே 'நீடித்த பார்லிமெண்டு' என்கிறபேர் இப் பார்லிமெண்டிற்கு வைக்கப் பட்டது. 1640-ம் வருஷம் முதல் 1647ம் வருஷம் வரையில் இப் பார்லிமெண்டு இருந்து வந்ததுடன் பிறகும் 'எச்சப் பார்லிமெண்டு' என்கிற பேருடன் 1653-ம் வருஷம் வரையில் இருந்து வந்தது. 1659-ம் வருஷத்தில் முதலில் இருந்த நீடித்த பார்லிமெண்டு கூடித் தானாகவே கலைந்தது. இப்படிச் சுமார் 20 வருஷ காலம் வரையில் இப் பார்லிமெண்டு நீடித்து இருந்தது.

அதன் வேலை. இப் பார்லிமெண்டின் வேலையைச் சுருக்கமாய்ச் சொல்வோமானால் அஃது அரசனைத் தன் இஷ்டம் போல் ஆளவிடாமல் இங்கிலாந்தின் துரைத்தன முறையின் படியும், சட்டம் வழக்கம் இவைகளின் படியும் ஆளும்படி வற்புறுத்தியது. நக்ஷத்திர மண்டபம், ஹைகமிஷன் கோர்ட், வடக்குக் கவுன்சில் முதலிய பெயர்களில் அரசனது உரிமையால் ஏற்பட்டிருந்த அநீதமான கோர்ட்டுகளை இப் பார்லிமெண்டு தள்ளிவிட்டது; அவைகளால் அதிகமாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களையும் விடுவித்தது. கப்பல் பணம் முதலான அநீத வரிகளையும் இஃது எடுத்து விட்டது. அரசன் பதினொரு வருஷ காலம் பார்லிமெண்டைக் கூட்டாமல் ஆண்டதைக் கண்டு அவ் வழியைத் தடுக்க மூன்று வருஷத்திற்கு ஒரு முறையாவது பார்லிமெண்டைக் கூட்ட வேண்டுமென்று விதி ஏற்பட்டது. அரசனுக்குப் பார்லிமெண்டைக் கூட்டவும், கலைக்கவும் அதிகாரம் இருந்த போதிலும், இப்போது கூடிய பார்லிமெண்டு தன் இஷ்டம் போல் கலைய வேண்டு

மே ஒழிய அரசனுக்குக் கலைக்கப் பாத்தியமில்லை யென்ற தீர்மானமும் செய்யப்பட்டது. அரசனுக்குப் பணத் தேவையிருந்ததால் இத் தீர்மானங்களை அரசன் ஒப்பினான். முடிவில் இப்பார்லிமெண்டு அரசனுடைய அநியாயங்களுக்கு மந்திரிகளே ஜவாப்தாரர்கள் என்று கூறி வெண்ட்வர்த், லாட் என்ற இருவர்களையும் குற்றஞ் சாட்டி அவர்களுக்குக் கொலைத் தண்டனையை விதிக்க நிச்சயித்தது. ஆனால், வெண்ட்வர்த்தின் காரியத்தைக் தப்பித மென்று சொல்லு வோமானால், அரசனுடைய கட்டளையை நிறைவேற்றினதே அவன் செய்த தப்பிதமாகும். இச்செய்கை ராஜத் துரோ கக்குற்றமாகாதாகையால், பார்லிமெண்டு அவனைத்தண்டிக்க வேறு ஒருவழியைத் தேடியது. பார்லிமெண்டு வெண்ட் வர்த்தை ராஜத்துரோகி என்று கூற ஒரு சட்டத்தை ஏற் படுத்தி அதின்படி அவனைக் கொலைசெய்ய நிச்சயம் செய்தது. முதலில் கூறிய வழிக்கு அஃதாவது குற்றம் சாட்டுவது என்பதற்கு (Impeachment) அரசனுடைய கையெழுத்து வேண்டியதில்லை பின் சொல்லியவழி அஃதாவது சட்டம் ஏற்படுத்திச் செய்வது என்பதற்கு (Bill of attainder) அரசனுடைய கையெழுத்து அவசிய மாகும். மனைவியின் நிர்ப்பந்தத்தால் அரசன் இச்சட்டத் திற்கு ஒப்பம் கொடுத்தான். வெண்ட்வர்த்தும் கொலைக் களத்திற்குச் செல்லும்போது ‘அரசனுடைய வார்த்தை களை நம்பாதீர்கள்’ என்றான். ஒருவனை எப்போதும் காப் பதாக வாக்களித்த அரசனுக்கு, முடிவில் தனது உண் மையான வேலைக்காரனைக் கொலைசெய்யத் தானே சம்மதம் கொடுக்கும்படி நேர்ந்தது.

பெரிய எச்சரிக்கைப் பத்திரம் 1641 (Grand remonstrance). இப்படி ராஜ்ய விஷயங்களைப் பற்றிப் பார்லி மெண்டு சபை ஒற்றுமையாக இருந்தது. பார்லிமெண்டில்

பரிசுத்தர்கள் அதிகமாக இருந்தார்கள். எப்படி அரசனுடைய கொடியவழிகளைப் பார்லிமெண்டு இப்போது தடுத்ததோ அப்படியே மதவிஷயத்தில் குருமார்களின் கொடிய ஆக்ஷியையும் வேருடன் பிடுங்க அஃது ஒரு மசோதாவைக் (Root and branch bill) கொண்டுவந்தது. இதுமுதல் பார்லிமெண்டு இருவகைப் பட்டது. குருமார்களின் ஆக்ஷி வேண்டுமென்றவர்களும் காதோலிக்குகளும் அரசனது கக்ஷியில் சேர்ந்தார்கள்.

அரசன் இதுமுதல் பார்லிமெண்டைத் தொலைக்கவழி தேடினன். அயர்லாந்திலும் ஒருகலகம் உண்டாகக் காதோலிக்குகள் இங்கிலீஷ் ப்ராடெஸ்டெண்டுகளைக்கொன்ருர்கள். இக்கலகத்தை அடக்க அரசன் பார்லிமெண்டை உதவிபுரியுமாறுகேட்டான். ராணியின் தூண்டுதலின்பேரில் காதோலிக்குகள் ப்ராடெஸ்டெண்டுகளைக் கொன்றிருக்க வேண்டும் என்றும், அரசனும் பண உதவியை அடைந்த உடன் பார்லிமெண்டை ராணுவத்தைக் கொண்டு அடக்க நிச்சயித்திருப்பான் என்றும் பார்லிமெண்டு மெம்பர்கள் சந்தேகித்தார்கள். ஆகையால் ஜனங்களுக்கு அரசன் வந்தது முதல் செய்த அநியாயங்களை எடுத்து உரைக்கஒருபெரிய எச்சரிக்கைப்பத்திரத்தைப் பார்லிமெண்டு தயார்செய்தது. பார்லிமெண்டிற்கு நம்பிக்கையுள்ள மந்திரிகளைத் தான் அரசன் நியமிக்கவேண்டுமென்ற ஷரத்தும் ஏற்பட்டது. இவ்விஷயம் பார்லிமெண்டில் பதினேரு பேர்களுடைய வோட் அதிகமாக இருந்து நிறைவேறிய போதிலும் உள்நாட்டுப்போர் ஏற்பட்டுவிடும் என்று எல்லோரும் எண்ணினர்கள்.

சார்லஸும் பெரிய எச்சரிக்கைப் பத்திரத்தைத் தயார் செய்த ஐந்து தலைவர்களை முன்னே நடந்த குருமார்களின்போரில் ராஜத்துரோகிகளாக நடந்தார்கள் என்கிற

குற்றத்தைச்சாட்டிப் பிடிப்பதற்கு லண்டனுக்கு வந்தான். ஜனங்களும் பார்லிமெண்டு மெம்பர்களைப் பிடிக்க அரசனுக்குப் பாத்தியமில்லை என்றார்கள். தலைவர்களும் தப்பித்து ஓடிவிட்டார்கள். அரசனும் பார்லிமெண்டிற்குச் சென்று அவர்களைக் காணாமையால் 'பக்ஷிகள் பறந்து விட்டன' என்றான்.


இதுமுதல் அரசனிடத்தில் ஜனங்களுக்கு இருந்த விசுவாசம் போய்விட்டது. பார்லிமெண்டு அரசனுக்குப் பத்தொன்பது சித்தாந்தங்களை அனுப்பி, ராஜாங்க உத்தியோகஸ்தர்களைப் பார்லிமெண்டு ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், மத ஆட்சி சீர்திருத்தத்தை அடைய வேண்டுமென்றும், காதொலிக்குகளுக்கு விரோதமான சட்டங்களை வற்புறுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது. அரசன் இவைகளுக்கு இணங்காததால், பார்லிமெண்டு ராணுவ மசோதாவைக் (Militia bill) கொண்டுவந்து ராணுவங்கள், கப்பற் படை, ராணுவ ஆயுதப் பண்டகசாலை என்ற இவைகளைத் தனது வசமாக்கிக் கொண்டது

இப்படி அரசன் பெரிய எச்சரிக்கைப் பத்திரத்தைத் தயார் செய்த ஐந்து தலைவர்களைப் பிடிக்கப் பார்லிமெண்டிற்குச் சென்றதுதான் பெரிய உள்நாட்டுப் போருக்கு நெருங்கிய காரணமாகும். உண்மையில் அரசன் 'கடவுளின் உரிமை' யைக் கொண்டாடிப் பார்லிமெண்டின் உத்தரவில்லாமல் வரி போட்டதும், ஜூரி விசாரணை யில்லாமல் ஜனங்களைச் சிறையி லடைத்ததும், அமைதிக் காலத்தில் ராணுவச் சட்டத்தை ஏற்படுத்தியதும், பிரபுக்களின் வீட்டில் ராணுவத்தை ஆதரிக்கவைத்ததும் முக்கிய காரணங்களாகும். 1642ம் வருஷத்தில் அரசன் நாட்டிங்ஹாமில் போர் விளம்பரத்தைச் செய்தான்.

**கக்ஷிகள்.** இங்கிலாந்தின் படத்தில் ஹல் முதல் ப்ளிமௌத் (Plymouth) வரையிலும் ஒரு கோடு இழுக்கும் பக்ஷத்தில் வடக்கிலும் மேற்கிலுமுள்ள பாகங்கள் அரசன் சார்பிலும், தெற்கிலும் கிழக்கிலுமுள்ள பாகங்கள் பார்லிமெண்டின் கக்ஷியிலிலுமிருந்தன என்று சொல்லலாம். காதொலிக்குகளும் ஆங்கிளிகர்களும் அரசனுக்கு உதவியாகவும், பரிசுத்தர்கள் பார்லிமெண்டுக்கு உதவியாகவும் இருந்தார்கள். பிரபுக்கள் அரசனுக்குச் சாதகமாகவும், வியாபாரிகளும் பொது ஜனங்களும் பார்லிமெண்டிற்குச் சகாயமாகவும் இருந்தார்கள். அரசனுக்குப் பிரபுக்களினுடைய தங்கம் வெள்ளிகளாலாகிய பாத்திரங்கள் சண்டை நடத்தச் சாதமாக இருந்தன. பார்லிமெண்டிற்கு லண்டனில் வருஷம் முழுவதும் வசூல் செய்யக்கூடிய ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் உபயோகமாக இருந்தன. அரசனுக்கு முப்பது வருஷப்போரில் பழக்கமடைந்த பிரபுக்களின் பிள்ளைகளடங்கிய குதிரைப் போர் வீரர்கள் நிறைந்த—ராணுவமிருந்ததால் முதலில் அரசனுடைய கக்ஷிக்கு ஜயம் வரக் கூடியதாயிருந்தது. ஆகையால்தான் அரசனுடைய படையைக் 'குதிரை வீரர்கள்' (Cavaliers) என்பார்கள். பார்லிமெண்டின் சைனியம், ராணுவப் பழக்கமில்லாத பரிசுத்தர்களும், சம்பளச் சேவகர்கள் அடங்கிய காலாட்படையுமாயிருந்தது. அக்காலத்தில், பரிசுத்தர்கள் தலையிலுள்ள மயிரைக் கத்தரித்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டதால் அவர்களை 'வட்டத்தலையர்கள்' (Round heads) என்பார்கள்.

**எட்ஜ்ஹில் (Edgehill) சண்டை 1642.** இவ்வருஷத்தில் அரசன் லண்டனைப் பிடிக்க எண்ணினான்; போகும் வழியில் எட்ஜ்ஹில் என்ற இடத்தில் பார்லிமெண்டின் தளகர்த்தனான எஸ்ஸெக்ஸ் பிரபுவைச் சந்தித்தான். ஆனால் அரசனால் அவனைத் தோற்கடிக்க முடியவில்லை.

## 1643-ல் கக்ஷிகளின் நிலைமை.



லண்டனுக்குப்போவது தடுக்கப்பட அரசன் ஆக்ஸ் போர்ட்டுக்குத் திரும்பிப்போனான். இதுமுதல் ஆக்ஸ் போர்ட் நகரம் அரசனுக்குப் பிரதான இடமாயிற்று.

1643. இவ்வருஷத்தில் அரசன் மூன்று திக்குக்களி லுள்ள சைனியங்களையும் திரட்டிக்கொண்டு லண்டனுக்குச் செல்ல எண்ணினான். ஆனால், அப்பொழுது யார்க் பட்டி னத்திலிருந்து நீயூகாசில் பிரபு வராததால் அந்த ஏற்பாடு நிறைவேற வில்லை. ஆனபோதிலும் பார்லிமெண்டாருக்கு இவ் வருஷம் கெட்ட காலமாயிருந்தது. ஹாம்ப்டன், சால்க் ரோவ்பீல்ட் (Charlgrove field) சண்டையில் இறந்தான். யார்க்ஷயரில் நீயூகாசில் பிரபு ஆட்வால்டன் மோர் என்கிற இடத்தில் பார்லிமெண்டின் தளகர்த்தனான பேர்பாக்ஸ் (Fairfax) என்பவனைத் தோற்கடித்தான். தென் மேற்கில் அரசனுடைய துருப்புகள் ரவுண்ட்வேடவுன் (Roundaway Down) என்கிற இடத்தில் ஜயமடைந்தன. ஹல், க்ளா சஸ்டர் (Gloucester) என்ற இரு பட்டணங்களும் முற்றுகை போடப்பட்டன. எஸ்ஸெக்ஸ் பிரபு க்ளாஸெஸ் டர் முற்றுகையை விடுவித்து லண்டனுக்குச் சென்றான். அவன் லண்டனுக்குச் செல்லுவதை அரசன் நியூபெரியில் தடுக்க முயன்றது வீணாயிற்று.

இப்பொழுது பார்லிமெண்டின் தலைவனான பிம் (Pym) ஸ்காட்ஸ்களின் உதவியைப் பார்லிமெண்டு அடையும்படி ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டான். ஸ்காட் லெந்தின் மதத்தைச் காப்பாற்றுவதாக வாக்கு அளித்த தன் பேரில் ஸ்காட்ஸ்களும் பார்லிமெண்டிற்கு உதவி யாகும்படி அரசனது சைனியத்துடன் யார்க்கில் முற் றுகை போட்டார்கள். அரசனுடைய மருமகனான ரூபர்ட் வடக்கே சென்று யார்க்கின் முற்றுகையை விடுவித்தான். ஆனாலும் 1644-ம் வருஷத்தில் மார்ஸ்டன்மோர் (Marston

moor) என்கிற இடத்தில் ரூபர்ட் தோல்வியடைந்ததால் யார்க்ஷயர் முழுவதும் பார்லிமெண்டு கக்ஷியைச் சேர்ந்தது. இவ் வெற்றி—கிழக்கு ஜில்லாக்களில் பார்லிமெண்டிற்காகப் பாடுபட்டுவந்த க்ராம்வெல், கடவுளுக்குப் பயந்து நடக்கும் மதவைராக்கியம் கொண்ட பரிசுத்தர்களைக் சண்டையிலே பழக்கி, அஞ்சாத வீரார்கள் (Ironsides) என்று புகழ் பெறச் செய்த—அந்தப் போர் வீரர்களின் செய்கையால் கிடைத்தது. இது வடக்கில் இப்படியிருக்கத் தெற்கில் அரசன் வீணுகக் காலம் கழிக்க வில்லை. அவன் சில ஜயங்களைப் பெற்று லண்டனுக்குச் செல்லுகையில். நியூபெரியில் பார்லிமெண்டுத் துருப்புக்களால் தடுக்கப்பட்டான். மான்செஸ்டர் பிரபு தனது தயாளகுணத்திஞல் அரசனைத் தப்பிப்போகும்படி விட்டுவிட்டான். அது க்ராம்வெலுக்குக் கோபத்தை உண்டாக்கியது. அதனுல் பார்லிமெண்டு மெம்பர்கள் தளகர்த்தர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்ற சட்டத்தைக் (Selfdenying ordinance) கிராம்வெல் ஏற்படுத்திஞன். இவன் ஒருவனுக்கு மட்டில் இச்சட்டம் விலக்குசெய்யப்பட்டது. ஸ்காட்லெந்தில் மாண்டரோஸ் பிரபு (Earl of Montrose) அரசனுக்கு உதவியாக இருந்து அநேக வெற்றிகளையடைந்தான்.

1645. க்ராம்வெல் பார்லிமெண்டுத் துருப்புக்களுக்குத் தகுதியான பழக்கத்தைக் கொடுத்தான். இப் புதுமாதிரியான சைனியம் நேஸ்பி (Naseby) என்ற இடத்தில் ரூபர்ட்டைக் கைதியாக்கிற்று. ஸ்காட்லெண்டிலும் அரசனுடைய கக்ஷி தளர்ச்சி யடைந்தது. இது முதல் பெரிய உள்நாட்டுப் போர் (The Great Civil war) முடிவுக்கு வந்ததாகச் சொல்லலாம். அரசனும் நியூயார்க் (Newark) என்கிற இடத்தில் ஸ்காட்ஸ்களிடம் அடைக்கலம் புகுந்தான்.

ஆனுல், ஸ்காட்ஸ்கள் தங்களுடைய சம்பளத்தைப்

பெற்றுக்கொண்டவுடன் பார்லிமெண்டாரிடம் அரசனை ஒப்புவித்தார்கள். போர்முடிந்து விட்டதால் சைனியங்கள் வேண்டுவதில்லையென்று பார்லிமெண்டில் சில மெம்பர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் பரிசுத்தர்களுக்குள் இருந்த சில கக்ஷிக்காரர்களாகிய 'சுயாதீனக்காரர்கள்' சைனியத்தலைவர்களாக இருந்தார்கள். அவர்கள் ராணுவத்தைக் கலைத்துவிட்டால் தங்களுடைய அதிகாரம் போய்விடுமே என்று பயந்து அதற்கு உடன்படவில்லை. இதுமுதல் பார்லிமெண்டு இருவகைப்பட்டது. பிரெஸ்பிடேரியன் கக்ஷிக்காரர்கள் அரசனை அன்பாக நடத்த எண்ணங்கொண்டார்கள். சுயாதீனக்காரர்கள் இதையறிந்து அரசனைத் தங்கள் கைவசமாக்கிக் கொண்டார்கள். இக்கிளர்ச்சியையறிந்து அரசன் ஸ்காட்ஸ்களுடன் சமாதானம் பேசினான். அவர்களுடைய மதத்தைக் காப்பாற்றிக்கொடுக்க வாக்கு அளித்ததால், ஸ்காட்ஸ்களும் அரசனுக்கு உதவி புரியச் சம்மதித்தார்கள். இப்படி நடைபெற்ற அரசனுடைய கபடமார்க்கந்தான் இரண்டாவது உள்நாட்டுப் போருக்குக் காரணமாகும்.

**இரண்டாவது உள்நாட்டுப் போரின் தொடக்கம் 1648.** ப்ரெஸ்டன், கோல்செஸ்டர், வாரிங்டன் முதலான இடங்களில் அரசனுடைய சார்பாக ஏற்பட்ட கலகங்களை, உடனே க்ராம்வெல் அடக்கினான். இப்போரில் உண்டான மனிதச் சேதத்திற்குக் அரசனே ஜவாப்தாரியாவான் என்று க்ராம்வெலும் மற்றச் சுயாதீனக்காரர்களும் (Independents) சொன்னார்கள். அரசனையும் விசாரணைக்குக்கொண்டுவர அவர்கள் நிச்சயித்தார்கள். ஆனால் பார்லிமெண்டிலுள்ள பிரெஸ்பிடேரியன் மெம்பர்கள் இதற்கு இஷ்டப்படாததால் சைனியம், ப்ரைட் (Colonel Pride) என்பவனைப் பார்லிமெண்டிற்கு அனுப்பி அங்கிருந்த நூற்றைம்பத்து

மூன்று பிரெஸ்பிடேரியன் மெம்பர்களையும் வெளியில் தள்ளிவிட்டது. இதைத்தான் 'ப்ரைடின் பேதிமருந்து' (Pride's purge) என்பார்கள். பாக்கி மெம்பர்களுடன் நடந்த எச்சப்பார்லிமெண்டு அரசனை விசாரிக்க ஒரு நியாஸ்தலத்தை ஏற்படுத்தியது. அஃது அரசனைக் கொலை செய்யுமாறு தீர்ப்புச் செய்தது. அப்படியே 1649-ம் வருஷம் ஜனவரிமீ 30உல் அரசன் தனது அரண்மனைக்கு முன் கொலை செய்யப்பட்டான்.

இப்படி நேர்ந்ததற்கு அரசனுடைய பிடிவாதமும், நம்பிக்கையற்றகுணமுமே காரணங்களாகும். இவனைப் புகழ்வோரும் அநேகர் உண்டு. அரசன், தான் ஒரு நல்ல காரியத்திற்காக உயிரை யிழப்பதாக உண்மையில் எண்ணும்படி கொலைக்களத்தில் நடித்த மாதிரியிலிருந்து அநேகர்கள் அவனைக்கண்டு பரிதபித்தார்கள். அவனும் தான் கெட்ட உலகத்திலிருந்து நல்ல உலகத்திற்குச் செல்வதாய் எண்ணினுன். அரசனுடைய கதியிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் பல. (1) அரசனைப் பார்லிமெண்டு சபை கொலைசெய்தது துரைத்தனமுறைக்கும், சட்டத்திற்கும் முற்றிலும் மாறுதலாகும். பெரிய உரிமைப் பத்திரத்தின்படி பார்லிமெண்டு தனக்குச் சமானமானவர்களின் அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஒருவனைத் தண்டிக்கலாம். எச்சப்பார்லிமெண்டைச் சமமானதாகச் சொல்ல முடியாது. அரசன் மற்றவர்களை விசாரிக்க நியாயஸ்தலங்களைஏற்படுத்துவதுமுண்டு. அரசனைவிசாரிக்க நியாயஸ்தலத்தைப் பார்லிமெண்டு ஏற்படுத்தியது சட்டத்திற்கு விரோதமாகும். (2) அரசன் செய்த குற்றம் ராஜத்துரோகமென்று சொல்லப்படுகிறது. பார்லிமெண்டிலும் பிரபுக்கள் சபை அரசன் சார்பாக இருந்தமையால் போர் விஷயத்தில பார்லிமெண்டும் அரசனைப்போல் ஜவாப்

தாரியானதே. (3) ராஜ கொலை எற்பட்டது ஒரு பெரிய தப்பிதமாகும். அரசனும், தான் ஒரு நற்காரியத்திற்கு உயிர் துறப்பதாய் எண்ணினான். அவன் கொலைக்களத்தில் நடித்ததிலிருந்து அவனிடத்தில் ஜனங்களுக்கு இரக்கம் ஏற்பட்டது (4) பார்லிமெண்டு இப்படிச் செய்யாமல் "அரசன் தேச வழக்கங்களுக்கு மீறி நடந்தமையால் தன்னை ராஜபதவிக்கு அருகமில்லாதவனாகச் செய்து கொண்டான்" என்று சொல்லி அவனைப் பட்டத்தையிழக்குமாறு செய்திருந்தால் நியாயமாகும். (5) ராணுவத்திற்கு அரசனிடத்தில் கோபம் உண்டாவது நியாயமாகும். எனெனில் அரசன் அதனிடத்தில் நம்பிக்கையில்லாதவனாக நடந்து கொண்டான். (6) இச்செய்கைகள் மறைந்தபோதிலும் அவைகளின் பயனைப் பின்வருபவர்கள் அனுபவித்துத் தீர்க்க வேண்டியதாயிருக்கிறது. (7) அரசன் பிடிவாத குணமுள்ளவனாக இல்லாமல் ஜனங்களுக்குச் சமயத்தில் சிறிது இணங்கியிருக்கும் பக்ஷத்தில் இப்படி நேர்ந்திராது என்பது நிச்சயம்.

## பார்லிமேண்டின் ஜயத்திற்குக் காரணம்.

அரசனுக்குப் பலமுள்ள மலைப்பிரதேசங்களாகிய வடக்கும் மேற்கும்ஏற்பட்டிருந்தாலும், பார்லிமெண்டிற்கு விவசாயத்திலும் செல்வத்திலும் அக்காலத்தில் மேலோங்கியிருந்த தெற்கும் கிழக்கும் இருந்தமையால் முடிவில் பார்லிமெண்டிற்குத் தான் ஜயம் ஏற்படும் என்பது நிச்சயமாயிருந்தது. வியாபாரத்திற்கு முக்கிய ஸ்தலமானதும் மற்ற இடங்களுக்கும் அந்நிய நாடுகளுக்கும் செல்லும் பாதைகளை உடையதும் ஆகிய லண்டன்மாநகரம் பார்லிமெண்டாரிடம் இருந்தது. க்ளாஸெஸ்டர் பார்லிமெண்டின் கையிலிருந்ததால் அஃது அரசனுக்கு வேல்ஸில் ராணுவத்

தைச் சேர்ப்பதற்கு ஒரு தடையாய் நின்றது. யார்க்குப் பட்டணம் ஸ்காட்லாந்திற்குப் போகும் வழியாதலால் ஸ்காட்ஸ் ஜனங்களின் உதவி கிடைப்பதற்கு அனுகூலமா யிருந்தது.

அரசர்களின் கீழ் இருந்த உத்தியோகஸ்தர்கள் அவன் சொற்படி நடவாத இடைக்காலத்தில் பார்லிமெண்டின்சைனியம் நல்லபழக்கத்தை அடைந்தது. ராணுவச்சட்டம் ஏற்பட்டதால் பார்லிமெண்டுக்குத் துருப்புக்களின் மேல் ஆக்ஷியேற்பட்டதுடன் அரசனுக்கு அந்நியநாட்டின் உதவி கிடைக்காமல் கப்பல் படையைக் கொண்டு தடை செய்யவும் வழி ஏற்பட்டது. கிராம்வெல் தலைமை வகித்ததும், அவன் துருப்புக்களுக்குக் கொடுத்துவந்த ராணுவப் பழக்கமும் வெற்றிக்கு முக்கிய காரணங்களாகும். முடிவில் அரசனின் கடவுள் உரிமை விஷயத்தில் ஜனங்களுக்கு விருப்மில்லாமையும், பார்லிமெண்டு ஜனங்களுடைய உரிமைக்காகச் சண்டை போடுகிறது என்கிற எண்ணமும் வரவர ஓங்கிவந்ததால் பார்லிமெண்டுக் கக்ஷிக்குத் தேசத்தார்களின் நல்ல எண்ணம் திரும்பினது.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| உரிமை விண்ணப்பம் | ... | 1628 |
| கப்பல் பண வழக்கு | ... | 1637 |
| பெரிய எச்சரிக்கைப் பத்திரம் | ... | 1641 |
| ஐந்து மெம்பர்களைப் பிடித்தல் | ... | 1642 |
| மார்ஸ்டன் மோர் சண்டை | ... | 1644 |
| நேஸ்பி சண்டை | ... | 1645 |
| ப்ரைடின் பேதிமாத்திரை | ... | 1648 |
| சார்லஸின் கொலை-ஜன. 30உ | ... | 1649 |

## முக்கியச் செய்திகள்.

1. ஜார்ஜ் வில்லியர்ஸ்—பக்கிங்ஹாம் பிரபு (1592-1628.) இவன் முதலாவது ஜேம்ஸ், முதலாவது சார்லஸ் இவர்களுக்கு முக்கியமான சினேகிதனுவான். இவனுடைய இஷ்டப்படி நடந்ததால்தான் இவ்வரசர்கள் ஜனங்களுடைய விசுவாஸத்தை இழந்தார்கள். இவன் சார்லஸுடன் மாட்ரிட்டுக்குச் சென்று கல்லியாணம் நிறைவேருததால் ஸ்பெயினுடன் போர்புரிய அரசனைத் தூண்டினுன். இவனுடைய முயற்சி, பிரஞ்சு பிராடெஸ்டெண்டுகளுக்கு உதவி புரிவதிலும் வீணுயிற்று. ஸ்பானிஷ் போரைச் சரியாகநடத்தாததால் பார்லிமெண்டு இவன்மேல் 1626-ம் வருஷத்தில் குற்றஞ்சாட்ட முயன்றது. தனதுசினேகிதனைத் தப்பித்து விட அரசன் பார்லிமெண்டைக் கலைத்தான். அப்போது சார்லஸ் 'என்னுடைய உத்தியோகஸ்தர்கள் செய்தவேலைகளின் தகுதியைப் பற்றிப் புகார் செய்ய ஒருநாளும் நான் பார்லிமெண்டாருக்கு இடம் கொடுக்கமாட்டேன். அதிலும் எனக்குக் கண்போன்றவனை ஒருநாளும் விட்டுக்கொடுக்க மாட்டேன்' என்ருன். இவனைப் பெல்டன் (Felton) கொன்ருன் என்று கேள்விப்பட்ட உடன் ஜனங்கள் வெகு சந்தோஷத்தை அடைந்தார்கள்.

2. பேரியபாதிரி லாட் (1573-1645). இவனும் வெண்ட்வர்த்தும் முதலாவது சார்லஸுக்குப் பார்லிமெண்டின் உதவியில்லாமல் ஆள உதவி செய்தார்கள். வெண்ட்வர்த்தின் 'நன்ருய்' ஆளும்வழியைப் பின்பற்ற இவன் அரசனுக்குத் தைரியம் கொடுத்தான். ஸ்காட்லெண்டிலே குருமார்கள் செய்த போர்களுக்கு இவனே காரணம் ஆவான். பரிசுத்தர்களுக்கு விரோதியாதலால் நீடித்த பார்லி

மெண்டு இவனைக் குற்றம்சாட்டியது. இவனும் சிறையில் அடைபட்டு முடிவில் கொலை செய்யப்பட்டான்.

3. வெண்ட்வர்த். 1563-1641. முதலில் அரசன் தனது இஷ்டம் போல் ஆளுவதைத் தடுக்கும் உரிமை விண்ணப்பத்தைத் தயார் செய்தவர்களுள் இவனும் ஒருவனுவான். பக்கிங்ஹாமுக்கு விரோதியாதலால் அவன் இறந்த பிறகு அரசனுடைய பக்கத்தில் சேர்ந்தான். அரசனுடைய அதிகாரத்தை நிலையான ராணுவத்தைக் கொண்டு 'நன்ருய்' ஸ்தாபிக்க எண்ணினதால் இவன் முறைக்கு 'நன்ருய்' என்பது பெயராகும். இவனைக் கொலை செய்யத் தனிச் சட்டம் (Bill of Attainder) ஏற்பட்டது. நீடித்த பார்லிமெண்டு இதைச் செய்து அரசனுடைய கையொப்பத்தையும் அடைந்தது. இதைக்கண்ட வெண்ட்வர்த் என்ற ஸ்டாப்போர்ட்பிரபு "அரசனுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்காதீர்கள்" என்ருன்.

4. ஹாம்ப்டன். (1594-1643) இவன், அரசன் கப்பல் வரியைப் பார்லிமெண்டின் சம்மதமில்லாமற் போட்டது பிசகு என்று கூறிச் சட்டத்திற்கு எதிராக முதலில் வரியைக் கொடுக்க மாட்டேன் என்ருன். இவனுடைய தைரியத்தைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்தார்கள். க்ரே கவி இவனுடைய தைரியத்தைச் செய்யுளில் நன்கு விவரிக்கின்ருன். பார்லிமெண்டின் பக்கத்தில் சண்டைபோட்டுச் சால்க்ரோவ் பீல்ட் சண்டையில் இறந்தான்.

5. ராஜ்ஜியத்துக்கடுத்த உடன்படிக்கை (National Covenant) லாட், இங்கிலீஷ் தோத்திரப் புஸ்தகத்தையும் குருமார்களின் ஆட்சியையும் ஸ்காட்லெண்டில் கொண்டு வந்தபோது அவைகளை எதிர்க்கவும், தங்களது மதத்தைக் காக்கவும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதாய் 1639-ம்

வருஷத்தில் ஸ்காட்ஸ்கள் உடன்படிக்கையைச் செய்து கொண்டார்கள்.

6. பயபக்தியான சேர்க்கை உடன்படிக்கை (Solemn league and Covenant) 1643. சார்லஸ், குருமார்களின் பேரில் அரசனுடைய வழியை அறிந்தான். இப்போது தங்களுடைய மதத்தைக் காப்பாற்றுவதாகப் பார்லிமெண்டு வாக்கு அளித்ததின் பேரில் ஸ்காட்ஸ்கள் பார்லிமெண்டுக்கு உதவி புரிவதாக உடன்படிக்கை செய்து கொண்டார்கள். பார்லிமெண்டின் ஜயத்திற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

7. தன்னை நிராகரித்த சட்டம் (Self denying-ordinance) 1645. இரண்டாவது நியூபரிச் சண்டையில் அரசனைச் சிறைபிடிக்காதது பார்லிமெண்டு மெம்பர்கள் தளகர்த்தர்களாக இருந்ததால் உண்டான தீங்காகும் என்பதைக் கண்டு க்ராம்வெல் 'இனிமேல் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் தளகர்த்தர்களாக இருக்கக்கூடாது' என்ற சட்டத்தைச் செய்தான்.

8. குற்றஞ் சாட்டுவதும் உரிமையை நீக்கும் சட்டமும் (Impeachment and bill of Attainder). குற்றஞ் சாட்டுங்கால் மந்திரிகளைப் பொது ஜனசபையில் குற்றம் சாட்டுவதும், பிரபுக்கள் சபையில் தீர்ப்புச் சொல்லுவதும் வழக்கம். இதற்கு அரசனுடைய கையெழுத்து வேண்டியதில்லை. உரிமையை நீக்கும் சட்டத்தில் அரசனுடைய சம்மதம் வேண்டியதாகும். இன்னகுற்றம் என்று சொல்ல முடியாமலிருந்தால் மந்திரிகளைத் தொலைக்க அஃது ஒரு வழியாகும்.

9. ப்ரைடின் பேதிமாத்திரை (Pride's purge) 1648 ப்ரெஸ் பிடேரியன் மெம்பர்கள் அரசனைக் கொல்லச் சம்மதிக்காமையால் ராணுவம் ப்ரைட்தளகர்த்தனை அனுப்பிப்

பார்லிமெண்டை விட்டு அவர்களை நீக்கும்படி செய்தது. இப்படி நீடித்த பார்லிமெண்டிலிருந்து நூற்று நாற்பத்து மூன்று மெம்பர்கள் தள்ளப்பட்டார்கள்.

10. 'ஜேம்ஸ் காற்றை விதைத்தான். அவனுடைய மகன் சுழல் காற்றை அறுத்தான்.' ஜேம்ஸ் கடவுள் உரிமைக் கொள்கையைக் கொண்டுவந்ததின் பயனாக அவன் மகன் கொலை செய்யப் பட்டான் என்பது இதன் கருத்தாகும்.

## கேள்விகள்.

1. உரிமை விண்ணப்பத்தை இரண்டாவது பெரிய சாஸனப் பத்திரம் என்று சொல்லுவது எப்படி?

2. பதினோரு வருஷத்தின் கொடிய ஆளுகையில் எவர்கள் அரசனுடைய முக்கிய மந்திரிகளாயிருந்தார்கள்?

3. கப்பல் பணம் என்ற விவாதத்தைப் பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லுக

4. பெரிய உள்நாட்டுப் போருக்கு நெருங்கிய காரணம் யாது?

5. எதுமுதல் பார்லிமெண்டாருக்கு வெற்றி திரும்பியது?

6. ராணுவம் ஏன் அரசனைக் கொலை செய்யத் தீர்மானித்தது?

7. விசாரணையில் அரசன் சொல்லிக் கொண்டது யாது?

8. கொலைக்குப் பின் மற்ற ஜனங்களுக்கு அதைப் பற்றி என்ன அப்பிராயம் இருந்தது?

9. இங்கிலாந்துப் படம் ஒன்றை வரைந்து அதில் முக்கியமான போர்க்களங்களைக் குறிப்பிடுக.

## நான்காவததிகாரம்



ஆலிவர் கிராம்வேல்.

இவன் ஹண்டிங்டனில் ஒரு நிலச்சுவான் தாரனுடைய இளைய பிள்ளையாவான் ; எட்டாவது ஹென்றியின் மந்திரியாகிய தாமஸ் கிராம்வெலின் உறவினன். இவன் முதலாவது சார்லஸின் காலத்தில் 1628-ம் வருஷத்திய பார்லிமெண்டிற்கு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவன் ; குறுகியதும் நீடித்ததும் ஆகிய பார்லிமெண்டுகளில் மெம்பராய் இருந்து கீர்த்தி பெற்றவன்; பரிசுத்த மதத்தில் வெகு பக்தியுள்ளவனுதலால் பெரிய உள்நாட்டுப் போரில் மத

வைராக்கியத்துடன் போர்செய்யக்கூடிய படையைத்தயார் செய்தவன். மார்ஸ்டன் மோர், நேச்பி என்ற இடங்களில் பார்லிமெண்டு வெற்றியை அடையை முடிந்தது இவனுடைய முயற்சியால்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். முதலாவது சார்லஸ் கொலை செய்யப் பட்ட பிறகு இவன் இங்கிலாந்திலே குடியரசு முறையை ஏற்படுத்தினன்; முடியரசு உரிமை, பிரபுக்கள் சபை என்றவற்றை ஒழித்துப் பொதுஜனசபை ஒன்றை ஆள ஏற்படுத்தினன்; ஒரு சிறிய நிர்வாக சபையை ஏற்படுத்தி அதற்கு மில்டன் கவியைக் காரியதரிசியாக நியமித்தான்; இங்கிலாந்தில் கலகத்தை அடக்கிய பின் அயர்லாந்திற்குச் சென்றான்.

**அயர்லாந்து.** பெரிய உள்நாட்டுப் போரில் அரசன் கக்ஷியில் இருந்த அயர்லாந்து இப்போது அவன் மகனை அரசனுக அங்கீகரித்தது. ட்ரோவாடா, வெக்ஸ் போர்ட் முதலான இடங்களை முற்றுகை போட்டு, ஜனங்களைக் கொடுமையாக நடத்தினதிலிருந்து அயர்லாந்து முழுவதும் கீழ்ப்படிந்தது. பிறகு இவன் தன்னுடைய மருமகனை அங்கேயே வைத்து விட்டுத் தான் இங்கிலாந்திற்குத் திரும்பினன்.

**க்ராம்வெலின் ஐரிஷ் ஏற்பாடு.** இவன் விரோதமாகச் சண்டை போட்டவர்களுடைய நிலங்களைப் பிடுங்கி அவைகளை இங்கிலீஷ்ப் பரிசுத்தர்களுக்குப் பங்கிட்டான். தங்கள் இஷ்டம் போலத் தொழவும் முடியாதிருந்ததால் அநேகர் அமெரிக்காவுக்குச் சென்று வெகு கஷ்டத்தை அனுபவித்தனர். இன்னும் அநேகர்கள் ஸ்பெயின், பிரான்சு முதலான காதொலிக் தேசங்களுக்கு ஓடினர்கள். இப்படிச் செய்த க்ராம்வெலை ஐரிஷ்காரர்கள் சபித்தார்கள். இது க்ராம்

வெல் சாபம் என்று ஒரு பழமொழியாய் இன்றும் அத் தேசத்தில் வழங்கிவருகிறது.

**ஸ்காட்லாண்டு.** இரண்டாவது சார்லஸ் பிரெஸ்பிடேரியன் மதத்தை ஸ்காட்ஸ்களுக்குக் கொடுப்பதாக வாக்கு அளித்ததால் அவர்கள் அவனை அரசனாக ஒப்புக்கொண்டார்கள். க்ராம்வெல் அங்குச் சென்று 1650-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3-ம் தேதியில் டன்பார் என்ற இடத்தில் ஸ்காட்ஸ்களைத் தோற்கடித்தான். இவ் வெற்றி, இவன் எதிர் பாராததால் அவன் இதனைக் 'கடவுளின் கிருபை' என்பான். அடுத்த வருஷம் அதே தேதியில் உர்செஸ்டர் என்கிற இடத்தில் இரண்டாவது சார்லஸ் தோற்றுப் பிரான்சுக்குத் தப்பி ஓடினான். க்ராம்வெலின் சைனியம், சார்லஸைத் தேடிச் செல்லுகையில் அவன் சிந்தூரமரத்தில் ஒளித்திருந்தான். இம் மரத்தின் இலையை முடியரசு உரிமையைக் கொண்டாடுபவர் அணிந்து வந்தனர்.

**எச்சப்பார்லிமேண்டும் டச்சுப்போரும்.** க்ராம்வெல் நீடித்த பார்லிமெண்டிலிருந்து வெளிப்படுத்தப்பட்டவர்கள் போக மீதி உள்ளவர்களை வைத்துக் கொண்டு நாட்டை ஆள ஆரம்பித்தான். அக்காலத்தில் டச்சுக்காரர்கள் இங்கிலீஷ்காரர்களைவிட வியாபாரத்தில் மேலோங்கி நின்றார்கள். அவர்களுடைய வியாபாரச்சிறப்புக்களை ஐரோப்பாத் துறைமுகங்களில் காணலாம். கூலிக்குச் சாமான்களைக் கொண்டுபோகும் வியாபாரம் அவர்களுடையதாகவே இருந்ததால் க்ராம்வெல் அதை இங்கிலாந்திற்கு மாற்ற வழி தேடினான். 1651-ம் வருஷத்தில் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தை ஏற்படுத்தி, அதனால் ஐரோப்பாவிலுள்ள தேசங்கள் தங்களுடைய சரக்குகளைத் தங்களுடைய கப்பல்களிலேயே இங்கிலாந்திற்குக் கொண்டுவரலாமே ஒழிய டச்சுக்கப்பல்களில் கொண்டுவரக் கூடாது என்றும், போது

மான கப்பல்கள் இல்லாவிடில் இங்கிலீஷ்க் கப்பல்களில் கொண்டு வரவேண்டுமென்றும் க்ராம்வெல் ஏற்பாடு செய்தான். இதனால் இரண்டு தேசங்களுக்கும் போர்நடந்தது. போர்ட்லெண்டு சண்டையில் டச்சுக்காரர்களும் தோல்வியடைந்தார்கள். 1654ம் வருஷத்தில் லண்டன் சமாதானத்தின்படி, ஹாலெண்டும் இங்கிலீஷ்க் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தை ஒப்புக் கொண்டது. இப்படி இங்கிலாந்து 'சமுத்திர எஜமானி' என்கிற உரிமையைத் திரும்பியடைந்தது.

க்ராம்வெல் எச்சப் பார்லிமெண்டைச் சீர்திருத்த முயன்றான்; அது பயன்படாததால் ராணுவத்தைக்கொண்டு பார்லிமெண்டைக் கலைத்துக் கட்டடத்தின் திறவுகோலை எடுத்துச்சென்றான். இப்படி எச்சப் பார்லிமெண்டு முடிவை அடைந்தது. 'முத்திரைக்கோல்' என்பது பார்லிமெண்டின் அதிகாரத்தைக் குறிக்கும் கருவியாகும். க்ராம்வெல் இதையும் எடுத்துச் செல்லும்படி செய்தான்.

பிறகு, அவன் ராஜ்யத்தை ஆளப் பரிசுத்தர்கள் கூடிய ஒரு சபையைக் கூட்டினான். அவர்களுக்கு மதப்பிரசாரம் ஒன்றைத்தவிர ஆளும் பழக்கமில்லாததால் அதையும் க்ராம்வெல் கலைத்தான். லண்டன்மாநகரப் பிரதிநிதி, பரிசுத்த மதஸ்தனை பேர்போன் என்பவனுதலால் அவன்பேரால் இப் பார்லிமெண்டு கூப்பிடப்பட்டது. இதற்குப் பின் 1653-ம் வருஷத்தில் ராணுவ உத்தியோகஸ்தரின் உதவியால் ராஜ்ஜியத்தை ஆள க்ராம்வெல் 'துரைத்தனக்கருவி' என்பதை ஏற்பாடு செய்தான். அதன்படி இங்கிலீஷ், ஸ்காட்டிஷ், ஐரிஷ் என்ற பார்லிமெண்டுகள் ஒன்று சேர்க்கப்பட்டன. க்ராம்வெல் 'ரக்ஷகப்பிரபு' என்ற பட்டத்தைத்தரித்துக் கொண்டு ராஜநீதி செலுத்தினான். பொது ஜனசபை ஒன்று

மட்டிலிருந்தது. அதற்கு இங்கிலாந்து 375 பிரதிநிதிகளை யும், ஸ்காட்டுலெண்டு 30 பிரதிநிதிகளையும், அயர்லெண்டு 30 பிரதிநிதிகளையும், வேல்ஸ் 25 பிரதிநிதிகளையும் அனுப்பின. இது முதல் இங்கிலாந்து 'ரக்ஷக ஆட்சி' (Protectorate) யை யடைந்தது. (1653-58) இதன்படி கூடிய பார்லிமெண்டு 'துரைத்தனக் கருவி'யை அங்கீகரிக் காததால், க்ராம்வெல் அந்தப் பார்லிமெண்டையும் தள்ளித் தன் இஷ்டம்போல் ஆண்டுவந்தான்.

**உள்ளூர்த் தந்திரம்.** இப்படி ஆள்வதில் கலகங்கள் ஏற்படு மென்று கருதிய கிராம்வெல், தேசத்தை அநேக ராணுவ ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொரு ஜில்லாவையும் ஒவ் வொரு ராணுவ உத்தியோகஸ்தரின் (Major-General) கீழ்வைத்தான்; காதொலிக்குகளும் ஆங்கிளிகன்களும் தவிர மற்ற எவரும் கடவுளைத் தங்கள் இஷ்டம்போல் தொழலாம் என்று திட்டஞ் செய்தான்; சட்டங்களைச் சரிவரச் செய்து நீதி விளங்கும்படி செய்தான். மூன்று தேசங்களிலும் ஒரு வித கலகமுமின்றி அமைதி பரவி நின்றது.

**வெளிநாட்டுத் தந்திரம்.** இவ்விஷயத்தில் இங்கிலாந்து எலிஜபெத் மகாராணி காலத்தில் எவ்வாறு சமுத்திர அதி காரத்தையும், ப்ராடெஸ்டெண்டுமதத் தலைமையையும்வகித் திருந்ததோ அந்த நிலைமையையே க்ராம்வெல் திரும்பக் கொண்டுவரக் கருதினன். முன்னமேயே க்ராம்வெல் டச்சுக் காரர்களின் கர்வத்தை அடக்கியிருந்தான். என்றாலும், அவ னுடைய எண்ணங்கள் பூர்த்தி பெறுவது வேறு விஷயங்க ளால் மாறி நின்றது. க்ராம்வெலின் கஷ்டம் வேறொன் ருகியது. பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் பகை ஏற்பட்டது. இங்கிலாந்திற்கு எதிராக ஸ்பெயின் அதிக வைராக்கிய முள்ள காதொலிக் தேசமாகி அமெரிக்காவில் நடைபெறும் இங்கிலீஷ் வியாபாரத்திற்கு இடையூறு செய்தமையால்

க்ராம்வெல் பிரான்சுடன் சேர்ந்தான். இப்போரில் ஜமைகா, டங்கர்க் என்பன இங்கிலீஷ்காரர்களுக்குச் சொந்தமாயின. மேலும், சேவாய்ப் பிரபு பிராடெஸ்டெண்டுகளைக் கொடுமையாக நடத்த முடியாமல் கிராம்வெல் தடுத்தான்.

இரண்டாவது பார்லிமெண்டு க்ராம்வெலுக்கு வார்சை நியமிக்க அதிகாரம் கொடுத்ததுடன், பிரபுக்கள் சபையையும் உண்டாக்கிற்று. தனது மகன் ரிச்சர்ட் கிராம்வெலை வார்சாக நியமித்து 1657-ம் வருஷம் செப்டம்பர் 3௳ இறந்தான். ரிச்சர்ட் வந்ததும், ராணுவத்திற்கும் பார்லிமெண்டிற்கும் மத்தியில் 'எது ஆக்ஷிசெய்வது' என்கிற விவாதம் ஏற்பட்டது. அதனால் ரிச்சர்ட் தனக்கு 'ரக்ஷகப் பிரபு' என்ற பதவி வேண்டுவதில்லையென்று சொல்லிப் பிரான்சுக்குச் சென்றான். இந்த சமயத்தில் ஸ்காட்லெண்டில் ராணுவத் தலைவனுயிருந்த மாங்க் (Monk) என்பவன் லண்டனுக்குச் சென்றான். ஜனங்கள் 'சுயேச்சைப் பார்லிமெண்டு' வேண்டுமென்றார்கள். ஏற்கனவே இருந்த நீடித்த பார்லிமெண்டின் அங்கத்தினர்கள் கூடி முடியரசு முறை வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இரண்டாவது சார்லஸ் ஹாலெண்டில் ப்ரீடா (Breda) என்கிற இடத்தில்இருந்தான். அவன் தனது தகப்பனுரைக் கொலைசெய்ததில் சம்பந்த முள்ளவர்களை மன்னிப்பதாகவும், ராஜ விசுவாச முள்ளவர்கள் தங்கள் இஷ்டம்போல் கடவுளைத் தொழலாமென்றும் அறிக்கையை வெளியிட்டதின் பேரில், இங்கிலீஷ் ஜனங்கள் அவனுக்கு அழைப்புப் பத்திரம் அனுப்பினுர்கள். அவன் மேமீ (29-5-1660) இங்கிலாந்தில் இறங்கினுன். இப்படி இரண்டாவது சார்லஸ் திரும்பப்பட்டம் அடைந்த விஷயத்தை முடிமீக்ஷி என்பார்கள்.

க்ராம்வெலின் சிறப்பு. க்ராம்வெல், டச்சுக்காரர்கள் இங்கிலீஷ் வியாபாரிகளை அம்பாய்நாவில் கொன்றதனுல்

வந்த அவமானத்தைப் போக்கினன்; ப்ராடெஸ்டெண்டு களுக்கு அந்நிய நாட்டார் கெடுதல் செய்யாமல் காப்பாற்றி னன்; ஸ்பெயினின் கர்வத்தை அடக்கிச் சமுத்திரத்தில் இங்கிலீஷ்காரர்களை மதிக்கும்படி செய்தான். க்ராம்வெலி னுடைய எதிரிகளே 'இவனை விட உயர்ந்த இங்கிலீஷ்காரன் எவனும் இல்லை' என்று ஒப்புக் கொள்வார்கள். ஆனால் உள்ளூரில் ராணுவத்தின் உதவியைக் கொண்டு ஆண்டு வந்தான். அவனுக்கு இருந்த கஷ்டநிலைமையால் வேறு விதமாக நடத்தல் அரிதாயிருந்தது.

குடியரசு நடைபெறாதது. க்ராம்வெலுக்குப் பிறகு அவன் மகன் ஆக்ஷி செய்வதற்குத் தகுதியற்றவனாயிருந் தான். க்ராம்வெலே ஜனங்களுடைய சம்மதத்தை அனு சரித்து ஒரு துரைத்தனத்தை ஏற்படுத்தவில்லை. ஜனங் களுக்குப் பரிசுத்தர்களின் ஆக்ஷியில் பாட்டு முதலான குதூஹலங்களை நிறுத்தினது ஒரு கஷ்டமாக இருந்தது. மேஜர் ஜெனரலின் ஏற்பாடும் ஜனங்களுடைய விருப்பத் திற்கு முற்றிலும் விரோதமானதாயிருந்தது. முதல் சார்லஸைக் கொலை செய்தது ராணுவமானாலும், ஜனங்கள் அப்படிச் செய்தது முற்றிலும் தப்பிதமானது என்பதை உணர்ந்து அதைத் திருத்தி அவனது மகனைக் கொண்டு வர எண்ணினார்கள். கொலைக்கு முன் சார்லஸ் நடித்தது ஜனங்களுக்கு அவனிடத்தில் பரிதாபத்தை உண்டாக்கியது. மேலும் அவனுடைய மகன் செய்து கொண்ட அறிக்கை முடி மீட்சியை நடைபெறச் செய்தது.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| டன்பார்ச் சண்டை 3உ செப்டம்பர் | ... | 1650 |
| உர்ஸெஸ்டர் | ... | 1651 |

| | |
|---|---|
| கப்பல் போக்கு வரத்துச் சட்டம் | ... 1651 |
| துரைத்தனக் கருவி | ... 1653 |
| க்ராம்வெலின் மரணம் 3உ செப்டம்பர் | ... 1658 |
| முடி மீட்சி | ... 1660 |

## முக்கியச் செய்திகள்.

1. உர்ஸெஸ்டர் சண்டை 1551. க்ராம்வெல் இரண்டாவது சார்லஸை உர்ஸெஸ்டரில் செப்டம்பர் 3உ தோற்கடித்தான். இது முதல் கத்தியை உருவிச் சண்டை செய்வது என்பது இல்லாமல் போனதை க்ராம்வெல் 'முடிக் கருணை' (Crowning mercy) என்று சொல்லுவான். மூன்ருவது செப்டம்பர் க்ராம்வெலுக்கு உரிய நாள்.

2. க்ராம்வெல் இரண்டாவது சார்லஸைப் பிடிப்பவருக்கு 1000 பவுன் வெகுமதி அளிப்பதாக வாக்களித்த போதிலும், அரசன் சிந்தூர மரத்தில் ஒளிந்திருந்து ராணுவத்திற்குப் பிடிபடாமல் தப்பினன். அரசனைக் கொண்டாடுவோர் வெகுநாள் வரையிலும் மே மீ 29—ல் சிந்தூரமரநாளைக் கொண்டாடுவது வழக்கத்திலிருந்தது. அரசன் பிறந்ததும், மறுபடி பட்டத்திற்கு வந்ததும் இந்தத் தேதியிலாகும்.

3. பார்லிமெண்டு சபையில் அக்கிராசனுதிபதியின் முன்னே இருக்கும் மேஜையில் 'முத்திரைக் கோல்' (Mace) ஒன்று இருப்பது வழக்கம் உண்டு. இது பார்லிமெண்டின் அதிகாரத்தைக் குறிக்கும் கருவியாகும். (நமது இந்தியச் சட்ட சபைக்கும் வேல்ஸ் இளவரசர், இத்தகைய 'முத்திரைக் கோல்' ஒன்றை அதன் தலைவரிடம் தாம் இந்தியாவுக்கு விஜயம் செய்த 1927-ம் வருஷத்தில் கொடுத்துள்ளார்.) க்ராம்வெல் 1653-ம் வருஷத்தில் பார்லி

மெண்டைக் கலைக்கக் கட்டடத்திற்கு ராணுவத்துடன் சென்று 'இந்த அல்பமான வஸ்துவை எடுத்துச் செல்லுங்கள்' என்ருன். இப்படி நீடித்த பார்லிமெண்டு போய்விட்டது.

4. மில்டன் கவி (1608-74). இங்கிலாந்தின் கவிகளுள் இவன் மிகச் சிறந்தவனயிருந்தான். இவன் பரிசுத்த மதத்தைச் சேர்ந்தவனுதலால் பார்லிமெண்டுக் கக்ஷிக்கு உதவியாயிருந்தான்; கிராம்வெலுக்கு முக்கிய காரியதரிசியாகவுமிருந்தான்; பின்னல் வெகு நாள் வரையில் கண் பார்வையை யிழந்திருந்தான். இக் காலங்களில் தனது பெண்ணின் உதவியைக் கொண்டு அநேக செய்யுள்களை எழுதினன். அவைகளுள் முக்கியமானது 'இழந்த மோக்ஷம்' (Paradise lost) என்பதாகும்.

5. க்ராம்வெலின் காலத்தைப் 'பரிசுத்தப்புரட்சி' என்பார்கள்.

6. அயர்லாந்தில் ட்ரெவாடா முற்றுகையில் க்ராம்வெல் செய்த அநீதியிலிருந்து ஐரிஷ்காரர்கள் க்ராம்வெலைச் சபித்தார்கள். ஓர் ஐரிஷ்காரனுடைய பெரிய சாபம் என்னவெனில் 'கிராம்வெலுக்கு வந்த சாபம் வரட்டும்' (May the curse of Cromwell fall on you.) என்பதுதான்.

## கேள்விகள்

1. க்ராம்வெல் அயர்லாந்தை அடக்கின வழியைச் சுருக்கமாய்ச் சொல்லுக

2. நீடித்த பார்லிமெண்டை ஏன் க்ராம்வெல் கலைத்தான்?

3. 'துரைத்தனக்கருவி' என்ருல் என்ன?

4. க்ராம்வெல் ஏன் மூன்று பார்லிமெண்டுகளையும் ஒன்று சேர்த்தான்?

5. முதலாவது டச்சுப்போரைச் சுருக்கமாய்ச் சொல்லுக

6. குடியரசு ஏன் நிலை நிற்கவில்லை?

7. க்ராம்வெல் இங்கிலாந்திற்குச் செய்த நன்மைகள் யாவை?

---

## ஐந்தாவததிகாரம்.

### முடி மீட்சியும் புரட்சியும்.

### (A) இரண்டாவது சார்லஸ் 1560-85.

முடிமீட்சியின்பயன். வெளிப்படையாய்ப் பார்ப் போருக்குப் பெரிய உள்நாட்டுப் போரினல் தேசத்திற்கு எவ்விதமான பயனும் உண்டாக வில்லை என்ற எண்ணம் தோன்றியது. ஆனல், உண்மையில் பார்லிமெண்டுக்கு இஃது ஒரு வெற்றியேயாகும். க்ராம்வெலின் ஆட்சி மற்ற ட்யூடர்கள் ஆண்டது போல் இருக்கலாம். ஆனல், முன்னுள் அரசியல் முறை போய்விட்டது என்பதற்கு ஆக்ஷேபணை யில்லை. முதலாவது சார்லஸைப் போல் அரசன் தனி உரிமை யால் ஏற்படுத்தக் கூடிய நக்ஷத்திரமன்றம் முதலான நியாய ஸ்தலங்களைத் திரும்ப ஏற்படுத்துவதும், பார்லிமெண்டின் அதிகாரத்தைக் குறைக்கமுயலுவதும் வீணை காரியமாகும். ஜனங்கள் தங்களுடைய பலத்தை நன்கு அறிந்து கொண் டார்கள். முடி மீட்சியால் வந்த அரசர்கள் இதையறிந்து நடக்க வேண்டியிருந்தது. இல்லாவிடில் இரண்டாவது ஜேம்ஸுக்கு என்ன கதி வந்ததோ அதே கதி அவர்களுக் கும் வந்திருக்கும். இப்படி அரசர் பார்லிமெண்டின் விருப்ப

மாகிய சட்டப்படி நடக்க வேண்டுமென்பது ஏற்பட்டது. மதவிஷயத்தில் கடவுளைத் தொழுவதில் சுயாதீனம் இருக்க வேண்டுமென்பதும் அங்கீகாரம் செய்யப்பட்டது.

**இரண்டாவது சார்லஸின் குணம்.** இவன் சிற்றின்பத்தில் பிரிய முள்ளவனுதலால் ஜனங்களின் க்ஷேமத்தைச் சிறிதும் கவனிக்காதவனுயிருந்தான். இவன் பட்டத்திற்கு வந்ததும் இனிமேல் 'நான் வெளியூர்களுக்குச் செல்வதில்லை' என்று வாக்களித்தான். ப்ரீடா அறிக்கைக்கு மாருக நடந்து தகப்பனைக் கொன்றவர்களைக் கொடுமையாய் நடத்தினுன்.

**மீட்சியின் ஏற்பாடு.** உம்பள முறைப்படி வந்த வருமானத்தை அரசன் தனக்கு வேண்டாமென்றதால் அவனுக்கு வேறு வருமானத்தை ஆயுள் பரியந்தம் பார்லிமெண்டு அளித்தது. ராணுவம் கலைந்ததும் அரசன் ஒரு பட்டாளத்தை வைத்துக் கொள்ள அனுமதி பெற்ருன். ஸ்காட்லாண்டும் அயர்லாண்டும் தனிப் பார்லிமெண்டுகளை அடைந்தன. கப்பல் போக்குவரத்துச் சட்டம் இவைகளுக்குப் பயனை அளிக்கவில்லை. ஸ்காட்லெண்டில் 'குருமார்களின் ஆட்சி' வந்து விட்டது. அயர்லாந்தில் நிலங்களை இழந்த காதொலிக்குகளுக்கு மூன்றில் ஒரு பங்கு நிலம் தான் திரும்பக் கொடுக்கப் பட்டது. அதனுல் அநேகர்கள் அதிருப்தி யடைந்து தேசத்தை விட்டுச் சென்ருர்கள்.

**க்ளாரேண்டான்.** புதுப் பார்லிமெண்டில் ராஜ விச்வாசமுள்ளவர்கள் அதிகமாயிருந்தார்கள். க்ளாரெண்டன் மந்திரி பரிசுத்தர்களுக்கு விரோதமாகச் சட்டங்களைச் செய்தான். ஒரு தன்மைச் சட்டப் படி (Act of Uniformity) மத ஸ்தாபனக் கொள்கைகளையும், தோத்திரத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும். முனிசிபால்டிகளில் (Corporation Act) இங்கிலீஷ் மதத்தைச் சேர்ந்தவர்கள்

தவிர எவரும் உத்தியோகஸ்தர்களாகவாவது, மெம்பர்களாகவாவது அமரக் கூடாது. மத ஸ்தாபகர்கள் தவிர மற்றவர்கள் கடவுளைத் தொழவும் முடியாது (Conventicle Act). பட்டணங்களைச் சுற்றி ஐந்து மைல் (Five Mile Act) எல்லைக்குள் பரிசுத்த மதத்தைப் பிரசாரம் செய்பவர்கள் வரக்கூடாது. மேற்கூறிய சட்டங்களைப் பரிசுத்தர்கள் ‘க்ளாரெண்டன் கட்டளைச்சட்டம்’ என்பார்கள். இதுமுதல் பரிசுத்தர்கள் ‘இணங்காதிருப்போர்’ என்ற பேரை அடைந்தார்கள்.

**வெளிநாட்டு விஷயங்கள்.** அரசன் போர்த்துகல் தேசத்து அரசன் மகளை மணம்புரிந்ததால் இங்கிலாந்திற்கு 1662-ம் வருஷத்தில் பம்பாய்த்தீவு கிடைத்தது. லூயியுடன் சிநேகத்தால் அரசன் டங்கர்க்கை விற்முன். வியாபாரத்தில் டச்சுக்காரர்களுடன் சண்டையேற்பட்டது. முதலில் இங்கிலீஷ்க்கப்பல்கள் கொளுத்தப்பட்டாலும் 1667-ம் வருஷத்தில ப்ரீடா உடன்படிக்கைப்படி நியூயார்க் கிடைத்தது. 1665-ம் வருஷத்தில் பெரியகொள்ளைநோய் எற்பட்டு ஆயிரக்கணக்கில் ஜனங்கள் மாண்டார்கள். அடுத்த வருஷத்தில் பெரியநெருப்புத் தொல்லை எற்பட்டுச் செயிண்டுபால் கோவிலும் எரிந்து போயிற்று. மேற்கூறியவைகளால் க்ளாரெண்டன் தனது பதவியை ராஜீநாமாக்கொடுத்துவிட்டுப் பிரான்சுக்கு ஓடிப்போய் அங்கே இருந்து பெரிய உள்நாட்டுப் போரின் சரித்திரத்தை எழுதினான்.

இவனுக்குப்பிறகு ஐந்து மந்திரிகள் ராஜ்ஜிய பாரத்தை நடத்தினார்கள். இவர்களுடைய பெயர்களின் முதலெழுத்துக்களிலிருந்து இவர்களைக் கெபால் என்று ஜனங்கள் கூப்பிடுவார்கள். பிரான்சுக்கு விரோதமாக ஹாலெண்டு, ஸ்வீடன் என்றவற்றுடன் சேர்ந்த மூவர் உடன்படிக்கையைச்செய்து கொண்டார்கள். இப்படி இங்கிலாந்து, ஹாலெண்டு முதலான

பிராடெஸ்டெண்டு தேசங்கள் ஒன்றுசேர்வதைக் கண்ட லூயி, இங்கிலீஷ் மன்னனுடன் முதல்டோவர் ரகசியஉடன் படிக்கையை 1670-ம் வருஷத்தில் செய்து கொண்டான். அதன்படி ' அரசன் காதொலிக்குகளுக்குக் கடவுளைத் தொழும் சுயாதீனத்தைக் கொடுக்க வேண்டும்; ஹாலெண் டிற்கு விரோதமாகப் பிரான்சுடன் சேரவேண்டும் ' என்று லூயி வற்புறுத்தினன். வேண்டிய பணத்தையும் மனித உதவியையும் அளிப்பதாக வாக்குஅளித்தான். சார்லஸ், பார்லிமெண்டு இதற்குச் சம்மதிக்காது என்பதைத் தெரிந்து கொண்டதனால், தனக்கு இருக்கும் உரிமையை உறுதிப் படுத்திக் கொண்டு ' பொறுப் பறிக்கை' (Declaration of Indulgence) ஒன்றை வெளி யிட்டுக் காதொலிக்களுக்கும், பரிசுத்தர்களுக்கும் விரோத மான சட்டங்களை நிறுத்தி வைத்தான். இதனால் பயங் கொண்ட பார்லிமெண்டு 1673-ம் வருஷத்தில் சோதனைச் சட்டத்தை (Test Act) ஏற்படுத்தி மத ஸ்தாபனத்தில் சேராதவர்களுக்கு உத்தியோக மில்லையென்றது. காதொ லிக்குகள் இருந்ததால் கெபால் கலைந்தது.

இது முதல் ஐந்து வருஷ காலம் டேன்பி மந்திரியா யிருந்தான். இவன் இரண்டாவது ஜேம்ஸின் பெண்ணு கிய மேரிக்கும், ஆரஞ்சு ஜில்லாவைச் சேர்ந்த வில்லியத் திற்கும் கல்லியாணம் செய்து வைத்தான். மறுபடியும் டச்சுப் போர் ஆரம்பித்தது. இது மதவிஷயத்திற்காக ஏற்பட்டதால் ஜனங்கள் அரசனுக்கு உதவிபுரிய வில்லை. பிரஞ்சு மன்னன், தன்னுடைய எண்ணம் நிறைவேறாமை யைக் கண்டு ஹாலெண்டுடன் சமாதானம் செய்து கொண் டான். (1678-81) டேன்பியினிடம் ஜனங்களுக்கு அதிருப்தி உண்டாகியது. அக்காலத்தில் இங்கிலாந்தில் ஓர் அவதூறு கிளம்பியது. காதொலிக்குகள் அரசனைக்கொன்று

அவனுடைய தம்பியாகிய காதொலிக் ஜேம்ஸைப் பட்டத்தில் வைக்கவேண்டி ஒரு சதி ஆலோசனையைச் செய்திருக்கிறார்கள் என்று ஒட்ஸ் என்பவன் சொல்லி வந்தான். பார்லிமெண்டும் 1679-ம் வருஷத்தில் ஹேபியஸ் கார்ப்ஸ் என்ற சட்டத்தைச் செய்தது. அதன்படி குற்றவாளி யென்று கண்டு பிடிக்காதவர்களை விசாரணை செய்யாமல் அதிக நாட்கள் சிறையில் வைக்கக் கூடாது என்பது ஏற்பட்டது.

மேற் கூறிய காதொலிக் சதியால் பார்லிமெண்டில் ஷாப்ட்ஸ்பரி, விலக்கல் மசோதாவைக் கொண்டு வந்தான். அதன் படி அரசனுக்குக் குழந்தையில்லாததாலும், அரசனுடைய சகோதரனாகிய ஜேம்ஸ் காதொலிக் ஆனதாலும் அவனைப் 'பட்டத்திற்கு வரக் கூடாதவன்' என்று விலக்க ஏற்பாடு செய்தான். அது பயன்படாது போகவே பார்லிமெண்டைக் கலைத்தான். பார்லிமெண்டைக் கூட்டச் சிலர் விண்ணப்பம் செய்து கொண்டார்கள். மற்றவர்கள் விலக்கல் மசோதாவை வெறுக்க ஆரம்பித்தார்கள். இது முதல் பார்லிமெண்டில் இரு கக்ஷி யேற்பட்டது. விலக்கல் மசோதாவுக்குச் சாதகமானவர்களுக்கு 'விக்' என்றும் விரோதமானவர்களுக்கு 'டோரி' என்றும் பேர் ஏற்படலாயிற்று. அந்த மசோதா பொது ஜன சபையில் நிறைவேறின போதிலும், பிரபுக்கள் சபையில் தள்ளப்பட்டது. மூன்றாவது முயற்சியும் வீணானது கண்டு சில 'விக்' குகள் அரசனையும் அவன் சகோதரனையும் 1683-ம் வருஷத்தில் ரைஹௌஸ் என்ற இடத்தில் கொலை செய்ய முயன்றார்கள். இதனால் அநேக 'விக்'கள் கொல்லப்பட்டார்கள். சில விக்குகளின் பட்டணங்களும் உரிமைகளையிழந்தன. அரசன் இஷ்டம்போல் ஆண்டுவந்தான்.

## (B) இரண்டாவது ஜேம்ஸ் 1685-88.

இரண்டாவது சார்லஸ் இறக்க இவனது இளைய சகோதரன் ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தான். சார்லஸ் வெளிப்படையாய்க் காதொலிக் என்று சொல்லிக் கொள்ளாமலிருந்தான். ஆனால் ஜேம்ஸ் காதொலிக் என்று சொல்லிக்கொண்டு அம்மதஸ்தர்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிய எண்ணினான். முதலில் சரியாக ஆள்வதாக வாக்கு அளித்தபோதிலும், பிறகு அவனுடைய நடவடிக்கைகள் முழுவதும் ஜனங்களால் அங்கீகரிக்கப் படவில்லை. தனக்கு எதிரியாய் நின்ற மான்மத் கோமகனைச் ஸெட்ஜ்மோர் என்கிற இடத்தில் தோற்கடித்துக் கொன்றான். இக் கலகத்தில்சேர்ந்தவர்களை விசாரிப்பதற்காக ஜப்ரேஸ் என்னும் இரக்கமில்லாத நியாயாதிபதியை நியமித்தான். இவன் விசாரிப்பதுபோல் பாவனைசெய்து எல்லோருக்கும் கொலைத்தண்டனையை விதித்ததால் இவனுடைய நீதிஸ்தலத்தைக் 'கொடிய நீதிச்சங்கம்' (Bloody Assize) என்று பின்பு ஜனங்கள் கூப்பிட்டார்கள். காதொலிக்குகளை உத்தியோகத்தில் அமைக்கச் சோதனைச்சட்டம் இடையூறாக நின்றது. இதை மறுக்க ஓர் உபாயத்தைச்செய்தான். 'ஒரு சட்டத்தைச் சில காலத்திற்கு அனுஷ்டானத்திற்கு வராமல் நிறுத்தி வைக்கவும், சிலர் பொருட்டு உபயோகிக்காமல் விலக்கி வைக்கவும் அரசனுக்கு உரிமையுண்டு' என்று ஜேம்ஸ் சொல்லி வந்தான். பார்லிமெண்டு, சட்டத்தைத் தள்ளச் சம்மதியாததால் இந்தயோசனையைச் செய்தான். இவ்வுரிமையைக்கொண்டு எல்லா இலாக்காக்களிலும் காதொலிக்குகளை நியமித்தான். பார்லிமெண்டையும், ஜனங்களையும் பயமுறுத்துவதற்குக் காதொலிக்குகள் நிறைந்த ஒரு ராணுவத்தை ஸ்திரமாக லண்டனில் வைத்தான். கோவில் விசார

ணைக்கூட்டம் ஒன்றைஏற்படுத்தி ஆங்கிளிகன் குருமார்களை அதன் ஆட்சியிலிருக்கும்படி செய்தான். சர்வகலாசாலையில் காதொலிக்குகளை உத்தியோகத்தில் அமர்த்தினான். பரிசுத்தர்களைச் சமாதானம் செய்வது போல் நடித்து, இரண்டாவது பொறுப்பறிக்கையை வெளியிட்டு எல்லாரும் கடவுளை இஷ்டம்போல் தொழலாமென்றான். இது 'காதொலிக்குகளுக்கும் தொழுவதில் சுயாதீனம் கொடுக்கவேண்டும்' என்ற அரசனுடைய உள் எண்ணத்தை எல்லோருக்கும் நன்கு விளக்கியது. இத்துடன் நிற்காமல் எல்லாஆங்கிளிகன் குருமார்களும் இரண்டுதொடர்ந்த ஞாயிற்றுக்கிழமைகளில் பிரசங்க பீடத்திலிருந்து பொறுப்பறிக்கையை வாசிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டான். ஏழுபேர்கள் அப்படி வாசிக்க மறுத்த குற்றத்திற்காக விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். இதற்குள் அரசனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஜனங்கள் இக் குழந்தையும் காதொலிக்மதத்தைத் தழுவித் தேசத்திற்குத் தீங்கைவிளைவிக்குமோ என்று எண்ணம் கொண்டார்கள். பிரமாணிக்கர்கள் (jurors) குருமார்களிடத்தில் குற்றமில்லையென்றதனால் நியாயாதிபதி அவர்களை விடுவித்தான். ஜனங்களுக்கு இதிலுண்டான சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. இருகக்ஷிக்காரர்களும் மதத்திற்கு அபாயம் வருமென்று அஞ்சி அன்றைத்தினமே ஹாலெந்துத் தலைவனை வில்லியத்திற்கு அழைப்புப் பத்திரத்தை அனுப்பினார்கள். வில்லியம், ஜேம்ஸின் பெண்ணான மேரியின் புருஷனாவான். முதலில் தயங்கின போதிலும் பின்பு அவன் தைரியங் கொண்டு சம்மதங் கொடுத்து இங்கிலாந்தில் இறங்கினான். இந்தச் செய்தியைக் கேட்ட ஜேம்ஸ் பிரான்சுக்கு ஓடினான் வில்லியம்பார்லிமெண்டைக்கூட்டினான். அது 'ஜேம்ஸ்தேசத்தைச் சரியாக ஆளாததால் அவன் பட்டத்தை இழந்தான்' என்று

கூறி, அவனுக்குப் பதிலாக வில்லியம், மேரி என்ற இருவர்களையும் இங்கிலாந்தின் அரசராகவும் அரசியாகவும் நியமித்தது. இப்படி ஜேம்ஸைப் பட்டத்தை விட்டுத் தள்ளி வில்லியத்தையும் மேரியையும் பட்டத்திற்கு ஏற்படுத்தினதை 'இங்கிலீஷ்ப்புரட்சி' என்பார்கள். பார்லிமெண்டு ஜேம்ஸ் செய்த கெட்ட வழிகளைச் சொல்லி 'அவ்வழிகளில் புதுஅரசர்கள் செல்லக் கூடாது' என்ற ஒரு பத்திரத்தை ஏற்படுத்தி, அதற்கு அவர்களது சம்மதத்தையும் பெற்றது. இதனால் அஃது 'உரிமை அறிக்கை' என அழைக்கப்பட்டது. பத்திரத்தின் ஷரத்துக்கள் :—

1. ஒரு 'சட்டத்தைச் சில காலத்திற்கு நிறுத்தி வைக்கவும், சிலருக்கு அனுசரிக்காமலிருக்கவும் அரசர்களுக்கு உரிமையுண்டு' என்பது சட்ட விரோதமாகும்.

2. கோயில் விசாரணைக் கூட்டத்தையோ அல்லது அதுபோன்ற வேறு கூட்டங்களையோ அரசன் ஏற்படுத்துவது தப்பிதமாகும்.

3. அரசன் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் வரி விதிப்பது கூடாது.

4. அமைதியான காலத்தில் பார்லிமெண்டின் சம்மதமில்லாமல் அரசன் நிலையான ராணுவத்தை ஆதரிப்பது பிசகாகும்.

5. அரசனிடத்தில் விண்ணப்பம் செய்து கொள்வது பிரஜைகளுக்கு உள்ள ஓர் உரிமையாகும்.

6. பிரதி வருஷமும் பார்லிமெண்டு சபை கூட வேண்டும்.

7. இங்கிலீஷ் அரசர்கள் பிராடெஸ்டெண்டுகளின் கொள்கைகளை மேற்கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய விஷயங்களிலிருந்து பார்லிமெண்டுக்குச் சரியாக நடக்காத அரசர்களைத் தள்ளவும், விருப்பமுள்ள அரசர்களைப் பட்டத்தில் வைக்கவும் உரிமையுண்டு என்பது ஏற்பட்டு விட்டது. இத்தகைய உரிமை ஒருவித கலகமுமில்லாமல் ஏற்பட்டதனால் இந்தப் புரட்சியை 'ரத்தமில்லாத புரட்சி' என்பார்கள். இப் புரட்சியால் மூன்று விஷயங்கள் முடிவுக்கு வந்தன. ஸ்டுவர்ட் அரசர்கள் கொண்டாடிவந்த 'கடவுள் உரிமை' என்பது போய்விட்டது. பார்லிமெண்டுக்கு அரசர்களை வைக்கவும் எடுக்கவும் அதிகாரம் உண்டாகியது. அரசர்களுக்கும் பார்லிமெண்டுக்கும் நடக்கும் விவாதங்கள் நின்றன. இது முதல் ஜனங்களும் அரசர்களும் ஒன்றுபட்டதால், அரசனுடைய ஆட்சிபோய்ப் பார்லிமெண்டின் ஆட்சி ஏற்பட்டது. இதனால் இப்புரட்சியை 'மாட்சிமை பொருந்திய புரட்சி' என்பார்கள்.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத்தேதிகள்.

| | |
|---|---|
| பம்பாய் இங்கிலீஷ்க்காரர்களுக்குக் கிடைத்தது | 1662 |
| மதராஸ் இங்கிலீஷ்க்காரர்களது ஆகியது | 1639 |
| டோவர் கசிய உடன்படிக்கை | 1670 |
| பரிசோதனைச் சட்டம் | 1673 |
| ஏழுகுருமார்களின் விசாரணை | 1688 |

### முக்கியச் செய்திகள்.

1. **ஜான்பனியன்.** இவன் பெட்போர்ட்ஷயரில் ஒரு தகரவேலை செய்பவனாயிருந்தான். இவன் பரிசுத்தமதத்தில் அதிகம் பற்றுள்ளவனாதலால் இவன் க்ராம்வெலின் சைனியத்தில் வேலை பார்த்து வந்தான். இம் மதத்தைப் பற்றிச் சண்டைக்குப் பிறகு இவன் எங்கும் பிரசங்கம் செய்து

வந்தான். முடி மீட்சிக்குப் பிறகு பிரசங்கம் செய்ததற்காகப் பெட்போர்ட் சிறையில் அடைக்கப் பட்டான். அங்கு இருக்கும் போது ஒட்டு அலங்காரத்தில் 'பிரயாணியின் போக்கு' (Pilgrims progress) என்கிற புஸ்தகத்தைச் சாமானிய ஜனங்கள் வாசிக்கும் பொருட்டு எழுதினான். கிறிஸ்தவன் என்கிற பிரயாணி எப்படிப் பாபத்துடன் செல்லுகிறான் என்கிற கதையை அதிகப் படிப்பில்லாதவர்கள் வாசித்து மகிழும்படியான வழியில் எழுதினான். அவன் செய்த குற்றம் கிளாரெண்டன் கட்டளைச் சட்டத்தை மீறியதே ஆகும். 1688ம் வருஷத்தில் 60வது வயதில் இவன் இறந்தான்.

2. தினவர்த்தமானங்களை எழுதுபவர்களில் இருவர் உண்டு. எவலின் (Evelyn), பெபி (Pepy) என்பன அவர்களின் பெயர்கள். இவர்களில் எவலின், ஸ்ட்ராப்போர்ட் கொலை செய்யப்பட்டதையும், ப்ளென்ஹிம் வெற்றி பெற்றதையும் கண்ணுற்றவன்; அக்கால வர்த்தமானங்களை நன்றாக எழுதினவன். ஆனால் பெபி எழுதியது மிகச் சிறப்புற்றதாகும். இவன் தினந்தோறும் காபிஹோட்டல்களுக்குச் சென்று பார்லிமெண்டில் நடக்கும்விஷயங்களை அறிந்து வருவான். இவன் சில வருஷங்களே வர்த்தமானத்தை எழுதிவந்தான். பெரிய கொள்ளை நோயையும், பெரிய நெருப்பையும் தான் கண்ணுற்றபடியே வருணித்து எழுதியுள்ளான்.

3. இங்கிலாந்திலே குடியரசு ஏற்பட்ட காலத்தில் காபிப் பானம் முதல் முதலில் உபயோகத்திற்கு வந்தது. இது முதல் காபிஹோடல்கள் ஏற்பட்டுப் பிரபுக்கள் அவைகளுக்குச் சென்று அங்கே ராஜீய விஷயங்களைப் பற்றிப் பேசிவருவது வழக்கம். எப்படிக் காபி அரபியர்களுக்கு முக்கியமாயிருந்ததோ அப்படியே தேத்தண்ணீர் சீனர்

களுக்கு முக்கியமாய் இருந்தது. இது 1658-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் உபயோகத்திற்கு வர ஆரம்பித்தது.

4. பெரிய உள்நாட்டுப்போர் நடந்த காலத்தில் சாஸ்திரங்களை நன்கு கற்றவர்கள் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். இரண்டாவது சார்லஸ் இதை அங்கீகரித்து இதற்கு உரிமைப்பத்திரத்தை அளித்தான். இது தான் 'ராஜாங்கச் சங்கம்' (Royal Society) என்பதற்கு ஆரம்பமாகும்.

5. **ஸர் ஐஸக் நியூடன்.** இவன் ராஜாங்கச் சங்கத்தில் ஒரு மெம்பராக இருந்தான். மையத்தை நோக்கிச் செல்லும் விசை (Gravitation) யைக்கண்டுபிடித்தவன் இவனுவான். இவன் லத்தீன் பாஷையில் தான் கண்டு பிடித்தவற்றை எழுதினுன். ஆன்மகாராணி ஸர்ப்பட்டத்தை அளித்தாள். 1714-ம் வருஷத்தில் இறந்தான். இவன் தங்கச்சாலையில் உத்தியோகத்தில் இருந்தான்.

6. **கைதியை நியாயாதிபதிமுன் வரவழைக்கும் சட்டம் 1679.** இது நியாயாதிபதிகளுக்குச் சிறை உத்தியோகஸ்தர்களைத் தங்கள்முன் கைதிகளை விசாரணைக்குக் கொண்டு வரும்படி சொல்ல ஏற்பட்ட அதிகாரபத்திரமாகும். வெகு நாள் விசாரணைக்குக் கொண்டுவராமல் கைதிகளைச் சிறையில் வைக்கும் வழக்கத்தைத் தடுக்க இஃது ஒருவழியாகும்.

7. ஆரெஞ்சு என்பது ஹாலெண்டில் உள்ள ஒரு ஜில்லா வின் பெயராகும்.

8. 'விக்' கக்ஷிக்காரர்கள் என்பது இங்கிலீஷ்ப் புரட்சிக்குச் சாதகமாக இருந்த கக்ஷிக்காரர்களின் பெயராகும். அவர்களை இப்போது லிபரெல் என்ற பெயரால் அழைக்கிறோம். ஸ்டுவர்ட் அரசர்களுக்கு ஆதரவுள்ளவர்கள் 'டோரி'

என்ற பெயரை அடைந்தார்கள். அந்த டோரிகளையே இப்போது நாம் கன்செர்வேடிவ் கக்ஷிக்காரர்கள் என்று அழைக்கிறோம்.

9. பெரிய கொள்ளைநோய் (1665): மழையில்லாத காலத்தில் இந்த நோய் பரவி லக்ஷம் ஜனங்களை இரையாக்கிற்று. இந்த நோய் உள்ள வீட்டின் வாசலில் சிவப்புச் சிலுவை அடையாளத்துடன் 'கடவுள் கிருபை செய்யட்டும்' என்று எழுதப்பட்டிருந்தது. இரவில் 'சாவுவண்டியை' ஓட்டுவோன் மணியுடன் சென்று ஒவ்வொரு வீட்டுவாசலிலும் நின்று இறந்தவர்களைக் கொண்டு வரும்படி கத்துவான்.

10. பெரிய நெருப்பு. 1666 செப்டம்பர் மீ 22ல் நெருப்புப் பிடித்து ஐந்து நாள்விடாமல் எரிந்து லண்டன் முழுவதையும் நாசம் செய்தது. அநேக கட்டடங்கள் எரிந்தன. ஸெயிண்டுபால் கோயிலும் அதே கதியை அடைந்தது. ரென் லண்டன் பட்டணத்தைப் புது ஏற்பாட்டுடன் கட்டும்படி செய்தான். பெரியகோவிலும் இதே சிற்பியின் யோசனைப் பிரகாரம் கட்டப்பட்டது.

11. கேபால் (Cabal) என்ற பெயர்க்காரணம்:— கிளிப்போர்ட் (Clifford). ஆர்லிங்டன் (Arlington). பக்கிங்ஹாம் (Buckingham). ஆஷ்லி (Ashley) லாடர்டேல் (Lauderdale). என்ற இந்த மந்திரிகளின் ஆக்ஷிக்காலம் கெபால் என அழைக்கப்படும். இந்த வார்த்தைக்கு ரகசிய ஆலோசனை என்பது பொருள்.

## கேள்விகள்

1. பார்லிமெண்டு என் பரிசோதனைச் சட்டத்தைச் செய்தது?

2. காதொலிக் சதியை (Popish plot) ப்பற்றித் தெரிந்த வரையிற் சொல்லுக.

3. இரண்டாவது சார்லஸ் காலத்தில் பார்லிமெண்டு இரண்டு கக்ஷிகளாகப் பிரியக் காரணம் யாது?

4. இரண்டாவது ஜேம்ஸ் ஏன் பட்டத்தை இழந்தான்?

5. ஜப்ரேஸ் நியாயாதிபதியைப் பற்றிய இரண்டு விஷயங்கள் எவை?

6. க்ளாரெண்டன் என்ன புஸ்தகத்தை எழுதினான்? அதன் முக்கியம் யாது?

---

## ஆருவததிகாரம்.

## ப்ராடெஸ்டெண்டு புரட்சி—1688.

### முகவுரை.

எப்படி ஆலிவர் கிராம்வெல் ராஜ்ஜியதந்திரம் செய்ய வந்ததைப் 'பரிசுத்தர்களின் புரட்சி' என்று சொல்லுகிறோமோ அப்படியே இரண்டாவது ஜேம்ஸ் ஓடி மூன்ருவது வில்லியமும் மேரியும் பட்டம் தரித்ததைப் ப்ராடெஸ்டெண்டு புரட்சி என்று கூறலாம். இங்கிலீஷ்க்காரர்கள் இவ்விஷயத்தை உடனே ஒப்புக்கொண்டபோதிலும் ஸ்காட்லெண்டிலும், அயர்லாந்திலும் இதை அங்கீகரிக்கச் சிலகாலம் சென்றது. பிரான்சின் பதினைலாவது லூயி, இரண்டாவது ஜேம்ஸை இங்கிலீஷ் அரசன் என்று ஒப்புக்கொண்டதால் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் போர் நடந்தது. மூன்ருவது ஜார்ஜ் பட்டத்திற்கு வருமளவும் இவ்விஷயம் நிறைவேறவில்லை. வெளிநாட்டு விஷயங்களில் இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் விவாதங்கள் ஏற்படுமென்பது நிச்சயமாயிற்று.

இப்புரட்சியால் பார்லிமெண்டு சபை அரசனை எடுப்பதும் வைப்பதும் என்கிற உரிமையை அடைந்துவிடு

மாலும், அரசனுடைய அதிகாரங்கள் குறைந்து, பார்லி மெண்டின் அதிகாரம் மேலோங்க வேண்டியதாகும். ஆனால், உரிமைப் பத்திரத்தின்படி அரசனுடைய உரிமைகள் குறைந்து பார்லிமெண்டின் அதிகாரம் மேலோங்கியது. ராஜ்ஜியத்தின் வரவு செலவுகளை அனுமதிக்கும் உரிமை பார்லிமெண்டுக்கு எப்போது வந்ததோ அது முதல் பார்லிமெண்டு சபைக்கு அடிக்கடி கூட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அரசனும் பார்லிமெண்டுக்குச் சம்மத முள்ளவர்களையே மந்திரிகளாக நியமிப்பதை நல்ல முறை என்று அறிந்து கொண்டான். இதனால் கக்ஷித்துரைத் தனமும் மந்திராலோசனை சபையும் ஏற்பட்டன.

## மூன்றாவது வில்லியம் 1689-1702.
## இரண்டாவது மேரி 1689-1694.

**புரட்சி ஏற்பாடும் இங்கிலாந்தும்.**—இங்கிலீஷ்க்காரர்கள் வில்லியத்திற்குப் பட்டத்தை அளித்தது 'நான் சரியாக ராஜ்ஜியத்தை அரசு புரிவேன்' என்கிற நிபந்தனைக்கு அவன் உட்பட்டதினால்தான். ஆனால் அவனுடைய முக்கியக் கருத்து, பிரஞ்சு மன்னனை எதிர்க்க இங்கிலாந்து தனக்கு வேண்டிய உதவிகளைப் புரியும் என்பது. ஆகையால், அவன் ஜனங்களின் வழியே விட்டு ஆளத் தீர்மானித்தான். இங்கிலீஷ் ஜனங்களும் காதொலிக் பயம் கொண்டவர்கள் ஆதலால், 'ஸ்டுவர்ட் அரசர்களுக்கு உதவி அளிக்கும் பிரஞ்சு மன்னனை எதிர்க்கக் கூடியவன் இவன் ஒருவனே' என்று கருதி அவனைத் தேர்ந்தெடுத்தார்கள். பார்லிமெண்டும் உரிமை அறிக்கைக்குப் புது அரசனுடைய சம்மதத்தை வாங்கியது. அதனால் அதுவும் உரிமைச் சட்டமாய் விட்டது. இப்பத்திரத்தில் கண்ட ஷரத்துக்கள் இங்கிலீஷ்

ஜனங்களுக்கு முக்கியமானவை யாதலால் அவர்கள் இதை 'மூன்ருவது உரிமைப்பத்திரம்' என்பார்கள்.

ராணுவச்சட்டம் 1679.—வில்லியம் பட்டத்திற்கு வந்ததும் கலகம் உண்டாகுமோ என்கிற அச்சமிருந்தது. உரிமைச்சட்டப்படி பார்லிமெண்டின் அனுமதி யில்லாமல் ராணுவத்தை வைத்துக் கொள்ள அதிகாரம் இல்லாததால், பார்லிமெண்டு, முதலில் ஆறுமாதத்திற்கும், பின்பு அரசனுடைய ஆயுள் முழுவதுக்கும் நிலையான ராணுவத்தை வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்தது. ஆனுல், இதற்குள்ள செலவுக்கு ஒவ்வொரு வருஷமும் பார்லிமெண்டு உத்தரவு அளிக்க வேண்டியிருந்தது. இம்முறையில் ராணுவமும் பார்லிமெண்டின் அதிகாரத்தின் கீழ் வந்ததாகச் சொல்லலாம். உத்தரவில்லாமல் மறுவருஷத்தில் ராணுவத்தை வைத்துக்கொள்வது முடியாத காரியமே யாகும். ராணுவத்தை விட்டுப் போனவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அரசனுக்குக் கிடைத்தது.


கடவுளைத்தொழும் சுயாதீனம்—இது ப்ராடெஸ்டெண்டு புரட்சியாதலால் காதொலிக்குகள் தங்கள் இஷ்டம்போல் தொழுவது என்பது முடியாத காரியமாகும். 1689-ம் வருஷத்திய சட்டப்படி காதொலிக்குகள் தவிர மற்றவர்களுக்கு இச்சுயாதீனம் கிடைத்தது.

வரவு செலவு திட்டம்.—ராஜ்ஜியத்தின் வரவு செலவு கணக்கைப் பரிசோதிக்கும் உரிமையை வில்லியம் பார்லிமெண்டுக்கு அளித்தான். இதுவரையிலும் வருமானத்தைப்பற்றின வரையில் பார்லிமெண்டுக்கு அதிகாரம் இருந்து வந்தது. இது முதல் செலவைப் பரிசோதிக்கவும், அனுமதி கொடுக்கவும் பார்லிமெண்டு அதிகாரம் பெற்றது. அதனுல் பார்லிமெண்டு சபை ஒவ்வொரு வருஷமும் கூடவேண்டியது அவசியமாயிற்று.

2. ஸ்காட்லேண்டு 1692.—ஸ்காட்லாண்டில் அநேகர்கள் வில்லியத்தையும் மேரியையும் அரசர்களாக ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அவர்களுக்குள் இருந்த கூட்டப் பகையால் மேல்நாட்டார் ஒப்பாமல் கலகம் செய்தார்கள். அவர்களுடைய தலைவனான டண்டீ பிரபு, கில்லி கிராங்கி என்னும் இடத்தில் வெற்றியை யடைந்தாலும், அவன் இறந்து விட்டமையால் வேறு எவனும் தலைமை வகிக்க முடியவில்லை. இதனால் இவ் வெற்றி தோல்விபோலாயிற்று. வில்லியம், 1792-ம் வருஷம் ஜனவரிமீ 1உக்குள் எல்லாக் கூட்டத்தார்களும் ராஜவிஸ்வாச அறிக்கையிலே கையொப்பமிட்டு அனுப்பவேண்டுமென்று உத்தரவு செய்தான். ஏதோ தப்பித்ததால் மாக்டானெல்ட் கூட்டத்தார் அனுப்பியது தாமதித்து வந்தது. ஆனால், அதற்குள் வில்லியம் துருப்புக்களை ஸ்காட்லெண்டிற்கு அனுப்பி மாக்டானெல்ட் கூட்டத்தார்களைக் கிளெங்கே (Glencoe) என்னுமிடத்தில் கொலை செய்யும்படி செய்தான். இதுமுதல் இருதேசத்தவர்களும் ஒருவருக்கொருவர் நல்ல அபிப்பிராயம் கொள்ளவில்லை.

3. அயர்லாந்து 1689-92.—ஐரிஷ்க்காரர்கள் பெரும்பாலும் காதொலிக்குகள் ஆனதால் இரண்டாவது ஜேம்ஸையே அரசனாகக் கொண்டாடினார்கள். ப்ராடெஸ்டெண்டு பட்டணங்களான லண்டன்டெரி, இனிஸ்கிலன் என்பவைகள் முற்றுகை போடப்பட்டன. என்றாலும் சீக்கிரத்தில் முற்றுகைகள் விடுவிக்கப்பட்டன. நியூடன் பட்லர் என்கிற இடத்தில் ஐரிஷ் துருப்புக்கள் தோல்வியுற்றன. 1690-ம் வருஷத்தில் வில்லியம் மறுபடியும் சென்று பாயின் நதிக்கரையில் எதிராளிகளைத் தோற்கடித்தான். வில்லியம் இங்கிலாந்திற்குத் திரும்பினான். லிமெரிக் என்கிற பட்டணம் இங்கிலீஷ்க்காரர்களின்

அயர்லாந்துக் கலகம்




வசமான பின் அவ்விடத்தில் ஓர் உடன் படிக்கை யேற்

பட்டது. அதன்படி பிரான்சுக்குச் செல்ல இஷ்டமுள்ள காதொலிக்குகள் செல்லலாம் என்றும், ஐரிஷ்க்காரர்கள் இரண்டவது சார்லஸ் காலத்தில் எந்த உரிமைகளை அடைந்திருந்தனரோ அந்த உரிமைகள் திரும்பிக் கொடுக்கப்படும் என்றும் ஏற்பட்டன. இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் ப்ராடெஸ்டெண்டு மதஸ்தர்களின் கோபத்தால் இவ் வுடன்படிக்கை நிறைவேருமல் நின்றது. இது முதல் லிமரிக் என்பதற்கு 'வாக்குக்கு மாருன பட்டணம்' என்ற பொருள் உண்டாகியது. இங்கிலீஷ்க்காரர்களும் கோபத்திஞல் கொடுமையாக நடந்துகொண்டார்கள். கலகத்தில் சேர்ந்தவர்களின் நிலங்கள்கைமாறின. இங்கிலீஷ் ப்ராடெஸ்டெண்டுகள் அவற்றிற்குச் சொந்தக்காரர்களானுர்கள். பார்லிமெண்டிலும் காதொலிக்குகள் மெம்பர்களாகத் தகுதியற்றவர்களானுர்கள். இப்படி ப்ராடெஸ்டெண்டுகள் சிறுபான்மையோராஞலும் பெரும்பான்மையோர்களாகிய காதொலிக்குகளுக்கு விரோதமாக அநேக சட்டங்களைச் செய்தார்கள். வியாபாரத்திலும் உத்தியோகம் பெறுவதிலும் உள்ள கஷ்டங்கள் எடுத்துரைக்க முடியாதபடி அதிகமாயின.

இங்கிலீஷ்ப் புரட்சிப்போர். 1691-97.—பதினுலாவது லூயி இங்கிலீஷ்ப் புரட்சியை ஒப்பாமல் இரண்டாவது ஜேம்ஸையே இங்கிலீஷ் மன்னனுய் அங்கீகரித்தான். மேலும், பிரஞ்சு மன்னன் காதொலிக்குகளுக்குத் தலைவனுனன். வில்லியம் ப்ராடெஸ்டெண்டுகளுக்குத் தலைவனுனன். சீக்கிரத்தில் பிரான்சும் ஸ்பெயினும் ஒன்று சேர்ந்துவிடுமோ என்கிற பயம் இருந்தது. இப்படிப் பிரஞ்சு மன்னனுடைய அதிகாரம் பெருகுவதஞல் ஐரோப்பாவின் அமைதிக்குப் பங்கம் வந்து விடுமோ என்ற அச்சம் உண்டாகியது. பிரஞ்சு மன்னனும் கப்பல்களை கட்டி

இங்கிலாந்தைத் தொலைக்க ஏற்பாடு செய்தான். அவனுடைய எண்ணப்படி இங்கிலீஷ்க் கப்பல் படை 'பீசிஹெட்' என்கிற இடத்தில் தோல்வியுற்றது. வில்லியம் நெதர்லாண்டிற்குச் சென்றும் ஒன்றும் செய்ய முடியவில்லை. 1692-ம் வருஷத்தில் பிரஞ்சுக் கப்பல்கள் இங்கிலீஷ்க் கப்பல் படையால் 'லாஹோக்' என்கிற இடத்தில் மூழ்கடிக்கப்பட்டன.

ரிஸ்விக் சமாதானம் 1697.—இதன்படி பிரஞ்சு மன்னன் வில்லியத்தையும் மேரியையும் இங்கிலீஷ் மன்னர்களாக ஒப்புக் கொண்டதுமல்லாமல், இரண்டாவது ஜேம்ஸுக்கு எவ்விதமான உதவியையும் புரிவதில்லையென்றும், எல்லைக் கோட்டைகளைப் பலப்படுத்துவதில்லையென்றும் ஒப்புக்கொண்டான்.

வில்லியத்தின் சீர்திருத்தங்கள்.—எப்படி வில்லியத்தின் ஆட்சி, போரில் கீர்த்தி பெற்றதோ அப்படியே சீர்திருத்தங்களிலும் கீர்த்தி பெற்றது. ஏற்கனவே, உரிமைச் சட்டம், ராணுவச் சட்டம், மத சுயாதீனச் சட்டம், வரவு செலவு திட்டம் இவைகளால் பார்லிமெண்டின் அதிகாரம் ஓங்கியிருந்தது.

ராஜீயக்கடன் 1693.—இதுவரையிலும் இங்கிலீஷ் அரசர்கள் தங்கள் பொறுப்பிலேயே கடன்வாங்கி வந்தார்கள். கடனைத் திருப்பிக் கொடுப்பதில் வார்சுகளுக்கு எவ்வித பாத்தியமுமில்லை. ஜனங்களின் துரைத்தனம் ஏற்பட்டதால், பார்லிமெண்டு கடன்வாங்குவது என்கிற ஏற்பாடு வந்தது. முன்புவாங்கின கடனை அரசர்கள் திரும்பக் கொடுப்பது நிச்சயமில்லாமலிருந்தது. இது முதல் துரைத்தனத்தார்வாங்கிய கடனைத் திரும்பக் கொடுப்பது நிச்சய

மாய்விட்டது. முதலைத் திருப்பிக் கொடுப்பது துரைத்தனத்தாருடைய இஷ்டமாகும்.

இங்கிலீஷ் பாங்கி 1694.—ஜனங்களுக்கு வியாபாரம் முக்கியமாதலால் அதற்கு முதல் பணம் வேண்டுவது அவசியமாகும். இதன் பொருட்டு 1694-ம் வருஷத்தில் இங்கிலீஷ்ப் பாங்கி ஒன்று ஏற்பட்டது. துரைத்தனத்தாருக்குக் கடன் கொடுத்த பாங்கி உரிமைகளை அடைந்தது. இது முதல் துரைத்தனத்தாருடைய வரவு செலவு அதன் மூலமாய் ஏற்பட்டதால் இருதிறத்தாருடைய நாணயத்திற்கும் வலிமை யுண்டாயிற்று.

நாணயவாரிச் சீர்திருத்தம்.—உள்நாட்டு வியாபாரத்தை விருத்தி செய்ய நாணய வாரிகள் புதுப்பிக்கப் பட்டன.

மூன்று வருஷச் சட்டம் 1694.—ஜனங்களின் துரைத்தனம் ஏற்பட்டதால், எல்லோருக்கும் அதை நடத்தச் சமயம் உண்டாக்குவதற்காக ஒரு பார்லிமெண்டின் ஆயுள் மூன்று வருஷமென்று ஏற்பட்டது.

அச்சின் சுயாதீனம்.—இதுவரையிலும், துரைத்தன உத்தியோகஸ்தனுடைய அங்கீகாரம் இல்லாமல் ஒரு விஷயமும் அச்சிடக் கூடாத நிலைமை இருந்தது. துரைத்தனத்திற்கு விரோதமானவைகள் வெளிவரக் கூடாது என்பது முக்கிய கருத்தாகும். 1695-ம் வருஷம் முதல் அச்சிடுபவர் துரைத்தன ஆட்சியிலிருந்து விடுவிக்கப் பட்டதால் அநேகம் பத்திரிகைகள் வெளிவர வழி ஏற்பட்டது.

துரைத்தனத்தாருக்கு விரோத முள்ளவர்களை விசாரிக்கச் சில சௌகரியங்கள் கொடுக்கப் பட்டன.

கக்ஷித்துரைத்தனம்.—இரண்டாவது சார்லஸ் காலத்தில் விலக்கல் மசோதாவந்தது முதல், பார்லிமெண்டு இரு

வகைப்பட்டது. மசோதாவிற்கு அனுகூலமானவர்களுக்கு 'விண்ணப்பதாரர்' என்றும், எதிர்த்தவர்களுக்கு 'வெறுத்தவர்கள்' என்றும் பேர் வந்தன. கொஞ்ச காலம் சென்றபின் ஒருவரை ஒருவர் இந்தப் பரிகாசப் பேரால் அழைத்து வந்தனர். பெரிய உள்நாட்டுப் போரில் முதலாவது சார்லஸுக்கு விரோதமான ஸ்காட்களை 'விக்' என்று கூப்பிடுவதுண்டு. 'விண்ணப்பதாரர்கள்' 'விக்' என்ற பேரை அடைந்தார்கள். அரசன் சார்பாக நின்ற ஐரிஷ்க் கொள்ளைக்காரர்களுக்கு 'டோரி' என்று பேர் கொடுக்கப்பட்டது. அப்பேரை 'வெறுத்தவர்கள்' அடைந்தார்கள். வெகுகாலத்திற்குப் பிறகு இப்பேர்கள் 'லிபரல்' என்றும், 'கன்செர்வெட்டிவ்' என்றும் மாறின. மூன்ருவது வில்லியம் பட்டத்திற்கு வந்தது இருதிறத்தார்களின் உதவியாலாதலால் அவன் மந்திரிகளை இருகக்ஷிகளிலிருந்தும் தேர்ந்தெடுத்தான். பிரஞ்சுடன் போர் நடத்துவதில் 'விக்' கக்ஷிக்காரர்கள் வேண்டிய உதவி புரிந்தமையால் வில்லியம் 'விக்' கக்ஷியிலிருந்தே மந்திரிகளைத் தேர்ந்தெடுத்தான். மேலும் இவர்கள் பார்லிமெண்டில் பெரும்பான்மைக் கக்ஷிக்காரர்களாயிருந்தார்கள். சண்டை முடிந்தவுடன், வில்லியம் 'டோரி'க் கக்ஷி பெரும்பான்மையோர் கக்ஷியாதலால் மந்திரிகளை அந்தக்கக்ஷியிலிருந்து தேர்ந்தெடுத்தான். இப்படிப் பெரும்பான்மையோர் கக்ஷியிலிருந்து மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பது ஒரு வழக்கமாய் வந்து விட்டது. முதலாவது இரண்டாவது ஜார்ஜ் அரசர்களின் காலங்களில் 'விக்' கக்ஷி ஹானோவர் குடும்பத்திற்குச் சாதகமாகவும், 'டோரி'க்கக்ஷி ஸ்ட்டுவர்ட் அரசர்களுக்குச் சாதகமாகவும் இருந்தன. மூன்ருவது ஜார்ஜ் பட்டத்திற்கு வந்ததும் 'டோரி'க் கக்ஷிக்காரர்களும் அரசன் பக்கத்தில் வந்து விட்டார்கள். இவனுக்குப் பிறகு 'விக்' கக்ஷிக்காரர்கள் தேசச் சீர்

திருத்தங்களைத் தாராளமாகக் கொண்டுவர முயன்றதால் அவர்களுக்கு 'லிபரல்ஸ்' என்றும், இருக்கும் வழக்கங்களையும், உரிமைகளையும் மாற்றக்கூடாது என்று 'டோரி'க் கக்ஷிக்காரர்கள் கருதி வந்தமையால் இவர்களுக்கு 'கன்ஸெர்வேடிவ்ஸ்' என்றும் பேர்கள் வந்தன.

மந்திரிகளின் ஆலோசனை சபை.— 'விக்' கக்ஷி பெரும்பான்மையோர் கக்ஷி ஆதலால், சந்தர்லாண்டு பிரபு இக் கக்ஷியிலிருந்து மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க யோசனை சொன்னான். இவர்களுக்கு 'விக்ஜண்டோ' என்பது பேராகும். இது முதல் இவ்வழக்கம் ஏற்பாட்டில் வந்தது. மந்திரிகளும் சேர்ந்து ராஜநீதியை நடத்தத் தெரிந்து கொண்டார்கள். மந்திரிகளில் எவர் ஒருவர் எதிர்க்கப்பட்டாலும் மற்றவர்கள் சேர்ந்து ராஜினமாக் கொடுப்பதாகப் பயமுறுத்துவார்கள். இப்படிப் பார்லிமெண்டில் பெரும்பான்மையோர் கக்ஷியிலிருந்து மந்திரிகளைத் தேர்ந்தெடுத்தால் அவர்கள் அரசனுக்கும், எதிர்க் கக்ஷிக்காரர்களுக்கும் பயப்பட வேண்டுவதில்லை. வால்போல் நாளில் பிரதானமந்திரி மற்ற மந்திரிகளை வைக்கவும், நீக்கவும் உள்ள அதிகாரத்தை அடைந்தான்.

வார்சு நிர்ணயச் சட்டம் 1701.—வில்லியத்தின் மனைவியான மேரி ஏற்கனவே இறந்தாள். குழந்தைகள் இல்லாததால் ஒரு ஏற்பாட்டைச் செய்யப் பார்லிமெண்டு முயன்றது. இங்கிலீஷ்க்காரர்களுக்கு இரண்டாவது ஜேம்ஸின் வார்சுகள் அரசர்களாக வரக்கூடாது என்பது முக்கியக் கருத்தாகும். அவர்கள் காதொலிக் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மேலும் கடவுள் உரிமையைக் கொண்டாடிக் கொண்டு அரசு புரிவார்கள் என்கிற பயமும் ஏற்பட்டது. மாட்சிமை பொருந்திய புரட்சியால்

பார்லிமெண்டுக்கு அரசர்களை நியமிக்க உரிமை ஏற்பட்டது. வில்லியத்திற்குப் பிறகு ஆன் பட்டத்திற்கு வரவேண்டு மென்றும், அவளுக்குக் குழந்தைகளில்லாத பக்ஷத்தில், ஹானோவரிலுள்ள சோபியா(Sophia)பட்டத்திற்குத்தகுதி என்றும் சட்டம் ஏற்பட்டது. இவள் முதலாவது ஜேம்ஸின் பெண்ணின் பெண் ஆவாள். மேலும் ப்ராடெஸ்டெண்டு மதத்தைத் தழுவினவளாவாள். இங்கிலீஷ் அரசர்கள் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களா யிருக்க வேண்டுமென் றும் நியாயதிபதிகளை நியமிக்க மட்டில் அவர்களுக்குப் பாத்திய மிருக்கவேண்டுமென்றும், பார்லிமெண்டின் சம்மத மில்லாமல் அவர்களை அரசர்கள் தள்ளக்கூடாதென்றும் ஏற்பட்டன.

இப்படி வில்லியத்தின் ஆக்ஷியை யோசிக்குங் கால் மாட்சிமை பொருந்திய புரட்சியால் அநேக வழிகளில் நன் மைகள் ஏற்பட்டன என்பது உண்மையாகும். நியாயாதி பதிகளின் சுயாதீனம், துரைத்தனத்தாருடைய உத்தர வில்லாமல் புஸ்தகங்களை அச்சிடும் பாத்தியம், பாங்கி ஏற் பட்டதால் வியாபாரவிருத்தி, ராஜீயத்தில் கக்ஷித்துரைத் தனம் என்ற இவைகளை யெல்லாம் அடைவது சுலபமன்று.

## ஸ்பானிஷ்வார்ச்போர்.

ஸ்பெயினின் அரசனான இரண்டாவது சார்லஸுக் குக் குழந்தைகள் இல்லை யாதலால், பிரஞ்சு மன்னனும் ஜர்மன் சக்கிரவர்த்தியும் ஸ்பெயின் இராஜ்ஜியத்தைத் தங்க ளுடைய ராஜ்யங்களுடன் சேர்க்க முயன்றார்கள். சகோ தரிகளின் வழி வார்சுகளாகப் பெவேரியா சிற்றரசனும், பிலிப்பும் இருந்தார்கள். இவர்களை அல்லாமல் ஆர்ச்ட்யூக் சார்லஸும், தகப்பனின் சகோதரிவழியாய்ப் பாத்தியம் கொண்டாடினான். பிலிப்பு, பிரஞ்சு மன்னனின் பேரனு

வான். ஸ்பெயின் பிரான்சுடன் சேர்ந்தால் ஐரோப்பாவில் அமைதியிருப்பது அரிதாகும். ஆகையால், ஸ்பெயின் மன்னன் இராஜ்ஜியங்களைப் பிரிக்கப் பாக உடன்படிக்கையை ஐரோப்பிய மன்னர்களுடன் செய்துகொண்டான். அதன்படி ஸ்பெயின்பட்டம் பெவேரியச் சிற்றரசனுக்கு ஏற்பட்டது. மற்ற இராஜ்ஜியங்களைப் பிலிப்பும், ஆர்ச்ட்யூக் சார்லஸூம் எடுத்துக்கொள்வது என்பது ஏற்பட்டது. பெவேரியச் சிற்றரசன் இறக்க, இரண்டாவது உடன்படிக்கையேற்பட்டு அதின்படி ஆர்ச்ட்யூக் சார்லஸூக்கு ஸ்பெயின் பட்டமும், பிலிப்புக்கு மற்ற இராஜ்ஜியங்களும் ஏற்பட்டன. இவ்விஷயங்கள் ஸ்பெயின் அரசனின் சம்மதமில்லாமல் நடந்தவை. இதில் கோபங்கொண்ட அவன் எல்லா ராஜ்ஜியங்களையும் பிலிப்புக்கு விட்டான். பிரஞ்சு மன்னன் இந்த ஏற்பாட்டிற்கு உட்பட்டது பிரிவினை உடன்படிக்கையை மறுத்ததாகும். பிரஞ்சு மன்னன் ரிஸ்விக் சமாதானத்திற்கு விரோதமாய் மூன்ருவது ஜேம்ஸை இங்கிலீஷ் அரசனென்று கொண்டாடினன்; எல்லைக் கோட்டைகளையும் பலப்படுத்தினன். இங்கிலாந்து இப்போரில் இறங்க இரண்டு காரணங்கள் உண்டு. மறுபடியும் ஸ்டுவார்ட் அரசர்கள் இங்கிலாந்தில் ஆள வரக்கூடாது. ஏனெனில் அவர்களோ காதொலிக்குகள். இரண்டாவது பதினாலாவது லூயியின் செல்வாக்கைக் குறைக்கவேண்டுமென்பதே யாகும். இப்போரை நடத்த வில்லியம், மால்பரோவைத் தருவித்தான். ஆனல், சண்டை தொடங்குமுன் வில்லியம் இறந்தான்.

## ஸ்பானிஷ் வார்ஸ்போர்.

மூன்றாவது பிலிப்

நாலாவது பிலிப் | மேரியா = மூன்றாவது பெர்டினண்டு

இரண்டாவது சார்லஸ் (1700-இறந்தான்)

மேரியா தெரிசா = 14வது லூயி

லூயி— டாபின்

ஐந்தாவது பிலிப்

மார்க்கரெட் தெரிசா = (1) சக்கரவர்த்தி லியோபாலட் = (2) எலினார்

மேரியா = பெவேரிய எலெக்டர்

ஜோஸப், எலெக்டரல் சிற்றரசன் (1699)

ஆர்ச்ட்யூக் சார்லஸ்

## ஞாபகக்குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| லண்டன்டெரி முற்றுகை | ... | 1689 |
| பாயின் நதிக்கரை வெற்றி | ... | 1690 |
| க்ளெங்கோப் படுகொலை | ... | 1692 |
| லாஹோக் சமுத்திரவெற்றி | ... | 1692 |
| அச்சின் சுயாதீனம் | ... | 1695 |
| ரிஸ்விக் சமாதானம் | ... | 1697 |
| வார்சு நிர்ணயச் சட்டம் | ... | 1701 |

### முக்கியச் செய்திகள்.

1. இந்தியா.—1690-ம் வருஷத்தில் ஜாப்சார்னுக் கல்கத்தாவை ஸ்தாபித்தான். அப்போது இங்கிலாந்தை ஆண்டுவந்த மூன்ருவது வில்லியத்தின் பேரால் ஒரு கோட்டையும் அங்கே கட்டப்பட்டது. 1698-ம் வருஷத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனிக்குப் போட்டியாக வேறு ஒரு கம்பெனி ஏற்பட்டது. 1708-ம் வருஷத்தில் இரண்டு கம்பெனிகளும் கொடால்பின் சமாதானத்தீர்ப்பால் ஒன்று சேர்ந்தன.

2. சமாசாரப் பத்திரிகைகள்.—பெரிய உள்நாட்டுப் போர், குடியரசு, காதொலிக்சதி, மாட்சிமை பொருந்திய புரட்சி, பிரஞ்சுப் போர் என்ற இவைகள் காரணமாக ஜனங்கள் துரைத்தனத்தாரைப் பூஷித்தோ தூஷித்தோ அநேக விஷயங்களை எழுத ஆரம்பித்தார்கள். எல்லோரும் நடக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாக இருந்தமையால், சமாசாரப் பத்திரிகைகள் ஏற்பட்டு உள்நாட்டிற்கு வாரத்திற்கு ஒரு முறை அனுப்பப்பட்டன. சமாசாரப் பத்திரிகை என்பது இல்லாமலிருந்தது. முக்கிய

மான பத்திரிகையான லண்டன் கெஜட் இரண்டு பக்கங்களுள்ளதாகித் திங்களிலும் வியாழனிலும் வெளிவந்தது. 1694-ம் வருஷத்தில் துரைத்தனத்தாரின் உத்தரவுகளைப் பிரசுரம் செய்யும் புஸ்தகங்களுக்கு அவசியமில்லையென்பது ஏற்பட்டதால், அநேக சமாசாரப் பத்திரிகைகள் கிளம்பின.

3. லாஹோக்.—சமுத்திர வெற்றியால் பிரான்சினுல் சமுத்திரத்தில் இங்கிலாந்திற்குப் போட்டியாய் நிற்க முடியாது போலாயிற்று. ஆர்மேடா வெற்றிக்குப் பிறகு இதுதான் இங்கிலாந்திற்கு ஏற்பட்ட இரண்டாவது பெரிய சமுத்திர வெற்றியாகும். 1805-ம் வருஷத்தில் டாபால் கிடைத்தது மூன்றுவது வெற்றியாகும்.

4. ரிஸ்விக்.—ஹாலெண்டில் ஹேக்குக்குச் சமீபத்தில் உள்ளது. இங்கு நடந்த சமாதானத்தின்படி பிரஞ்சு மன்னன் மூன்றுவது ஜேம்ஸைப் பிரான்ஸை விட்டுத் துரத்தி விடுவதாய் ஒப்புக்கொண்டான்.

5. ராணுவங்கள்.—இவை சண்டை முடிந்தவுடன் முன் செய்து கொண்டிருந்த தொழிலைப் பின்பற்றுவது வழக்கம். ஒரு நல்ல காரியத்தை முடிக்கப் போர்க்குச் சென்றவர்கள் இப்படிக் கடமையைச் செய்வார்கள். 1660-ம் வருஷத்தில் முடி மீட்சிக்குப் பிறகு கிராம்வெலின் சைனியத்தில் புகுந்தவர்களும் இப்படிச் செய்தார்கள். 1697 ரிஸ்விக் சமாதானத்திற்குப் பிறகு சம்பளத்தின் பொருட்டு ராணுவத்தில்சேர்ந்தவர்கள் விடுவிக்கப்பட்டபோது தாங்கள் வேறு தொழிலுக்குத் தகுதியில்லாதது பற்றி வழிப்பறி செய்து வந்தார்கள். இப்படியாகக் கொள்ளைக் கூட்டங்கள் ஏற்பட்டதால் பிரயாணிகள் வெகு கஷ்டத்தை அடைந்தார்கள். போலீஸ் பந்தோபஸ்து இல்லாதிருந்தது.

6. கிறிஸ்தவ மதப்பிரசங்க சங்கம் (S. P. C. K.) 1698-ம் வருஷத்தில் ஏற்பட்டது. வெளிநாடுகளிலே பரவச் செய்யவும் சங்கம் ஏற்பட்டது.

7. நீடித்த பார்லிமெண்டில் செய்த மூன்று வருஷத்திய சட்டப்படி மூன்று வருஷத்திற்குள் ஒரு முறையாவது பார்லிமெண்டு கூடவேண்டும். 1694-ம் வருஷத்திய சட்டப்படி ஒரு பார்லிமெண்டு மூன்று வருஷத்திற்குப் பிறகு கலைந்து பொதுத்தேர்தல் ஏற்பட வேண்டும்.

## கேள்விகள்.

1. மாட்சிமை பொருந்திய புரட்சி என்று சொல்லக் காரணங்கள் யாவை ?

2. லிமெரிக் பட்டனத்திற்கு 'வாக்கு மீறினபட்டணம்' என்று பேர் வந்ததற்குக் காரணம் யாது ?

3. வில்லியம் நாளில் நடந்த சீர்திருத்தங்கள் யாவை ?

4. இங்கிலாந்து ஸ்பானிஷ் வார்ச்போரில் சேரக் காரணம் யாது ?

5. வில்லியம் நாளில் அதிக வழிப்பறித் திருட்டுகள் தோன்றியதற்குச் காரணம் என்ன ?


6. 'பணமா ஏற்பாடு' கெட்டதற்குக் காரணம் என்ன ?

7. க்ளேங்கோ படுகொலைக்கு வில்லியம் எவ்வளவு தூரம் ஜவாப்தாரி ஆவான் ? நடந்த விஷயம் யாது ?

## ஏழாவததிகாரம்.

## ஆன் மகாராணி 1702—14.

சர்ச்சில் அல்லது மார்ல்பரோக் கோமகன் ஜென்னிங்ஸ் என்கிற அரண்மனை வேலைக்காரியை மணம்புரிந்ததால் மகாராணியினிடத்தில் செல்வாக்கை அடைந்தான். அவனுடைய முக்கிய எண்ணம் பிராஞ்சுப் போரைச் சரியாக நடத்தி நல்ல கீர்த்தியைப் பெறவேண்டுமென்பது தான். இந்தப் போரில் இங்கிலாந்திற்கு உதவியாக ஹாலெண்டு, ஆஸ்திரியா, சேவாய் என்பன நின்றன. இடெலி, ஜர்மனி, ஸ்பெயின், நெதர்லெண்ட் ஆகிய இடங்களிலும் சண்டைகள் நடந்தன. தளகர்த்தன் ஹாலெண்டுக்குச் சென்றான். ஆஸ்திரியாவைப்பிடித்தபிறகுஇங்கிலாந்தின் மேல் படையெடுப்பது என்ற லூயியின் எண்ணத்தைத் தெரிந்து கொண்டவுடன் ஆஸ்திரியாவிற்குச் செல்லும் பிரஞ்சு சைனியத்தைப் பிலென்ஹீம் என்கிற இடத்தில் எதிர்க்க நிச்சயித்தான். 1704-ம் வருஷத்தில் பிரஞ்சு சைனியமும் சிறைப் பிடிக்கப்பட்டது. ஆஸ்திரியாவைப் பிடிப்பதும், இங்கிலாந்தின் மேல் படையெடுப்




ஸ்தபானிஷ் வார்ச்போர்.

பதும் வீணாய் முடிந்தன. இது முதல் லூயியின் மதிப்புக் குறைந்தது. இதே வருஷத்தில் ஜிப்ரால்டர் இங்கிலீஷ்க் காரர்கள் வசமாகி இன்றளவும்(1930)இருந்து வருகின்றது. இது மத்தியதரைக்கடலுக்குத் திறவுகோல் போன்றது. ஸ்பெயினில் சில வெற்றிகளை அடைந்த பின், கூட்டாளிகள் 1706-ம் வருஷத்தில் ராமில்லீ என்கிற இடத்தில் மறு படியும் பிரஞ்சு சைனியத்தை முறியடித்தார்கள். பிரான்சு சமாதானம் செய்து கொள்ளும் விருப்பத்தைத் தெரி வித்தும் மார்ல்பரோ இணங்கவில்லை. அடுத்த வருஷத்தில் ஸ்பெயினில் கூட்டாளிகளின் சைனியம் ஆல்மென்சாவில் தோற்றது. ஆனால், மார்ல்பரோ மறுபடியும் ஊட நாட்டில் வெற்றியை அடைந்தான் (1708). மைனார்காவும் இங்கி லீஷ்க்காரர்களின் வசமாகியது. இக்காலத்தில் மால்டா எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமாய் அக்காலத் தில் மைனார்கா இருந்தது. 1709-ம் வருஷத்தில் மார்ல் பரோ மார்ப்ளேகேயில் வெற்றியை அடைந்தான். பிறகு இவனுடைய செல்வாக்கும் குறைந்து இவனுடைய எதிர்க் கக்ஷிக்காரர்களும் அதிகாரத்தை அடைந்தார்கள். தேசம் சண்டையால் தளர்ச்சி யடைந்திருப்பதைக் கண்டு சமா தானம் செய்துகொள்வதாக முடிவு செய்தார்கள். மார்ல் பரோ வேலையிலிருந்து நீக்கப் பட்டுப் பிரான்சுக்கு ஓடினான். டோரிக் கக்ஷிக்காரர்கள் 12 பிரபுக்களை உண்டாக்கி 1713-ம் வருஷத்தில் யூட்ரெக்ட் சமாதானத்தைச் செய்து கொண்டார்கள்.

**யூட்ரெக்ட் உடன்படிக்கை 1713.**—இங்கிலாந்து ஐந்தா வது பிலிப்பை ஸ்பானிஷ் அரசனாக ஒப்புக் கொண்டது. ஆனால், பிரான்சும் ஸ்பெயனும் அரசியலில் சேரக்கூடாது. அதனோடு பிரான்சு, இங்கிலீஷ் ப்ராடெஸ்டெண்டு பட் டத்தை அங்கீகரிக்க வேண்டும். சிசிலி சேவாய்க்கும்

நெதர்லெண்டு ஆஸ்திரியாவிற்கும் விடப்பட்டன. இங்கிலாந்திற்கு அமெரிக்காவில் உள்ள பிரான்சு நோவாஸ் கோஷியா நியூபாண்ட்லெண்டு, ஹட்சன்பேராஜ்ஜியம் என்ற இவைகள் கிடைத்தன. ஸ்பெயின், ஜிப்ரால்டர், மைனர்கா என்ற இவைகளைக் கொடுத்ததுடன் அமெரிக்காவிற்கு ஒவ்வொரு வருஷமும் ஒரு வியாபாரக் கப்பலையும், ஓர் அடிமைக் கப்பலையும் அனுப்பும் உரிமையையும் இங்கிலாந்திற்குக் கொடுத்தது. இப்படி இங்கிலாந்து சமுத்திரத்தில் மற்றவர்களை விட உயர்ந்த அதிகாரத்தை அடைந்தது.

கக்ஷிகளின் நிலைமை.—ஆன் முதலில் இரண்டு கக்ஷிகளிலிருந்தும் மந்திரிகளைத் தேர்ந்தெடுத்தாள். ஆனால் அவளுக்கு மதஸ்தாபனத்தில் வெகு பற்றுதல் இருந்ததால் 'விக்' கக்ஷிக்காரர்களை மதத்திற்கு விரோதிகளாக எண்ணி 'டோரி'க் கக்ஷிக்காரர்களை விரும்பிவந்தாள். மார்லபரோ, சண்டையை நடத்த எந்தக் கக்ஷி தனக்கு உதவியா யிருக்குமோ அந்தக்கக்ஷியில் சேர்ந்தான். இப்படி 'விக்' கக்ஷி அதிகாரத்தில் இருந்து வந்தது. இவனது மனைவியின் செல்வாக்கால் ஆன் இவனுடைய இஷ்டம் போல் நடந்து வந்தாள். அப்போது 'டோரி'க் கக்ஷிக்காரர்கள் இவனுடைய செல்வாக்கைக் கெடுக்க 'மாஷேம் (Mrs. Masham) என்பவளை ராணிக்குப் புத்தி மதி சொல்லும்படி தந்திரம் செய்தார்கள். மேலும் 'விக்' கக்ஷிக்காரர்கள் 'ஸெஷிவரல்' என்ற பாதிரியைத் துரைத்தனத்தாருக்கு விரோதமாகப் பேசியதாகக் குற்றம் சாட்டினார்கள். இதனால் இக்கக்ஷிக்குச் செல்வாக்குக் குறைந்தது. மார்ல்பரோவின் செல்வாக்கு இப்படிக் குறைந்து டோரிக்கக்ஷி அதிகாரத்திற்கு வந்தது. ஆனால், ஹானோவர் குடும்பம் வருவதில் இக்கக்ஷியில் ஒற்றுமைக் குறைவாயிருந்ததுடன் முடிவில் ஜாகொபைட் கக்ஷிக்காரர்

களாகவும் ஆனார்கள். இதனால் மறுபடியும் 'விக்' கக்ஷி அதிகாரம்பெற வழி ஏற்பட்டது.

ஸ்காட்டிஷ்ச் சேர்க்கைச் சட்டம் 1707.—முதலாவது ஜேம்ஸ் இங்கிலாந்திற்கும் ஸ்காட்லாண்டிற்கும் ஒரே அரசனாயிருந்தும், தனிப்பார்லிமெண்டுடன் ஆண்டுவந்தான். இரண்டையும் ஒன்றுசேர்ப்பது முடியாதகார்யமாயிருந்தது. ஆலிவர் கிராம்வெல் மூன்று பார்லிமெண்டுகளையும் ஒன்று சேர்த்து வியாபார விஷயத்தில் கப்பல் போக்கு வரத்துச் சட்டபடி ஏற்படும் நன்மைகளைச் சமமாக அடையும்படி செய்தான். இரண்டாவது சார்லஸ் காலத்தில் தனிப்பார்லிமெண்டுகள் ஏற்பட்டும், வியாபாரத்தில் ஸ்காட்லெண்டும் அயர்லாந்தும் அந்நிய தேசங்களாகப் பாவிக்கப்பட்டன. வில்லியத்தின் காலத்தில் க்ளெங்கோப் படு கொலையால் இங்கிலீஷ்க்காரர்களுக்கும்ஸ்காட்ஸ்களுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. வில்லியம் வியாபார விஷயத்தில் இங்கிலீஷ் டச்சுக் கம்பெனிகளுக்கு வேண்டிய கடனைக்கொடுத்து ஸ்காட்லெண்டை அவமதித்தான். இதனால் ஸ்காட்ஸ்கள் வட அமெரிக்காவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையில் பனமா என்ற டேரீன் பூசந்தியில் ஒரு குடியேற்ற நாட்டை ஏற்படுத்திக் கொண்டு அத்துடன் வியாபாரம் செய்ய ஒரு கம்பெனியை யும் ஏற்படுத்திக்கொணடார்கள். சீதோஷ்ணஸ்திதி அனுகூலமாக இல்லாததாலும் அதிகாரிகளுடைய நோக்கத்தாலும் இக்கம்பெனி நஷ்டமடையக் குடியேறின ஜனங்களும் மடிந்தார்கள். ஸ்காட்ஸ்கள் கோபத்தால் இச்சம்பவத்திற்கு வில்லியத்தையே காரண புருஷனாக்கி, 1702-ம் வருஷத்தில் ஒரு 'காப்புச் சட்டத்தைச்' செய்தார்கள். இஃது இங்கிலாந்து செய்த வார்ச் நிர்ணயச் சட்டத்திற்கு எதிரானது. இதன்படி எந்த இங்கிலீஷ் அரசன் தங்களுக்குச் சமமான

வியாபார உரிமைகளையும், தங்களுடைய மத உரிமையையும், சட்டத்தையும் கொடுக்காமலிருப்பானே அவனை ஸ்காட்லெண்டின் அரசனாக அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை யென்பது ஏற்பட்டது. இருதேசத்திலும் உள்ளவர்கள் இப்படிப் பிரிவதால் நேரும் அபாயத்தைக் கருதி ஐக்கியச் சட்டத்தைச் செய்தார்கள். இருதேசங்களும் பெரிய ப்ரிடன் என்று வழங்குவனவாகும். ஸ்காட்லெண்டு இங்கிலீஷ் பொதுஜன சபைக்கு 45 மெம்பர்களையும் பிரபுக்கள் சபைக்கு 16 மெம்பர்களையும் அனுப்பலாம். வியாபார உரிமைகள் இருதேசங்களுக்கும் சமமாய் ஏற்பட்டன. ஸ்காட்லெண்டுக்கு அதன் மதத்தையும் அதன் சட்டத்தையும் வழங்கும் உரிமைகிடைத்தது. பனுமா ஏற்பாட்டில் நஷ்டம் அடைந்தவர்களுக்கு இங்கிலீஷ்த் துரைத்தனத்தார் ஈடு செய்தார்கள்.

இப்படி இச்சேர்க்கையால் இருதேசத்திற்கும் நன்மைகள் ஏற்பட்டன. ஸ்காட்லாண்டின் தாழ்ந்தநாடு ஒரு பெரிய வியாபார ஸ்தலமாகியது. ஜனங்கள் விருத்தியடைந்து பெரிய பட்டணங்கள் உணடாக வழியேற்பட்டது. இருதேசத்து ஜனங்களுடைய சேர்க்கையால் அந்நிய தேசத்தவர்கள் இவர்களை நன்கு மதிக்கும்படி நேர்ந்தது. ஆனால் இதனுடைய பயனை நன்கு அறிய வெகுகாலம் சென்றது.

## ஆனின் ஆட்சியிலிருந்த கல்விச்சிறப்பு.

எப்படி லத்தீன்பாஷையைப் பரிசுத்தமான வழியில் எழுதுவது என்பது அகஸ்டைச் சக்கரவர்த்தி நாளில் ஏற்பட்டதோ அப்படியே இங்கிலீஷ் பாஷை உயர்ந்த வழியை அடைந்தது ஆன் மகாராணியின் காலத்திலேதான். ஆனால், அக்காலத்துக் காவியங்கள் இக்காலத்தில் வாசிப்பவர்களின்

மனத்திற்குப் பிடித்த மானவையாக இல்லாவிடினும், அவை புகழ்ச்சிக்கிடமானவை என்பது மாத்திரம் எல்லோராலும் ஒப்பத்தகுந்தது. அட்டிசன் (Addison) எழுதிய பிரபந்தங்களை இப்போது ஆனந்தத்துடன் வாசிக்கிறார்கள். ச்விப்ட் (Swift) எழுதின 'கலிவர் பிரயாணங்கள்' (Gullivers Travels) என்ற தொகை நூல் ஆயிரக்கணக்கான ஜனங்களால் இப்பவும் ஆவலுடன் வாசிக்கப்படுவதைக் காண்கிறோம். டிபோ (Defoe) எழுதின ராபின்சன் க்ரூஸோ (Robinson Crusoe) வைப்பற்றி சொல்வது அநாவசியம். அக்காலத்தில் சமாசாரப் பத்திரிகைகள் இல்லை. அப்போது ராஜீயக்கக்ஷிக்காரர்கள் அட்டிசன் (Addison), ஸ்டீல் (Steel) என்பவர்களை நியமித்து ஒருவரை ஒருவர் நிந்தித்து எழுதத் திட்டம் செய்தார்கள். இவர்களால் வாரப்பத்திரிகைகள் ஏற்பட்டன. இப்படி உரைநடையில் எழுதப்பட்ட புஸ்தகங்களைத் தவிரக் கவிராயர்களும் செய்யுள்களை எழுதினார்கள். போப் (Pope) எழுதின செய்யுள்கள் அமைந்திருக்கும் அழகைச் சொல்வதைப் பார்க்கிலும் கற்கும்படி செய்வது நலமாகும்.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | |
|---|---|
| ஸ்காட்டுலெண்டு காப்புச்சட்டம் (Act of Security) ... | 1702 |
| ப்ளென்ஹீம் வெற்றி ... | 1704 |
| ஜிப்ரால்டர் இங்கிலீஷ்க்காரர்களுடைய தாகியது ... | 1704 |
| ஸ்காட்லந்தும் இங்கிலாந்தும் பார்லிமெண்டில் ஒன்று சேர்ந்தது ... | 1707 |
| யூட்ரெக்ட் சமாதானம் ... | 1713 |

## முக்கியச் செய்திகள்.

1. மார்ல்பரோ 1650-1722.—இவன் 1650-ம் வருஷத்தில் டிவான்ரில் பிறந்து 22-வது வயதில் பிரான்சில் நடந்து கொண்டிருந்த போரில் இங்கிலீஷ் சைனியத்தில் அமர்ந்தான். சீக்கிரத்தில் இந்த 'அழகுள்ள இங்கிலீஷ்காரன்' பெரிய போர்வீரனுக்குள்ள குணங்களை அடைந்தான். எவ்விதமான கிளர்ச்சியையும் தாங்கக் கூடியவனாகவும், தைரியமும் பொறுமையும் வாய்ந்தவனாகவும் உள்ள இவன் இரண்டாவது ஜேம்ஸுக்கு முக்கியமான சிநேகிதனானான். தன்னுடைய எஜமானனைப் பட்டத்தில் வைக்கத் தனது உயிரைக் கொடுக்கவும் தயாராயிருந்தான். ஆனபோதிலும் வில்லியத்துடன் சேர்ந்தான். வில்லியம் இவனை அயர்லாந்திற்கு அனுப்பினான். அவன் அங்குப்போர் நடத்தியதிலிருந்து வில்லியம் இவனுடைய செய்கைகளைக் கண்டுமகிழ்ந்தான். மார்ல்பரோவின் செல்வாக்கு இவனுடைய மனைவியைக் கொண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். இவன் வில்லியத்தைவிட்டு ஆனிடம் சேர்ந்தான். இவன் மனைவி ஆனிடத்தில் வெகு செல்வாக்குள்ளவளாயிருந்தாள். இதனால், மார்ல்பரோ ஸ்பானிஷ் போரில் சிறப்பை அடையலாம் என்று எண்ணினான். வில்லியத்தின் முக்கிய எண்ணம் பதினாலாவது லூயியின் அதிகாரத்தைக் குறைப்பது. ஆதலால், இவன் மார்ல்பரோ ஒருவனே இதைச் செய்ய வல்லவன் என்று சொல்லியனுப்பி அவனைத் தளகர்த்தனாய் நியமித்தான். ஆன். பட்டத்திற்கு வந்ததும் இவன் செல்வாக்கு ஓங்கியது. இவனும் அநேக வெற்றிகளை அடைந்தான். சண்டை நடத்துவதற்கு இவன் இஷ்டம் போலக் கக்ஷிமாறினான். எதிரிகளுடைய குறைபாடுகளை உணர்ந்து துருப்புக்களுக்கு வெற்றி வரச்செய்வான். ஆனால், பணத்தில் மிகுந்த ஆசைவைத்ததால் தனது

கீர்த்தியை இழந்தான். இவன் தன்னுடைய உத்தியோகத்தை இழந்து பிரான்சுக்கு ஓடினான். ஆனால், பிரான்சின் செல்வாக்கையடக்கினவன் இவன் ஒருவனே யாவான்.

2. ஆன் மகாராணி ஆங்கிளிகன் மதத்தில் அபிமானமுள்ளவளாதலால் ஏழைப் பாதிரிகளின் வருமானத்தை உயர்த்த ஒரு நீதியை ஏற்படுத்தினாள். இதை ஆனின் நன்கொடை (Queen Anne's Bounty) என்பார்கள்.

3. பெல்ஜியத்தை இக்காலத்தில் கோழிகள் சண்டை போடும் குழி என்பார்கள். மலைப் பிரதேசமில்லாததால் ஐரோப்பியப் போர்கள் பதினெட்டாவது நூற்றாண்டில் நடந்தன. இதுபோல் இதாலியின் வடபாகத்திற்குப் பதினாறுவது நூற்றாண்டில் பேரிடுவதுண்டு.

4. ஆன் யூட்ரெக்ட் சமாதானம் செய்யப் பதினேரு டோரிப் பிரபுக்களை உண்டாக்கினாள். இக்காலத்தில் பிரபுக்களை உண்டாக்குவது அவசிய மில்லாமலிருக்கிறது. பார்லிமெண்டுச் சட்டம் (1911) பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைத்து விட்டது.

5. ஆன் மகாராணி அடிக்கடி பிரபுக்கள் சபையில் விவாதங்கள் நடக்கும்போது ஒருவித ஆடம்பரமும்இல்லாமல் அங்கு வந்து கவனிப்பாள். இக்காலத்தில் ஒருவரும் வருவதில்லை.

6. ப்ரிடெண்டர் (The Pretender).—இரண்டாவது ஜேம்ஸின் மகன் ஜேம்ஸ் எட்வர்ட் ஆவான். இவனைப் பெரிய ப்ரிடெண்டர் என்று அழைப்பது வழக்கம். ப்ரிடெண்டர் என்ற சொல் பிரஞ்சு பாஷையைச் சேர்ந்தது. பட்டத்திற்கு உரிமையானவன் என்பது அதன் பொருளாகும்.

7. ஜிப்ரால்டர் இங்கிலீஷ்க்காரர்களுக்கு மத்தியதரைக் கடலில் சமுத்திர ஆதிக்கியத்திற்கு முக்கியமானதாகும். ஆகையால் இதை மத்தியதரைக் கடல் திறவு

கோல் என்பார்கள். எதிராளிகள் இதைப் பிடிக்க முயற்சி செய்தது வீணாயிற்று. இப்பவும் (1930) இங்கிலீஷ் வசம் இது இருக்கிறது.

8. டாக்டர் ஸேஷிவரல் (Dr. Sacheveral) 1710—இவன் ஒரு பாதிரியாவான். இங்கிலீஷ்ச் சர்ச்சைச் சேர்ந்தவனாதலால் அரசனுடைய அதிகாரத்தை எதிர்ப்பது தப்பிதம் என்றான்; பரிசுத்தர்களுடைய கொள்கைகளைக் குறைவாகப் பேசினான்; துரைத்தன மந்திரிகளை 'மத விரோதிகள்' என்றான். இதற்காக 'விக்' மந்திரிகள் இவனைக் குற்றம் சாட்டினார்கள். இவன் மூன்று வருஷங்கள் வரையில் ஒரு பிரசங்கமும் செய்யக்கூடாது என்று தீர்மானம் செய்யப்பட்டது. ஆன், ஆங்கிளிகன் மதத்தில் பக்தியுள்ளவளாதலால் 'விக்' மந்திரிகளைத் தள்ளி டோரி மந்திரிகளை நியமித்தாள். மார்ல்பரோ வீழ்ச்சிக்கு இஃது ஒரு காரணமாகும்.

## கேள்விகள்.

1. மார்ல்பரோ இங்கிலாந்தின் கீர்த்தியை எவ்வாறு நிலை நிறுத்தினான் ?
2. இவனுடைய முக்கியமான குறைகள் யாவை ?
3. ஜிப்ரால்டர், மைனார்கா என்பன இங்கிலீஷ்க்காரர்களுக்கு எவ்வாறு முக்கிய மாகும் ?
4. ஸ்பானிஷ் வார்ஸ் போரில் இங்கிலாந்திற்கு உண்டான பயன்கள் யாவை ?
5. ஸ்காட்ஸ் ஏன் பாது காப்புச் சட்டத்தைச் செய்தார்கள்?
6. சேர்கைச் சட்டத்தின் (1707) ஷரத்துக்களை எழுதுக.
7. சேர்க்கையால் ஏற்பட்ட பயன்கள் யாவை ?

## ட்யூடர் — ஸ்டுவர்ட்.

ஏழாவது ஹென்ரி 1485—1509.

- எட்டாவது ஹென்ரி 1509-47
- ட்யூடர் மேரி 1547-53
- எலிஜபெத 1558-1603
- மார்காரெட் = நாலாவது ஜேம்ஸ் (ஸ்காட்லெண்டு)
  - ஐந்தாவது ஜேம்ஸ்
    - ஸ்காட்லெண்டு அரிசி மேரி = டாண்லி பிரபு
      - ஆருவது ஜேம்ஸ் (ஸ்காட்லெண்டு) அல்லது முதலாவது ஜேம்ஸ் 1603-25 (இங்கிலாந்து)
        - முதலாவது சார்லஸ் 1625-49
        - சோபிய

## ஹானோவர் குடும்பம், சாக்சிகோபர்க் (விண்சர்) குடும்பம்.

முதலாவது ஜேம்ஸ்
|
எலிஜபெத்பாலாடினேட் எலெக்டர்
|
சோபியா ஹேனோவர் எலெக்டர்
|
முதலாவது ஜார்ஜ் 1714-27
|
இரண்டாவ்து ஜார்ஜ் 1727-60.
|
பிரடரிக் (வேல்ச் சிற்றரசன்)
|
மூன்றுவது ஜார்ஜ் 1760-1820.

| | | |
|---|---|---|---|
| நாலாவது ஜார்ஜ் 1820-30 | நாலாவது வில்லியம் 1830—37 | கெண்டு கோமகன் | கம்பர் லெண்டு கோமகன்-ஹானேவர் எலெக்டர் |

கெண்டு கோமகன்
|
விக்டோரியா 1837—1901 — சாக்ஸிகோபர்க் ராஜகுமாரன் ஆல்பர்ட்
|
ஏழாவது எட்வர்ட் 1901—10 (சாக்சி கோபர்க்)
|
ஐந்தாவது ஜார்ஜ் 1910———விண்சர்

# எட்டாவததிகாரம்.

## ஹனோவரின் குடும்பம்.

### (A) முதலாவது ஜார்ஜ் 1714—1727.

1701-ம் வருஷத்திய வார்சு நிர்ணயச் சட்டத்தின் படி ஆன் அரசி இறக்க முதலாவது ஜார்ஜ் பட்டம் பெற்றான். ராணி திடீரென்று இறந்தமையால் விக் கக்ஷிக்காரர்கள் காலதாமதமில்லாமல் இங்கிலாந்திற்கு ஹானோவரின் குடும்பத்தைக் கொண்டுவரும் ஏற்பாட்டை நிறைவேற்றினார்கள். டோரிக் கக்ஷிக்காரர்களுடைய எண்ணம் பூர்த்தி பெறவில்லை. ஜனங்களும், ஸ்டுவர்ட் அரசர்கள் காதொலிக் மதஸ்தர்களாகவும், ராஜீய விஷயத்திலும் 'கடவுள் உரிமை' என்ற கொள்கையைக் கொண்டாடுபவர்களாகவும் இருக்கிறார்களே என்று பயந்தார்கள். ஜார்ஜூம் சொல்லியனுப்பிய உடனே இங்கிலாந்திற்கு வந்து, வலிமைவாய்ந்த இங்கிலீஷ்த் துருப்பின் உதவியால் கலகம் ஒன்றுமில்லாமல் சிம்மாதனத்தில் ஏறினான். ஜர்மன் சக்கிரவர்த்தியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஹானோவர் அரசர்களுக்கு இருந்தமையால் அவர்கள் முதலாவது ஜார்ஜ் முதல் இங்கிலீஷ் அரசர்களை 'ஹானோவர் எலெக்டர்கள்' என்று அழைப்பார்கள். இதுமுதல் இங்கிலாந்துக்கு ஹானோவர்குடும்பத்தாரைக் காப்பாற்றுவது ஒரு கடமையாயிற்று. இவ்வரசர்களின் நாளில் இங்கிலாந்தில் துரைத்தன மார்க்கத்தில் கக்ஷித்துரைத்தனமும், தற்காலத்தில் வழங்கிவரும் மந்திரிகளின் ரகசியக் கூட்டமும் உண்டாயினவாகச் சொல்லலாம்.

**ஜார்ஜின் குணமும், விக்கனின் நீண்ட ஆக்ஷியும்.**—புது மன்னன் பட்டத்திற்கு வரும்போது அவனுக்கு வயது 54 ஆகும். அவன் சிறிதேனும் இங்கிலீஷ்ப் பாஷை தெரியாதவனாதலால், ஜனங்களுடன் பழகுவது சாத்தியமில்லாததா யிருந்தது. அன்றியும், அவன் தனது

சொந்த தேச விஷயங்களில் அதிகக் கவலையுள்ளவனாகவும், இங்கிலாந்தை நன்கு கவனிக்காதவனாகவும் இருந்தான். மேலும், அவன் மந்தனாகவும், ஞான அருள் சிறிது மில்லாதவனாகவும் தோன்றினமையால், ராஜ. குடும்பத்தினரிடம் இங்கிலீஷ் ஜனங்களுக்கு விசுவாஸம் குறைந்து வந்தது. விக்டோரியா மகாராணி பட்டத்திற்கு வந்த பிறகு தான் குறைந்திருந்த விசுவாஸம் மேலோங்கியது. விக் கக்ஷியின் உதவியால் பட்டத்திற்கு வந்தவனாதலால், ஜார்ஜ் அவர்கள் கையில் துரைத்தனத்தை விட்டுவிட்டான். இது முதல் 50 வருஷகாலம் விக் கக்ஷிக்காரர்களே அதிகாரத்தில் இருந்தார்கள்.

இங்கிலீஷ்ப் பாஷை தெரியாதது பற்றி, அரசன் மந்திரி ஆலோசனை சபையில் தான் அக்கிராசனாதிபதியாக இருப்பதை நிறுத்திப் பிரதான மந்திரியையே அப்பதவியை வகிக்கும்படி விட்டுவிட்டான். உத்தியோகங்களை அளிப்பது, உபகாரச் சம்பளங்களை வரையறுப்பது, பட்டங்களைக் கொடுத்தல் முதலிய உரிமைகளைப் பிரதான மந்திரியே வகிக்கும்படி நேர்ந்தது. செல்வாக்குள்ள பிரபுக்கள் விக் கக்ஷியைச் சேர்ந்தவர்களாக இருந்தமையால் தேசத்தில் கக்ஷி ஒழுங்கு பட்டும் இருந்தது. டோரிக் கக்ஷிக்காரர்கள் ஜனங்களுக்கு விருப்பமில்லாத ஸ்டுவர்ட் அரசர்களைப் பின் பற்றுபவர்களாக இருந்தார்கள். இதனால், அவர்களை 'ஜாகோபைட் கக்ஷி' என்று கூப்பிடுவார்கள். இந்த நீண்ட ஆக்ஷியில் இங்கிலாந்திற்கு அநேக நன்மைகள் வந்தன. மாட்சிமை பொருந்திய புரட்சியை அநுசரித்தும், கக்ஷித்துரைத்தனத்தை நன்கு ஸ்தாபித்தும், வியாபாரத்தை விருத்திசெய்தும், கப்பல் படையின் முக்கியத்தை நன்கு அறிந்தும் விக் கக்ஷிக்காரர்கள் ராஜநீதியை நடத்திவந்தார்கள்.

## ஸ்டுவர்ட் வம்ச அட்டவணை—பட்ட பாத்தியஸ்தர்கள்.

## (The Pretenders.)

முதலாவது ஜேம்ஸ் (1603—25)

- முதலாவது சார்லஸ் 1625—49
  - இரண்டாவது சார்லஸ் 1660—85
  - இரண்டாவது ஜேம்ஸ் 1685—88
    - இரண்டாவது மேரி
    - மூன்றாவது வில்லியம்
    - ஆன்
    - மூன்றாவது ஜேம்ஸ் அல்லது முதிர்ந்த பட்டபாத்தியஸ்தன்
      - சார்லஸ் எட்வர்ட் அல்லது இளைய பட்டபாத்தியஸ்தன்
- எலிஜபெத்-பாலாடி நேட் எலெக்டர்
  - சோபய்யா-ஹானோவர் எலெக்டர்
    - முதலாவது ஜார்ஜ்

'பதினைந்து' என்ற ஜாகோபைட் கிளர்ச்சி 15.—முதலில் துரைத்தனத்தார் கலகம் ஏற்படுமோ என்று பயந்து 1714-ம் வருஷத்திய கலகச் சட்டத்தை (Riot Act) ஏற்படுத்தினார்கள். சட்டத்திற்கு விரோதமாகக் கூடும் 12-பேர்கள் உள்ள கூட்டத்தை நியாயாதிபதி முன்னறிக்கையின் பேரில் கலைக்க அதிகாரம் பெற்றார். ஸ்காட் ஜனங்கள் அந்நியர்கள் அரசு செலுத்துவதில் இஷ்டமில்லாதவர்களாயிருந்தார்கள். மேலும், 1707-ம் வருஷத்திய சேர்க்கைச் சட்டம் ஸ்காட்லெண்டுக்குத் தீங்கு விளைப்பதாகுமென்று அநேகர்கள் எண்ணி வந்தார்கள். ஸ்டுவர்ட் அரசர்களே தங்களுடைய தேசத்தவர்கள் என்பது அவர்களது மனத்தில் படிந்து இருந்தது. இங்கிலாந்தில் 'விக்' கக்ஷிக்காரர்கள், டோரிக் கக்ஷிக்காரர்களை உத்தியோகத்திலிருந்து விலக்கியதும் அவர்களுடைய தலைவர்களைத் தேசப்பிரஷ்டம் செய்ததுமே கலகம் தோன்றுவதற்குக் காரணங்களாயிருந்தன. இக்கலகம் 1715-ம் வருஷத்தில் நடந்தமையால் இதைப் 'பதினைந்து' என்று கூப்பிடுவார்கள். ஸ்காட்லாண்டில் ஜாகோபைட் தலைவன் ஷெரிப்மோர் என்கிற இடத்தில் ஒன்றும் செய்ய முடியாதவனானன். இங்கிலாந்தில் ப்ரெஸ்டனில் கலகம் அடக்கப் பட்டது. கலகத்தை நடத்தச்சரியான தலைவர்கள் இல்லாததாலும், பிரான்சு உதவி புரியாததாலும் கலகம் ஓய்ந்தது. கலகக்கார்களுக்குக் கொடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. 1616-ம் வருஷத்துச் சட்டம் ஏற்பட்டு ஒரு பார்லிமெண்டின் ஆயுள் ஏழு வருஷம் என்பது ஏற்பட்டது. 1694-ம் வருஷத்திய சட்டப்படி ஒரு பார்லிமெண்டின் ஆயுள் மூன்று வருஷம் என்று இருந்ததில் ஓர் உண்மையான வேலையும் நடக்கவில்லை. ஏழு வருஷமென்று ஏற்பட்டதில் தேர்தல் விவாதங்களின் செலவு

குறையவும், அந்நியதேச விஷயங்களில் தொடர்ந்த தந்திரத்தை அனுசரிக்கவும் வழி யேற்பட்டது. 1911-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சட்டப்படி ஒரு பார்லிமெண்டின் ஆயுள் 5 வருஷம் என்று ஏற்பட்டிருக்கிறது.

ஸ்டான்ஹோப் பிரதான மந்திரிப் பதவியை அடைந்ததும் ஸ்பெயின், யூட்ரெக்ட் உடன்படிக்கைகளை மறுத்து ஜிப்ரால்டர், மைனார்கா என்றவற்றைத் திரும்பி அடைய முயற்சி செய்தான். இங்கிலாந்தும், பிரான்சு ஹாலெண்டு என்ற தேசங்களுடன் மூவர் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. பின்பு ஆஸ்திரியாவும் சேர்ந்தது. ஸ்பானிஷ்க் கப்பல்கள் பஸ்ஸாரோ முனைக்குச் சமீபத்தில் மூழ்கடிக்கப் பட்டமையால், ஸ்பெயின் சமாதானம் செய்து கொண்டது. இப்படி ஸ்டான்ஹோப்பின் வெளி நாட்டுத் தந்திரம் புகழத்தக்கதாகியது.

'தென் கடற் குமிழி' 1720 (South sea Bubble.)—1711-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் தென்கடல் கம்பெனி ஒன்று ஏற்பட்டுத் தென் அமெரிக்காவுடன் வியாபாரம் செய்து வந்தது. யூட்ரெக்ட் உடன்படிக்கைப்படி இங்கிலீஷ்த் துரைத்தனத்தார் வியாபார உரிமைகளை இக் கம்பெனிக்கு அளித்ததால் கம்பெனிக்கு அதிக லாபம் கிடைத்தது. கம்பெனியின் நிர்வாகசபையார், துரைத்தனத்தாருக்குக் குறைவான வட்டிக்குக் கடன் கொடுப்பதாகவும், அதற்காகத் துரைத்தனத்தாருடைய ராஜீயக் கடனில் பங்குள்ளவர்களைத் தென்கடல் கம்பெனியில் பங்குமாற்றிக் கொள்ளத் தூண்டுவதாகவும் ஒப்புக்கொண்டார்கள். இந்தக் கம்பெனியில் வரும் லாபத்தைக் கருதி அநேகர்கள் பங்கு எடுத்துக் கொண்டார்கள். போட்டியில் நூறு பவுன் மதிப்புள்ள பங்கு ஆயிரம் பவுனுக்கு விற்கப்பட்டது. தென்

கடல் கம்பெனிக்கு வரும் லாபத்தைக் கண்டு அநேகம் கம்பெனிகள் பல எண்ணங்களுடன் கிளம்பின. இவை களுக்குள் தோன்றிய போட்டியால் எல்லாக் கம்பெனி களும் அழிந்தன. தென் கடல் கம்பெனியும் நஷ்டமடைந்த தால் துரைத்தனத்தாருடைய தூண்டுதலின்மேல் பங்கு எடுத்துக்கொண்ட அநேகர் நஷ்டத்தை அடைந்தனர். மந்திரி ஸ்டான்ஹோப் வகைசொல்ல வேண்டியவரானன். இம்முடிவைப்பற்றி ஏற்கனவே வால்போல் எச்சரித்தமை யால் ஜனங்கள் அவனை மந்திரியாக்க முயற்சி செய்தார்கள். எப்படி ஜலத்தில் குமிழிகள் கிளம்புவதும் வெடிப்பதும் விரைவில் நிகழக்கூடியனவோ அப்படியே தென் கடல் கம்பெனியின் பங்குகளின் விலையும் சீக்கிரத்தில் உயர் வையும் தாழ்வையும் அடைந்தது. இப்படி 1720-ம் வருஷத் தில் தென் கடல் கம்பெனிக்கு ஏற்பட்ட நஷ்டத்தைத் தென் கடல் குமிழி என்பார்கள்.

---

## ஒம்பதாவததிகாரம்.

# இரண்டாவது ஜார்ஜ் (1727—60.)

வால்போல். இவன் 1676-ம் வருஷத்தில் நார்பக்ஷை ரில் பிறந்தவன். ன்னுடைய 24-வது வயதில் தகப் பன் இறந்தவுடன், வருஷத்திற்கு 2000 வருமான முள்ள நிலங்களுக்கு அதிபதியானன். ஆன் மகாராணி காலத்தில் விக் கக்ஷிக்காரர்கள் செல்வாக்கில் இருந்தபோது, ‘சண்டை காரியதரிசி’ உத்தியோகத்தை வகித்து, லஞ்சம் வாங்கியதற் காகச் சிறிதுகாலம் சிறையில் அடைக்கப்பட்டான். முதலா வது ஜார்ஜ் பட்டத்திற்கு வந்ததும் வால்போல் மறுபடியும் உத்தியோகம் வகித்தான். தென் கடற் குமிழி ஏற்பட்ட வுடன் இவன் பிரதான மந்திரியானன். படிப்பில் தேர்ந்தவ



வரல்போல்.

னில்லாதபோதிலும் பார்லிமெண்டில் விவாதம் செய்வதில் சாமர்த்தியமுள்ளவனுயிருந்தான். இவன் மனிதர்களுடைய மாதிரிகளை நன்கு அறிந்து அவர்களிடத்தில் பழகும் வழியை நன்கு அறிந்தவன் என்பது எல்லாரும் ஒப்புக் கொண்டது. மனிதர்களுக்கு நல்ல குணங்கள் இன்றியமையாதன என்பதை வால்போல் அவ்வளவு நன்ருகத் தெரிந்துகொண்டவனில்லை. ஆயினும் அவன் இயற்கை அறிவு உள்ளவனுயிருந்தான். அவன் காரியங்களை நன்கு கவனித்து முடிவு செய்வதில் சாமர்த்தியமுள்ளவன். **1721**-ம் வருஷம் முதல் இருபத்தோரு வருஷகாலம் இவன் பிரதான மந்திரிப்பதவியை வகித்தான். தென்

கடல் குமிழியில் நஷ்டம் அடைந்தவர்களுக்குத் துரைத்தனத்தார் ஈடுகொடுக்கும்படி செய்து இழந்த நம்பிக்கையைத் திரும்பவரும்படி செய்து கொண்டான். வரவு செலவு கணக்குத்திட்டம் செய்வதில் இவன் வெகு சாமர்த்திய முள்ளவன். எல்லா விஷயங்களிலும் இவனுடைய முக்கியமான பழமொழி 'தூங்கும் நாய்கள் தூங்கிக்கிடக்கட்டும், (Let Sleeping dogs lie) என்பதே ஆகும். தேசத்திலும் வெளியிலும் அமைதியிருக்க வேண்டுமென்று அவன் எண்ணிவந்தான். தான் செய்யும் காரியங்களுக்கு விரோதம் ஏற்பட்டால் அப்பொழுது அவன் அவைகளை வற்புறுத்துவது கிடையாது. இவன் இரண்டாவது ஜார்ஜ் மன்னனது காலத்தில் செல்வாக்குடன் இருந்தான்; ராஜ்ஜியத்தின் வியாபாரத்தை விருத்தி செய்ய முயற்சி செய்தான்; சில இறக்குமதி, ஏற்றுமதி வரிகளைத் தள்ளிச் சாமான்களை உற்பத்தி செய்யவும், வியாபாரம் மேலோங்கி வளரவும் வழி தேடினன்; ராஜீயக்கடனைக் குறைப்பதற்கு ஓர் உபாயத்தைக் கண்டு பிடித்தான்; ஒவ்வொரு வருஷத்திய வருமானத்திலிருந்தும் கடன்களின் வட்டியைக் கொடுக்கவும், கடனிலும் ஒரு பாகத்தைக் கொடுக்கவும் சில தொகையைத் தனியே நிறுத்தி வைத்தான். இதைத்தான் 'இறங்கும் நிதி' (Sinking fund) என்று சொல்வார்கள். 1733-ம் வருஷத்தில் 'தீர்வை மசோதாவை'க் கொண்டு வந்தான். மாகாணத்திலுள்ள நிலக்காரர்கள் ஹானேவர் குடும்பத்திற்கு இணங்கியவர்களாயிருக்க விரும்பி நில வரியைக் குறைக்க ஏற்பாடு செய்தான். இதை ஈடு செய்யச் சாராயம், புகையிலை ஆகியவைகளின் மேலுள்ள வரியைத் துறைமுகங்களில் வசூல் செய்யாமல் உள்நாட்டிலுள்ள கடைகளில் வசூல் செய்யலாமென்றான். வரி

கொடுக்காமல் திருட்டுத்தனமாய்த் துறைமுகத்திலிருந்து இச்சாமான்கள் வருவதைத் தடுக்க இஃது ஓர் உபாயமாகும் என்று எண்ணினன். இப்படிச் செய்ததால் எதிராளிகள் வால்போலுக்குக் கெட்ட எண்ணம் இருப்பதாகச்சொல்லி வந்தார்கள். இதனால் வால்போல் இந்த விஷயத்தை நிறுத்தி விட்டான். இவனது யுக்தியை அனுசரித்து நடந்திருக்கும் பக்ஷத்தில் இங்கிலாந்தின் வியாபாரம் அதிகரித்திருக்கும். ஆனல், வால்போலின் காலம் இவ்விஷயத்தை அறியக்கூட வில்லை. இளையபிட் இந்த உபாயத்தை அனுசரித்துஇங்கிலாந் தின் வியாபாரத்தையும், செல்வாக்கையும் பெருக்கினன்.

வெளியூர்த் தந்திரம்.—வால்போலின் முக்கிய எண்ணம், வியாபாரத்தை விருத்தி செய்வதேயாகும். மேலும், இவன் ஹானேவர் குடும்பம் இங்கிலாந்தில் ஸ்திர மாக ஏற்படவேண்டும் என எண்ணுபவனுமாவன். ஆத லால், வெளியில் அமைதியிருக்கக் கருதி எந்த ஐரோப்பிய யுத்தத்திலும் இங்கிலாந்தைக் கலக்க விடாமல் பார்த்து வந் தான். இத்தகைய தந்திரத்தின் பலனை வால்போல் அரசி யிடத்தில் பின்வருமாறு சொன்னன். 'ஐரோப்பியச் சண்டையில் 40 ஆயிரம்பேர்கள் மாண்டார்கள். அவர் களுள் ஒருவன் கூட இங்கிலீஷ்க்காரனில்லை.' இப்படி வெளியூர் அமைதியை ஏற்படுத்தப் பிரான்சுடன் சிநேகம் கொண்டாடினன். 14வது லூயிக்குப் பிறகு பிரஞ்சு மன்னன் நோயாளியாய் இருந்தமையால் ஆர்லியன்சு பிரபு அத்தேசத்து மன்னனுக விரும்பினன். இதற்கு இங்கி லாந்தின் உதவி முக்கியமாயிருந்தது. ஜாகோபைட் கலகம் உண்டாகாமலிருக்க இங்கிலாந்திற்குப் பிரான்சின் சிநேகி தம் முக்கியமாயிருந்தது. இப்படி 20 வருஷம் சென்றபின் சில மாறுதல்கள் ஏற்பட்டன. பிரஞ்சு மன்னனுக்குக் குழந்தைகள் உண்டானதாலும், ஸ்பெயின், பிரஞ்சு என்ற

இரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தனவாதலாலும் அவை சினேகமாகி அமெரிக்காவில் நடந்த இங்கிலாந்தின் வியாபாரத்தைக் கெடுக்க உடன்படிக்கை செய்துகொண்டன. இது முதல் வால்போலின் தந்திரம் பயன் படவில்லை. ஸ்பெயின் அதிகாரிகளால் இங்கிலீஷ் மாலுமித் தலைவன் திருட்டுத்தனமாய்ச் சாமான்களைக் கொண்டுபோன குற்றத்திற்காககாது அறுபட்டான். இங்கிலீஷ்க்காரர்கள் ஸ்பெயினுடன் போர் புரியத் தூண்டினார்கள். வால்போல் இஷ்டமில்லாதவனா யிருந்தும் அதிகாரம் வகிப்பதில் ஆசையுள்ளவனாதலால் ஸ்பெயினுடன் போர் புரிந்தான். இதைச் சரியாக நடத்தாமையால் இவனுடைய செல்வாக்குக் குறைந்தது. இவனும் பிரபுக்கள் சபைக்குச் சென்றான். இப்படி வால்போலின் வீழ்ச்சி ஜென்கின்ச் காதுப்போரிலிருந்து ஏற்பட்டது.

வால்போலின் அதிகாரம்.—அரசன் இங்கிலீஷ்ப் பாஷை தெரியாதவனாதலால் வால்போல் மந்திரிக் கூட்டச் சபையில் அக்கிராசனாதிபதியாயிருந்தான். தன்னுடன் ஒத்துழையாத மந்திரிகளை உத்தியோகத்திலிருந்து நீக்கியும் அதிகாரத்தை மிதமாகச் செலுத்தியும், லஞ்சம் கொடுத்து மெம்பர்களைத் தன் சார்பாக இருக்கும்படி செய்தும் அதிகாரம் செலுத்தினான். அரசன், அரசி இவர்களுடைய ஆதரவும் வால்போலின் அதிகாரத்தை விருத்திசெய்தது.

வால்போலின் வேலை.—இங்கிலாந்து சண்டையால் களைத்த காலத்தில் அமைதியைக் கொடுத்தவனும், அந்த அமைதிக் காலத்தில் வியாபாரத்தையும், செல்வத்தையும் விருத்தி செய்தவனும் வால்போலாவான். இவனில்லாவிடில் ஹானோவர் குடும்பம் இங்கிலாந்தில் நிலைபெற்றிராது. ஆனால் இவனுடைய வழிகள் எல்லாரும் ஒப்பத்

18620
சென்னை-600 008


தகுந்தனவாக இருந்ததில்லை. துரைத்தன விஷயத்தில் வால்போலே முதல் பிரதானமந்திரி என்று கூறுவதுண்டு. இக்காலத்தில் பிரதானமந்திரி, கீழ்பட்ட மந்திரிகளைத் தானே நியமிக்கவும், நியமிக்கப்பட்டவர்கள் தன்னுடைய இஷ்டப்படி நடக்காவிடில் அவர்களைத் தள்ளி விடவும் அதிகாரம் பெற்றிருக்கிறான். இவ்விஷயங்களை முதலில் அடைந்தவன் வால்போலே ஆவான். ஆனால், ஒரு வித்தியாசம் உண்டு. இப்போது பிரதான மந்திரி தனது கருத்தைப் பொதுஜனசபை ஒப்பாத பக்ஷத்தில் ராஜிநாமாக்கொடுத்து விடுவான். வால்போல் அதிகாரத்தின் ஆசையால் சண்டையில் பிரியமில்லாதவனானாலும் அதை நடத்தச் சம்மதித்திருந்தான்.

ஆஸ்திரியா வார்சுப்போர் (1740-48) காட்ரெட்டும், அவனுக்குப் பிறகு பெல்ஹெம் சகோதரர்களும் ராஜ்ஜியத்தை நடத்தி வந்தார்கள். ஆஸ்திரியாவின் அரசனான ஆறுவது சார்லஸின் ஒரே பெண்ணான மேரியா தெரிசா என்பவள் வார்சாக இருந்தாள். வழக்கப்படி பெண்வார்சுக்குப் பட்டமில்லாததைக் கண்ட அரசன் மற்ற ஐரோப்பிய மன்னர்களின் சம்மதத்தை அடைந்து தனது பெண்ணைத் தனக்குப்பிறகு ஆளுகையில் வைக்கும் சட்டத்தை செய்தான் (Pragmatic Sanction). ஆனால் அவன் இறந்த பிறகு பிரான்ஸ் பெவேரியாவின் சிற்றரசனை வார்சாக ஆதரித்தது இப்போது பிரஷ்யாவை ஒரு பெரிய தேசமாக எண்ணி அதன் அரசன் ஆஸ்திரியாவைச் சேர்ந்த சைலீஷியாவைத் தனது தேசத்துடன் சேர்க்கவிரும்பினான். இரண்டாவது ஜார்ஜ் ஹானோவரைக் காப்பாற்ற ஆஸ்திரியாவுடன் சேர்ந்தான். ஜாகோபைட் கலகத்தை நீக்கவும், ஐரோப்பாவில் ராஜீயத்தராசை ஆதரிக்கவும் இப்போரில் இங்கிலாந்து பிரவேசித்தது.

பிரான்சு, ஸ்பெயின், பிரஷியா என்பன ஒரு பக்கத்திலும், இங்கிலாந்து, ஆஸ்திரியா, ஹாலெண்டு என்பன இன்னொரு பக்கத்திலும் நின்று போர் புரிந்தன. 1740-ம் வருஷத்தில் பிரடரிக், பிரஷியாவின் அரசன் சைலீஷியாவைத் தனது தேசத்துடன் சேர்த்துக்கொண்டான். இங்கிலீஷ் மன்னன் ஹானோவருக்குச் சென்று டெட்டிஞ்சன் (Dettingen) என்கிற இடத்தில் (1743) பிரஞ்சுத்துருப்புகளைத் தோற்கடித்தான் பிரஞ்சு தளகர்த்தன் இங்கிலீஷ் மன்னனை எலிக்கண்ணியில் பிடிப்பதாக எண்ணியிருந்தான். ஆனால், அவனே அக்கண்ணியில் பிடிபட நேர்ந்தது. இது முதல் இங்கிலீஷ் அரசர்கள் தாங்கள் போர்க்களத்திற்குச் செல்வதை நிறுத்திவிட்டார்கள். தன்னுடைய இரண்டாவது கம்பர்லெண்டு சோமகனைப் போர்புரிய விட்டுவிட்டு இங்கிலீஷ் மன்னன் திரும்பினன். ஆனல் 1745-ம் வருஷத்தில் சம்பர்லெண்டு பாண்டிநாய் (Fontenoy) என்கிற இடத்தில் தோல்வி யுற்றான். இதே வருஷத்தில் இங்கிலாந்தில் 'நாற்பத்தைந்து' என்ற ஜாகோபைட் கலகம் நடந்தது. 1748-ம் வருஷத்தில் நிறைவேறிய ஏகன் உடன்படிக்கை போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. இங்கிலாந்தும் பிரான்சும் தாங்கள் பிடித்த ராஜ்ஜியங்களைத் திரும்பக் கொடுத்துக்கொண்டதினால் முன்னிருந்ததுபோல் ஆயின. நெதர்லெண்டும் ஆஸ்திரியாவிற்கு வந்தது. சைலீஷியாவைப் பிரிஷியா தனக்கு வைத்துக் கொண்டது. இதனால் ஆஸ்திரியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இருந்த நட்புப் போய்விட்டது.

'நாற்பத்தைந்து' என்ற ஜாகோபைட் கிளர்ச்சி '45'. பாண்டியில் இங்கிலீஷ்க்காரர்கள் தோல்வியுற்றது ஜாகோபைட் கக்ஷிக்காரர்களுக்குக் கலகம் செய்யும் தைரியத்தைக் கொடுத்தது. இன்னமும் ஸ்காட்ஸ்கள் 'சேர்க்கைச்

சட்டத்தில்' அதிருப்தி கொண்டிருந்தார்கள். ஸ்காட்லெண்டில் மேல் நாட்டாருக்கும் சமவெளியிலுள்ளவர்களுக்கும் இருந்த விரோதமும் இக்கிளர்ச்சிக்குக் காரணமாகும். இளைய இங்கிலீஷ் வார்சான (the Younger Pretender) சார்லஸ் எட்வர்ட் தன்னுடைய தன் தகப்பனது அனுமதியில்லாமல் ஏழுபேர்களுடன் மாக்டானல்ட் கூட்டத்தார்கள் தனக்கு உதவி புரிவார்களென்று நம்பி மாய்டார்ட் (Moidart) என்கிற இடத்தில் இறங்கினன். அநேகர்கள் அவனுடன் சேர்ந்ததால் அவன் எடின்பரோவிற்குச் சென்று தானே அரசன் என்று மகுடாபிஷேகம் செய்து கொண்டான். பிரஸ்டன் பான்ச் என்கிற இடத்தில் இங்கி




"நாற்பத்தைந்து". இளைய உரிமைக்காரன் சென்ற வழி.

லீஷ் துருப்புக்களைத் தோற்கடித்த பின் இங்கிலாந்தின் மேல் படையெடுத்து டெர்பி (Derby) வரையிலும் சென்றான். இதற்குள் கம்பர்லெண்டு அவனைத்

துரத்திக்கொண்டு சென்று கல்லோடன் மோர் (Culloden Moor) என்கிற இடத்தில் முறியடித்து அவனைச் சேர்ந்தவர்களைச் சித்திரவதை செய்தான். சார்லசும், ப்ளோரா மாக்டானெல்ட் (Flora Macdonald) என்பவளது உதவியால் பிரான்சுக்குத் தப்பி ஓடினுன். பிரஞ்சு உதவி செய்யாததாலும், துரைத்தனத்தாரின் ராணுவ ஏற்பாட்டாலும் வியாபாரிகள் கலகத்தை விரும்பாததாலும் இக்கிளர்ச்சி அடங்கியது. மேல் நாட்டார் தங்களுடைய ஆயுதங்களைத் துரைத்தனத்தாரிடம் ஒப்புவித்தார்கள். தலைவர்கள் நியாய விசாரணை செய்வதும் போய்விட்டது. ஸ்காட்டிஷ் சேர்க்கைச் சட்டமும், ஹானோவர் குடும்பமும் ஸ்திரமாய் விட்டன.

## ஏழாண்டுப் போர் 1756—63.

ஏகன் உடன்படிக்கை செய்து கொண்டவர்களுக்கு அதிருப்தியை உண்டாக்கிற்று. ஆஸ்திரியா எப்படியாவது சைலீஷியாவைத் திருப்பியடைய எண்ணியது. பிரஷியாவுக்கு அதைவிட மனமில்லை. அதற்குள் இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் பகை முற்றிற்று. வியாபாரத் தந்திரத்திலும், குடியேற்ற நாட்டு முறையிலும், சமுத்திர அதிகாரத்திலும் எது உயர்ந்தது என்பது தீர்மானமாக வேண்டி வந்தது. தென் இந்தியாவில் டியூப்ளே, பிரஞ்சு இராஜ்ஜியத்தை ஏற்படுத்தி இங்கிலீஷ்க்காரக் கம்பெனியின் வியாபாரத்தைக் கெடுக்க எண்ணினுன். வட அமெரிக்காவில் பிரஞ்சுக்காரர்கள் அல்லிகெனி மலைக்கு மேற்கே மிஸ்ஸிசிபி நதிவரையிலுமுள்ள இராஜ்ஜியங்களில் இங்கிலீஷ்காரர்கள் வியாபிக்காமல் அநேக கோட்டைகளைக் கட்டினுர்கள். இக்காரணங்களால் ஏகன் உடன்படிக்கயை ஸ்திரமானதென்று இருதிறத்தாரும் ஒப்பவில்லை. இப்போர் இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா என்ற மூன்று கண்

டங்களிலும் நடைபெற்றது. பிரான்சு, ஆஸ்திரியா என்ற இரண்டும் ஒருக்கக்ஷியிலும், இங்கிலாந்து, பிரஷியா என்ற இரண்டும் இன்னொரு கக்ஷியிலும் போர் புரிந்தன. போர் ஆரம்பித்ததும் பெரியபிட் கிளம்பி இங்கிலீஷ் ஜனங்களின் ரோஸத்தைக் கிளப்பி விட்டான்.

1755-ம் வருஷத்தில் க்ராட்டாக், ட்யூகன் கோட்டையைப் பிடிக்க முயற்சி செய்தது வீணாய்ப் போனதுடன் தன்னுடைய மனிதர்களும் பிடிபடுவது நீங்கியது வாஷிங்டன் உதவியால்தான் என்று எண்ணினான். 1756-ம் வருஷத்தில் சமுத்திரத்தில் பிங் (Byng) மைனார்க்காவை யிழந்து ஜிப்ரால்டருக்கு ஓடிவந்தான். இந்தியாவில் பங்காளத்து நவாப் 146 இங்கிலீஷக்காரர்களைக் கல்கத்தா இருட்டறையில் போட 23 பேர்கள் தான் பிழைத்தார்கள் என்ற பேச்சுக் கிளம்பியது. நியூகாசில் பிரபு ராஜிநாமாக் கொடுத்து விட்டான். இப்போது பெரிய பிட் பிரதான மந்திரிப் பதவியை அடைந்தான். ஐரோப்பாவில் கம்பர்லாண்டு கோமகன் தோல்வி அடையக், க்ளாஸ்டர் சிவண் (Kloster Seven) உடன் படிக்கையைச் செய்துகொண்டு ஹானோவரை இழந்தான். மேற்கண்ட கஷ்டங்களையும் கவனிக்காமல் 'தான் ஒருவனே இச்சமயத்தில் இங்கிலாந்தைக் காப்பற்றக் கூடுமே ஒழிய வேறு எவராலும் முடியாது' என்று உறுதியாக நின்றான். இவன் ஏற்கனவே வால்போலுக்கு விரோதமான கக்ஷிக்குத் தலைவனாக நின்றான். தன்னுடைய குணத்தினால் ஜனங்கள் எல்லோரும் மகிழும்படி செய்துகொண்டான். கெடுமையான காலத்திலும் யோக்கியனாகவும், மந்திரிகள் சுயநலம் பாராட்டும் காலத்திலும் தேசத்தின் க்ஷேமமே பெரிது என்று நடப்பவனாகவும், மழுங்கலான காலத்திலும் பிரகா ; த்தைக் கொடுப்பவனாகவும் இருந்தமையால் இவன் இப்

பெரிய போரை நன்கு நடத்தக் கூடியவன் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவனிடம் மூன்று எண்ணங்கள் குடிகொண்டிருந்தன. அவை ஹானோவரைத் திரும்பிப் பிடிக்கவேண்டுமென்பதும், இந்தியாவில் சந்திரநாகூரைப் பிடித்துக்கொண்டு பிரஞ்சுக்காரர்களை இந்தியாவை விட்டுத் துரத்தவேண்டுமென்பதும், அமெரிக்காவில் கனடாவைப் பிடிக்கவேண்டுமென்பதுமாகும். மேற்கூறிய எண்ணங்களை நிறைவேற்றத் தகுந்த தளகர்த்தர்களை நியமித்தான். க்ளைவ், ஹேஸ்டிங்ஸ் என்பவர்கள் இந்தியாவிற்குச் சென்றார்கள். அமெரிக்காவிற்கு அம்ஹர்ஸ்ட், ஹோ, உல்ப் என்றவர்கள் அனுப்பப்பட்டார்கள். ஐரோப்பாவிலும் ஜர்மனியிலும் பிரஞ்சுக்காரர்களுடன் போர் புரிவதால் பிரான்சு அமெரிக்காவிற்கு உதவியாகக் கப்பல்களையும், மனிதர்களையும் அனுப்ப முடியாது என்று எண்ணிப் பெர்டினெண்டு என்பவனைப் பிரஷியா தேசத்து அரசனுக்கு உதவி புரியுமாறு அனுப்பினன். இப்படிச் செய்ததைக் கண்ட பிட் 'கனடாவை ஜர்மனியில் பிடிக்கிறேன்,' என்று சொல்லி வந்தான். 1757-ம் வருஷத்தில் இந்தியாவில் ப்ளாஸ்ஸி யுத்தம் நடந்தது. இங்கிலீஷ்க்காரர்கள் தங்களது ராஜ்ஜியத்திற்கு அஸ்திபாரத்தைப் போட்டார்கள். அடுத்த வருஷத்தில் அமெரிக்காவில் உள்ள ட்யூகன் கோட்டையும் இங்கிலீஷ்க் காரர்களின் வசமாயிற்று. இது பிட்டின் பேரால் 'பிட்ச்பர்க்' என்று திரும்பப் பேரிடப்பட்டது. 1759-ம் வருஷத்தில் இங்கிலீஷ்க்காரர்களுக்கு 'அற்புதமான வெற்றிகள்' வந்தமையால்' இவ்வருஷத்தை அற்புதமான வருஷமென்று கூறுவார்கள். அமெரிக்காவில் உல்ப், க்யுபெக் என்ற இடங்களில் பிரஞ்சுக்காரர்களை முறியடித்ததனுல் கனடாவும் இங்கிலீஷ்காரர்களதாக ஆயிற்று. உல்ப் இறக்கும் தருணத்தில் பிரஞ்சுக் காரர்கள் ஓடிவிட்டார்கள்

என்பதைக் கேட்டான். அதனால் அவன் தன்னுடைய தேசத்திற்குத் தான் செலுத்தவேண்டிய கடமையைச் செலுத்திவிட்டதால் இனித் தான் கவலை இல்லாமல் உயிர் துறக்கலாம் என்றான். ஐரோப்பியாவில் மிண்டன் என்ற இடத்தில் பிரஞ்சுக்காரர்கள் தோற்றதால் ஹானோவர் மறுபடியும் இங்கிலீஷ்க்காரர்களதாக ஆயிற்று. சமுத்திரத்திலும் லாகாஸ், க்விபிரான் குடாக்கடல்களில் பிரஞ்சுச் சண்டைக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. 1760-ம் வருஷத்தில் இந்தியாவில் கூட்ப்பிரஞ்சுக்காரர்களை வந்தவாசியில் தோற்கடித்துப் புதுச்சேரியையும் முற்றுகைப்போட்டான். இப்படியிருக்கையில் இங்கிலீஷ் மன்னன் இறந்தான்.

வெஸ்லி (ஒழுங்குள்ளவர்கள்).—முதல் இரண்டு ஜார்ஜ் மன்னர்கள் அரசாண்ட காலத்தில் ஜனங்கள் மதத்தைக் கவனிக்காமல் பணத்தையே பெரிதாகக் கைக்கொண்டு வாழ்நாளை வெகு லேசாகக் கழித்து வந்தார்கள். இந்த சமயத்தில் மூன்று ஆக்ச்போர்ட் மாணாக்கர்களான, ஜான் வெஸ்லி, சார்லஸ் வெஸ்லி, ஜார்ஜ் வைட்பீல்ட் என்பவர்கள் கிளம்பி மதப் பிரசங்கங்களைச் செய்யத் தொடங்கினார்கள். எப்படி ராஜீய விஷயத்தில் பெரிய பிட் செல்வாக்குள்ளவனாக இருந்தானோ அப்படியே மத விஷயத்தில் ஜான் வெஸ்லி இருந்தான். பாதிரிமார்கள் மதவிஷயத்தில் ஒருவித உற்சாகமும் இல்லாததைக் கண்டு பாவம், மதத்தை அனுசரித்தல் என்கிற விஷயங்களை ஜனங்களுக்கு நன்கு உரைத்து வந்ததால் ஜனங்களுக்கு மதத்தில் விருப்பம் உண்டாயிற்று. இம்மூவர்களும் ஒழுங்காக வாழ் நாட்களைக் கழித்ததிலிருந்து இவர்களுக்கும் இவர்களைப் பின்பற்றினவர்களுக்கும் ‘ஒழுங்குள்ளவர்கள்’ என்று பேர் வந்தது. தோத்திரம் செய்வதும், ஏழைகளையும் கவனிப்

பதும் அவர்களின் முக்கிய கடமைகளாகும். மத ஸ்தாபனத்திலிருந்து பிரிந்து மூவரும் தனியான மதக் கூட்டங்களை ஏற்படுத்தினார்கள். ஜான்வெஸ்லி மதக் கூட்டங்களை ஏற்பாடு செய்வதையும், சார்லஸ் தோத்திரங்களைச் சங்கீதங் கலந்த பாட்டுகளில் அமைப்பதையும், வைட்பீல்ட் ஊர் ஊராகச்சென்று ஏழைகளுக்கு மதப்பிரசங்கம் செய்வதையும் முக்கியமாகக் கொண்டார்கள். இப்படிச் செய்ததால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நல்ல வழிகளில் திரும்பினார்கள். அவர்களின் ஊக்கத்தால் மதத்தில் அதிகப்பற்று உண்டாக்கியது. பிராணிகளிடத்தில் அன்பு பாராட்டுவது, ஏழைகளின் வறுமையைத்தீர்ப்பது முதலிய இயக்கங்கள் பின்பு உண்டாயின. இவர்களுடைய முயற்சி மதம் என்பது ஒழுங்கானவழியில் ஆயுளைக்கழிக்க மனிதர்களுக்குத் துணை செய்வது என்ற எண்ணத்தை உண்டாக்கியது.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| ஏழாண்டுச் சட்டம் | ... | 1716 |
| தென்கடல் குமிழி | ... | 1720 |
| டெட்டிஞ்சன் யுத்தம் | ... | 1743 |
| கல்லோடன் மோர் | ... | 1746 |
| புதுப்பஞ்சாங்கச் சட்டம் | ... | 1751 |
| ப்ளாஸியின் வெற்றி | ... | 1757 |
| மிண்டன் | ... | 1759 |
| க்யுபெக் வெற்றி | ... | 1759 |

### முக்கிய செய்திகள்.

1. **அரசர் ஆட்சியின் முடிவும், மந்திரி ஆட்சியின் பொறுப்பும்.**—ஆன் மகாராணியின் ஆட்சி வரையிலும் அரசர்களே மந்திரிகளின் ஆலோசனை சபையில் அக்கிராசனாதிபதிகளாக இருந்து வந்தார்கள். முதல் ஜார்ஜும்,

பின் வந்தவரும் இங்கிலீஷ் பாஷை தெரியாமையால் மந்திரிகளின் சங்கத்திற்குப் போவது இல்லை. இது முதல் எல்லா அரசர்களும் மந்திரிகளின் சபைக்குப் போகும் வழக்கத்தைக் கொண்டாடாமலிருந்தார்கள். இப்படி அரசர்களின் சொந்த ஆட்சி நின்று தற்காலத் துரைத்தன முறை ஆரம்பித்தது. மந்திரிகளும் அரசர்களுடைய உத்தரவு இல்லாமல் தங்களுடைய சவுகரியம் போல் கூடுவது என்பதை ஏற்படுத்திக் கொண்டார்கள். மேலும், மந்திரிகள் பெரும்பான்மையோர் கட்சியிலிருந்தே பொறுக்கி எடுக்கப்பட்டு எல்லோரும் ராஜ்ஜியதந்திரங்களில் ஒற்றுமையாய் இருப்பார்கள். இவர்களுக்குத் தங்களுடைய கக்ஷிக்காரர்களே முக்கியமான உதவியாவார்கள். அரசனுடைய தயவை எதிர்ப்பார்ப்பது இல்லை. மூன்றாவது ஜார்ஜ் 'அரசனுடைய சிநேகிதர்களை'க் கொண்டு ராஜ்ஜியம் நடத்தியது வெகு கெடுதலில் முடிந்ததால் பின் ஒருவரும் இதை அனுசரிக்க வில்லை. இப்படி 'மந்திரிகளின் பொறுப்பு' என்பது ஏற்பட்டது. ஆகையால், அரசன் இது முதல் ஒரு கெடுதலையும் செய்ய இயலாதவனானான். (The king can do no wrong) நல்லதும் கெட்டதும் மந்திரிகளைச் சேர்ந்தனவே ஆகும்.

2. வால்போலின் முக்கிய குணம் அவனுடைய இயற்கை அறிவாகும் (Common Sense). அவனுடைய நீதி மொழி 'தூங்குகிற' நாய் கிடக்கட்டும் (Let sleeping Dogs lie) என்பது. ஜனங்களின் இஷ்டத்திற்கு விரோதமாய் எவ்விதச் சீர்திருத்தமும் கொண்டுவரக்கூடாது என்பது பொருள். வால்போல் பார்லிமெண்டு மெம்பர்களுக்கு அவர் அவர்களுக்குத்தக்கப்படி பணம் கொடுத்துத் தன் பக்கத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்வான் (Every man had his own price). வெளியூர் விஷயத்தில்

அவனுடைய தந்திரம் என்னவெனில் எப்படியாவது அமைதியும், பிரான்சுடன் நட்பும் Peace at any cost and peace with France) என்பதே. ஸ்பெயினுடன் சண்டை போடப் பார்லிமெண்டு தீர்மானித்த போது இன்றைக்குச் சந்தோஷம் நாளைக்குக் கஷ்டம் (To-day you are ringing bells and tomorrow you will be wringing your hands) என்றான்.

வால்போலின் எதிரிகள்:—வால்போலின் வழிகளை விரும்பாதவர்களான இளையவிக்குகள் (The boys) பிட்டின் தலைமையின் கீழ் இருந்தார்கள். வால்போலை வேலையி லிருந்து தள்ளினவர்கள் தேசாபிமானிகளாவர் களான (The Patriots), டோரிகள்.

3. ட்ரேபியர் கடிதங்கள் (Drapiers' Letters). அயர் லாந்தில் ஒரு தாமிர நாணயத்தை வால்போல் வழங்கும்படி செய்தான் மேலும் இதைச் செய்யும் படி ஓர் இங்லீஷ் காரனை வுட் (Wood) என்பவனுக்கு குத்தகை கொடுக்கப்பட்டது. இவன் தாழ்ந்த உலகத்தைச் சேர்த்த தால் அதிக லாபத்தை அடைந்தான். இவ் விஷயம் ஐரிஷ்காரர்களின் சம்மதமில்லாமல் ஏற்பட்டது. தேசாபி மானிகள் இதை ஓயாமல் வால்போலின் வழியிதேயே குற்றம் பிடித்தார்கள். இதனால் வால்போல் புது நாணயத்தை நிறுத்திவிட்டான். இப்படி எழுதினவன் டீன் ஸ்விப்ட் (Dean Swift). ஆவான். அவன் எழுதிய வையே ட்ரேபியர் கடிதங்கள் ஆகும்.

4. இளைய உரிமைக்காரனின் முடிவு.(The younger Pretender). பிரான்சு வேண்டிய உதவிகளைச் செய் யாததால் அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை. மறு படியும் அவன் லண்டனுக்கு வந்துரகசியமாய்க் கிளர்ச்சி

உண்டாக்க முயன்றது வீணாயிற்று. முடிவில் ரோமில் அவன் இறந்தான். இவனுடைய தகப்பன் இருபது வருஷங்களுக்கு முன்னால் வர்னுலகை அடைந்தான். இன்னொரு சகோதரனும் சந்நியாசி ஆச்ரமத்தை அடைந்து இருபது வருஷங்களுக்குப் பின்பு இறந்தான். இப்படித் 'துரதிர்டஷ்ம் பொருந்திய ஸ்டுவர்ட்வம்சம்' முடிவுக்கு வந்தது.

5. புதுப்பஞ்சாங்கம் 1751.—ஐரோப்பாவில் ஆதி காலங்களில் ஜூலியஸ்ஸீசர் பேரால் ஏற்பட்ட பஞ்சாங்கம் வழங்கிவந்தது. பதினாறுவது நூற்றாண்டில் போப்கிரிகரி பழைய பஞ்சாங்கத்தில் இருந்த பிழைகளைத் திருத்தி நூதனமான பஞ்சாங்கத்தை ஏற்படுத்தினான். இங்கிலாந்து ப்ராடெஸ்டெண்டு தேசமாதலால் இந்தப் பஞ்சாங்கத்தை அனுசரிக்கத் தயங்கிற்று. 1752ம் வருஷத்தில் ஏற்கனவே குறைந்திருந்த நாளுடன் இன்னும் ஒரு நாள் அதிகமாகக் குறைந்தது. இதைச் சீர்திருத்தம் செய்து 1752-ம் வருஷம் செப்டம்பர் மீ 3உ யை 14உ தேஷ்யாகப் பாவிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதைத்தான் புதுப் பஞ்சாங்கம் என்பார்கள். ருஷியா இன்னமும் பழைய ஏற்பாட்டை அனுசரிப்பதால் இங்கிலாந்தில் கிறிஸ்துவின் பிறந்த நாள் பண்டிகையைக் கொண்டாடுபவர் உடனே ருஷியாவுக்குச் சென்றால் இன்னொருமுறை அந்தப் பண்டிகையைக் கொண்டாடலாம்.

6. கல்வி.—க்ரே (Gray) துக்கப்பாட்டை (Elegy) எழுதினார். ஜான்ஸன் இங்கிலீஷ் அகராதி எழுதின போதிலும், அவனுடைய கியாதி மூன்றாவது ஜார்ஜ் காலத்தைச் சேர்ந்தது.

7. இந்தியா.—ஔரங்கசீப் இறந்த பிறகு அவன் கீழிருந்த இராஜ்ஜியங்கள் சுயாதீனத்தை அடைந்தன.

இதைக்கண்ட பிரஞ்சுக்காரர்கள் தங்களது செல்வாக்கைப் பரவச்செய்ய முயன்றார்கள். இங்கிலீஷ்க்காரர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் ஐரோப்பிய யுத்தங்களால் அடிக்கடி சச்சரவுகள் உண்டாயின. 1746-ம் வருஷத்தில் மதராஸ் பிரஞ்சுக்காரர்களின் வசமாகி 1748-ம் வருஷத்தில் மறுபடியும் இங்கிலீஷ் வசம் வந்தது. இப்படி இருவர்களுக்கும் சமாதானம் இருந்தபோதிலும் தென் இந்தியாவில் மறுபடியும் விவாதம் ஏற்பட்டு இங்கிலீஷ் தலைவனான ராபர்ட் க்ளைவ் 1751-ம் வருஷத்தில் ஆற்காட்டைக் காப்பாற்றியது முதல் இவர்களுடைய கியாதி கிளம்பியது. 1756-ம் வருஷத்தில் ஐரோப்பாவில் ஏழாண்டுப்போர் கிளம்பின உடன் இந்தியாவிலும் இரண்டு ஐரோப்பிய தேசத்தவர்களும் போர் புரிய ஆரம்பித்தார்கள். வங்காள நவாப் கல்கத்தாவில் 146 இங்கிலீஷ்க்காரர்களை இருட்டறையில் போட்டதாக அறிவிக்கப்பட, க்ளைவ் நவாப்பையும் பிரஞ்சுக்காரர்களையும் பிளாஸ்ஸி யுத்தத்தில் ஜயித்தான். இது முதல் இங்கிலீஷ் ராஜ்ஜியம் இந்தியாவில் நிலை நிறுத்தப்பட்டுப் பிரஞ்சின் அதிகாரம் குறைந்தது. தென் இந்தியாவிலும் வந்தவாசியிலும் பிரஞ்சுக்காரர்களை இங்கிலீஷ்க்காரர்கள் தோற்கடித்து, புதுச்சேரியையும் முற்றுகை போட்டார்கள். இப்படி பிரான்ஸின் எண்ணம் இந்தியாவில் வீணாய்ப்போய் விட்டது.

8. மந்திராலோசனைச் சங்கம்.—பிரதான மந்திரி (Prime Minister) யால் பெரும்பான்மையோர் கட்சியிலிருந்து, ராஜ்யத்தை ஆள்வதற்கு மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால், பிரதான மந்திரிதான் உதவி மந்திரிகளைத் தள்ளவும், வைக்கவும், உள்ள அதிகாரத்தை வகிக்கிறான். நார்மானியர்கள் காலத்தில் அவ்வுத்தியோகத்திற்கு 'ஜஸ்டீஸியார்' என்ற பெயரும், பிறகு

'சான்ஸெலர்' என்ற பெயரும் வாய்ந்திருந்தன. ஆனால், வால்போல்தான் பிரதான மந்திரி என்ற பட்டத்தை முதலில்வகித்தவனாவான்.

9. சேதாம் (Chatham) பிரபு—பெரிய பிட் (1708-1778).—இங்கிலாந்திலிருந்த சிறப்பு வாய்ந்த மந்திரிகளில் இவன் ஒருவன். ஜனங்களுடைய மனிதனாதலால், இவன் ஜனங்களின் 'சிறப்பு வாய்ந்த பிரதிநிதி' (The Great Commoner) என்று அழைக்கப்பட்டான். ஏழாண்டுப்போரை நடத்த மனிதர்களைக் கண்டு பிடித்து அவர்களுடைய குணங்களை நன்கு தெரிந்து கொண்டான். உல்ப், கிளைவ் என்ற இவர்களைச் சாமான்யமானவர்கள் என்று எண்ணி விடமுடியாது. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் கிடைத்த வெற்றிகள் இவர்களின் செய்கைகளால்தான் என்பது தெரிந்த விஷயம். இவனுடைய வார்த்தைகள் "ஜர்மனியில் அமெரிக்காவை ஜயிப்பேன்" என்பது. இவை மறக்கத் தகுந்தவைகள் அல்ல (I shall Conquer America in Germany). மூன்றாவது ஜார்ஜ் பட்டத்திற்கு வந்தவுடன் இவன் பிரபுக்கள் சபைக்குச் சென்றான். அங்குத் தாய் நாடு அமெரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகளை நடத்துவது சரியாகவில்லை என்று பேசுகையில் அவன் கீழே விழுந்து ஒரு மாதம் இருந்து இறந்தான். வால் போல் அரசனால் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட மந்திரியானால், பிட் ஜனங்களால் அரசனுக்குக் கொடுக்கப்பட்ட மந்திரியாவான். ஜனங்களுடைய அபிப்பிராயம் தான் ராஜ்ஜியத்திற்குப் பலம் தருவது என்பதைக் கைக்கொண்டவர்களில் இவன் முதன்மையானவன். இவனைச் சுயநலம் பாராட்டாதவன் என்றும், யோக்கியப் பொறுப்புள்ளவன் என்றும் ஜனங்கள் கொண்டாடினார்கள்.

10. உல்ப் (Wolfe).—இவனை க்யுபெக் வீரன் என்று கூப்பிடுவார்கள். கல்லோடன்மோரில் இவன் மேல் நாட்டாரைக் கொல்லும்படி விதித்த உத்தரவை மீறி நடந்தான். அமெரிக்காவில் ஏழாண்டுப் போரில் க்யுபெக்கில் சண்டை போடும் போது மும்முறை காயப்பட்டபோதிலும் போர்க்களத்தை விட்டு இவன் செல்லமாட்டேன் என்றான் சாகும் தருணத்தில் இவன் 'யார் ஓடுகிறார்கள்' என்று வினவி 'எதிரிகள்' என்ற பதிலைக் கேட்டவுடன் 'கடவுளின் கிருபையால் நான் இனிமேல் கவலையில்லாமல் இறக்கலாம்' என்று சொல்லிக்கொண்டு இறந்தான்.

11. க்விபிரான் குடாக்கடல் வெற்றியை 'ஏழாண்டுப் போரில் ட்ரபால்கர்' என்பார்கள்.

## கேள்விகள்

1. முதல் இரண்டு ஜார்ஜ் மன்னர்களின் காலங்களில் விக் கக்ஷிக்காரர்களின் நீண்ட ஆட்சிக்குக் காரணங்கள் யாவை?

2. எப்படி வால்போல் பிரதான மந்திரியானான்?

3. இரண்டு ஜாகோபைட் கிளர்ச்சிகளும் வீணான காரணங்கள் யாவை?

4. வால்போல் இங்கிலாந்திற்குச் செய்த நன்மைகளைச் சொல்லுக.

5. வால்போலுடைய முக்கியமான சொற்களை விளக்கிச் சொல்லுக.

6. ஏழாண்டுப் போரில் இந்தியாவில் இங்கிலீஷ்க்காரர்களுக்கு நடந்த சமாசாரங்களைச் சொல்லுக.

## பத்தாவததிகாரம்.

## மூன்ருவது ஜார்ஜ் 1760-1820.

இவன் இரண்டாவது ஜார்ஜின் மகனுன பிரடரிக்கின் பிள்ளையாவான். இவன் இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்தவனுதலால் இவனை 'இங்கிலீஷ் மன்னன்' என்று சொல்லுவது தகுதியாகும். இவன் தன்னுடைய முன்னேர்களைப் போலில்லாமல் நல்ல குணங்கள் வாய்ந்து நன்மார்க்கமாய் வாழ்நாளைக் கழித்தான். ஆனுல், சிறிது பிடிவாத குண முள்ளவனுகவும், சிலரைக் கண்டு தப்பெண்ணம் கொள்பவனுகவு மிருந்தான். இவன் தாயார் "நீ ஓர் அரசன்போல் ஆளவேண்டும்" என்று இளம் பிராயம் முதல் இவனுக்குப்போதித்து வந்தாள். மேலும், இவன் புது அரசனுதலின் டோரிக் கக்ஷித்தலைவனுனப் பாலிங்ப்ரோக் எழுதிய புஸ்தகத்தைப் படித்துத் 'தான் எப்படி அரசாளுவது' என்பதைப் பற்றிய புது எண்ணம் பலவற்றைக் கொண்டான். அப்புஸ்தகத்தில் ஓர் அரசன் தேச அபிமானமுள்ளவனுக இருக்க வேண்டுமானுல் அவன் ஒரு கக்ஷியிலும் சேராமல் தனது சொந்த அபிப்பிராயப்படியே ஆளவேண்டும் என்பது வற்புறுத்தப் பட்டிருந்தது. அஃது இவனது மனத்தில் நன்கு பதிந்தது. இவனுக்குத் தன்னுடைய முன்னேர்கள், கக்ஷித் துரைத்தனத்தால் அதிகாரத்தை இழந்து விட்டார்கள் என்பது எண்ணமாதலால், இவன் இழந்த அந்த அதிகாரத்தைத் திரும்பப் பெற்றுச் செலுத்த மனங்கொண்டான். கக்ஷித் துரைத்தனத்தை உண்டாக்கியது 'விக்' கள் ஆதலால் அவர்களுக்கு வீழ்ச்சியைக்கொண்டுவர வழிதேடினுன். மந்திரிமார்களைத் தானே நியமித்துத் தனது சொற்படியே அவர்களை நடக்கும்படி செய்யத் தந்திரம் செய்தான். தன்னுடைய முன்னேர்கள்

மந்திரிகளின் கையில் அகப்பட்டுப் பொம்மைபோல் இருந்து வந்தார்கள் என்பது இவனது எண்ணமாயிருந்தது. பார்லிமெண்டு சபையில் 'அரசன் சிநேகிதர்கள்' என்கிற ஒரு கூட்டத்தை ஏற்படுத்தி அவர்களைத் தனது இஷ்டப்படி கக்ஷிகளில் சேரும்படி செய்தால் தனது எண்ணம் நிறைவேறலாம் என்கிற உபாயத்தை அனுசரித்தான். அக்காலத்தில் 'பணத்தைச் செலவழிப்பவர்கள் பார்லிமெண்டில் மெம்பர்கள் ஆகலாம்' என்பது தெரிந்த விஷயம். மேலும், இவன் உத்தியோகம், உபகாரச் சம்பளம் முதலியவற்றைக் கொடுக்கும் அதிகாரத்தைத் தனது கையில் வைத்துக்கொண்டிருந்ததால் இவனுடைய சொற்படி நடக்கும் மெம்பர்கள் ஏற்பட்டார்கள். 'விக்' கக்ஷிக்காரர்கள் தங்களுக்குள் விவாதம் செய்துகொண்டதாலும், அரசன் டோரிக் கக்ஷிக்காரர்களுடன் சேர்ந்ததாலும் 'விக்' கக்ஷியின் வீழ்ச்சி நிச்சயமாய் விட்டது. இவனுடைய கருத்துக்கள் நிறைவேறியது நார்த் பிரபு மந்திரியாயிருந்த காலத்திலேதான். இவன் எல்லா விஷயங்களுக்கும் சண்டை இடையூறாயிருந்ததால் ஏழாண்டுப்போரைச் சமாதானத்திற்குக் கொண்டுவந்தான். அரசன் தனது இஷ்டப்படி நடவாததால் பெரிய பிட் ராஜீநாமாக் கொடுத்தான். பிறகு பூட் மந்திரியானான்.

**பாரிஸ் சமாதானம் (1763) இங்கிலாந்தின் ஆதாயம்.**— பிரான்சுதேசம் அமெரிக்காவில் உள்ள கெனடா, கேப்பிரிடன் என்ற தீவுகளை இங்கிலாந்திற்கு அளித்தது. இது முதல் மிஸ்ஸஸிபி நதிக்கு எல்லையாகியது. ஸ்பெயின் தேசம் ஜிப்ரால்டரையும் மைனார்க் என்ற தீவையும் கொடுத்தது. ஆப்பிராக்காவிலும் மேற்கு இந்தியத் தீவுகளிலும் சில இடங்கள் கிடைத்தன. சமுத்திர அதிகாரத்திலும் வியாபாரத்திலும், குடியேற்ற நாடுகளின்

விஷயத்திலும், இங்கிலாந்தே மேலானது என்பது ஸ்தாபித்து விட்டது.


**வில்கிஸ் வழக்கு.**—பூத்துக்குப் பிறகு க்ரென்வில் மந்திரியானான். பாரிஸ் சமாதானத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தபோது 'நார்த் பிரிட்டன்' என்ற பத்திரிகையில் 'அரசனுடையை பேச்சைப்' பொய்யானது என்று அதன் ஆசிரியரான வில்கிஸ் என்பார் எழுதியிருந்தார். 'அரசன் பேச்சு' என்பது மந்திரிகள் தயார் செய்வது. ஆதலால், அதனை அரசன் சொந்தம்போலப் பாவிக்க வேண்டுவதில்லை. ஆயினும், அரசன் தன்னை நிந்தித்ததாக எண்ணி எழுதினவனைப் பிடிக்க உத்தரவு செய்தான். பேரில்லாத கட்டளை செல்லத் தகுந்ததன்று என்று நியாயாதிபதி தீர்ப்புச் செய்தான். வில்கிஸ் என்பவனால் பார்லிமெண்டுச் சீர் திருத்தமும், வர்த்தமான பிரசுரம் செய்வதும் ஏற்பட்டன.

க்ரென்வில் செய்த வேறொரு தப்பிதம் என்னவெனில் அமெரிக்காவுக்கு முத்திரைக் கடுதாசு வரி போட்டது. அதாவது முத்திரைக் கடுதாசில் எழுதப்படாவிடில் எந்தப் பத்திரமும் சட்டப்படி செல்லத்தகுந்தது இல்லை என்பது. இந்தச் செய்கை அமெரிக்காவில் சுயாதீனப் போரில் முடிந்தது.

## சுயாதீனப்போர்க் காரணங்கள்.

**தாய் நாட்டிற்கும் குடியேற்ற நாடுகளுக்கும் உள்ள சம்பந்தம்.**—தாய் நாடு, உள் நாட்டு விஷயங்களில் பிரவேசிப்பதில்லை. வியாபாரத்தில் தன்னுடைய லாபத்தைக் கருதி அநேக நிபந்தனைகளை ஏற்படுத்தி யிருந்த போதிலும் குடி யேற்ற நாடுகள் இவைகளை ஒரு குறையாக எண்ணினதில்லை. கப்பல் போக்கு வரத்துச் சட்டப்படி அந்நிய நாடுகளுடன் நேரில் குடி

யேற்ற நாடுகள் வியாபாரம் செய்யக்கூடாது. இங்கிலாந்து அமெரிக்காவில் உள்ள துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதி வரி போடுவதுண்டு. ஏழாண்டுப்போர் வரையிலும் பிரஞ்சுக்காரர்களால் ஏற்பட்ட கஷ்டத்தைத் தடுக்கத் தாய் நாட்டின் உதவி வேண்டியிருந்தது. பாரிஸ் உடன்படிக்கைப்படி மிஸ்ஸிஸிபி நதியும் எல்லையாகிப் பிரஞ்சுக்காரர்களுடைய தொந்தரவும் நீங்கியது. இங்கிலாந்து ஏழாண்டுப் போரை அமெரிக்காவின் குடியேற்ற நாடுகளின் நிமித்தமே நடத்தியதால் அமெரிக்கர்கள் இதனால் ஏற்பட்ட செலவை ஈடு செய்ய வேண்டியது ஒரு கடமையேயாகும். அவர்கள் கொடுக்காததால் க்ரென்வில் மந்திரி முத்திரைக் கடுதாசு வரியை 1765-ம் வருஷத்தில் போட்டான். அமெரிக்கர்கள் 'பிரதிநிதிகள் இல்லையேல் வரியுமில்லை' என்று ஆக்ஷேபித்தார்கள். அமெரிக்கர்கள் எப்படிப் புகைக்கப்பல் இல்லாத காலத்தில் இங்கிலீஷ் பார்லிமெண்டுக்கு 3000 மைல் தூரத்திலிருந்து பிரதிநிதிகளை அனுப்பக்கூடும்? ஆனபோதிலும் முத்திரைக் கடுதாசுவரி எடுபட்டது. இங்கிலாந்து தனக்கு வரி போடப் பாத்தியமுண்டு என்று சொல்லி 1767-ம் வருஷத்தில் ஆறு சில்லறை வஸ்துக்கள், தேயிலை, சர்க்கரை ஆகிய சாமான்களின் பேரில வரி போட்டது. இதுபற்றி விவாதம் அதிகரித்தமையால் 1770-ம் வருஷத்தில் தேயிலை வரி ஒன்று தவிர மற்றவை விலக்கப் பட்டன. 1773-ம் வருஷத்தில் அமெரிக்கர்கள் சுதேசிகள்போல வேஷம்பூண்டு போஸ்டன் துறைமுகத்தில் வந்த தேயிலைக் கப்பலில் ஏறி அதிலுள்ள தேயிலைப்பெட்டிகளைக் கடலில் எறிந்துவிட்டார்கள். இதை 'போஸ்டன் தேக்கச்சேரி' என்று பரிகாசமாகச் சொல்லுவார்கள். இங்கிலீஷ் துரைத்தனத்தாரும் 1774-ம் வருஷ




அமெரிக்கா சுயாதீனப் போர். 1-4 நியூ இங்கிலாந்து இராஜ்ஜியங்கள். —5. நியூயார்க். 6. நியூஜெர்ஸி. 7. பென்ஸில் வேனியா. 8. டிலர்வேர். 9. மேரிலாண்டு. 10. வெர்ஜீனியா. 11. வ-காரொலீனா. 12. தெகாரொலீனா. —13. ஜார்ஜியா.

த்தில் குபெஸ் சட்டத்தை ஏற்படுத்தி அமெரிக்கர்களுக்கு விரோதிகளான கனடாவிலுள்ள பிரஞ்சுக்காரர்களுக்குப் பல அனுகூலங்களைச் செய்தனர். அடுத்த வருஷத்திலெ சண்டை ஆரம்பித்துவிட்டது.

1775-ம் வருஷத்தில் ஜார்ஜியா தவிர மற்ற நாடுகள் பில்டல்பியாவில் முதல் காங்கிரஸ் கூடிச் சண்டை போடத் தீர்மானித்தன. பங்கரஸ்ஹில் என்கிற இடத்தில் அமெரிக்கர்களை இங்கிலீஷ் தளகர்த்தனுகிய கேஜ் (Gage) மும்முறை எதிர்த்து முடிவில் வெற்றி யடைந்தான். புது இங்கிலீஷ் தளகர்த்தனுகிய ஹோ (Howe) போஸ்டனை விட்டு நியூயார்க்குக்கு ஓடும்படி நேர்ந்தது. அமெரிக்கர்கள், இங்கிலீஷ் துரைத்தனத்தார் அந்நிய தேசத்திலிருந்து சம்பளம் கொடுத்து ராணுவங்களைக் கொண்டுவந்ததில் கோபங்கொண்டு 1776-ம் வருஷம் ஜுலை மாதம் 4-ம் தேதியில் பில்டல்பியாவில் இரண்டாவது காங்கிரஸ் கூடிச் சுயாதீன அறிக்கையை வெளியிட்டார்கள். இது முதல் தாய் நாட்டின் சம்பந்தம் விட்டுப்போனதால் போரை நடத்துவதற்குப் பணம் கடன்வாங்க அமெரிக்கர்கள் தகுதியுள்ளவர்கள் ஆனுர்கள். வாஷிங்டனும் அமெரிக்கர்களுக்குத் தளகர்த்தனுன். இது முதல் குடியேற்ற நாடுகள் என்கிற பேர் மாறி 'ஐக்கிய நாடுகள்' என்று பெயர் வழங்குகின்றது. ஹோ (Howe) தளகர்த்தன் பில்டல்பியாவைப் பிடிக்கக் கனடாவிலுள்ள பர்காயினைக் கட்டளையிட்டான். ஆனுல் அவன் 1776-ம் வருஷத்தில் சரடோகா (Saratoga) என்ற இடத்தில் அமெரிக்கர்களுக்குக் கீழ்ப்படிந்தான். இதைக்கண்டதும் ஏழாண்டுப் போரில் இங்கிலாந்து தன்னை நடத்தியதைக்கருதி பிரான்சு அமெரிக்காவுக்கு உதவிக்கு வந்தது. அடுத்த வருஷத்தில் ஸ்பெயினும் சேர்ந்ததால் ஜிப்ரால்டர் முற்றுகை

போடப்பட்டது. ஐரோப்பாவிலுள்ள வடதேசங்கள் இங்கிலாந்துக்கு இருந்த சமுத்திரத்தில் செல்லும் அந்நிய நாட்டுக் கப்பல்களைப் பரிசோதிக்கும் உரிமையை மறுத்துக் காவல் நடுநிலைமையை ஏற்படுத்தினது. இது முடிவில் இங்கிலாந்திற்கும் ஐரோப்பாவிற்கும் யுத்தமாய் முடிந்தது. அமெரிக்காவில் காரன்வாலிஸ் பிரபு ராணுவத் தலைமை வகித்துத் தெற்கே சில ஜயங்களைப்பெற்று இங்கிலாந்திலிருந்து வரும் உதவியை யடைய யார்க் டவுனுக்கு (York town)ச் சென்றார். பிரஞ்சுக் கப்பல் படை இங்கிலிஷ் கப்பல்களை யார்க்குடவுனுக்குச் செல்லவொட்டாமல்தடுத்துவிட்டதால் காரன்வாலிஸ் அமெரிக்கர்களுக்குக் கீழ்ப் படிந்தான். இதனால் அநேகமாய்ச் சுயாதீனப் போர் முடிந்ததாக நாம் எண்ணலாம். 1789-ம் வருஷத்தில் இங்கிலீஷ் படைத்தலைவன் ராட்னி (Rhodney) பிரஞ்சுக் கப்பல்களை செயின்ஸ் (Battle of the Saints) என்கிற இடத்தில் நடுவில் தாக்கி எதிரிகளைப் பிடித்து ஜயம் பெறும் தந்திரத்தை அனுசரித்ததால் ஜமைக்காத் தீவு இங்கிலீஷ்க்காரர்களுக்குத் தப்பியது. ஜிப்ரால்டரும் வெகு வீரத்துடன் முற்றுகையை எதிரித்துத் தப்பியது. ஷெல்போரன் பிரபு 1783-ம் வருஷத்தில் வெர்ஸேல்ஸ் (Versailles) உடன்படிக்கையை ஏற்படுத்த அதின்படி அமெரிக்கர்களுடைய சுயாதீனத்தை இங்கிலாந்து ஒப்புக் கொண்டது. ஸ்பெயினுக்கு மைனார்க்காவும், பிளாரிடாவும் கொடுக்கப்பட்டன. இது முதல் இங்கிலாந்து குடியேற்ற நாடுகளை நன்கு நடத்த வேண்டுமென்கிற நீதியை அறிந்தது. அயர்லாந்தும் அமெரிக்காவைப் பார்த்து நடிக்க ஆரம்பித்தது.

**அமெரிக்கர்கள் ஜயம் அடைந்த காரணம்.**—இங்கிலாந்து முதலில் அமெரிக்காவில் நடந்த கலகத்தை நன்கு தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்தபோது போரை நடத்தத் தகுதி

யுள்ளவர்கள் இல்லை. இங்கிலீஷ் ஜனங்களுக்குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு 'விக்' கக்ஷிக்காரர்கள் சுயாதீனத்திற்குச் சம்மதித்தார்கள். ஆனுல், அரசன் பிடிவாதத்துடன் இருந்தான். சரியான சமயத்தில் பிரான்சு அமெரிக்கர்களுக்கு உதவி புரிந்தது. இவ்வுதவி இல்லாவிடில் அமெரிக்கர்களுக்குச் சுயாதீனம் கிடைப்பது அருதாகும். இங்கிலாந்துக்கு மூவாயிரம் மைல் தூரத்தில் உள்ள அமெரிக்காவுடன் போர் புரிவது வெகு கஷ்டமானதாக இருந்தது. அமெரிக்கர்களோ தங்களது தேசத்தில் இருந்து போர் நடத்தினதால் அவர்களுக்கு ஜயம் உண்டாவது சுலபமாகும். துர் அதிர்ஷ்டவசமாக இங்கிலீஷ் கப்பல் படையாவும் ஐரோப்பாவில் இருக்கவேண்டியிருந்ததால் அவை அமெரிக்காவுக்குச் செல்லக்கூடவில்லை.

அயர்லாந்து.—மூன்றுவது வில்லியம் நாள் முதல் ஐரிஷ் காதொலிக்குகளின் கஷ்டம் சொல்ல முடியாததாக இருந்தது. காதொலிக்குகள் டபிளின் பார்லிமெண்டில் மெம்பர்களாக உட்காரத் தகுதியற்றவர்கள் ஆனுர்கள். 1494-ம் வருஷத்திய பாயினிஸ் சட்டப்படி டப்ளின் பார்லிமெண்டு, இங்கிலீஷ் பார்லிமெண்டின் சம்மதமன்றிச் சட்டம் செய்யக்கூடாது. 1719-ம் வருஷத்தில் அயர்லாந்தைப்பற்றிச் சட்டம் செய்ய இங்கிலாந்திற்கு உரிமையுண்டு என்பது ஏற்பட்டுவிட்டது. பெரும்பான்மையோரான காதொலிக்குகளுக்குப் பிராடஸ்டெண்டுகள் கூடி விரோதமான சட்டங்களைச் செய்து வந்தார்கள். மத விஷயத்தில் பரிசோதனைச் சட்டத்தின்படி காதொலிக்குகள் உத்தியோகத்திற்குத் தகுதியற்றவர்களானுர்கள். வியாபார விஷயத்தில் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தால் அயர்லாந்து அந்நிய நாடுகளுடன் நேரில் வியாபாரம் செய்யக்கூடாததாகியது. நிலங்கள்

ஐரிஷ்க் காதொலிக்குகளைவிட்டு மாறி இங்கிலீஷ்க்காரர்களின் கைக்கு வந்தன. அவர்கள் சொந்தக்காரர்களாக விருந்ததுபோகக் குடியானவர்களாகி அதே நிலங்களைச் சாகுபடி செய்து தகாத குத்தகையைச் செலுத்தி வந்தார்கள். இப்படி ஐரிஷ்க்காரர்களின் கஷ்டம் எல்லா விதத்திலும் பரிதபிக்கக்கூடியதாயிருந்தது. அமெரிக்காவில் சுயாதீனப் போர் ஆரம்பித்தவுடன் இங்கிலீஷ் துரைத்தனத்தார் அயர்லாந்திலுள்ள துருப்புக்களை அமெரிக்காவிற்கு அனுப்பினதால் அயர்லாந்தைக் காக்க இங்கிலீஷ் படை ஒன்றுமில்லை. பிரான்சு அயர்லாந்தின்மேல் படையெடுக்குமோ என்று அஞ்சி அயர்லாந்திலுள்ள பிராடெஸ்டெண்டுகளுக்குத் தங்களது தேசத்தைக் காக்கச் சம்பளமில்லாத ராணுவப் படையை ஏற்படுத்த இங்கிலாந்து உத்தரவு கொடுத்தது. ஐரிஷ்க்காரர்கள், இங்கிலீஷ்க்காரர்கள் யார்க் டவுனில் தோல்வியுற்றதைக் கேள்விப்பட்டதும் தாங்களும் ஒரு காங்கிரஸ்கூடித் தங்களுடைய குறைகளை எடுத்து உரைத்தார்கள். 1782-ம் வருஷத்தில் ராக்கிங் ஹாம் பிரபு அயர்லாந்தும் அமெரிக்காவைப்போல் கை மாறிவிடுமே என்று பயந்து முக்கியக் குறையைத் தீர்த்து விட்டான். பாயினிங்ஸ் சட்டத்தைத் தள்ளி ஐரிஷ்ப் பார்லிமெண்டுக்குச் சட்டம் செய்யும் சுயாதீனத்தை அவன் அளித்தான். இப்படி ஏற்பட்டது கிரேட்டன் என்பவருடைய முயற்சியாதலால், இது முதல் சுயாதீனமடைந்த ஐரிஷ் பார்லிமெண்டிற்குக் ‘கிரேட்டன் பார்லிமெண்டு’ என்று பெயராகியது.

கார்டன் (Gordon) கலகம்.--இங்கிலாந்திலே ஜனங்கள் தனது இஷ்டம்போல நடத்தும் அரசனது துரைத்தனத்தில் அதிருப்தி அடைந்தார்கள். அரசனுடைய அதிகாரம் குறையவேண்டுமென்று பார்லிமெண்டு சபையில் தீர்மானம்

செய்யப்பட்டது. இப்படியிருக்கத் துரைத்தனத்தார் காதொலிக்குகளுக்கு விரோதமாயிருந்த சில சட்டங்களைத் தள்ளினது ப்ராடெஸ்டெண்டுகளுக்கு அதிருப்தியை உண்டாக்கியதால் கார்டன் கலகம் செய்தான். ஜார்ஜ் மன்னன் கலகத்தைத் தானே அடக்கினான். இதனால்ஜனங்களுடைய எண்ணம் என்னவென்பது நன்கு புலப்பட்டது.

நார்த் பிரபு மந்திரிப் பதவிக்கு வந்தபின் அநேக மாறுதல்கள் பின்தொடர்ந்தன. பொதுஜனசபை யென்பது டோரிக் கக்ஷிக்காரர்களும் அரசனுடைய சிநேகிதர்களும் கூடியதாய் இருந்தது. சீர்திருத்தம் செய்வது சாத்தியம் இல்லாவிடினும் பர்க் (Burke) என்பவன் வரி வசூல் செய்பவர்களும், துரைத்தனக் கண்டிராக்ட்டு எடுப்பவர்களும் பார்லிமெண்டு சபைக்கு மெம்பர்களாகத் தகுதியற்றவர்கள் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினான். அரசனும் பார்லிமெண்டில் தனக்கு விரோதமாக ஒரு கக்ஷி கிளம்புவதைக் கண்டு துரைத்தனத்தை நடத்த இளைய பிட்டைப் பிரதான மந்திரியாகச் செய்தான்.

## இளைய பிட்.

இவன் பெரிய பிட்டின் இரண்டாவது குமாரன். ஏற்கனவே ஷெல்போர்ன் மந்திரியாக இருந்தபோது பொக்கிஷத் தலைவனாயிருந்து இருபத்துநாலாவது வயதில் பிரதான மந்திரியானான். அந்நிய நாடுகளில் உள்ளவர்கள் ஒரு பெரிய இராஜ்ஜியம் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற ஒரு சிறு மாணாக்கனிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறதாகப் பரிகாசம் செய்து வந்தார்கள். அவன் தனது தகப்பனைப் போல யோக்கியனாகவும், தேச அபிமான உள்ளவனாகவும், அதன் க்ஷேமத்தையே பெரிதாகக் கருதபவனாகவும் இருந்து வந்தான். தகப்பன் போர் நடத்தும்

சாமார்த்திய முள்ளவனுக யிருந்தும் அரச னுடைய சினேகம் இல்லாதவனுக இருந்தான். பிள்ளேயோ அரசனுலும் ஜனங்களாலும் கொண்டாடப் பட்டான். அவன் முதலில் வியாபாரத்தை விருத்தி செய்யவும், சீர்திருத்தங்களேக் கொண்டு வரவும் முயற்சி செய்தான். விதி அவனே முடிவில் போரில் கவலேயைச் செலுத்தும்படி திருப்பியது. ராஜ்யக் கடன்களேக் குறைக்க ஒரு வழி தேடி அதன்படி கடன்கள் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைய ஏற்பாடு செய்தான். இறக்குமதி ஏற்றுமதி வரிகளேக் குறைத்து வியாபாரத்தை விருத்தி செய்தான். கனடா, இந்தியா, அயர்லாந்து முதலிய எல்லா நாடுகளும் அவனுடைய சீர்திருத்தத்தால் பயனே அடைந் தன. வியாபாரத்தைக் கைக்கொண்டு பிரான்சு, பிரஷியா முதலான தேசங்களுடன் உடன்படிக்கை செய்து கொண் டான். பார்லிமெண்டு சீர்திருத்தம் செய்ய முயன்ற போது பிரஞ்சுப் புரட்சி கிளம்பிற்று. 'ஆடிக் காற்றிலே கூரைக்கு வைக்கோல் போடலாகாது' என்கிற பழமொழியைப் பின் பற்றிச் சண்டையை நடத்த எல்லாப் பிரயத்தனங்களேயும் எடுத்துக்கொண்டான். இவைகளின் பயன் பிட்டின் வார்த் தையாலேயே தெரியவரும். டிரபால்கர் வெற்றிக்குப் பிறகு பிட் சொன்னதாவது :—"இங்கிலாந்து தன்னேக் காப்பாற் றிக் கொண்டு விட்டது. ஐரோப்பா இதைப் பர்த்துத் தன் னேக் காப்பாற்றிக் கொள்ளும்."

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| போஸ்டன் தேச்கச்சேரி | ... | 1773 |
| சுயாதீன அறிக்கை | ... | 1776 |
| ஸரடோகா சரணம் | .... | 1777 |

யார்க்டவுன் கீழ்ப்படிதல் ... 1781
பிட் இந்தியத் துரைத்தனச் சட்டம் ... 1784

## முக்கியச் செய்திகள்.

1. 'ஜூனியஸ்' கடிதங்கள்.—1768-ம் வருஷத்தில் சேதம் பிரபு தேக அசௌகரியத்தால் ராஜிநாமாக் கொடுத்து விட்டான். க்ரேப்டன் (Duke of Grafton) பிரதான மந்திரியாகி வேலைபார்க்கும் காலத்தில் 'மார்னிங் அட்வர்டைஸர்' என்கிற பத்திரிகையில் மந்திரிக்கூட்டத்தில் சேர்ந்தவர்கள் யாவரையும் குற்றம் சாட்டி 'ஜூனியஸ்' என்று கையொப்பமிட்டு எழுதப்பட்ட கடிதங்கள் பிரசுரம் செய்யப்பட்டன. எழுதினவர் யாரென்று புலப்படவில்லை. தேசபாஷையை நன்கு கற்றவனும் மந்திரிகளின் குணங்களை நன்கு அறிந்தவனும் தான் எழுதியிருக்க வேண்டும். இந்தியாவில் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு விரோதியாயிருந்த பிரான்சிஸ்க் என்பவனாயிருக்கலாம்.

2. இந்தியா.—கிழக்கு இந்தியக் கம்பெனியிலிருந்த உத்தியோகஸ்தர்களின் வீணான ஆசையால் கம்பெனியின் பேர் கெட்டு நார்த் பிரபு ரெகுலேட்டிங் ஆக்டைப் பார்லிமெண்டில் செய்து வாரன்ஹேஸ்டிங்ஸையும் முதல் கவர்னர் ஜெனரலாக நியமித்தான். மைசூர் யுத்தங்களால் செலவு அதிகரித்தது. ஹேஸ்டிங்ஸும் தகாதவழிகளைத் தேடினபடியால் பார்லிமெண்டு சபையில் பர்க், ஷெரிடன் முதலானவர்கள் அவனைக் குற்றஞ்சாட்டினார்கள். முடிவில் அவன் விடுவிக்கப்பட ரெகுலேடிங் ஆக்டிலுள்ள குறைகளை நீக்க இளைய பிட் ஒரு சட்டம் செய்தான். இது தான் 1858-ம் வருஷம் வரையில் நடைப்பெற்று வந்தது. இப்படிக் கம்பெனி பார்லிமெண்டின் ஆட்சியில் வந்தது.

3. கல்வி.--இக்காலத்தில் இருந்த நூலாசிரியர்களுள் இருவருடைய பெயர்களை நாம் மறப்பதற்கில்லை. ஜான்ஸன் 1783-ம் வருஷத்தில் இறந்தான். கவிராஜன் என்கிற பட்டம் இவனுக்கே தகுதியாகும். இவனுடைய நூல்களாகிய Vanity of Human Wishes; Lives of the Poets என்பன எவரும் வாசிக்கத் தகுந்தவைகளாகும். அவனுடைய வறுமை நிலைமையைச் சொல்வது கஷ்டமாகும். சரித்திரங்களை எழுதினவர்கள் எவரும் (Gibbon) கிப்பனுக்குச் சம்மதியாகமாட்டார். இவனுடைய நூலான Decline and fall of the Roman Empire என்பதை வாசிப்பவர்களுக்குச் சந்தோஷம் ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் உண்டாக முடியாது.

4. அமெரிக்காவில் ஐக்கிய நாடுகள்.—முதலில் பதிமூன்று நாடுகளே இருந்தன. இதுபற்றித் தான் ஐக்கிய நாடுகளின் கொடி பதிமூன்று நக்ஷத்திரங்களும், பதிமூன்று கோடுகளும் உள்ளதாயிருந்தது. இப்போது நாற்பத்தெட்டு ஜில்லாக்கள் இருக்கின்றன.

5. அரசாட்சித் தத்துவ மசோதா 1788.—மூன்ருவது ஜார்ஜுக்குத் தேக அசௌகரியம் ஏற்பட்ட காலத்தில் ராஜ்ஜியத்தை நடத்த இளைய பிட் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தான். இதன்படி பார்லிமெண்டுக்குத் தான் ராஜ்ஜியத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்ய உரிமை யுண்டு என்ருன்.

6. அமெரிக்கர்களுக்குச் சுயாதீனப்போரில் தளர்ச்சி உண்டான காலத்தில் அவர்களது தளகர்த்தனை ஆர்ளுல்ட் ஒரு கோட்டையை இங்கிலீஷ்காரர்கள்வசம் விடுவதாக ரகசியஏற்பாடு செய்தான். இது தெரியவந்ததும் அவன் தப்பி ஓடிவிட்டான். ஆனல், இங்கிலீஷ் உத்தியோ

கஸ்தனுன ஆண்டரி (Andre) அமெரிக்கர்கள் கையில அகப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்.

## கேள்விகள்.

1. விக் கக்ஷியின் வீழ்ச்சியை மூன்ருவது ஜார்ஜ் எப்படித் தேடி வந்தான்?

2. பாரிஸ் உடன்படிக்கையால் (1763) இங்கிலாந்திற்கு வந்த பயன்களும், நஷ்டமும் யாவை?

3. வில்கிஸ் வழக்கினுல் என்ன ஏற்பட்டது?

4. சுயாதீனப் போரின் காரணத்தைச் சுருக்கமாகச் சொல்லுக.

5. அமெரிக்கர்களுக்கு ஐயம் வரக் காரணமானசெய்திகளைச் சொல்லுக.

---

## பதினென்ருவததிகாரம்.

## பிரஞ்சுப் புரட்சி 1973-1815.

காரணங்கள்.—பதினெட்டாவது நூற்ருண்டிலே பிரான்சு தேசத்தில் ஜனங்கள் சகிக்க முடியாத கஷ்டங்களை அனுபவித்து நிவிர்த்திக்கு மார்க்கமில்லாததால் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். பிரபுக்கள் என்றும், ஏழைகள் என்றும் ஜனங்கள் பிரிக்கப்பட்டமையால் சாதாரண ஜனங்கள் ஒரு விதத்திலும் பிரபுக்களின் அந்தஸ்தை அடைய முடியாமல் இருந்தார்கள். பிரபுக்கள் வரிகளிலிருந்து விலக்கப்பட்டிருந்ததாலும், ஏழைகள் செலுத்தும் தாங்க முடியாது வரிப்பணத்தால் சவுகரியங்களை மாத்திரம் அடைந்து வந்தார்கள். பெரிய உத்தியோகங்கள் பிரபுக்களுக்கே உரிமையாயிருந்தன. மத விஷயத்திலும் இதே மாதிரியான வித்தியாசங்கள் காட்டப்பட்டன. பொது

ஜன சபை கூடி வெகுகாலம் ஆய்விட்டது. வியாபாரிகளுக்குத் துரைத்தனத்தில் எவ்வித உரிமையும் இல்லை. நூலாசிரியர்கள், ஜனங்கள் எல்லோரும் பிறப்பினால் சமமானவர்களே என்று எடுத்துக் காண்பித்ததால் ஜனங்களுக்கு விஷயம் தெரியவந்தது. அதுமுதல் அவர்களிடத்தில் சுயாதீனம், சகோதரபாவம், சமத்வம் என்கிற எண்ணங்கள் குடி கொண்டன. அரசனுடைய கொடுமையான ஆளுகையாலும், பொக்கிஷத்தில் பணமில்லாததாலும் அமெரிக்காவில் நடந்த சுயாதீனப் போருக்குச் சென்றிருந்த ராணுவ வீரர்கள் சுயாதீன எண்ணத்துடன் திரும்பி வந்ததாலும் புரட்சியின் தோற்றம் நெருங்கியது. அரசனும் பணத் தேவையால் வெகு நாளாய் அழைக்காத பொது ஜனசங்கத்தைக் கூட்டலானான். ஜனங்களுடைய வேண்டுகோளின்படி சீர்திருத்தங்களைக் கொண்டுவரச் சம்மதித்துப் பிறகு மறுத்ததால் ஜனங்கள் கலகம் செய்ய ஆரம்பித்து ராஜீயச் சிறையை உடைத்து அங்குள்ள கைதிகளை விடுவித்தார்கள். இதுதான் புரட்சிக்கு ஆரம்பமாகும். உடனே ஜனங்களின் சபை கூடி பிரான்சு குடியரசு நாடு என்று கூறியதுடன், அரசனையும் ராணியையும் கொலைத் தண்டனைக்கும் உள்ளாக்கியது. பின்பு துரைத்தனம் ஜாகோபின் என்ற பேர் வாய்ந்த கலகக்காரர்களிடம் வந்தது. இவர்கள் மன்னனைக் கொன்றதுடன் குடியரசு விரோதிகளையும் கில்லடின் என்ற வைத்யரால் 'சீக்கிரம் சாவை கொடுக்கக் கூடியது' என்று சிப்பார்சு செய்யப்பட்டயந்திரத்தால் சீக்கிர மரணத்திற்கு உள்ளாக்கினார்கள். இப்படிச் சில காலம் நடந்த அநீதிகளைக் கொண்டு அக்காலத்தைப் 'பயங்கர ஆட்சி' என்றுக் கூப்பிட்டார்கள். உடன்படிக்கைக்கு விரோதமாகச் செல்ட் (Scheldt) நதியை வியாபாரத்திற்

குத் திறந்து விட்டதும், அரசனையும் பிரபுக்களையும் கொன்றதும், அந்நிய நாட்டு ஜனங்களும் இம்மாதிரியே தங்களது நாட்டிலே கலகம் செய்யும் பக்ஷத்தில் பிரான்சு அந்த ஜனங்களுக்கு உதவிபுரியத் தயாராயிருக்குமென்று அறிக்கை செய்ததும் இங்கிலீஷ்க்காரர்களுக்குப் புரட்சியின் உண்மையை நன்கு புலப்படுத்தின.

**இங்கிலாந்தும் பிரஞ்சு புரட்சியும்.**—1789-ம் வருஷம் முதல் பிரான்சில் நடந்துவந்த புரட்சியில் இங்கிலீஷ் ஜனங்கள் அனுதாபப்பட்டு 'இங்கிலீஷ்ப் புரட்சி எப்படி இங்கிலீஷ் ஜனங்களுக்குச் சுயேச்சையை அளித்ததோ அப்படியே பிரஞ்சுப்புரட்சி பிரஞ்சு ஜனங்களுக்குச் சுயாதீனத்தைக் கொடுக்கும்' என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் கலகக்காரர்கள் செய்த கொடுமையான காரியங்களிலிருந்து பின்பு இங்கிலீஷ் ஜனங்களுக்கு எண்ணம் முற்றிலும் மாறியது. பர்க்கும் (Burke) ஏற்கனவே பிரான்சில் வரக்கூடிய கொடுமைகளைப்பற்றி எச்சரிக்கை செய்தான். இங்கிலீஷ்ப்புரட்சி ஜனங்களின் குறைகளை நீக்கிச் சரியான துரைத்தனத்தை ஏற்படுத்தத் தோன்றியது. ஆனால் பிரஞ்சுப்புரட்சி படுகொலையில் முடிந்து ஜனங்களுக்குத் திகிலை உண்டாகிற்று. இங்கிலாந்தின் பிரதானமந்திரியான இளைய பிட் பிரான்சில் நடைபெறும் எண்ணங்கள் இங்கிலாந்திலும் பரவிப் படுகொலையில் முடியுமோ என்று பயந்து அதைத் தடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். சங்கம் கூடுவதையும், பேசுவதையும் ஓர் அடக்கு முறையில் கொண்டு வந்து அபாயம் விளைப்பவர்களை விசாரணையில்லாமலேயே சிறையில் அடைக்க நிச்சயத்ததுடன் பிரான்சுடன் போர் புரிவது அவசியமாகும் என்றும் தீர்மானித்தான். புரட்சியைப் பற்றிய எண்ணங்கள் இங்கிலாந்திலும் மற்ற ஐரோப்பிய தேசங்களிலும் பரவாமலிருப்ப

தற்கும் உடன்படிக்கைக்கு விரோதமாக நடந்த தற்காகப் பிரான்ஸைக் கண்டிப்பதற்கும் இங்கிலாந்து பிரான்சுடன் போர் புரிய ஆரம்பித்தது. பிரதான மந்திரி பிட் மற்றத் தேசங்களுடைய சேர்க்கையினுல் தான் போர் புரிய முடியுமென்று கருதி அவைகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டான். 1793-ம் வருஷத்தில் முதலாவது ஒற்றுமை உடன்பாடு ஏற்பட்டது. இங்கிலாந்து முதலில் பிரான்ஸையும், அதின் சேர்க்கைச் தேசங்களையும் சமுத்திரத்தில் அடக்கியும், அதற்கு விரோதமாக போர் புரியும் தேசங்களுக்குச் சண்டைச் சாமான்களை அனுப்பியும், பணஉதவியைப் புரிந்தும், 1808-ம் வருஷத்திற்கு பின்பு ஐரோப்பாவிலுள்ள நேசதேசங்களுக்குத் தகுந்த போர் உதவிகளை அளித்தும் இப்பெரும் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. அதிர்ஷ்ட வசத்தாலும், நெல்சன் நடந்துகொண்ட சாமர்த்தியத்தாலும் சமுத்திர வழியாகப் பகைவர் இங்கிலாந்தின் மேல் படையெடுக்காமல் தடுத்துக் கொள்ளவும், பிரான்சின் குடியேற்ற நாடுகளைப் பிடித்துக் கொள்ளவும், இங்கிலாந்தின் வியாபாரத்தையும் குடியேற்ற நாடுகளையும் காப்பாற்றவும் சாத்தியமாயின.

விஷயங்கள்.—1797-ம் வருஷம் இங்கிலாந்திற்குக் கஷ்டமானகாலம். அதன் சிநேகிதர்கள் எல்லோரும் அதனைக் கைவிட்டார்கள். தனிமையாயிருப்பதுடன் மாலுமிகளும் கலகம் செய்யத் தொடங்கினுர்கள். பாங்கியும் பணம் கொடுப்பதை நிறுத்தி விட்டது. இந்த சமயத்திலே கடவுள் கிருபையால் செயின்டு வின்செண்டு (St. Vincent), காம்பர்டௌன் (Camperdown) என்கிற இடங்களுக்குச் சமீபத்தில் இங்கிலாந்திற்கு வெற்றிகள் ஏற்பட்டன. இப்போது பிரான்சில் நப்போலியன் என்ற போர் வீரன் கிளம்பி ஆஸ்திரியாவுடன் போர் புரிந்து


கீர்த்தி பெற்றதனால் இங்கிலீஷ்க்காரர்களை இந்தியாவை விட்டுத் துரத்த எண்ணங் கொண்டான். ஆனால், இந்த ஏற்பாடும் நெல்சனின் சாமர்த்தியத்தால் பூர்த்தி யடையவில்லை. பிரான்சின் கப்பற்படை நைல் நதியின் முகத்துவாரத்தில் 1798-ம் வருஷத்தில் தோற்கடிக்கப்பட்டதால் நப்போலியனது கீழ்த்தேசப் படையெடுப்பு நின்று விட்டது. நப்போலியனும் ஐரோப் பாவிற்குத் திரும்பினான். இது முதல் ருஷியா, துருக்கி, ஆஸ்திரியா என்ற மூன்று தேசங்களும் இங்கிலாந்துடன் இரண்டாவது உடன்படிக்கையைச் செய்து கொண்டன. நப்போலியன் ஆஸ்திரியாவை மாரங்கோ, ஹோஹன்லின் டன் என்கிற இடங்களில் முறியடித்தான். இங்கிலாந்து பாராட்டும் சமுத்திரத்தில் அந்நிய தேசக் கப்பல்களைப் பரிசோதிக்கும் உரிமையை மறுக்க ஐரோப்பாவின் வடதேசங்களை ஒன்று கூட்டினான். இந்தக் காப்பு நடுநிலை யைப் பிரிக்க நெல்சன் மத்தியதரைக் கடலை விட்டுப் பால்டிக் சமுத்திரத்திற்குச் சென்றான். திரும்புங்கால் மால்டா தீவைக் கைப்பற்றினான். 1801-ம் வருஷத்தில் டேனிஷ்க் கப்பல்களைப் பால்டிக் சண்டையில் தோற் கடித்துக் காப்புநிலையைக் கலைத்துவிட்டான். நெல்சன், மேலதிகாரியின் உத்தரவிற்கு விரோதமாக நடந்து இவ் வெற்றியை அடைந்தான். அயர்லாந்து விஷயமாய்ப் பிட் ராஜீநாமாக் கொடுத்தான். 1802-ம் வருஷத்தில் அமீன்ஸ் சமாதானம் ஏற்பட்டு இருதிறத்தாரும் பூர்வ நிலைக்குத் திரும்பினார்கள்.

**ஐரிஷ் சேர்க்கைச் சட்டம் 1801.**—க்ரேட்டன் பார்லிமெண்டு 1782-ம் வருஷம் முதல் 1800-ம் வருஷம் வரையில் நடைபெற்று வந்த போதிலும் காதொலிக்களுக்கு அதில் இடமில்லாமலிருந்ததால் அது பொது ஜனங்களுக்கு

அதிருப்தியை உண்டாக்கியது. ரோமன் காதொலிக்கு களின் குறைகளை நீக்கவும் பார்லிமெண்டைச் சீர்திருத்தம் செய்யவும் ஜனங்கள் முறையிட்டு வந்தார்கள். இப்போது அயர்லாந்தில் ஐரிஷ் ஐக்கிய சங்கம் என்ற ஒரு புதுக்கூட்டம் ஏற்பட்டு அதற்குத் தலைவனான உல்ப்டோன் (Wolfetone) அயர்லாந்திற்குச் சுயாதீனம் வேண்டுமென்றான். பிரான்சும் அவர்களுக்கு உதவி புரிந்தது. வறுமையால் குடியானவர்களும் இக்கலகத்தில் சேர்ந்தார்கள். 1798-ம் வருஷத்தில் கலகத்தை வைன்கார் ஹில் என்கிற இடத்தில் இங்கிலீஷ் துரைத்தனத்தார் அடக்கி விட்டனர். இளைய பிட். ஐரிஷ்ப் பார்லிமெண்டை இங்கிலீஷ்ப் பார்லிமெண்டுடன் சேர்க்க நிச்சயித்தான்.

சேர்க்கைச் சட்டம் 1801.—அயர்லாந்து இங்கிலாந்தின் பொது ஜன சபைக்கு 100 மெம்பர்களையும், பிரபுக்கள் சபைக்கு 32 மெம்பர்களையும் அனுப்பலா மென்பது ஏற்பட்டது. இங்கிலீஷ் மதஸ்தாபனத்தை அயர்லாந்து ஆதரிக்கவேண்டும். வியாபார விஷயத்தில் இரு தேசங்களும் சமமான உரிமைகளை அடைந்தன. பிட் சொன்னபடி அரசன் ரோமன் காதொலிக்குகளின் குறைகளைத் தீர்க்கச் சம்மதிக்காதலால் அவன் ராஜநாமாக் கொடுத்துவிட்டான்.

நப்போலியன் போர்.—நப்போலியன் சமாதானமாயிருக்க எண்ணங் கொள்ள வில்லை. அவன் இங்கிலீஷ்ப் பிரயாணிகளைச் சிறையில் அடைத்தும் இட்டெலியின் மேல் படையெடுத்தும் உடன் படிக்கையை மீறி நடந்தான். இங்கிலாந்தும் மால்டா தீவைத் திருப்பிக் கொடுக்கமாட்டேனென்றது. இம்முறை நப்போலியன் ஐரோப்பாவின் சக்கிரவர்த்தியென்று பேர் தரித்து இங்கிலாந்தின் மேல் படையெடுக்க நிச்சயித்தான். இங்கி




பிரஞ்சுப் புரட்சிப்போர்

லீஷ் வாய்க்காலுக்கு ஒரு நாள் எஜமானனாயிருக்கும் பக்ஷத்தில் இங்கிலாந்து தனது வசமாய் விடுமென்றும் அவன் சொல்லி வந்தான். தான் சேர்த்திருக்கும் பிரஞ்சுராணுவத்தை நெல்சன் இல்லாத காலத்தில் இங்கிலாந்திற்கு கொண்டு போகக் கருதித் தன்னுடைய கப்பல் படைத்தலைவனை அமெரிக்காவிற்குச் செல்வது போலப் பாவனை செய்யச் சொன்னான். ஆனால், இந்தத் தந்திரத்தைத் தெரிந்து கொண்ட நெல்சன் அமெரிக்காவிலிருந்து விரைவில் திரும்பி 1805-ம் வருஷத்தில் டிராபால்கருக்கு (Trafalgar) சமீபத்தில் எதிரிகளைத் தோற்கடித்தான். அவன் வெற்றி


பெறும் சமயத்தில் இறந்தபோதிலும், "இங்கிலாந்திலுள்ளவர்கள் இங்குள்ள ஒவ்வொருவரும் தங்களது கடமையைச் செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறார்கள்" என்று அவன் சொன்ன வார்த்தை ஒரு போதும் மறக்கத் தகுந்த தன்று. இது முதல் பிரான்சு படையெடுக்குமோ என்கிற பயம் இங்கிலாந்திற்கு நீங்கியது. இப்பால், நப்போலியன் இங்கிலாந்தின் வியாபாரத்தைக் கெடுக்கத் தீர்மானித்தான். அவன் ஆஸ்திரியாவை ஆஸ்திரிலிட்ச்



நெல்லஸண்.

(Austerlitz) என்கிற இடத்தில் தோற்கடித்தான் என்கிற விஷயத்தைக் கேட்டதும் இளைய பிட் துயரத்தினால் உயிர் துறந்தான். நப்போலியன் பிரஷ்ஷியர்களை முறியடித்து அவர்களுடைய பிரதான பட்டினத்தில் நுழைந்து 1806-ம் வருஷத்தில் 'பர்லின் தீர்மானத்தை' வெளியிட்டான்; பிரான்சைச் சேர்ந்தவர்கள் இங்கிலாந்துடன் வியாபாரம் செய்யக் கூடாதென்றும், இங்கிலீஷ்க் கப்பல்களைச் சமுத்திரத்தில் கண்டால் மூழ்கடிக்க வேண்டுமென்றும் தெரிவித்தான். 1807-ம் வருஷத்தில் இங்கிலாந்தும் 'கௌன்

சில் உத்தரவை' பிறப்பித்தது. பிரான்சின் எண்ணம்,
இங்கிலாந்தின் வியாபாரத்தைக் கெடுக்க முயலுவதா
யிருந்த போதிலும் அது தன்னுடைய சிநேகிதர்களுக்கு
வேண்டிய உணவுத் தானியங்களையும், சாமான்களையும்
கொடுத்துதவச் சக்தி யற்றதாயிருந்தது. மேலும்,




தீபகல்பப் போர்.

இங்கிலீஷ்க் கப்பல்களை மூழ்கடிக்கப் போதியக் கப்பல
படையும் பிரான்சுக்கு இல்லை. கௌன்சில் உத்தர
வுப்படி நடு நிலைமைத் தேசக்காரர்கள் பிரான்சுடன் வியா
பாரம் செய்யக் கூடாதென்றும், பிரஞ்சுக் கப்பல்களைச்
சமுத்திரத்தில் மூழ்கடிக்க வேண்டுமென்றும் இங்கிலாந்து

அறிக்கை யிட்டது. ஐரோப்பாவிற்கு வேண்டிய சாமான்களைச் சேகரிக்க இங்கிலாந்திற்குச் சக்தி ஏற்பட்டதுடன் இங்கிலீஷ்க் கப்பல் படையின் திறமையால் வெளியிடங்களுக்குச் சாமான்களைக் கொண்டு போகவும் வழி ஏற்பட்டதால் 'கௌன்சில் உத்தரவு' தான் நிறைவேறக் கூடியதாயிருந்தது. நப்போலியன் தனது பர்லின் தீர்மானத்தை ருஷியாவில் நிறைவேற்றியபின், ஸ்பெயினிலும் வற்புறுத்தினன். ஜனங்களுக்கு விரோதமாக ஸ்பெயினின் அரசனைத் தள்ளித் தனது சகோதரனை நப்போலியன் பட்டத்தில் வைத்ததால் ஸ்பெயினின் ஜனங்கள் இங்கிலாந்தின் உதவியை வேண்டிக் கொண்டார்கள். அப்படியே இங்கிலாந்தின் பொருட்டு வெல்லஸ்லி (Wellesley) தீபகல்பத்திற்குச் சென்று போர் புரிந்தான்.

**தீபகல்பச் சண்டை 1808 - 14.**— வெல்லஸ்லி ஸ்பெயினுக்குச் சென்று சில வெற்றிகளை அடைந்தான். பின்பு இங்கிலாந்திற்குத் திரும்பும்படி நேரிட்டதால் இவன் அங்கு இல்லாதகாலத்தில் மோர் (Moore) கொருன்ஞ விற்குச் சென்று 1809 - ம் வருஷத்தில் எதிரிகளை முறியடித்தான். ஆனல், இவன் சண்டையில் உயிர் துறந்தான். மறுபடியும் வெல்லஸ்லி திரும்பி ஸ்பெனியில் இங்கிலீஷ்காரர்கள் தங்க யிருக்குமிடமாக ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு தால்விரா (Talvera) என்கிற இடத்தில் எதிரிகளை முற்றிலும் தோற்கடித்தான். இது முதல் இவனது கீர்த்தி மேலோங்கியது. மாரிக்காலத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள லிஸ்பன் நகரைச் சுற்றி மூன்று அரண்களைக் கட்டினன். மாட்ரிட் வரையிலும் சென்று பிரஞ்சு சைனியத்தின் வலிமையைக் கண்டு லிஸ்பனுக்குத் திரும்பினன். இவன் எண்ணியபடி பிரஞ்சுக்காரர்கள் பின்வாங்க ஆரம்பித்தார்கள். ஏற்கெனவே நப்போலியனும் பிரான்சுக்குத் திரும்பிப் போர் புரிந்த ஆஸ்தி

ரியாவுடன் சமாதானம் செய்து கொண்டான். ருஷியாவின் புதுச் சக்கிரவர்த்தி உடன்படிக்கையை மறுத்ததால் அதன் மேல் படையெடுக்கத் தயார் செய்தான். இதற்குத் தகுந்த துருப்புக்களைத் தீபகல்பத்திலிருந்து திருப்பி அழைத்தான். வெல்லஸ்லி இந்த சமயத்தில் எல்லைக் கோட்டைகளைப் பிடித்துக்கொண்டு பிரஞ்சுத் துருப்புக்களில் நாற்பது ஆயிரம் பேர்களை நாற்பது நிமிஷத்தில் செலமன்காவில் (Salamanca) கைதியாக்கினன். 1813-ம் வருஷத்தில் விட்டோரியாவிலும் அடுத்த வருஷத்தில் டுலூசிலும் (Toulouse) தோல்வி அடைந்ததால் பிரஞ்சுத் துருப்புக்கள் தீபகல்பத்தைவிட்டு நீங்கின.

ருஷியப்படை யெடுப்பு 1812-13.—நப்போலியன் கடுமையான மாரிக் காலத்தில் படையெடுத்தது ஒரு பெரிய தப்பிதமாகும். மாஸ்காவிலிருந்து துருப்புக்களைத் திரும்பும்படி செய்ததில் அநேக முதன்மையான போர்வீரர்கள் இறந்தார்கள். இதற்குள் அநேக தேச ஜனங்களுக்கு நப்போலியனின் உள் எண்ணம் தெரிந்துவிட அவர்கள் 1813-ம் வருஷத்தில் அவனை எதிர்த்துத் தோற்கடித்தார்கள். அக்காரணம் பற்றி இதற்கு 'ஜனங்களின் சண்டை' என்ற பேர் ஏற்பட்டது. நப்போலியனும் எல்பாவிற்குச் சென்றான். சமாதான ஏற்பாடு ஆரம்பித்தது. நப்போலியனும் எல்பாவிலிருந்து தப்பித்துக்கொண்டு பிரான்சிற்குத் திரும்பினன்.

நூறு நாள் போர் 1815.—நப்போலியன் தனது பழைய துருப்புக்களைச் சேர்த்துக்கொண்டு பெல்ஜியத்தின் மீது படையெடுத்தான். இவன் எதிரிகளைத் தனித்தனியாய்த் தொலைப்பதற்காகப் பிரஞ்சுத் துருப்புக்களைப் பிரித்து அனுப்பினன். நப்போலியன் பிரஷ்ஷியர்களைத் தான் லிக்னி (Ligny) என்ற இடத்தில் முறியடித்த போதி



வெல்லிங்டன்.

லும், வெல்லிங்டன் பிரபு தெற்கே வருவதைத் தடுக்க முடியவில்லை. வாட்டர்லூவில் நடந்த சண்டையில் நப்போலியன் தனது பேர் பெற்ற 'பழைய காவலர்களை'க் கொண்டு போர்புரிந்த போதிலும், இங்கிலீஷ்க்காரர்களை எதிர்க்க முடியவில்லை. வெல்லிங்டனும் பர்ஷியர்களின் தளகர்த்தன் கொடுத்த சமய உதவியால் வெற்றியை அடைந்து நப்போலியனையும் செண்டு ஹெலீனுத் தீவிற்கு அனுப்பினுன். இப்படியாக ஐரோப்பிய ஜனங்களின் சுயாதீனத்தைப் பறிக்கச் செய்த நப்போலியனது ஏற்பாடுகளால் உண்டான திகில் இங்கிலீஷ்க்காரர்கள் ஜனங்களுக்கு அமைதி உண்டாக்கியது. 1815-ம் வருஷத்திய பாரிஸ் சமாதானத்தின்படி பிரான்சு பழைய அரச குடும்பத்திற்கு உட்பட்டது. இங்கிலாந்திற்கு லங்கை, நன்னம்

பிக்கை முனை, ஹெலிகோலேண்டு, மால்டா, மோரிஷஸ் என்ற இடங்களும் கிடைத்தன. நப்போலியனது வீழ்ச்சிக்கு அநேக காரணங்கள் உள. நப்போலியன் "இங்கிலீஷ்க்காரர்களின் தரைப்படை சிறப்பாக மதிக்கத் தகுந்தது அன்று; கப்பல் படையைக் கொண்டு நிலையான மேலதிகாரத்தை இங்கிலாந்து பெற முடியாது" என்று எண்ணிப் ·பிரஞ்சுக்கப்பல் படையை விருத்தி செய்யாமலிருந்தது. ஆனால், இதற்கு மாறாக வெல்லிங்டன் பிரபுவின் கீழிருந்து போர் புரிந்த இங்கிலீஷ் துருப்புக்களின் வலிமையும், இங்கிலீஷ்க் கப்பல் படை நப்போலியனுடைய எண்ணங்களை நிறைவேற்ற முடியாமல் செய்ததும் எல்லோருக்கும் நன்கு தெரிந்தனவே. நப்போலியனுடைய பர்லின் தீர்மானம் ஐரோப்பிய தேசங்களிலுள்ளவர்களுக்குக் கோபத்தை மூட்டிற்று. ருஷியப் படையெடுப்பு கடுமையான மாரிக்காலத்தில் நடந்ததால் நப்போலியனுடைய வலிமையுள்ள போர்வீரர்கள் இறந்தார்கள். தீபகல்பத்தில் போர் புரிந்து கொண்டிருந்த இப்போர் வீரர்கள் ருஷியாவின்மேல் படையெடுப்பதற்கு வந்ததால் வெல்லிங்டன் பிரபுவின் வேலை சுலபமாய் முடிவு பெற்றது. முடிவில் ஐரோப்பாவிலுள்ளவர்கள் நப்போலியனது உள் எண்ணம் தங்களுடைய சுயேச்சையைப் பிடுங்கவேண்டும் என்பதாகும் என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

சண்டைக்குப் பிறகு இருந்த நிலைமை.—வாடர்லூச் சண்டைக்குப் பிறகு ஐரோப்பாவில் பெரிய போர்கள் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் தங்கள் தங்களது அரசர்களைத் தங்களுடைய சம்மதத்தின்மேல் ஆக்ஷி செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இப்படி முப்பது வருஷகாலம் ஒவ்வொரு தேசத்திலும் உள்நாட்டுப் போர் நடந்து வந்தது. இங்கி

லாந்து ஒன்றில் மட்டில் இப்படிப்பட்ட கலகம் நடக்க வில்லை. ஆனால் இங்கேயும் ஜனங்கள் பார்லிமெண்டைச் சீர்த்திருத்த வேண்டுமென்று சொல்லி வந்தார்கள். ஐரோப் பாவில் ருஷியா, ஆஷ்திரியா, பிரஷியா முதலான தேசங் களிலுள்ள அரசர்கள் ஜனங்களின் கலகத்தை அடக்கு வதில் ஒருவருக்கொருவர் உதவி புரியுமாறு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இதற்குப் 'பரிசுத்தச் சேர்க்கை' (Holy Alliance) என்பது பெயர். இங்கிலாந்தின் மந்திரிகள் இதில் கலப்பதில்லை என்கிற தந்திரத்தைக் கொண்டாடி வந்தார்கள். பெரிய போரினால் ஏற்பட்ட கஷ்டம் இங்கிலாந்தில் அதிகம். அநேகர்கள் உயிர் துறந் தார்கள். ராஜீயக்கடனும் அதிகரித்ததால் வரியும் மேலோங் கியது. தொழிற் புரட்சியால் கைத்தொழில் வேலைக் காரர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். போர் நடந்த போது யந்திர வேலைக்காரர்களுக்கு அதிகமான வியாபாரம் நடந்து வந்தது. மற்றத் தேசத்தவர்களுக்கு வேண்டிய சாமான்களும், உணவுத் தானியங்களும் இங்கிலாந்து ஒன்றிலிருந்தே சென்று வந்ததால் இங்கிலீஷ் வியாபாரி களுக்கு அதிக விலையால் லாபம் கிடைத்து வந்தது. நான்கு பக்கங்களிலும் சமுத்திரத்தால் சூழப்பட்டதால் இங்கி லாந்தின் மேல் நப்போலியன் படையெடுப்பானோ என்கிற பயமுமில்லாதிருந்தது. போர் முடிந்தவுடன் அந்த அந்தத் தேசங்களிலும் தொழிற்சாலைகள் ஏற்பட்டு வியா பாரம் நடந்து வந்ததால் இங்கிலீஷ் சாமான்களுக்கும் உணவுத் தானியங்களுக்கும் தேவையில்லாதிருந்த தால் தொழிற்சாலைகளுக்கு வேலையில்லை. நிலக்காரர் களுக்கும், வியாபாரிகளுக்கும் முன்னேகிடைத்த லாபம் குறைந்ததுடன் மலிவான உணவுத் தானியங்களும் சாமான்களும் அயல் தேசங்களிலிருந்து இங்கிலாந்திற்கு

வர ஆரம்பித்தன. பார்லிமெண்டு சபையில் அக்காலத்தில் நிலச் சொந்தக்காரர்களுக்கு அதிகாரம் இருந்தமையால் 1815-ம் வருஷத்தில் தானியச் சட்டத்தைப் பிறப்பித்தார்கள். இதன்படி பஞ்சகாலத்திலே விற்றபடி கோதுமையின் விலை வரும் வரையில் அந்நிய தேசத்துக் கோதுமை இங்கிலாந்தில் இறங்கக்கூடாது என்பது ஏற்பட்டது. இப்படி நிலக்காரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் அனுகூலம் ஏற்பட்டது. ஏழை ஜனங்களின் நிலைமை பரிதாபப் படக்கூடியதாயிருந்தது. வேலைக்குக் கூப்பிடுபவர்கள் அரிதாகியதுடன் சம்பளமும் குறைவாகியது. தானியச் சட்டப்படி உணவுத்தானியங்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்கும்படி நேர்ந்தது. ராணுவத்திலிருந்தவர்களும் போர்முடிந்ததனால் வேலையில்லாமல் திண்டாடி நின்றார்கள். கைத்தொழில்காரர்கள் யந்திரம் தான் தங்களுடைய வறுமைக்குக் காரணமானது என்று எண்ணி அதை உடைக்க ஆரம்பித்தார்கள். மற்றவர்களோ பார்லிமெண்டுச் சீர்திருத்தத்திற்காகச் சங்கம் கூடினார்கள். பீடர்லூவில் வேலைக்காரர்கள் கூட்டின மகாநாட்டைத் துரைத்தனத்தார் கலகம் ஏற்படுமோ என்று பயந்து கலைத்துவிட்டனர். பேசுவதற்கும், சங்கம் கூடுவதற்கும் தடைசெய்யுமாறு ஆறு அடக்குமுறைச் சட்டங்களை ஏற்படுத்தினார்கள். நிலைமை இப்படியிருக்க மன்னனும் (மூன்றாவது ஜார்ஜ்) வானுலகத்தை அடைந்தான்.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| நைல் நதி வெற்றி | ... | 1798 |
| அயர்லாந்துச் சேர்க்கைச் சட்டம் | ... | 1801 |
| ட்ரெபால்கர் வெற்றி | ... | 1805 |

| | | |
|---|---|---|
| அடிமை வியாபார நிறுத்தல் | ... | 1807 |
| வாடர்லூச் சண்டை | ... | 1815 |
| தானியச் சட்டம் | ... | 1815 |

## முக்கியச் செய்திகள்.

1. நெல்ஸன் (1758-1805).—இவன் ஒரு கிராமப் பாதிரியின் மகனுவான். சிறுவயதில் தேகவலிமை குறைந்தவனுக இருந்தபோதிலும் அவன் சமுத்திரப் பழக்கத்தை யடைந்து அஞ்சாத வீரத்தன்மை வாய்ந்தவனுகவும் சமயத்தில் தாமதமில்லாமல் மேலே நடத்தக்கூடிய புத்திக் கூர்மை வாய்ந்தவனுகவும் இருந்தான். தன்னுடைய கடமையைத் தேசத்திற்குச் செலுத்துவதில் இவனை விட உயர்ந்தவன் எவனுமில்லை. 1797-ம் செண்டு வின்செண்டு சண்டையில் முதலில் தனது சாமர்த்தியத்தைக் காட்டினன். இதில் ஒரு கையை இழந்தபோதிலும் இவன் மேல் நடத்தவேண்டிய சண்டைகளுக்குச் சித்தமாயிருந்தான். நைல் நதி வெற்றியால் நப்போலியன் இந்தியாவுக்குச் செல்லும் ஏற்பாட்டை நிறுத்தினன். இவன் தனக்கு ஒரு கண்ணில்லை யென்று சொல்லி மேல் உத்தியோகஸ்தனின் உத்தரவை மீறிப் பால்டிக் சண்டையில் வெற்றியை யடைந்தான். 1805-ம் வருஷத்தில் ட்ரபால்கரில் ராட்ணியின் தந்திரத்தை அனுசரித்து இவன் இங்கிலீஷ் மாலுமிகளைப் பார்த்து 'இங்கிலாந்து உங்களுடைய கடமையை எதிர்பார்க்கிறது' என்று ஞாபகப்படுத்தி வெற்றியை அடைந்தான். (England expects every man to do his duty). வெற்றிக் காலத்தில் அவன் சொன்னதாவது:—"கடவுளின் கிருபையால் நான் எனது கடமையைக் கழித்து விட்டேன்."

2. நைல்நதி வெற்றியில் நெல்ஸன் காய முண்ட வுடன் டாக்டர் வேறொருவனைக் கவனிப்பதை நிறுத்தி இவனிடத்தில் வர, இவன் அவனைக் கவனித்த பிறகு தன்னிடம் வரலாமென்றான்.

3. பிரஞ்சுக் கப்பல் (L'Orient) நைல் சண்டையில் எரியும்போது தலைவனின் மகன் 'கஸாபியங்கா' நிற்கச் சொன்ன விடத்திலிருந்தே எரிந்தான்.

4. ஆஸ்டர்லிட்ஸ் வெற்றி நப்போலியனது செல்வாக்கின் உன்னத பதவியாகும். இதுமுதல் அவன் வீழ்ச்சி ஆரம்பிக்கிறது. இந்த வெற்றி இளைய பிட்டைக் கொன்று விட்டது.

5. வெல்லஸ்லி (1769—1852).—இவன் இந்தியாவிற்குச் சென்று இரண்டாவது மஹாராஷ்டர யுத்தத்தில் வெற்றியடைந்து இங்கிலாந்திற்குத் திரும்பினான். தீபகப்பல் போரைச் சரியாக நடத்தி வாடர்லூவில் நப்போலியனைத் தோற்கடித்தான். இவனைப் 'போரில் அஞ்சாதவன்' என்று ஜனங்கள் அழைப்பார்கள் (The Iron Duke). மந்திரிப் பதவியை வகித்து ஐரிஷ் காதொலிக்குகளின் குறையை 1829-ம் வருஷத்தில் நீக்கினான். தான்யச் சட்டத்தைத் தள்ளப் பீலுக்கு உதவியாயிருந்தான். இவன் 83-ம் வயதில் எல்லோராலும் புகழப்பட்டு உயர்ந்த மதிப்புடன் இறந்தான்.

6. 1807-ம் வருஷத்தில் க்ளார்க்ஸன், வில்பர்போர்ஸ் என்ற இவர்களின் முயற்சியால் ஆப்பிரிக்காவிலிருந்து அடிமைகளை ஏற்றுமதி செய்வது நின்றது. 1834-ம் வருஷத்தில் அடிமைகளை வைத்திருப்பது சட்டத்திற்கு விரோதம் என்றும் ஏற்பட்டது.

7. 1812-ம் வருஷத்திய சண்டை நப்போலியனின் பர்லின் தீர்ப்பிற்கு விரோதமாக இங்கிலாந்து, கவுன்சில் உத்தரவை வெளியிட்டுப் பிரான்சு முதலான தேசங்களுடன் வியாபாரத்தைத் தடுத்தது இதனுல் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகள் இங்கிலாந்துடன் போர் புரிந்தது. முடிவில் 1815-ம் வருஷத்தில் கெண்ட் (Ghent) சமாதானம் ஏற்பட்டது.

8. இந்தியா.—மஹாராஷ்டர, மைசூர் யுத்தங்கள் இந்தியாவில் நடந்தன.

9. பெர்லின் தீர்ப்பைக் 'கண்டத்திற்குரிய கோட்பாடு' (Continental System) என்றும் சொல்வதுண்டு.

10. பாதுகாப்புச் சட்டம் சுயேச்சை வியாபாரம்.—முற்காலத்தில் இங்கிலாந்தில் வியாபார விஷயத்திலே பாதுகாப்புத் தந்திரம் என்பது கைக்கொள்ளப்பட்டு வந்தது. அதன்படி அந்நியக் கப்பல்களிலே இங்கிலாந்திற்குச் சாமான்கள் வரக்கூடாது என்றும், அந்நிய நாட்டுச் சாமான்கள் வரிகொடுத்தே இங்கிலாந்தில் இறக்குமதியாக வேண்டும் என்றும் இரண்டு நிபந்தனைகள் ஏற்பட்டன. இந்த இருவகை நிபந்தனைகளும் ஹஸ்கியன் கப்பற் போக்கு வரத்துச் சட்டத்தை மாற்றியதாலும், பீல் இறக்குமதி வரிகளை நீக்கியதாலும் இல்லாமற் போயின இப்படி சுயேச்சை வியாபாரம் நிலை பெற்றது.

## கேள்விகள்.

1. பிரஞ்சுப் புரட்சியில் இங்கிலாந்தும் கலந்து போர்புரியப் போனது ஏன் ?

2. இளைய பிட் இப்போரை நடத்த என்ன தந்திரத்தை அனுசரித்தான் ?

3. நப்போலியன் இங்கிலாந்தைத் தொலைக்கச் செய்த ஏற்பாடுகள் எவை ?

4. பெர்லின் தீர்ப்பு என்றால் என்ன ? இங்கிலாந்தின் விடை யாது ?

5. நப்போலியனது வீழ்ச்சிக்குக் காரணம் யாது ?

6. ஓர் ஐரோப்பாப் படம் வரைந்து இப்போரில் நடந்த போர்க்களங்களைக் குறிக்க.

---

## பன்னிரண்டாவததிகாரம்.

## தொழிற்புரட்சி.

பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்து பயிர் செய்யும் தேசமாக இருந்தது போகத் தொழில் செய்யும் தேசமாக மாறியது. இதைத்தான் 'தொழிற் புரட்சி' என்று சொல்லுகிறார்கள். இப்புரட்சி இங்கிலாந்தை உலகத்திற்கு வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற் சாலையாக்கியதுடன், இங்கிலீஷ் ஜனங்களைப் பணக்காரர்களாகவும் ஆக்கிற்று. இளைய பிட், ஆடம் ஸ்மித் (Adam Smith) எழுதி இருந்த 'அர்த்த சாஸ்திரத்தை'ப் பின்பற்றி வியாபாரத்தை விருத்தி செய்ததால், பிரான்சுடன் இருபத்தைந்து வருஷகாலம் போர் புரிய வேண்டுவதற்கு தேசத்தின் செல்வத்தை விருத்தி செய்து தகுதியுள்ளவனானன். விவசாயத்தை விருத்தி செய்யும் வழிகளைத்தேடியும், சாமான்களை உற்பத்தி செய்யும் யந்திரங்களைக்கண்டு பிடித்தும், போக்கு வரத்துக் குற்ற மார்க்கங்களை விருத்தி செய்தும் வந்ததால் இங்கிலாந்தின் செல்வம் ஓங்கிற்று.

அரசன் விவசாயத்தில் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டதாலும்; உழவின் பொருட்டுப் பலமுள்ள எருது களை உண்டுபண்ணும் வழியைத் தேடியும், புது மாதிரி யான எருக்களை உற்பத்தி செய்தும், நிலங்களைச் சாகுபடி செய்யும் மாதிரிப் பண்ணைகளை ஏற்படுத்தியும் விவசாயத் தைக் கவனிக்க புது இலாகாவை ஸ்தாபித்ததாலும், விளை விலும், மாதிரியிலும் விவசாயம் மேலோங்கியது. என் ருலும், குறைந்த நிலக்காரர்களுக்கு இதனால் ஒரு பயனும் உண்டாகவில்லை.

சாமான்களை உற்பத்தி செய்யும் வழி இங்கிலாந்தில் வெகு ஆச்சரியமானது. வஸ்திரங்களை நெய்வதிலும், இரும்புச் சாமான்கள் செய்வதிலும் இங்கிலாந்திற்குப் போட்டி யாக எந்தத் தேசமும் நிற்க முடியாது. 1733-ம் வருஷத் தில் கே (Kaye) வேகமாயும் அகலமாயும் உள்ள வஸ்தி ரங்களை நெய்யப் பறக்கும் உருளை (Flying Shuttle) என் கிற ஒரு யந்திரத்தைக் கண்டு பிடித்ததாலும், 1764-ல் வரு ஷத்தில் ஹார்க்ரீவ் (Hargreave) நூற்கும் யந்திரம் (Spinning Jenny) ஒன்றை ஏற்படுத்தியதாலும், 1767-ல் ஆர்க் ரைட் ஜலசூத்திரத்தால் யந்திரங்களை ஓட்டும் மார்க்கங்களைத் தேடியதாலும், 1769-ல் க்ராம்டன் (Crompton) நூற்பதை யும் ஜல சூத்திரத்தையும் ஒன்று படுத்தும் யந்திரத்தைக் கண்டு பிடித்ததாலும், பஞ்சிலிருந்து வஸ்திரங்களை உற்பத்தி செய்வது விருத்தியடைந்தது. ஜேம்ஸ் வாட் (Watt) நீராவி யால் யந்திரங்களை ஓட்டும் வழியைக் கண்டு பிடித்ததால் தொழில்வேலை அதிகரித்தது. இரும்பும் நிலக்கரியும் ஒன் றுக்கு ஒன்று அருகிலிருப்பதும் நிலக்கரியின் உபயோகம் நன்கு விளங்கினதும் இரும்புத் தொழிலும் மேலோங்குவ தற்கு காரணமாயின.

மகடம் (Macadam) புதுமாதிரியில் ரஸ்தாக்களைப் போடும் வழியைக் கண்டு பிடித்தான். பிரிண்டலி (Brindley) வாய்க்கால் வழியாய்ப் போக்குவரத்துச் சாதனங்களை ஏற்படுத்தியதாலும், பாமர் (Palmer) தபால் வண்டிகள் போவதை ஏற்படுத்தியதாலும் சாமான்களைக் கொண்டு போகும் மார்க்கங்கள் விருத்தியடைந்தன. பிறகு புகை வண்டித் தொடர்களும் புகைக்கப்பல்களும் ஏற்பட வியாபாரம் நடத்தும் மார்க்கங்கள் மிகவும் சௌகரியமாக மாறின.

மேற்கூறிய மாறுதல்களால் இங்கிலாந்து ஒரு பெரிய செல்வமுள்ள தேசமாய் விட்டது. பிரஞ்சுப் புரட்சியால் ஐரோப்பாவுக்கு வேண்டிய சாமான்களைக் கொடுக்கும் திறமை ஏற்பட்டதால் இங்கிலாந்தில் நிலக்காரர்களும் யந்திர ஆலைக்காரர்களும் பணக்காரர்கள் ஆனார்கள் ஆனல், வேலைக்காரர்களின் கஷ்டம் சகிக்க முடியாததாயிருந்தது. யந்திரங்கள் ஏற்பட்டதாலும், பெரிய சண்டைக்குப் பிறகு வேலையில்லாதிருந்ததாலும் தானியச் சட்டத்தாலும் ஏழைகளின் வறுமையை விவரிக்க முடியாததாகியது. கைத்தொழிலும் நின்று விட்டது. பார்லிமெண்டு சீர் திருத்தம் வேண்டுமென்றும், வறுமையை ஒழிக்க வேறு மார்க்கங்களைத் தேட வேண்டுமென்றும் கருணையுள்ளவர்கள் முயற்சி செய்யக் கிளம்பினார்கள். யந்திரங்கள் வேலை செய்வதால் தளரமாட்டா. ஆயினும், குழந்தைகளும் பெண்பிள்ளைகளும் யந்திர ஆலைகளில் வேலை செய்யும் நேரத்தைக் குறைக்கச் சட்டங்கள் ஏற்பட்டன. வடக்கிலும் மேற்கிலும் ஆலைகள் ஏற்பட்டதால் வேலைக்காக விவசாய ஜில்லாக்களிலிருந்து ஜனங்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். ஆலைகள் தோன்றிய ஊர்களும் பெரிய பட்டணங்களாயின. "பெரும்பான்மையோர்களின்

க்ஷேமமே தேசத்திற்கு க்ஷேமம்'' என்கிற பழமொழிப் படி, தொழிற் புரட்சி இங்கிலாந்திற்கு ஐச்வரியத்தைக் கொடுத்து க்ஷேமத்தை உண்டாக்கிற்று.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

ஜேம்ஸ்வாட் புகையந்திரத்தைப் பூர்த்தி செய்தது ... 1759

ப்ரிட்ஜ்வாடர் வாய்கால்களை வெட்டியது. ... 1761

1. மத்திய காலத்தில் இங்கிலாந்தின் முக்கிய ஏற்றுமதிப்பொருள் ரோமமா யிருந்தது. ப்லாண்டர்ஸில் (Flanders) நெசவுக்காரர்கள் இதைக் கொண்டு கம்பளம் முதலான ரோம வஸ்திரங்களைச் செய்து வந்தார்கள். யார்க்ஷயரில் அதிக ஆடுகள் உண்டு. எலிஜபெத் மகாராணி காலத்தில் நெசவுக்காரர்கள் மதத்திற்காக இங்கிலாந்திற்கு ஓடிவந்தார்கள். ஆகையால், யார்க்ஷயரில் ரோம நெசவும் நடந்து வந்தது. மேற்கு ஜில்லாவாகிய லங்காஷயருக்கு ரோமம் வர மார்க்கமில்லாததால் பஞ்சை அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து, ஜனங்கள் பஞ்சு வஸ்திரங்களை நெய்ய ஆரம்பித்தார்கள். மேலும் லங்காஷயரில் சீதோஷ்ண ஸ்திதி பஞ்சு நெசவிற்கு அனுகூலமா யிருக்கிறது.

2. க்ராம்டனின் யந்திரம் நூற்பதும் ஜல ஸூத்திரமும் ஒன்று சேர்ந்ததால் அதற்குக் கோவேறு கழுதை என்று பேர் (1775).

3. ஜோஷியா வெட்ஜ்வுட் மண்பாண்டம் செய்வதில் தேர்ந்தவனா யிருந்தான். இவனுடைய யந்திரங்கள் ஐரோப்பியாவில் உயர்தரமானவைகள் என்று கொண்டாடப்பட்டு வந்தன.

4. 1815-ம் வருஷத்தில் டேவி சுரங்கங்களில் விளக்குக்கொண்டு போவதால் உயிருக்கு அபாயம் உண்டாகாத யுக்தியைக் கண்டு பிடித்தான்.

5. இரும்பை மரத்தைக்கொண்டு உருக்குவது வழக்கம். இப்போது நிலக்கரியையும், கரியையும் கொண்டு உருக்கலாம் என்று தெரிந்தவுடன் இரும்புத்தொழில் விருத்தி அடைந்தது.

6. 1761-ம் வருஷத்தில் ப்ரிண்டலி என்பவன் ப்ரிட்ஜ்வாடர் பிரபுவுக்கு வாய்க்கால்களை வெட்டிப் பஞ்சு ஆலை ஸ்தலங்களையும் துறைமுகங்களையும் சாமான்கள் கொண்டு போவதற்குச் சுலபமாக்கினான். ரயில் வண்டிகள் ஏற்பட்டதும் வாய்க்கால்களின் உபயோகம் போய் விட்டது.

7. தொழிற் புரட்சியினால் ஏற்பட்டமாறுதல்கள் :—(a) தொழில்கள் நதிக்கரையிலிருந்து நிலக்கரியுள்ள இடங்களில் நடத்தப்பட்டன. தொழிலாலைகளைப் பெற்ற கிராமங்கள் பட்டணங்கள் ஆயின. கைத்தொழில் குறைந்தது. ஜனங்கள் தொழிலாலைகள் உள்ள இடங்களில் கூடினார்கள். வேலைக்காரர்களின் வறுமை அதிகமாகியது. இதைக்கண்டு பார்லிமெண்டு சீர்த்திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்தது. பிரிட்டன் பணமுள்ள தேசமாயிற்று. அடிமை முறை நீங்கியது. யந்திர ஆலைச் சட்டம் புது ஏழைச்சட்டம் முதலியவைகளும் தோன்றின.

8. லட்டைட்.—யந்திரங்கள் ஏற்பட்டதால் கைத்தொழில்காரர்களின் பிழைப்பு வெகு கஷ்டமாகியது. லட் என்பவன் இதனால் யந்திரங்களை உடைத்தான். இப்படிச் செய்பவர்களுக்கு லட்டைட் என்பது பேராயிற்று.

9. தார்மேக்.—மகடம் கருங்கல் சல்லிகளைக் கொண்டு ரஸ்தாக்களைப் போடுவதால் வண்டிகள் அதிக பாரத்தைச் சுமக்கலாம் என்று கண்டுபிடித்தான். இப்போது ரஸ்தாக்களுக்குத் தார் போடுவது என்பதும் ஏற்பட்டு விட்டது. இதைத் தார்மகடம் என்பார்கள்.

## கேள்விகள்.

1. விவசாயத்தில் உண்டான மாறுதல்களால் குடியானவர்களின் கதி என்ன?

2. லங்காஷயரில் பஞ்சு நெசவு ஏற்படக் காரணம் யாது?

3. பஞ்சு நெசவிற்கு ஏற்பட்ட யந்திரங்களைச் சொல்லுக.

4. போக்கு வரத்திற்கு ஏற்பட்ட சாதனங்கள் யாவை?

5. தொழிற் புரட்சியால் ஏற்பட்ட ஏழைகளின் கஷ்டத்தை நீக்கப் பார்லிமெண்டு செய்த சீர் திருத்தங்களைச்சொல்லுக.

---

## பதிமூன்றுவததிகாரம்.

## நான்காவது ஜார்ஜ் 1820-30.

மூன்றுவது ஜார்ஜ் தன்னுடைய குணத்தால் ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதுவதில் மேலானவன். அவன் மகன் அவனுக்கு முற்றிலும் மாறுனவன். அவன் தனது மனைவியும் தன்னுடன் மகுடாபிஷேகம் செய்து கொள்வதில் இஷ்டமில்லாதவனு யிருந்தான். மந்திரிகளும் அவன் சார்பாக இருந்தது பற்றி அவர்களைக் கொல்லக் கேடோத்

தெருவில் ஒரு கலக யோசனை நடைபெறுவது வெளிக்கு வந்தது. இதில் சம்பந்தமுள்ளவர்கள் தண்டிக்கப் பட்டார்கள்.

தாராள எண்ணமுள்ளவர்களான ஹஸ்கிசன் (Huskisson), கானிங் (Canning), பீல் (Peel) என்றவர்கள் புதிய மந்திரிகளா யிருந்தார்கள். ஹஸ்கிசன் வியாபார போர்டுக்கு அக்கிராசனாதிபதி யானதால் வியாபாரச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தான். இங்கிலாந்தின் தொழிலைப் பெருக்கக் கூடிய சாமான்களுக்கு இறக்குமதி வரியை எடுத்தான். எந்தத் தேசத்தில் இங்கிலீஷ் சாமான்களை வரிபோடாமல் வாங்கினார்களோ அந்தத் தேசத்துச் சாமான்களுக்கு இங்கிலாந்திலும் வரிபோடுவதில்லை யென்றான். இப்படிச் செய்வதில் இவன் கொண்ட எண்ணம் இங்கிலீஷ் சாமான்களை வாங்கக் கூடிய இடங்களைத் தேடுவதுதான். தொழிற் புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தின் கஷ்டம் பண்டங்களை உற்பத்தி செய்வதிலன்று. உற்பத்தி செய்த சாமான்களை வாங்குவதற்கு இடம் தேடுவதிலேதான். மேற் கண்ட தந்திரத்திலிருந்து இவனை வியாபார சுயேச்சையைத் தேடுபவருள் முன் நிற்பவனைச் சொல்லலாம்.

கானிங் மந்திரியின் தந்திரம் வெளியூர் விஷயங்களில் வெகு சிறந்ததா யிருந்தது. ஐரோப்பாவில் அநுசரித்து வந்த பரிசுத்தச்சேர்க்கையுடன், ஒத்துழையாதிருதத லென்பது தான் இங்கிலாந்தின் தந்திரம். கானிங், அதையே அநுசரித்த போதிலும் இரண்டு விஷயங்கள் சொல்லத் தகுந்தவைகளா யிருக்கின்றன. நப்போலியன் செய்த சண்டைக்குப் பிறகு சுயேச்சை வேண்டுமென்ற ஆவலுடன் இருந்த கிரேக்கர்கள், துருக்கி சுல்தானுக்கு விரோதமாகக் கலகம் செய்தார்கள். ருஷியா, கிரேக்கர்கள் கக்ஷியில் சேர்ந்துகொண்டு சுல்தானின் கொடிய ஆக்ஷியிலிருந்து

விடுபட முயற்சி செய்தது. கானிங், ருஷியாவின் உள் எண்ணம் 'துருக்கியில் தனது அதிகாரத்தை வலுபடுத்த வேண்டுமென்பது' என்றதைத் தெரிந்துகொண்டதனால் ருஷியாவுடன் சேர்ந்துகொண்டு துருக்கிக் கப்பற் படையை 1827-ம் வருஷத்தில் நாவரீனோ (Navarino) என்கிற இடத்தில் தோற்கடிக்க உதவி செய்தான். இங்கிலீஷ் மந்திரி இறந்தாலும் இவனுடைய உதவியால்தான் கிரேக்கர்களுக்குச் சுயாதீனம் கிடைத்தது. ருஷியாவின் உள் எண்ணத்தை நிறைவேறாமல் செய்ததும் கானிங்கின் ஏற்பாடேயாகும். அமெரிக்காவில் ஸ்பெயினின் குடியேற்ற நாடுகள் தாய் நாட்டிற்கு விரோதமாகக் கிளம்பினவுடன், ஐக்கிய நாடுகளின் அக்கிராசனாபதியான மன்ரோ (Munroe) என்பவர் ஸ்பெயினுக்கு உதவி செய்யப் 'பரிசுத்தச் சேர்க்கை'க்காரர்கள் வருவார்களோ என்று எண்ணி, அவர்கள் விஷயத்தில் மேற்கண்ட உடன்படிக்கை அமெரிக்காவில் செல்லத் தகுந்ததில்லை யென்றும், ஐரோப்பாவிலுள்ளவர்கள் குடியேறும் விஷயத்திலும் ராஜீய விஷயத்திலும் அமெரிக்காவில் பிரவேசிக்கக் கூடாதென்றும் கூறினான். கானிங், மன்ரோவுடன் சேர்ந்ததால் ஸ்பெயினின் குடியேற்ற நாடுகள் சுயாதீனத்தை அடைந்தன. இதை 'மன்ரோ கொள்கை' என்றும் சொல்வதுண்டு.

பீல் க்ரிமினெல் சட்டத்தைச் சீர்திருத்தம் செய்து அற்பக் குற்றங்களுக்குக் கொலைத்தண்டனை விதித்திருந்ததைச் சட்டப் புஸ்தகத்திலிருந்து நீக்கினான். லண்டன் போலீஸ்ப் படையைச் சீர்திருத்தம் செய்ததால், அப்படை உலகத்தினர் எவரும் புகழத்தகுந்த கீர்த்தியைப் பெற்றது.

கானிங் இறந்தபின் வெல்லிங்டன் பிரபு பிரதானமந்திரியானான். அயர்லாந்தில் காதொலிக் மதஸ்தர்கள் தங்களுடைய குறைகளை நீக்க வழிதேடினார்கள். காதொலிக்கு

கள் வில்லியம் நாள் முதல் பார்லிமெண்டு மெம்பர்களாக அருகரில்லாதவர்களா யிருந்தபடியால், அவர்களுடைய தலைவனை (O'Connel) ஓக்கானெல் க்ளேர் என்ற ஜில்லாவிற்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட ஓர் அபேக்ஷகனாக நின்றான். வோட்டர்கள் அவனையே மூன்று முறைகளில் தேர்ந்தெடுத்தனுப்பியதால் வெல்லிங்டன் பிரபு அயர்லாந்தில் உள்நாட்டுப்போர் ஏற்படுமோ என்று பயந்து 1828-ம் வருஷத்தில் பரிசோதனைச் சட்டத்தையும், அவர்களுக்கு விரோதமான முனிசிபல் சட்டத்தையும் தள்ளியதுடன் 1829-ம் வருஷத்தில் காதொலிக் விடுதலைச் சட்டத்தையும் செய்தான். இது முதல் காதொலிக்குகள் பார்லிமெண்டு மெம்பராகவும், உத்தியோகங்களை வகிக்கவும் அருகர்களானார்கள். ரிப்பன் பிரபு இந்தியாவிற்கு வைஸ்ராயானது இச் சட்டத்தைப் பின்பற்றித்தான்.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| நாவெரினோ சமுத்திர வெற்றி | ... | 1827 |
| சோதனைச் சட்டமும் முனிசிபல் சட்டமும் தள்ளப்பட்டது | ... | 1828 |
| காதொலிக்களின் விடுதலைச் சட்டம் | ... | 1829 |

### முக்கியச்செய்திகள்.

1. நான்காம் ஜார்ஜ் நாளில் மூன்று விஷயங்கள் ஞாபகத்தில் வைக்க தகுந்தனவாகும்: (a) பார்லிமெண்டு சீர்திருத்தம் கொண்டுவர ரஸ்ஸல் முயன்றார். இவர் செய்த முயற்சி பயன் படாது போயினும், 1832-ம் வருஷத்திய சீர்திருத்தச் சட்டத்திற்கு இதுவே ஒரு வழிகாட்டி போலாகியது. (b) காதொலிக் விடுதலைச் சட்டம்

ஒக்கானெல், காதொலிச் சங்கங்களை ஏற்படுத்திக் காதொலிக்குகள் பார்லிமெண்டில் புக வழி தேடியது. இவன் பார்லிமெண்டு மெம்பராவது இங்கிலீஸ் துரைத்தனத்தார் உள் நாட்டுப் போர் அல்லது காதொலிக் விடுதலைச் சட்டத்தை உண்டாக்குவதற்கே. (c) சுயேச்சை வியாபாரம். ஹஸ்கிஸன் இங்கிலீஷ் கப்பல்களையும் அந்நிய தேசக் கப்பல்களையும் ஒரே விதமாக நடத்தினான். மற்றவர்களும் அதே விதமாக இங்கிலீஷ் கப்பல்களை நடத்த ஒப்புக் கொண்டதால் இங்கிலீஷ் வியாபாரம் ஓங்கியது.

2. பீல் குற்றச்சட்டச் சீர்திருத்தம்.—அற்பத்திருட்டுகளுக்குக் கொலைத்தண்டனை விதிப்பது அநீதம் என்பதைப் பீல் கண்டு இருநூறு அற்பக்குற்றங்களைக் கொலைதண்டனையில்லாதனவாகச் செய்தான். லண்டன் போலிஸ் இவனுடைய ஏற்பாட்டின் பயன் ஆதலால் லண்டன் போலீஸ் காரர்களை 'பீலர்கள்' என்று அழைப்பார்கள்.

3. கிழ்த்திசை விஷயம். இது மூன்று வகைப்படும் (a) ஐரோப்பா, சிறிய ஆசியா, எகிப்த் இவைகளுக்கு உரியது, (b) மத்திய ஆசியாவுக்கு உறியது; (c) சீனு ஜப்பான் இவைகளுக்கு உரியது. முதல் விஷயம். துருக்கி க்ஷீணதசையடைந்ததும்கீழ்ப்பட்ட ராஜ்ஜியங்கள் விரோதமாய்க் கிளம்பின. மேலும் ருஷியா தன்னுடைய அதிகாரத்தைப் பரவச்செய்தது. இதனால் இங்கிலீஷ்க் காரர்களுக்கு இந்தியாவிற்குச் செல்லும் மார்க்கத்திற்கு அபாயம் ஏற்படுமென்று பயம் ஏற்பட்டது. இரண்டாம் விஷயம். மத்திய ஆசியாவில் ருஷியா தனது அதிகாரத்தைப் பரவச்செய்து பிரிட்டிஷ் இந்தியாவிற்கு அபாயம் உண்டாக்க எண்ணினது. மூன்றுவது விஷயம். சீனு, ஜப்பான் தேசங்களில் ஐரோப்பியர்கள் வியாபார முதலியவைகளை நடத்தக் கருதியதாகும்.

4. நான்காவது ஜார்ஜ் காலத்தில் அஞ்சல் வண்டிகளில் பிரயாணம் செய்வது வழக்கமாயிருந்தது. விடுமுறை நாள்களின் போது பள்ளிக்கூடப் பையன்கள் அவைகளில் உற்சாகத்துடன் பிரயாணம் செய்வார்கள். 1840-ம் வருஷம் முதல்கொண்டு ரெயில்களில் பிரயாணம் செய்வது ஏற்பட்டதால் அஞ்சல் வண்டிகள் நின்றுவிட்டன.

## கேள்விகள்.

1. க்ரீஸ் சுயாதீனத்தை எப்படி அடைந்தது?
2. காதொலிக் விடுதலைச் சட்டம் ஏற்பட்ட வரலாற்றை சொல்லுக?
3. சுயேச்சை வியாபாரம் என்றால் என்ன?
4. சுயேச்சை வியாபாரத் தந்திரம் ஹஸ்கிஸனால் எவ்வளவு விருத்தி அடைந்தது?

## பதினான்காவததிகாம்.

## நான்காவது வில்லியம் 1830-37.

நான்காவது வில்லியம் 'மாலுமி அரசன்' என்று வழங்கப்பட்டான். ஐரோப்பாவில் உள்நாட்டுப் போர் நடந்தபோதிலும், இங்கிலாந்தில், பார்லிமெண்டுச் சீர்திருத்தத்திற்கான ஜனங்களின் பிரயத்தனம் கடுமையாயிருந்தது. லிபரல் கக்ஷித்தலைவன் முதன் முதல் பிரதான மந்திரிப்பதவியை வகித்ததால் பார்லிமெண்டுச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர நிச்சயித்தான்.

தொழிற் புரட்சி ஏற்பட்டதால் உண்டான அநேக புதுப்பட்டணங்களுக்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை கிடைக்கவில்லை. சிறப்பிழந்த வேறு அநேக பட்டணங்களும், பிரபுக்களின் கைவசமுள்ள பட்டணங்களும் பிரதி

நிதிகளை அனுப்பும் உரிமையை அனுபவித்து வந்தன. நிலச் சொந்தக்காரர்கள் மாத்திரம் வோட்டுக் கொடுக்கலாம். லஞ்சங்கொடுத்து வோட்டு வாங்குவதுதான் வழக்கமாயிருந்தது. ஆகையால், பொது ஜனசபை என்பது ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபையென்று சொல்ல முடியாத நிலைமையிலிருந்தது. இளைய பிட் பிரான்சுப் புரட்சியால் சீர்திருத்தம் செய்வதைத் தாமதப்படுத்தினன் இதை விவரமாய்ச் சொல்வதற்குமுன் பார்லிமெண்டிலே சட்டம் செய்கிற வழியைச் சிறிது எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும். சாதாரணமாய்ப் பொதுஜன சபையில் மசோதா கொண்டுவரப்படுவது வழக்கமாயிருக்கிறது. 'முதல் முறை' யாகப் படிக்கையில் ஒரு விவாதமும் ஏற்படுவதில்லை. 'இரண்டாவது முறை' யாகப் படிக்கையில் கமிட்டிக்கு அனுப்புதல், முடிவு செய்தல் என்றும் இரு வகைப்பட்டு அவற்றைப்பற்றிக் கடுமையான வாதங்கள் ஏற்படக் கூடியதாயிருக்கும். 'மூன்ருவது முறை' யாகப் படிப்பது என்பது சுலபமாயிருக்கும். பொதுஜன சபையில் ஒரு மசோதா அங்கீகரிக்கப்படாத பக்ஷத்தில் அதைக் கொண்டுவந்த கக்ஷிக்காரர்கள் ராஜீநாமாக் கொடுத்துப் பொதுத் தேர்தல் நடத்த ஏற்பாடு செய்வார்கள். இது போலவே பிரபுக்கள் சபையிலும் மூன்று முறைகளிற் படிப்பது என்பது இருந்தபோதிலும், மசோதாதள்ளப் பட்டால் அதற்காகக் கக்ஷிக்காரர்கள் ராஜிநாமாக் கொடுக்க வேண்டும் என்பதில்லை.

1831-ம் வருஷத்தில் ரஸ்ஸல் கொண்டுவந்த சீர் திருத்த மசோதா சம்பந்தமான கமிட்டி முடிவினல் லிபரல் கக்ஷிக்காரர்கள் ராஜிநாமாக் கொடுத்துப் பொதுத் தேர்தலில் பெரும்பான்மைக் கக்ஷியாளுர்கள். மறுபடியும் ரஸ்ஸல் இரண்டாவது சீர் திருத்த மசோதாவைக் கொண்டு வந்

தான். அது பொது ஜன சபையில் நிறைவேறினாலும், பிரபுக்கள் சபையில் தள்ளப்பட்டது. எங்கும் கலகங்கள் உண்டாயின. மூன்றாவது சீர்திருத்த மசோதா பொது ஜன சபையில் நிறைவேறியது. அரசனும் மந்திரியின் வேண்டுகோளின்படி புதுப் பிரபுக்களை உண்டாக்கச் சம்மதித்தான். வெல்லிங்டன் பிரபு நூறு கன்சர்வெடிவ் பிரபுக்களுடன் விலகி யிருந்ததால் மசோதா அரசனுடைய கையெழுத்தைப் பெற்றவுடன் சட்டமாகிவிட்டது. 1832-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சட்டப்படி 143 பிரதிநிதிகளை அனுப்பும் சிறப்பிழந்த பட்டணங்களின் உரிமை புதுப் பட்டணங்களுக்கு மாறியது. மாகாணங்களில் நிலச் சொந்தக்காரர்களுடன் வாரச்சாகுபடி, குத்தகை சாகுபடி முதலிய செய்பவர்களுக்கும் வோட்கொடுக்கும் உரிமை வந்தது. பட்டணங்களில் பத்துப் பவுன் வரிசெலுத்தும் வீட்டுச் சொந்தக்காரர்களுககும் வோட் கொடுக்கும் உரிமை வந்தது. இப்படி ராஜீய அதிகாரம் பிரபுக்களிடமிருந்து வியாபாரிகளுக்கு வந்தது. ஆனால் பட்டணங்களிலுள்ள வேலைக்காரர்களுக்கும் மாகாணங்களிலுள்ள வேலைக்காரர்களுக்கும் அந்த உரிமை வரவில்லை. 1767-ம் 1884-ம் வருஷங்களில் ஏற்பட்ட சீர்திருத்தச் சட்டத்தால் அவர்களுக்கும் அந்த உரிமை கிடைத்ததால் ஜனநாயகம் ஏற்பட்டு விட்டது.

**சீர்திருத்தப் பார்லிமேண்டின் வேலை.**—20,000 பவுனைக் கல்விக்காக நன் கொடை அளித்து அது முதல் கல்வி அபிவிருத்திக்கு வழிகாட்டியது முதல்வேலை. 1833-ம் வருஷத்திய சட்டப்படி பிரிட்டிஷ் ராஜாங்கத்தில்அடிமைத் தனம் ஒழிந்துவிட்டது. வேலைச் சாலைகளில் குழந்தைகள் வேலைசெய்யும் நேரத்தைக் குறைக்கும் சட்டம்ஏற்பட்டது. 1834-ம் வருஷத்திய ஏழைச் சட்டப்படி ஏழைகளுக்குத்

தொழிற் சாலை ஏற்பட்டதால் அவர்கள் யோக்கியர்களானார்கள். ஏழைவரியும் குறைந்தது. பிரதான மந்திரியான மெல்போரன் பிரபுவின் முயற்சியால் வரி கொடுப்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் நிர்வகிக்கும் முனிசிபால்டிகள் ஏற்பட்டுப் பட்டணங்களின் விஷயங்கள் நன்கு நடைபெற ஆரம்பித்தன.

வெளியூர் விஷயங்கள்.—பால்மெர்ஸ்டன் பிரபு அந்நிய தேசங்களில் நடந்த கலகங்களின் விஷயத்தில் ஜனங்களின் சார்பாகவே இருந்து வந்தான். வில்லியம் இறக்க விக்டோரியா மகாராணி சிங்காதனம் ஏறினாள்.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| பார்லிமெண்டுச் சீர்திருத்தம் | ... | 1832 |
| அடிமை விலக்கு | ... | 1833 |
| ஏழைச் சட்டத் திருத்தம் | ... | 1834 |

### முக்கியச் செய்திகள்.

1. 1836-ம் வருஷத்தில் பொது ஜன சபையில் மெம்பர்கள் வோட்கொடுக்கும் விவரங்களைப் பிரசுரம் செய்யலாம் என்பது ஏற்பட்டது. இதனால் ஜனங்களுக்குத் தாங்கள் தேர்ந்தெடுத்தவர்களின் வேலை (Division list) நன்கு விளங்கிற்று.

2. 1834-ம் வருஷத்திய ஏழைச்சட்டம்—1601-ம் வருஷத்திய ஏழைச்சட்டப்படி ஊரிலுள்ளவர்கள் அவ்வூர் ஏழைகளைக் காப்பாற்றுவது கடமையாகும். பிறகு வேலைக்காரர்கள் ஏழைவரியிலிருந்து உதவி பெறலாமென்று ஏற்பட்டதால், அநேக வேலைக்காரர்கள் இவ்வுதவியைப் பெற்று வந்தார்கள். யோக்கியமுள்ள வேலைக்காரர்கள்

குறைந்தார்கள். வரியும் விருத்தியடைந்தது. இவ்விரண்டு குறைகளையும் நிறுத்த 1834-ம் வருஷத்தில் வேலைச் சாலைகள் ஏற்பட்டன. மேல்பார்வையிட உத்தியோகஸ்தர்கள் அமைக்கப்பட்டார்கள்.

## கேள்விகள்.

1. பார்லிமெண்டு சபையில் ஒரு சட்டம் நிறைவேற வேண்டிய வழிகள் யாவை?

2. 1832-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சீர் திருத்தச் சட்டங்களின் ஷரத்துக்கள் யாவை?

3. 1832-ம் வருஷத்தில் வோட் உரிமை இல்லாதவர்கள் எப்போது அவ்வுரிமையை அடைந்தார்கள்?

4. 1834-ம் வருஷத்திய ஏழைச் சட்டத்தைப் பற்றிச் சொல்லுக.

---

## பதினைந்தாவததிகாரம்.

## விக்டோரியா மகாராணி 1837—1901.

விக்டோரியா தனது பதினெட்டாவது பிராயத்தில் தாயார் வீட்டில் இருக்கும்போது ஒருநாள் காலையில் ஒரு தூதன் வந்து 'அரசன் இறந்துவிட்டான், அரசி வாழ்க' என்கிற செய்தியைச் சொன்னவுடன் அவள் தன்னுடைய ஜனங்களுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைச் சரியாகச் செலுத்தக்கூடிய சத்தியைக் கடவுள் தனக்குக் கொடுக்கவேண்டும் என்று பிரார்த்தித்தாள். அப்படியே அறுபத்து மூன்று வருஷம் செங்கோல் செலுத்தித் தன்னுடைய ஜனங்களிடத்தில் அன்பாய் இருந்ததுபோல் தன்னுடைய அநேக குழந்தைகளிடத்திலும் இருந்தாள். ஹானோவர் முதலாவது ஜார்ஜ் நாள் முதல் இங்கிலாந்

துடன் சேர்ந்திருந்தது. சாலிக் சட்டப்படிப் பிரிந்து விட்டது. ஒரு விதத்தில் இவ்விஷயம் இங்கிலாந்திற்கு நன்மையாகிற்று. ஏனென்றால், இந்த சம்பந்தத்தினால் இதுவரையிலும் ஐரோப்பா சண்டைகளில் செல்ல வேண்டியிருந்தது.



விக்டோரியா மகாராணி

ராணியின் கஷ்டங்களும், உதவியும். இளமைப் பருவத்தால் உலக அனுபவம் போதாமலிருந்தது. தன்னுடைய முன்னோர்கள் நாளில் ஜனங்களின் மரியாதையும் விசுவாசமும் குறைந்திருந்தன. தன்னுடைய பிரதான மந்திரியிடத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை சிறிதுமில்லாமலிருந்தது. ஆனபோதிலும், மெல்போரன் பிரபு, ராணிக்கு இங்கிலாந்தின் அரசியல்படி அதனை ஆளக் கற்றுக்கொடுத்ததுடன், புத்தி சக்திகளையும் உண்டு பண்ணினான்; ராஜ்ஜியத்தைச் சரியாக ஆள ஏற்பாடு செய்தான். ராணி ஆல்பர்ட் சிற்றரசனைக் கல்லியாணம் செய்துகொண்ட பின்னர் அவனுடைய உதவியே ராஜீய விஷயங்களில் மேம்பட்டிருந்தது.

ஜன உரிமைப் பத்திரம். — 1832-ம் வருஷத்திய பார்லி மெண்டுச் சீர்திருத்தச் சட்டம் வியாபாரிகளுக்கு மட்டில் அதிகாரத்தைக் கொடுத்ததே ஒழிய, வேலைக்காரர் களுக்கு எவ்விதப் பயனையும் கொடுக்கவில்லை. இங்கிலீஷ் சாமான்களுக்கு ஐரோப்பாவில் தேவையில்லாததால், யந்திர வேலைக்காரர்களுக்கு வேலை யில்லாமையும், வேலை யுள்ளவர்களுக்குக் குறைவான சம்பளம் பெறும் நிலைமை யும், உணவுத்தானியங்களுக்குத் தானியச் சட்டப்படி அதிக விலை கொடுத்து வாங்கும்படியான நிலைமையும் இருந்தன. இப்படி வேலைக்காரர்களின் நிலைமை பரிதபிக்கத் தகுந்ததாயிருந்தது. கருணையுள்ளவர்கள் இவர்கள் வறுமையை நீக்க வழி தேடினார்கள். சிலர் தானியச் சட்டத்தைத் தள்ளி வியாபார சுயேச்சையைக் கொண்டு வரும் விஷயமாகப் பரிந்து பேசிவந்தார்கள். 1839-ம் வரு ஷத்தில் காப்டன் (Cobden), பிரைட் (Bright) இருவர் களும் தானியச் சட்டத்தைத் தள்ளும்படி செய்வதற்கு முயலும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி எல்லாவிடங்களுக் கும் சென்று பிரசங்கம் செய்துவந்தார்கள். அவர்களின் தலைமை யிருப்பிடம் மான்செஸ்டர். ஆதலால் இவர்களுக்கு மான்செஸ்டர் கொள்கைக்காரர்கள் என்று பேர் வந்தது. இவர்களுடைய முயற்சி பீல் மந்திரியால் 1846-ம் வருஷத் தில் பயன்பட்டது. ஆனால் வேலைக்காரர்கள் இதை நம்ப வில்லை. அது தங்களது சம்பளத்தைக் குறைக்கச் செய்யும் ஒரு தந்திரமாகும் என்பது அவர்களது எண்ணம். அத னால், அவர்கள் பார்லிமெண்டு சீர்திருத்தம் ஏற்பட்டு அதில் ஏழைகள் பிரிதிநிதிகளை அனுப்புவது அனுஷ்டானத்திற்கு வந்தால் தங்களது வறுமை நீங்குமென்றுசொல்லி ஜன உரிமைப் பத்திரத்தைத் தயார் செய்தார்கள். அதின்படி அவர்கள் ஆறு வேண்டுகோள்களைக் கேட்டுக் கொண்டார்

கள். அவைகளாவன: (1) எல்லா ஆண்களுக்கும் வோட் கொடுக்கும் உரிமை, (2) வருஷாந்தரப் பார்லிமெண்டு, (3) ரகசிய வோட், (4) பார்லிமெண்டு மெம்பர்களுக்குச் சம்பளம், (5) அவர்களுக்கு ஆஸ்திப் பொறுப்பு வேண்டுவதில்லை, (6) தேர்தலுக்குச் சமமான ஜில்லாக்களாகப் பிரித்தல். இவர்கள் இந்த வேண்டுகோள்கள் நிறைவேறினால் ஏழைகளின் வறுமை நீங்குமென்று எண்ணியது தவறானது. ஆனாலும், இவர்கள் இருவகைப் பட்டார்கள். கலகம் செய்து வேண்டுகோள்களைப்பெறலாம் என்று எண்ணினது வீணாய்விட்டது. துரைத்தனத்தார் ராணுவத்தைக் கொண்டு கலகத்தை அடக்கினர். விண்ணப்ப வழியைத் தேடினவர்கள் ஓர் ஊர்வலத்துடன் விண்ணப்பத்தைப் பார்லிமெண்டு சபைக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். ஆனால் வெல்லிங்டன் பிரபு கலகம் உண்டாகுமோ என்று அஞ்சி ஊர்வலத்தை நிறுத்திவிட்டான். விண்ணப்பத்தில் அநேக பொய்க் கையெழுத்துக்களிருந்தமையால் இவ்வியக்கம் கலைந்துவிட்டது. ஆனாலும், அவர்களுடைய வேண்டுகோள்களில் அநேகம் பிற்காலத்தில் கொடுக்கப்பட்டன. (1) ஆண் பிள்ளைகள் வோட் 1867-ம் வருஷத்தில் பட்டிணத்திலுள்ள வேலைக்காரர்களும், 1884-ம் வருஷத்தில் மாகாணங்களிலுள்ள வேலைக்காரர்களும் வோட் கொடுக்கும் உரிமையை அடைந்தார்கள். 1918-ம் வருஷத்திய ஜனப்பிரதிநிதிச் சட்டப்படி 21 வயதான ஆண் பிள்ளைகளும் முப்பது வயதான பெண் பிள்ளைகளும் வோட் உரிமை அடைந்தமையால் அவர்களது வேண்டுகோள் முற்றிலும் நிறைவேறிற்று. (2) வருஷாந்திரப் பார்லிமெண்டு. 1716-ம் வருஷத்திய சட்டப்படி பார்லிமெண்டின் ஆயுள் ஏழுவருஷமாயிருந்தது. 1911-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சட்டபடி பார்லி

மெண்டின் ஆயுள் ஐந்து வருஷம் என்று ஏற்பட்டதுடன் அதற்குப் பிறகு பொதுத்தேர்தல் வரவேண்டுமென்பதும ஏற்பட்டது. வருஷாந்தரப் பார்லிமெண்டில் உண்மையிலேயே ஒரு வேலையும் நடைபெறுது. (3) 1872-ம் வருஷத்தில் ரகசிய வோட் உரிமை கிடைத்தது. இது முதல் வேலைக்காரர்கள் இவ்விஷயத்தில் எஜமானர்களுடைய இஷ்டம்போல் நடக்க வேண்டுவதில்லை. (4) 1865-ம் வருஷத்தில் பார்லிமெண்டு மெம்பர்களுக்கு ஆஸ்திப்பொறுப்பு வேண்டுவதில்லை என்று ஏற்பட்டதால் ஏழைகள் பிரதிநிதிகளாக இருப்பது சுலபமாயிற்று. (5) 1911-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சட்டப்படி மெம்பர்களுக்கு நானூறு பவுன் வருஷ உதவி கிடைக்கும்படி சட்டம் ஏற்பட்டதால் தொழிற் கட்சி மெம்பர்களுக்குக் குடும்பத்தை ரக்ஷிக்கும்வழி ஏற்பட்டது. (6) இதுவீணை வேலை, நிறைவேறிலும் பயனில்லை.

பிட் துரைத்தனச் சட்டம்.—கெனடாவில் அமைதியை உண்டாக்காமல் கலகத்தில் முடிந்தது. டர்ஹாம் பிரபு கலகத்தை அடக்கினர். அவரது உறுதிப் பத்திரிகையின்படி மறுசேர்க்கை அல்லது டர்ஹாம் சட்டம் 1840-ம் வருஷத்தில் ஏற்பட்டது. அதன்படி கெனடா எல்லா விஷயத்திலும் 'தன்னைத்தானே ஆளும்' சுயாதீனத்தை அடைந்தது.

அபின் சண்டை 1842.—சீன தேசத்தார் இந்தியாவிலிருந்து சீனவில் அபினை இறக்குமதி செய்யக்கூடாது என்று தடுத்தமையால், இங்கிலாந்து சீனவுடன் சண்டை புரிந்து ஹாங்காங் என்ற தீவை அடைந்தது. மேலும், ஐரோப்பிய வியாபாரத்திற்கு ஐந்து துறைமுகங்கள் திறக்கப்பட்டன. இங்கிலாந்தும் நாகரீகத்தைத் தழுவிச் சீனர்களை அபின் சாப்பிட வற்புறுத்துவது சரியில்லை

யென்று கண்டு, 1911-ம் வருஷத்தில் இதை மாற்றிச் சீனாவிற்குச் சிறிது சிறிதாக அபின் அனுப்புவதைக் குறைப்பது என்றும், சீனாதேசத்தவர்கள் அபின் சாகுபடியைத் தங்கள் தேசத்தில் செய்வதில்லை யென்றும் உடன்படிக்கை செய்துகொண்டது. இதனால், இந்தியத் துரைத்தனத்தாருக்கு வருமானம் குறைந்தாலும் நாகரீகத்தின் கீர்த்தி ஓங்கியது.

1841-ம் வருஷத்தில் முதல் ஆப்கானிய யுத்தம் ஏற்பட்டு ஆப்கனிஸ்தானத்தின் உள்நாட்டு விஷயத்தில் இங்கிலாந்து பிரவேசித்தது சரியில்லையென்று முடிந்தது.

மெல்போரன் பிரபு பிரதான மந்திரிப்பதவி வகித்த காலத்தில் ரோலண்டுஹில் 1840-ம் வருஷத்தில் பென்னி தபால் சீர்திருத்தத்தைச் செய்தார். தூரத்திற்குத் தக்கபடி தபால்கூலி கொடுப்பது நின்று எங்கேயும் ஒரே கூலி ஏற்பட்டதால் ஜனங்களுக்கு வந்த நன்மையைச் சொல்ல முடியாது.

பீல்மந்திரி 1841-47.—இவன் மந்திரிப்பதவி வகித்த காலத்தில் வரவுக்கு மேல் செலவாயிருந்தது. இதை எப்படிச் சரிப்படுத்துவது என்பது அவனது முதல் கவலையாயிருந்தது. மேலும், இங்கிலீஷ் வியாபாரம் ஏற்றுமதி இறக்குமதி வரிகளால் ஓங்காதது கண்டு சிறிது சிறிதாக வரிகளையெடுக்க யோசனை செய்தான். முதலில் துரைத்தனத்திற்கு நஷ்டமுண்டாக்குவது போலிருந்தாலும் முடிவில் நன்மையைப் பயக்குமென்று கண்டு, பீல் 1842-ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தைத் தயார் செய்தான். அநேக சாக்குகளின்மேல் போட்டிருந்த வரியை எடுத்து நஷ்டத்தை ஈடுபண்ணப் புது வரியை விதித்தான். நான்கு வருஷகாலத்தில் வரிகள் எடுபட்டுச் சுயேச்சை வியாபாரம்

என்ற தந்திரம் அனுபவத்திற்கு வந்தது. தான் பிரதான மந்திரிப்பதவிக்கு வந்தது வரிபோட்டு வியாபாரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்கிற கக்ஷிக்காரர்களுடைய உதவியினலேயே என்பதைத் தெரிந்தவனுயிருந்த போதிலும், பீல் கக்ஷியைவிடத் தேசத்தின் க்ஷேமம் பிரதானம் என்பதைக் கைக்கொண் டிருந்தவனுதலால் இதைத் துணிந்து செய்தான். 1844-ம் வருஷத்திய பாங்கு உரிமைச் சட்டப்படி இங்கிலாந்து பாங்கு நோட்டுக்களை வெளியிடும் உரிமையை அடைந்தது. எல்லாவற்றிலும் மேலான காரியம் 1846-ம் வருஷத்தில் தான்யச் சட்டத்தைத் தள்ளினதேயாகும். அயர்லாந்தில் 1845-ம் வருஷத்தில் உருளைக்கிழங்குப் பஞ்சம் ஏற்பட்டு, ஆயிரக்கணக்காக ஜனங்கள் மாண்டார்கள். இது ஜனங்களின் முக்கியமான ஆகாரமாயிருந்தது. வெளியூர்களிலிருந்து கிடைக்கும் மலிவான தான்யங்கள் தான்யச் சட்டப்படி இறங்கக்கூடாத நிலைமை ஏற்பட்டதால் 1846-ம் வருஷத்தில் தான்யச் சட்டத்தைத் தள்ளி ஐரிஷ்க்காரர்களின் உணவுக் கஷ்டத்தை நீக்கினுன். இப்படிச் செய்ததால் பீல் தனது கக்ஷிக்காரர்களின் மனவருத்தத்தை அடைந்து அதனுல் மறுபடியும் உத்தியோகத்திற்கு வராமலேயே இறந்தான். 1851-ம் வருஷத்தில் கப்பல் போக்குவரத்துச் சட்டமும் தள்ளப்பட்டது. இதுமுதல் இங்கிலாந்திற்கு வியாபார தந்திரத்தில் 'காவல்' என்பது போய்ச் 'சுயேச்சை வியாபாரம்' என்பது உறுதியாய் வந்துவிட்டது. கக்ஷித் துரைத்தனமும் இதைப் பொறுத்ததாகவே சிறிதுகாலம் இருந்தது. பிறகு காலக்கிரமத்தில் தேசம் 'சுயேச்சை வியாபாரத்தால்' மேலோங்கி க்ஷேமத்தை அடைந்ததால், 'காவல்' தந்திரத்தில் ஜனங்களுக்கு விருப்பமில்லாது போயிற்று. இப்போது சிலர்


இதை அனுசரித்துப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் அந்நிய தேச சாமான்கள் வராமல் தடுக்கவேண்டுமென்கிறார்கள். அந்நிய நாட்டார்களும் 'சுயேச்சை வியாபாரத்தைப்' பின்பற்றினாலொழிய இங்கிலீஷ் வியாபாரம் இத்தந்திரத்தால் குறைந்துவிடுமென்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், 'காவல்' தந்திரத்தால் சாம்ராஜ்ஜிய நாடுகளின் சேர்க்கை உறுதியாகும்.

1851-ம் வருஷத்தில் மகாராணியின் புருஷனான ஆல்பர்ட் ராஜகுமாரனது முயற்சியால் ஒரு பெரிய கண்காக்ஷி ஏற்பட்டு, அதினால் வியாபாரத்தை விருத்திசெய்யும் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது முதல் அநேகர் உலகத்தில் சண்டைகள் நின்று அமைதிக்காலம் வந்துவிட்டது என்று எண்ணிவந்தார்கள்.

க்ரிமியாப்போர், 1854-56.-பத்தொன்பாவது நூற்றாண்டின் மத்தியில் ருஷியா, கிறிஸ்தவர்களைக் காப்பாற்றும் கடமையை விட்டுவிட்டுத் துருக்கியைப் பிடித்துத் தனது ராஜ்ஜியத்துடன் சேர்த்துக்கொள்ள யோசனை செய்தது. இதைக் க்ளாட்ஸ்டன் வார்த்தைகளினால் 'கோணிப்பையும் சாமான்களும்' என்கிற தந்திரம் என்று சொல்லலாம் இவ்வெண்ணம் நிறைவேறினால் ருஷியாவின் அதிகாரம் ஓங்கி இந்தியாவுடன் நடந்துவரும் இங்கிலீஷ் வியாபாரத்திற்கு அபாயம் நேரிடும் என்று இங்கிலாந்து எண்ணியது. மேலும், ஐரோப்பாவின் அமைதிக்கு, ருஷியாவின் அதிகாரம் கெடுதலை உண்டாக்குமென்று அநேகர் பயந்தனர். இப்படித் துருக்கியின் மேல் ருஷியாகொண்ட எண்ணத்தைத் தடுப்பது ஐரோப்பாவிலுள்ள நாடுகளின் முக்கிய கடமையாக ஏற்பட்டதால் இது 'நெருங்கிய கிழ்த்திசை நோக்கிய விஷயம்' என்று சரித்திரங்களில் சொல்லப்படுகின்றது. ஒரு நாள் ருஷியா சக்கரவர்த்தி பிரிட்டிஷ்தூத

னுடன் சம்பாஷித்ததிலிருந்து இவ்வெண்ணம் நன்கு புலப்பட்டது. 'இங்கு ஒரு நோயாளி இருக்கிறன்; அவனுடைய மரணச் சடங்குகளை இங்கிலாந்து எகிப்தை எடுத்துக் கொள்வதாலும், ருஷியா கான்ஸ்டாண்டிநோபிலைக் கைவசம் செய்துக்கொள்வதாலும் முடித்துவிடலாம்' என்பது ருஷியாச் சக்கரவர்த்தி சொல்லியதன் சாரம். பிரான்சின் மன்னன், தன்னை அங்கீகரிக்கவில்லை யென்று கோபங்கொண்டு ருஷியாவுடன் போர்புரிய நிச்சயித்தான். துருக்கியிலுள்ள கிறிஸ்தவர்களைத் தனது ஆளுகையில் விடும்படி ருஷிய சக்கரவர்த்தி கேட்க, இங்கிலாந்தும் பிரான்சும் துருக்கியை அதற்கு இணங்காமல் இருக்கும்படி செய்து ருஷியாவுடன் சண்டையை ஆரம்பித்தன. இப்போர் க்ரிமியா தீபகல்பத்தில் நடந்ததால், இதற்கு க்ரிமியாப்போர் என்பது பெயர் 1853-ம் வருஷத்தில் துருக்கியின் கப்பற்படை ஸைநாப்பிற்குச் சமீபத்தில் கருங்கடலில்தோல்வியுற்றது. இங்கிலாந்தும், பிரான்சும் சண்டைக் கப்பல்களைக் கருங்கடலுக்கு அனுப்பி ருஷியாவின் யுத்த ஆயுத சாலையாகிய சிபாஸ்டபுலைப்(Sebastapol) பிடித்துவிட்டால் போர் சீக்கிரம் முடிந்துவிடுமென்று அதை நிறைவேற்ற ஏற்பாடுசெய்தன. இங்கிலீஷ்த் தளகர்த்தனை ராகலன் பிரபு, ஆல்மாவில் ருஷியத் துருப்புகளைத் தோற்கடித்தான். சிபாஸ்டபுலை சேர்க்கைச் சைன்யம் முற்றுகைபோட்டது. இதை விடுவிக்க ருஷியர்கள் பாலக்லாவா (Balaclava) வில் இங்கிலீஷ்காரர்களை எதிர்த்தார்கள். இங்கிலீஷ் குதிரைப் படைகள் ருஷியர்களை இரண்டு இடங்களில் முறியடித்துத் தங்களுடைய வீரத்தை வெளிப்படுத்தின. மேல் உத்தியோகஸ்தர் அனுப்பின உத்தரவை நன்கு தெரிந்து கொள்ள முடியாமல் தவருய்ச் சில இங்கிலீஷ்ப் படை வீரர்கள் ருஷியர்களை எதிர்க்கப் பெரும்பான்மையோர்

மாண்டனர். டென்னிஸன்கவி இவர்களுடைய செய்கையைச் செய்யுளில் எழுதியிருக்கிறார். அடுத்த வருஷத்தில் ருஷியர்கள் இங்கர்மனில் தோல்வியடைந்தார்கள். மேல் உத்தியோகஸ்தரின் உத்தரவு இல்லாமல் இங்கிலீஷ்க் காலாட்படை சண்டைசெய்து ஜயம் பெற்றதால் இதைக் 'காலாட்படைச் சண்டை' என்று கூறலாம். அதற்குள் சிபாஸ்டபுலும் இங்கிலீஷ்க்காரர்கள் வசமாகியது.




க்ரிமியாப்போர்.

இப்போர் விஷயமாய் ஒன்று கவனிக்கத் தகுந்தது. 'டைம்ஸ்' பத்திராசிரியனான ரஸ்ஸல் (Russell) நோயாளிகளும் காயமுற்றவர்களுமான இங்கிலீஷ்த் துருப்புக்கள் ஸ்குடாரி ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளால் நன்கு கவனிக்கப்

படாமையால் அவர்கள் நூற்றுக்கணக்காக இறக்க நேர்ந்தது என்ற விஷயத்தை இங்கிலாந்திற்குத் தெரிவித்தான். மேலும், க்ரிமியாவில் மாரிக்காலம் கடுமையாகிப் பொறுக்க முடியாத குளிராயிருந்தும் சரியான ஊண் உடைகள் இல்லாமையாலும் துருப்புக்கள் மாண்டன. அபர்டீன் ராஜீநாமாக்கொடுத்துப் பால்மர்ஸ்டன் (Palmerston) பிரபு பிரதான மந்திரிப்பதவியை வகித்துச் சண்டையை நன்கு நடத்தினன். ப்ளாரன்ஸ் நைடிங்கேல் முப்பது தாதிகளுடன் ஸ்குடாரிக்குச் சென்று நோயாளிகளைச் சரியாகக் கவனித்தாள். இவள் நடுவிரவில் விளக்குடன் சென்று நோயாளிகளைப் போஷித்தமையால் இவளுக்கு 'விளக்குப் பெருமாட்டி.' என்று ஜனங்கள் பேரிட்டார்கள்.

1856-ம் வருஷத்திய பாரிஸ் சமாதானத்தின்படி துருக்கியின் ராஜ்ஜியத்தை ஒருவரும் அபேக்ஷிக்கக்கூடாத நிலைமை ஏற்பட்டது. எல்லாருக்கும் கருங்கடலில் புகும் பாத்தியம் ஏற்பட்டது. சண்டைக்கப்பல்கள் டார்ட்னல்ஸ் வழியாய்ச் செல்லக்கூடாது என்பதும் ஏற்பட்டது. இங்கிலீஷ்க்காரர்கள் சமுத்திரத்தில் அந்நியக்கப்பல்களைப் பரிசோதிக்கும் உரிமை விடுபட்டது.

2. சீனயுத்தம் 1856.—இங்கிலீஷ்க்காரர்கள் தங்களது கொடியுடன்சென்ற கப்பலைச் சீனர்கள் தடுத்துவிட்டதால் அத்தேசத்துடன் போர்புரிந்தார்கள். சமாதானம் உண்டாக அதன்படி அந்நிய தேசத்தார்களும், கிறிஸ்தவப் பாதிரிகளும் சீனவில் செல்லலாம் என்பது ஏற்பட்டது.

1857-ம் வருஷத்தில் இந்தியாவிலே பெரிய சிப்பாய் கலகம் ஏற்பட்டு அதுவும் சீக்கிரத்தில் அடங்கிற்று. 1858-ம் வருஷம் முதல், இந்தியா மகாராணியின் நேர் ஆளுகையில் வந்துவிட்டது.

1859-ம் வருஷத்தில் பால்மார்ஸ்டன் இரண்டாவது முறை பிரதான மந்திரிப்பதவியை வகித்தான். இவன் நாளில் இட்டெலி, சர்டீனியாவின் அரசன் கீழ்வந்தது. அமெரிக்காவில் பெரிய உள்நாட்டுப் போர் ஏற்பட்டு அதில் இங்கிலீக்காரர்களின் அனுதாபம் தென் நாட்டார் பக்கமாக இருந்தது. இவர்கள் அடிமை முறை இருக்கவேண்டுமென்று சொல்லிவந்தபோதிலும், இங்கிலாந்திற்குப் பஞ்சு அனுப்புபவர்களாயிருந்தார்கள்; ஆனால் அவர்களை அப்படிச் செய்யா வண்ணம் வட நாட்டார் தடுத்துவந்தார்கள். இங்கிலீஷ்க் கப்பலில் சென்ற தென் நாட்டுத தூதர்களை வட நாட்டார் பிடித்தது நடுநிலைக்கு விரோதமாதலால் இங்கிலாந்திற்கு வட நாட்டார் ஈடு கொடுத்தனர். இங்கிலிஷ்க்காரர்கள் 'அலபாமா' என்ற கப்பலைக் கட்டிக் கொடுப்பதாகத் தென் நாட்டாருடன் சண்டைக்குமுன் ஒப்புக்கொண்டிருந்தார்கள். அதனால் சண்டைக் காலத்தில் அது உதவும்படி அனுப்ப வட நாட்டாருக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் இங்கிலாந்து பின்பு அந்த நஷ்டத்தை ஈடு செய்தது. இங்கிலாந்திற்கு வேண்டிய பஞ்சு அமெரிக்காவிலிருந்து வராததால் லாங்காஷயருக்கு பஞ்சு கிடைக்கவில்லை. ஆகையால், ஆலைகள் மூடப்பட்டு வேலையாட்களுக்கு வேலை கிடைக்கவில்லை. இதற்குத்தான் லங்காஷயர் பஞ்சுப் பஞ்சம் என்று பெயர். இந்தியாவிலிருந்து பஞ்சு செல்லும்படியிருந்ததால் பஞ்சு வியாபாரிகள் பணக்காரர் ஆனார்கள்.

## ஞாபகக் குறிப்பு.

### முக்கியத் தேதிகள்.

(1) ரோலெண்டு ஹில் பென்னி தபால் ... 1840
(2) தான்னியச் சட்டம் தள்ளுபடியானது... 1846

(3) பெரிய கண்காட்சி ... 1851
(4) பாலக்லாவாச் சண்டை ... 1854
(5) பாரிஸ் சமாதானம் ... 1856

## முக்கியச் செய்திகள்.

சர் ராபர்ட் பீல் (1788-1850)-இவன் லங்காஷயரில் ஒரு பஞ்சு ஆலைக்காரனின் மகன். பீல் புத்திசாலித்தன முள்ளவனாகவும், உணர்ச்சி யுள்ளவனாகவும், தனக்கு எது நியாய மென்று படுகிறதோ அதன்படி நடத்தும் தைரியம் பொருந்திய குணமுள்ளவனாகவு மிருந்தான். லண்டன் போலீஸ்படையைக் கண்டு எல்லோரும் மகிழும்படி யிருப் பது இவன் செய்த ஏற்பாட்டால்தான். ஆகையால்தான் போலீஸ்காரர்களை (Bobby) என்றும், பீலர் என்றும் சொல்லுகிறார்கள். க்ரிமினல் சட்டங்களைச் சீர்திருத்தம் செய்து காதொலிக்குகளின் குறையைப் பீல் நீக்கினான். விக்டோரியா மஹாராணி காலத்தில் உணவுத்தானியங் களின் விலை உயர்ந்திருந்து ஏழைகள் கஷ்டத்தை அனுபவித் துக்கொண்டிருந்தபோது இவன் இறக்குமதி வரியைத் தள்ளிச் சுயேச்சை வியாபாரத் தந்திரத்தைஏற்படுத்தினான். இவன் செர்மென்ஸி கக்ஷியாயிருந்த போதிலும் ஜனங்க ளின் க்ஷேமம் பெரிதே ஒழிய கக்ஷிபெரிதல்ல என்று எண்ணின சிறந்த மந்திரியாயிருந்தவன்.

2. தபால். முதலாவது-சார்லஸ் நாளில் துரைத்தனத் தார் செய்திகளைச் சேவகர்கள் குதிரை மூலமாய்க்கொண்டு போக ஏற்பாடு செய்திருந்தார். குதிரையைக் குறித்த இடங்களில் மாற்றவேண்டி யிருந்ததால் போஸ்ட் (அல்லது இடம்) என்று அதற்கும் பெயர் வந்தது. வர வர வியாபாரி களும் இதனுடைய உபயோகத்தை அடைந்தார்கள். 1710-ம் வருஷத்தில் போஸ்ட் ஆபீஸுகளும் ஏற்பட்டன.

தூரத்திற்குத் தகுந்தபடி கூலி ஏற்பட்டிருந்தது. 1840-ம் வருஷத்தில் தூரத்தைக்கவனிக்காமல் ஒரே கூலிக்குத் தபால் செல்வது ஏற்பாட்டிற்குவந்தது. குதிரையிலிருந்து அஞ்சல் வண்டி, ரெயில், கப்பல், ஆகாசவிமானம் முதலியவைகளில் செல்லும் வழக்கம் படிப்படியாய் வந்தது.

3. ப்ளாரேன்ஸ் நைடிங்கேல் (1820-1910).-க்ரிமியா போரில் காயமுண்ட ராணுவ வீரர்களை ஸ்குடாரி ஆஸ்பத்திரியில் இன்னும் அநேக பெண் பிள்ளைகளுடன் போஷித்து உயிரைக் காப்பாற்றினாள். இவள் இரவில் விளக்குடன் தன்னுடைய வேலையைக் கவனித்தமையால் இவள் 'விளக்குப் பெருமாட்டி' என்ற பேரை அடைந்தாள்.

4. தொழிற்சாலைச் சட்டங்கள்.—1833-ம் வருஷத்தில் ஏற்பட்ட சட்டம் பஞ்சு ஆலைகளில் வேலைசெய்யும் குழந்தைகளைப்பற்றிய ஒன்பது வயதிற்குக் கீழுள்ள குழந்தைகளை வேலையில் அமர்த்தக்கூடாது ; அதற்கு மேற்பட்டவர்களுக்கும் வேலை நேரம் நிபந்தனையில் வந்தது. 1842-ம் வருஷத்தில் சுரங்கங்களில் குழந்தைகளையும், பெண்பிள்ளைகளையும் வேலை செய்யவிடலாகாது என்று சட்டம் ஏற்பட்டது. 1847-ம் வருஷத்தில் ஏற்பட்டது எல்லாவற்றிலும் முக்கியமானதாகும். 18 வயதுக்குக் கீழ்பட்ட பையன்களுக்கும் பெண்களுக்கும் வேலை செய்யும் நேரம் குறைக்கப்பட்டது. இதனால் மனிதர்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பிறகு வேலைசெய்யும் நேரம் குறைக்கப்பட்டது.

5. காப்பாற்றுவதும் சுயேச்சை வியாபாரமும்.—க்ராம்வெல் கப்பல் தொழிலை, சட்டத்தால் காப்பாற்றினான். மற்றச் சாமான்களுக்கு ஏற்றுமதி இறக்குமதி வரிகள் ஏற்பட்டிருந்தன. இப்படிக் காப்பால் என்ற தந்திரத்திற்கு ஆக்ஷேபனைகள் உண்டு. தொழில் கட்சிக்காரர்கள்

அந்நியர்களின் போட்டியில்லாததால் சாமான்களை மலிவாக வும் சாதாரண ஜனங்களுக்கு வேண்டிய மாதிரியாகவும் செய்யாமலிருந்தார்கள். மேலும், திருட்டுத்தனமாய் வரி கொடுக்காமல் சாமான்களை உள்நாட்டில் கொண்டுவருவதும் அதிகமாயிருந்தது.

சுயேச்சை வ்யாபரம்.—உணவுதானிய ஏற்பாட்டால் அநேக நிலக்காரர்கள் நஷ்டமடைவார்கள் என்று பயந்தார்கள். ஏனெனில் மற்றத் தேசத்தாரைப்போல் உணவுத்தானியத்தை மலிவான விலைக்கு விற்பது முடியாத காரியமாகும். சண்டைக் காலத்தில் தானிய சாகுபடி இல்லாவிடில் தேசம் கஷ்டப்படும். ஆனால் 1846-ம் வருஷத்தில் தானியவரி முதலான வரிகள் எடுப் பட்டதால் பஞ்சம் நின்றது; வியாபாரம் மேலோங்கியது. இதனால் இங்கிலாந்து சுயேச்சை வியாபாரத்தைக் கைகொண்டிருக்கிறது.

6. 1851-ம் வருஷத்திய பெரிய கண்காக்ஷி மஹாரா ணியின் புருஷன் முயற்சியால் ஏற்பட்டது. தொழிலுக்கும் வியாபாரத்திர்க்கும் மேலோங்க இஃது ஓர் ஆரம்பமா யிருந்தது. 1924-ம் வருஷத்தில் வெம்பளியில் ஏற்பட் டது பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கு மட்டிறாகும்.

7. இந்தியா.—1840-ம் வருஷத்தில் முதல் ஆப்கானி யர் யுத்தம் நடந்தது. இதனால் ஆப்கானிஸ்தானத்தின் உள்நாட்டுவிஷயங்களில்பிரவேசிப்பது பிசகு என்று இங்கி லாந்து தெரிந்துகொண்டது. 1857-ம் வருஷத்தில் பெரிய சிப்பாய்க் கலகம் ஏற்பட்டு இந்தியா மகாராணியின் ஆளுகை யின் கீழ்வந்தது.

## கேள்விகள்.

(1) ஜனங்களின் உரிமைப்பத்திரம் என்றால் என்ன? அவர்கள் வேண்டுகோள்களில் எவ்வளவு நிறைவேறிற்று?

(2) 1815-ம் வருஷத்தில் ஏன் தானியச்சட்டம் ஏற்பட்டது?

(3) 1846-ம் வருஷத்தில் தானியச்சட்டம் எந்தச் சந்தர்ப்பத்தில் எடுபட்டது?

(4) பீல் செய்த முக்கியமான நன்மைகளைச் சொல்லுக.

(5) க்ரிமியாப்போரின் காரணம் யாது? அதன் முடிவைச் சொல்லுக.

(6) பால்மெர்ஸ்டன் பிரபுவின் வெளியூர் விஷயத் தந்திரத்தைப்பற்றிச்சொல்லுக.

---

## பதினாறுவததிகாரம்.

## டர்பிப்பிரபு.

பால்மெர்ஸ்டனுக்குப் பிறகு டர்பி பிரபு பிரதான மந்திரியானார். டிஸ்ரேலி (Disraeli) 1867-ம் வருஷத்தில் இரண்டாவது பார்லிமெண்டுச் சீர்த்திருத்தச் சட்டத்தைச் செய்து பட்டிணத்திலுள்ள வேலைக்காரர்களுக்கு வோட் கொடுக்கும் உரிமையைக் கொடுத்தான். இவற்றால் ஜன நாயகம் ஆரம்பித்துவிட்டதாகச் சொல்லலாம்.

**டிஸ்ரேலி முதன் முறையாகப் பிரதானமந்திரிப் பதவி வகித்தது.**—அபிசீனியாவில் இங்கிலீஷ்க்காரர்களை அத்தேசத்து அரசன் சிறை பிடித்தனன். இவர்களை விடுவிக்க நேபியர் என்பவன் சென்று மகடாலாவைத்தாக்கி இங்கிலீஷ்க்காரர்களை விடுவித்தான். அயர்லாந்தில் சதியோசனைக் கூட்டங்கள் ஏற்பட்டுப் படுகொலைகள் நடந்துவந்தன. அமெரிக்காவுக்குச் சென்ற ஐரிஷ்க்காரர்கள் கொடுமைச்


செயல்களைச் செய்தாவது அயர்லாந்து சுயாதீனத்தை அடையவேண்டுமென எண்ணங்கொண்டார்கள். இவர்களைப் பெனியன்ஸ் (Fenians) என்று கூப்பிடுவார்கள். அதன் பொருள் 'என்னைத் தனிமையாய் விடு' என்பதாகும், குற்றங்களை நிறுத்த அடக்குமுறைச் சட்டங்கள் ஏற்பட்டும் பயினில்லாதது கண்டு க்ளாட்ஸ்டன் ஐரிஷ்க்காரர்களின் குறைகளை நீக்க நிச்சயித்தான்.

இக்காலங்களில் ராஜ்ஜியதந்திரம் செய்துவந்த மந்திரிகளுக்குள் க்ளாட்ஸ்டன், டிஸ்ரேலியைவிட உயர்ந்தவர்களாக ஒருவரையும் சொல்லமுடியாது. அவர்கள் தங்களுடைய கக்ஷிக்காரர்களால் மிகவும் மெச்சிக்கொள்ளப்பட்டார்கள்; மேலும் தேசத்தின் நன்மையையும் மேற்கொண்டு நடந்துவந்தார்கள். இவர்களுக்குள் போட்டி ஏற்பட்டதால் ஜனங்கள் தேசத்தின் க்ஷேமத்தை நன்கு அறியும்படி நேர்ந்தது. டிஸ்ரேலி தன்னுடைய முயற்சியினாலேயே முன்னுக்கு வரவேண்டியிருந்தது. ஆனால், க்ளாட்ஸ்டனுக்கு ராஜீய விஷயங்களில் புக அநேக சவுகரியங்கள் இயற்கையாகவே இருந்தன. டிஸ்ரேலி 'சுயேச்சை வியாபாரத்தை' எதிர்த்துப் பீலுக்கு விரோதமாக ஒரு கக்ஷியைக் கூட்டினான். க்ளாட்ஸ்டன் முதலில் பீலுடன் இருந்து பிறகு பால்மர்ஸடனுடன் 1859-ம் வருஷத்தில் விக் கக்ஷியில் சேர்ந்தான். 1852-ம் வருஷத்தில் வரவு செலவு திட்ட விஷயமாய் இருவருக்கும் பெரிய விவாதம் நடந்தது முதல் இருவர்களும் பின்பு நேசமாக இருப்பது அசாத்தியம் என்பது திண்ணமாயிற்று. முதலில் டிஸ்ரேலி விக் கக்ஷியிலும், க்ளாட்ஸ்டன் கன்சர்வெடிவ் கக்ஷியிலுமிருந்தாலும் அவர்களுடைய அனுபவத்திலிருந்து பின்னர் அவர்கள் கக்ஷி மாறும்படி நேர்ந்தது. 1867-ம் வருஷத்தில் டிஸ்ரேலி கன்சர்வெடிவ் கக்ஷியின் பிரதான

மந்திரியாகவும் ஒரு வருஷத்திற்குப் பிறகு க்ளாட்ஸ்டன் லிபரல் கக்ஷித்தலைவனுகிப் பிரதான மந்திரியாகவும் இருக்க நேர்ந்தது. இவர்களின் வித்தியாசம் என்னவெனில் டிஸ்ரேலி வெளியூர் விஷயங்களில் விசேஷகவனம் செலுத்தியவன். க்ளாட்ஸ்டன் உள்ளூர் விஷயங்களே பிரதானம் என்று எண்ணி வந்தவன். டிஸ்ரேலி இங்கிலாந்தின் பெருமை அதிக நாடுகளை வைத்திருப்பதினுல்தான் என்று கொண்டு கூடிய வரையிலும் அதிக நாடுகளை இங்கிலாந்தின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவர வழிதேடினுன். க்ளாட்ஸ்டன் 'ராஜ நீதி என்பது கடவுளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட கடமையாகும்' என்று எண்ணி ஜனங்களுடைய குறைகளை நீக்கிச் சீர்திருத்தத்தினுல் க்ஷேமத்தைக்கொண்டுவர முயன்றுன். இவனுடைய மனத்திற்கு நெருங்கிய விஷயம் நான்காகும். மதஸ்தாபனம், ராஜீயத்தில் குறைவான செலவு, அமைதி, அயர்லாந்து என்பன. சுருக்கமாய்ச் சொல்வோமானுல் டிஸ்ரேலியை விட அந்நியநாட்டு மந்திரிகளில் பிரசித்தி பெற்றவன் எவருமில்லை. அதுபோலவே க்ளாட்ஸ்டனை உள் நாட்டு விஷயங்களில் உயர்ந்த மந்திரி என்று சொல்ல ஆக்ஷேபனையில்லை.

க்ளாட்ஸ்டனின் முதல் மந்திரிப் பதவி 1868-74 அயர்லாந்து விஷயத்தை க்ளாட்ஸ்டன் கவனிக்க ஆரம்பித்தான். இங்கும் அவன் முதலில் மத விஷயத்தையும், இரண்டாவதாக நிலத்தையும், மூன்றுவதாகச் சுயராஜ்ஜியத்தையும் பற்றி யோசனை செய்தான். 1800-ம் வருஷம் முதல் அயர்லாந்து இங்கிலீஷின் மதஸ்தாபனத்தை ஆதரிக்க வேண்டியிருந்தது. பெரும்பான்மையோர் காதோலிக் மதஸ்தர்களானபடியால் இராஜாங்க வரும்படியைக்கொண்டு மதஸ்தாபனத்தை ஆதரிப்பது சரியில்லையென்று கண்டு மதத்தை ராஜீய விஷயத்திலிருந்து பிரித்து

அதற்குச் செலவு செய்துவந்த பணத்தை மற்றப் பொதுஜன நன்மைக்கு உற்ற காரியங்களுக்கு உபயோகப் படுத்தினன். 1870-ம் வருஷத்தில் ஐரிஷ் முதல் நிலச் சட்டத்தைச் செய்து நிலக்காரர்கள், குடியானவர்கள் நிலங்களை விருத்தி செய்ததற்கு ஈடு பண்ண வேண்டுமென்றும் நிலத்தை விட்டு விலக்கும் பக்ஷத்தில் அவர்கள் சரியான காலத்தில் நிலக்காரர்களுக்கு அறிக்கை கொடுக்கவேண்டுமென்றும் ஏற்படுத்தினன். ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளில் பெரிய படிப்பிற்குக் காதொலிக்குகளுக்குப் போதிய அனுகூலங்கள் இல்லாமையைக் கண்டு நிர்ப்பந்தங்களை நீக்கினன். 1870-ம் வருஷத்தில் ஆரம்பக்கல்வி கற்பதைக் கட்டாயப்படுத்தி ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையில் குழந்தைகள் கற்பதை வற்புறுத்தினன். இந்த ஏற்பாட்டின் கீழ் ஸ்கூல்போர்டுகள் ஏற்பட்டன. 1872-ம் வருஷத்தில் ரகசிய வோட்டுக்கொடுக்கும் உரிமை



கிளாட்ஸ்டன்.

அளிக்கப்பட்டது. ராணுவ விஷயமாய்ச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி, இருந்த கெடுதல்களை நீக்கி, அநேகர் ராணுவப் பழக்கம் அடைய வழிதேடினான். வியாபார ஐக்கியச் சங்கங்களைச் சட்டப்படி அங்கீகரித்தான். இவனுடைய துர்அதிர்ஷ்டம் அயர்லாந்து விஷயத்தில் கைவைத்தது. இவனுடைய விரல்களில் தீப்பற்றி எரியலாயிற்று. 1874-ம் வருஷத்தில் அயர்லாந்தில் காதொலிக்குகளுக்கு ஒரு சர்வ கலாசாலையை ஏற்படுத்த முயன்றது நிறைவேறாததால் பொதுத்தேர்தலில் டிஸ்ரேலி இரண்டாவது முறையாக மந்திரிஸ்தானத்தை வகிக்கலானான்.

வெளியூர் விஷயத்தில் ஐரோப்பாவில் பிரான்சுக்கும், பிரஷ்யாவிற்கும் ஒரு போர் ஏற்பட்டது. 1871-ம் வருஷத்தில் பாரிஸ் முற்றுகை போடப்பட்டு முடிவில் பிரான்சு இரண்டு ஜில்லாக்களைப் பிரஷ்யாவிற்குக் கொடுக்கும்படி நேர்ந்தது. இங்கிலாந்து பெல்ஜியத்தின் வழியால் ஜர்மன் சைன்யம் செல்லக்கூடாது என்று சொல்லிற்று. பிரஷ்யாவும் இதற்குட்பட்டது. இப்போர்முதல் பிரஷ்யா ஜர்மன் சாம்ராஜ்ஜியத்திற்கு ஆதிமூலமாய் நின்றது.

டிஸ்ரேலி 1874—80.—1869ம் வருஷத்தில் சூயஸ் கால்வாய் வெட்டிமுடிந்தது. இந்தியாவிற்குப் போகும் மார்க்கம் இதுவானதால் டிஸ்ரேலி இதை அறிந்து 1875-ம் வருஷத்தில் சூயஸ் கம்பெனியிலுள்ள எகிப்து அரசனுடைய பங்குகளை வாங்கினான். 1877-ம் வருஷத்தில் மகாராணி இந்தியாச் சக்கரவர்த்தினி என்கிற பட்டம் தரித்த வைபவத்தை டில்லியில் பெரிய உற்சவமாகக் கொண்டாடியது இந்திய ஜனங்களுக்கும், சிற்றரசர்களுக்கும் ஒரு மதிப்பை உண்டாக்கியது. இந்தியாவில் இரண்டாவது மூன்றாவது ஆப்கானிய யுத்தங்கள் நடந்தன. தென் ஆப்பிரிக்காவில் சூலுயுத்தம் நடந்து

சூலுக்களும், இங்கிலாந்தின் ஆளுகையின் கீழ்வந்தார்கள். எகிப்தில் இருதலைத் துரைத்தனம் ஏற்பட்டு இங்கிலாந்தின் அதிகாரமும் பரவ ஆரம்பித்தது. மேற்கண்டவைகளைக் காட்டிலும் மேலானது எதுவெனில் பர்லின் உடம் படிக்கையை முடித்து மதிப்புடன் சமாதானத்திற்குக் கொண்டுவந்த விஷயம்தான்.

**பால்கன் கலகம்.**-1875-ம் வருஷத்தில் துருக்கி, தனக்குக் கீழ்ப்பட்ட கிறிஸ்தவ மாகாணங்களைக் கொடுமையாய் நடத்தியதும், பல்கேரியாவில் நடந்த கலகத்தில் துருக்கியின் ராணுவங்கள் நடத்தின அநீதியான காரியங்களும் ஐரோப்பாவிலுள்ளவர்களுக்குத்த துயரத்தை உண்டாக்கின. ருஷியா துருக்கியில் இருக்கும் கிறிஸ்தவப் பிரஜைகளைக் காப்பாற்றும் உரிமையைக் கொண்டாடிக்கொண்டு துருக்கியைக் காரணம் சொல்லும்படி கேட்டது. ருஷியாவின் உள் எண்ணம் யாருக்கும் தெரிந்தது. இது துருக்கியைத் தனது வசமாக்கிக்கொள்ளச் செய்யும் ஒரு வழியே ஒழிய வேறில்லை. டிஸ்ரேலி, கிறிஸ்தவர்களைத் துருக்கி நடத்துவது சரியாக இல்லை என்று உணர்ந்தும், வழக்கம்போல் துருக்கியின் சார்பாகவே இருந்தான். க்ளாட்ஸ்டன் பல்கேரியாவில் நடந்த கொடுமைகளை எல்லா இடங்களிலும் பிரசங்கம் செய்து துருக்கியை ஐரோப்பாவை விட்டுக் 'கோணிப்பைச் சாமான்களுடன்' துரத்தவேண்டுமென்றான். இஃது இப்படியிருக்க, ருஷியா துருக்கியின்மேல் படையெடுத்தது கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அருகில் அதனுடைய துருப்புக்களும் சென்றன. சான் ஸ்டிபானோ உடன்படிக்கையும் 1878-ம் வருஷத்தில் முடிந்தது. ருஷியாவுடன் சண்டைக்குச் செல்லவேண்டுமென்பது இங்கிலாந்தில் அநேகருடைய வேண்டுகோளாக இருந்தது. இதுமுதல் சண்டைக் கக்ஷிக்காரர்களுக்கு 'ஜிங்கோ' என்ற

பேர் வந்தது. டிஸ்ரேலி சண்டையை விலக்கிச் சான்ஸ் டிபானே உடன் படிக்கையை ஐரோப்பாவி லுள்ளவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொல்லி ஜர்மனி யின் தலைநகரில் ஒரு மகாசபை யைக்கூட்டினான். பிஸ்மார்க் அக்கி ராசனாதிபதியா யிருக்கப் பர்லின் உடன் படிக்கை 1878-ம் வருஷத் தில் முடிந்தது. அதன்படி ருமே னியா, சர்வியா, மாண்டி நிக்ரோ என்பன சுயாதீனத்தை அடைந்தன. பாஸ்னியாவும் ஹெர்சகோவினாவும் ஆஸ்திரியாவின்கீழ்க் கொண்டுவரப் பட்டன. இங்கிலாந்திற்குச் சைபரஸ் தீவும் கிடைத்தது. இப்படி டிஸ்ரேலி மதிப்புடன் சமாதானத்தைச் செய்து கொண்டு இங்கிலாந்திற்குத் திரும்பினான்.



டிஸ்ரேலி.

**க்ளாட்ஸ்டனின் இரண்டாவது முறை மந்திரி பதவி 1880-85.**-பொதுத் தேர்தலில் லிபரல் கக்ஷித்தலைவன் இரண்டாம் முறை பிரதான மந்திரியானான். தென் ஆப்பிரிக்காவில் உள்ள போயர்கள் சூலுபயம் நீங்கியதும் இங்கிலாந்திற்கு

விரோதமாய்க் கலகம்செய்து 'ராணிக்குட்பட்ட' சுயாதீனத்தை அடைந்தார்கள். எகிப்தில் இருதலைத்துரைத்தனத்திற்கு விரோதமாய்க் கிளம்பின அரபி டெல்லகெபிரில் தோல்வியடைந்தான். எகிப்திலும் இங்கிலீஷ் சைன்னியம் காவலாக ஏற்பட்டது. சூடானில் கிளம்பிய மகடி ராஜ்ஜியத்தைத் தனக்குச் சுயாதீனப்படுத்திக்கொண்டான். உள்நாட்டு விஷயத்தில் மாகாணங்களில் உள்ள விவசாய வேலைக்காரர்களுக்கு 1884-ம் வருஷத்திய மூன்றுவது பார்லிமெண்டுச் சீர்த்திருத்தச் சட்டப்படி வோட்கொடுக்கும் உரிமை கிடைத்தது. அயர்லாந்திற்கு இரண்டாவது நிலச்சட்டத்தை ஏற்படுத்தி நியாதிபதிகள் குத்தகையை விதிக்கச் செய்தான். வெளியூர்த் தந்திரத்தை ஜனங்கள் ஒப்பாததால் பொதுத் தேர்தலில் கன்செர்வெடிவ்-கக்ஷி அதிகாரத்திற்கு வந்தது. சாலிஸ்பரி பிரதான மந்திரிப்பதவியை யடையச் சீக்கிரத்தில் க்ளாட்ஸனும் மூன்றுவதுமுறையாகப் பிரதான மந்திரிப்பதவியை அடைந்தான். 1886-ம் வருஷத்தில் அயர்லாந்தின் குறையை நீக்கக் க்ளாட்ஸ்டனுக்கு ஒரே ஒரு வழி தான் உண்டு என்பது தோன்ற, அவனும் சுயராஜ்ஜிய உரிமையைக்கொடுக்கத் தீர்மானித்தான். முதல் சுயராஜ்ஜியம் மசோதாவைக் கொண்டுவந்ததும் இவன் கக்ஷிக்காரர்களுக்கே விருப்பமில்லாதிருந்ததால் க்ளாட்ஸ்டன் ராஜிநாமாக்கொடுத்தான். இதுமுதல் இங்கிலாந்தில் சுயராஜ்ஜிய கக்ஷியென்றும், சேர்க்கைக் கக்ஷியென்றும் கக்ஷிகள் இரண்டாகப் பிரியலாயின.

**சாலிஸ்பரியின் இரண்டாவது முறை மந்திரிப்பதவி 1886-92.**—இவன் காலத்தில் மகாராணி ஆளுகையில் 50 வருஷம் முடிந்த உற்சவம், (1887-ம் வருஷத்தில்) வெகு சந்தோஷத்துடன் கொண்டாடப்பட்டது. 1870-ம் வருஷத்திய கட்டாய ஆரம்பப் படிப்புச் சட்டம் குழந்தை

களை வாசிக்கும்படி கட்டாயப் படுத்திற்று. புதுச்சட்டம் சம்பள மில்லாமல் கற்கும் வழியைக் காட்டியது. அயர்லாந்துக்குப் பிரதான காரியதரிசியாகப் பால் போர் இருந்து வந்தான். அடக்குமுறை சட்டம் ஏற்பட்டுத் தேசமும் அமைதியாயிருந்தது ஆனால், ஒரு விஷயம் ஞாபகத்தில் வைக்கத்தகுந்தது. கன்சர்வேடிவ் கக்ஷியின் எண்ணம்ஐரிஷ் குடியானவர்களைச் சிறிதுசிறிதாக நிலச் சொந்தக்காரர்களாகச் செய்தால் அயர்லாந்தில் திருப்தி ஏற்படுமென்பது. ஏற்கனவே சில கலகக்காரக் கூட்டத்தார் அயர்லாந்துக் காரியதரிசியைக் கொன்று விட்டனர். 1887-ம் வருஷத்தில் 'டைம்ஸ்' பத்திரிகை இக் கொலையைப்பற்றி எழுதுங்கால் ஐரிஷ் கக்ஷித்தலைவனை பார்நெல் இதனை அங்கீகரித்து எழுதின கடிதத்தைப் பிர சுரம் செய்தது. இதை விசாரிக்க ஒரு கமிஷன் ஏற்பட அந்தக் கடிதம் சிர்ஷ்டனை செய்யப்பட்டது யென்பது முடிவுக்கு வந்தது. அமெரிக்கா 'மன்ரோக் கொள்கை'யை அனுசரித்ததால், ஐரோப்பாவிலுள்ளவர்கள் குடியேற்ற நாடுகளை யேற்படுத்த ஆப்பிரிக்காவை நாடத் திருபினர் கள். இங்கிலாந்து ஹெலிகோலாண்டை ஜர்மனிக்கு விட்டு அதற்குப் பதிலாகச் சான்சிபாரை அடைந்தது. 1892-ம் வருஷத்தில் க்ளாட்ஸ்டன் நான்காம்முறை மந்திரியானன்.

கிளாட்ஸ்டன் 1892-94—கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் ஏற்பட்டது. இரண்டாவது அயர்லாந்து சுய ராஜ்ஜிய மசோதா பொதுஜன சபையில் நிறைவேறிப் பிரபுக்கள் சபையில் தள்ளப்பட்டது. இதில் அயர்லாந்தின் மெம்பர்களாக எண்பது பேர்கள் இங்கிலீஷ் பார்லிமெண்டி லும் இருக்க வழி ஏற்பட்டிருந்தது. முதிர்ந்த வயதால் க்ளாட்ஸ்டன் ராஜீநாமாக் கொடுத்துவிட்டான். 1898-ம் வருஷம் தன்னுடைய இடமாகிய ஹெவார்டனில்

இறந்தான். ரோச்பரி பிரபு சிறிது நாள் மந்திரிப்பதவியை வகிக்க மறுபடியும் சாலிஸ்பரி அதிகாரத்திற்கு வந்தான்.

சாலிஸ்பரியன் மூன்றுவது முறை மந்திரிப் பதவி 1895-1902.—இவன் வெளியூர் விஷயங்களில் அதிகம் கவலை செலுத்தினன். 1896-ம் வருஷத்தில் சூடானில் கலகம் அடங்கி, அத்தேசமும் இங்கிலீஷ் ஆக்ஷியின் கீழ் வந்தது. 1897-ம் வருஷத்தில் மகாராணியின் ஆக்ஷியில் அறுபது வருஷமான உற்சவம் கொண்டாடப்பட்டது. 1899-ம் வருஷத்தில் தென் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தம் உண்டாகி 1902ம் வருஷத்தில் சமாதானம் ஏற்பட்டது. ஏற்கனவே கூறியபடி பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் விசாலம் அடைந்தது. 1901-ம் வருஷத்தில் மகாராணி இறந்தாள் சாம்ராஜ்ஜியம் முழுவதும் அதிக துக்கத்தில் மூழ்கியிருந்தது. ஜனங்கள் அவளிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தால் அதனைத் தங்களுடைய தாயார் இறந்த துக்கம்போல் உணர்ந்தார்கள்.

---

## பதினேழாவததிகாரம்.

## ஏழாவது எட்வேர்ட் 1901-10.

## ஐந்தாவது ஜார்ஜ் 1910—

சாலிஸ்பரி உடம்பின் அசௌக்கியத்தால் ராஜீநாமாக் கொடுத்ததால் கன்சர்வெடிவ் கக்ஷித்தலைவனை பால்போர் அதிகாரம் செலுத்தினன். 1906-ம் வருஷத்தில் லிபரல்கக்ஷி அதிகாரத்திற்குவரக் காம்பல் பானர்மன் பிரதானமந்திரிப் பதவியை வகித்தான். 1908-ம் வருஷத்தில் இவனும் இறக்க ஆஸ்க்வித் ராஜ்ஜியத்தை நடத்திவந்தான். இந்தப் பார்லிமெண்டில் முதல் முதல் தொழிற் கட்சி மெம்பர்கள் என்ற தனிக்கூட்டம் ஏற்பட்டது. 1906-ம் வருஷத்தில்

தொழிலாளிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் சட்டம் ஏற்பட்டது. பள்ளிக்கூடத்துப் பையன்களுக்கு ஆகாரம் கொடுக்கும் அதிகாரம் மாகாண போர்டார்களுக்கு வந்தது. வியாபார விவாதச் சட்டம், வயதான வேலைக்காரர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தல், நிலக்கரிச் சுரங்கத்தில் எட்டரை மணி 'வேலை, இவைகளைப் பற்றிச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.



ஏழாவது எட்வேர்ட்.

ஹால்டேன் பிரபு ராணுவத்தில் அற்புதமான சீர்திருத்தங்களைச் செய்தனன். 1865-ம் வருஷத்தில் டர்பிப் பிரபு சம்பளமில்லாத நகரவாசிகளின் சைனியத்தைத் திரட்ட (Volunteer) ஏற்பாடு செய்தான். ஹால்டேன் அதுபோல் ஜில்லா ராணுவத்தை ஏற்படுத்தினான் (Territorial) மேலும் சர்வகலாசாலையிலுள்ள மாணாக்கர்களுக்கு ராணுவப் பழக்கம் கொடுக்க வசதி கொடுத்தார்கள். 1914-ம் வருஷத்தில் இது மிக உபயோகமாயிருந்தது.

1909-ம் வருஷத்தில் பொக்கிஷ மந்திரியான லாயிட் ஜார்ஜ் வயதான வேலைக்காரர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்க வரவு செலவு சட்டத்தில் நிலவரியை அதிகரித்தான். பிரபுக்கள் சபையில் வழக்கத்திற்கு மாறுதலாக வரவு செலவு திட்டம் தள்ளப்பட்டது. 1910-ம் வருஷத்திய பொதுத்தேர்தலில் மறுபடியும் லிபரல்கக்ஷித்தலைவனுன ஆஸ்க்வித்பிரதான மந்திரியானுன். இப் புதுப் பார்லிமெண்டு பிரபுக்கள் சபையின் அதிகாரத்தைக் குறைக்க அநேக தீர்மானங்களைச் செய்தது. இப்படி பொதுஜன சபைக்கும் பிரபுக்கள் சபைக்கும் விவாதம் நடக்கும் சமயத்தில் (1910) ஏழாவது எட்வேர்ட் மன்னனும் இறந்தான். ஐந்தாவது ஜார்ஜ் சிம்மாதனம் ஏறியதும் விவாதங்களை நிறுத்திவைக்கக் கக்ஷித்தலைவர் முயன்றுர்கள்.

ஏழாவது எட்வேர்டை ஸமாதானப் பிரியர் (அமைதியை நிலை நாட்டுபவர்) என்று கூப்பிடுவதுண்டு. இரண்டாவது போயர் யுத்தம் நடந்தபோது இங்கிலாந்திற்குப் பல விரோதிகள் இருக்கிறுர்கள் என்பது நன்கு தெரியவந்தது. 1879-ம் வருஷத்தில் ஜர்மெனியும், ஆஸ்த்திரியாவும் சேர்ந்து உடன்படிக்கையை செய்துகொண்டது. 1882-ம் வருஷத்தில் இட்டலி சேர்ந்ததும், இங்கிலாந்தின் அமைதிக்கு அபாயம் ஏற்படுமோ என்ற பயம் ஏற்பட்டது. இங்கிலீஷ் மன்னன் தனது குணத்திஞலும், அநேக ஐரோப்பிய மன்னர்களுடன் ரத்த சம்பந்தமுள்ளவனுனதாலும், அமைதியை உண்டாக்க ஏற்பாடு செய்தான். 1902-1905-ம் வருஷங்களில் ஜப்பானியர்களுடன் செய்த உடன்படிக்கையால் ஆசியாவில் ருஷியாவின் பயம் குறைந்தது. 1904-ம் வருஷத்தில் .பிரஞ்சு உடன்படிக்கையால், மொராகோ, எகிப்த் ஆகிய இடங்களில் ஏற்பட்ட வித்தியாசங்கள் தீர்ந்தன. 1907-ம் வருஷத்தில்

ருஷியாவுடன் செய்துகொண்ட ஏற்பாட்டால் பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய இடங்களிலுள்ள விவாதங்கள் முடிவுக்கு வந்தன. இப்படி ஏழாம் எட்வேர்ட் 'அமைதியைச் செய்பவர்' என்கிற பட்டத்தை ஏற்றுக் கொண்டனர்.

ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் (1910).—லிபரல் கக்ஷித் தலைவன் பிரபுக்களின் சபை செய்த முடிவைத் தேசத்தினிடம் முறை யிட்டுக்கொண்டான். அதனால் அவனே பெரும்பான்மையோர் கக்ஷிக்கு தலைமை வகித்தான். அரசனும் புதுப்பிரபுக்களை உண்டாக்க இஷ்டம் கொண்டதால் பார்லிமெண்டு மசோதா சட்டமாயிற்று. 1832-ம் வருஷத்தில் எப்படி வெல்லிங்டன்பிரபு நூறுபேருடன் பிரபுக்கள் சபைக்கு வராததால் முதல் சீர்திருத்தச்சட்டம் நிறைவேறிற்றோ அது போலவே லாண்டஸ்டவுன் பிரபு முதலானவர்கள் வராமையால் 1911-ம் வருஷத்திய பார்லிமெண்டுச்சட்டமும் நிறைவேறிற்று. இதன்படி பிரபுக்கள் சபைக்குப் பண விஷயமான அதிகாரம் இல்லாது போயிற்று. பொதுஜன சபையில் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் பிரபுக்களின் சபையால் மறுக்கப்பட்டாலும் மூன்றுவது முறையில் பிரபுக்களின் தகவல் இல்லாமலே சட்டமாகிவிடும். பார்லிமெண்டுக்கு ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை பொதுத்தேர்தல் ஏற்படவேண்டும். மெம்பர்களுக்கு நானூறு பவுன் வருஷச்சம்பளம் அளிக்கப்படும். இப்படி ஐரிஷ் சுயராஜ்ஜிய மசோதா 1911-ம் வருஷத்திய சட்டப்படி, மூன்று வருஷம் முடிந்தவுடன் அதாவது 1914-ம் வருஷத்தில் சட்டமாகியது. ஆனால் அல்ஸ்டர் (Ulster) ஜனங்களுக்கு இது விருப்பமில்லாததால் உள்நாட்டுப்போர் ஏற்படுமென்பது நிச்சயமாயிற்று. கன்செர்வெடிவ் கக்ஷிக்காரர்களும் இதற்கு உதவியாகிக் கலகக்காரர்களின் சார்

பாக நின்றார்கள். பெரிய ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டதால் சட்டம் நிறைவேறாமல் நின்றது. 1921-ம் வருஷத்தில், சண்டை முடிந்தவுடன் ஒரு சட்டம் ஏற்பட்டு அதன்படி வடக்கு அயர்லாந்திற்கும், டப்ளினுக்கும் தனிப் பார்லிமெண்டுகளை ஏற்படுத்தியும் சமாதனம் உண்டாகவில்லை. முடிவில் பெரும்பான்மை யோர்கள் இதற்குச் சம்மதித்து 1922-ம் வருஷம் முதல் ராஜ்யபரிபாலனம் நடந்து வருகிறது.

கக்ஷித் துரைத்தனம்.—1914-ம் வருஷத்தில் மகா ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டதால் இருகக்ஷிகளும் ஒன்று கூடின துரைத்தனம் உண்டாயிற்று. தேசப் பகைவர்களைத் தொலைப்பது முக்கியமென்று கண்டு இவ்வழியைப் பின்பற்றினார்கள். 1915-ம் வருஷமுதல் லாயிட் ஜார்ஜ் பிரதான மந்திரிப் பதவியை வகித்தான். 1918-ம் வருஷத்தில் 'ஜனங்களின் பிரதிநிதி'ச் சட்டம் ஏற்பட்டு 21-வது வயதான ஆண்பாலர்களும் 30-வது வயது நிறைந்த பெண்பாலர்களும் வோட் கொடுக்கும் உரிமையை அடைந்தார்கள். இரு கக்ஷிக்காரர்கள் கூடிய துரைத்தனம் சமாதான காலத்திற்குச் சரியாகாததாலாலும் சண்டைக்குப் பிறகு தொழிற் கட்சிக்காரர்களுக்கு வேலை கண்டுபிடிப்பதில் உண்டான கஷ்டத்தாலும் அம்முறை கலைந்து 1922-ம் வருஷத்தில் நடைபெற்ற பொது தேர்தலில் கன்செர்வெடிவ் கக்ஷி அதிகாரத்திற்கு வந்தது. ஆனால், ஆஸ்க்வித்து கக்ஷியும், லாயிட் ஜார்ஜு கக்ஷியும் ஒன்று சேர்ந்து தொழிற் கக்ஷியுடன் கூடி, கன்செர்வெடிவ் கக்ஷிக்காரர்களை அதிகாரத்திலிருந்து நீக்கின. 1924-ம் வருஷத்தில் தொழிற் கக்ஷிக்காரர்களின் கக்ஷித்தலைவனான மாக்டானல்ட் பிரதான மந்திரியானான். வெகுநாள் அதிகாரத்தில் இருப்பது அசாத்தியமாதலால் கன்செர்

வெடிவ்கள் பால்ட்வினின் கீழ் மறுபடியும் அதிகாரத்திற்கு வந்தார்கள். 1929-ம் வருஷம் ஜுன் மாதம் முதலில் நடந்த பொதுத் தேர்தலில் மறுபடியும் மாக்டானல்ட் பிரதான மந்திரிப்பதவியை வகித்து ராஜ்ஜிய நீதியை நடத்திவருகிறான். இங்கிலாந்தில் இதுவரையிலும் இருகக்ஷித் துரைத்தனம் என்பது நடைபெற்றிருந்தது. இப்போது நடைபெறும் மூன்று கக்ஷித்துரைத்தனம் என்பது புதிதாகும். அதிகாரத்திலுள்ள தொழிற் கக்ஷி, தற்காலம் லிபரல் கக்ஷியின் உதவியில்லாமல் ராஜ்ஜிய தந்திரம் செய்வது கஷ்டமேயாகும். தொழிற் கக்ஷியாரும் வேலைக்காரர்களுடைய க்ஷேமத்தை மட்டில் கவனிப்பது என்ற அளவில் நின்றுவிடாமல், சாம்ராஜ்ஜியத்தின் க்ஷேமத்தையும் தாராள மனதுடன் கவனித்து வருவது மிகவும் மெச்சத் தகுந்தது. அதிகாரத்திற்கு வந்த சிறிது காலத்திற்குள்ளேயே அதன் தாராளமான எண்ணங்கள் நன்கு புலப்படுகின்றன. எண்ணங்களை நிறைவேற்றுவதில் இருக்கும் கஷ்டங்களைப் பார்த்து யாரும் அனுதாபப் படவேண்டியதேநியாயமாகும். அன்றியும், ருஷியா உடன் சம்பாஷணையைத் திரும்பவும் ஆரம்பித்தல், பிரட்டனுக்குச் சண்டையில் வரவேண்டிய கடன்களைப்பற்றிப் பேசிய ஹேகில் சமாதானம், 1929-ம் வருஷம் அக்டோபர் மீ 31உ ல் இந்தியாவில் வெளியிட்ட ராஜப்பிரதிநிதியின் அறிக்கை, எகிப்துடன் புது உடன் படிக்கை செய்துகொள்ளும் யோசனை, அமெரிக்கா முதலான ஐந்து தேசங்களுடன் கப்பல் படையை குறைக்க முயலும்யோசனைச் சங்கத்தை ஏற்படுத்தியது போன்றவைகள் சாதாரணமான விஷயங்களாகமாட்டா. இவையெல்லாம் தொழிற் கக்ஷியாரின் முற்போக்குக் குறிகளே.

# ஞாபகக் குறிப்பு.

## முக்கியத் தேதிகள்.

| | | |
|---|---|---|
| கல்விச் சட்டம் | ... | 1870 |
| பெர்லின் காங்கிரஸ் | ... | 1878 |
| அயர்லாந்தின் முதல் சுயராஜ்ஜிய சட்டம் | ... | 1886 |
| மகாராணியின் 50 வருஷ ஆளுகைக் கொண்டாட்டம் | ... | 1887 |
| ,, அறுபது வருஷக் கொண்டாட்டம் | ... | 1897 |
| இரண்டாவது போயர் யுத்தம் | ... | 1899 |
| ஏழாவது எட்வேர்ட் பட்டம் வகித்தது | ... | 1901 |
| பிரான்சுடன் மூவர் நட்பு | ... | 1904 |
| ஐந்தாவது ஜார்ஜ் பட்டம் வகித்தது | ... | 1910 |
| பெரிய ஐரோப்பிய யுத்தம் | ... | 1914 |
| யுத்தம் முடிந்தது | ... | 1918 |
| வெர்சேல்ஸ் சமாதானம் | ஜூன் 28, | 1919 |
| பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் கண்காக்ஷி | ... | 1924 |
| இரண்டாம் முறை தொழில் கக்ஷி ஆட்சி | ... | 1929 |

## முக்கியச் செய்திகள்.

1. 1872-ம் வருஷத்தில் ரகசிய வோட் கொடுக்கலாம் என்று ஏற்பட்டது (Ballot Act). வோட் கொடுப்பதில் சீட்டை உபயோகப்படுத்துவது வழக்கமாகும் (Ballot—சீட்டு).

2. கல்விச் சட்டங்கள்.—பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் விடுமுறை நாள் (Sunday) பள்ளிக்கூடங்கள் அநேக ஜில்லாக்களில் ஏற்பட்டன. ஐத்தொன்பதாவது நூற்றாண்டில் இரண்டு சங்கங்கள் பள்ளிக்கூடங்

களைக் கூட்டி ஆதரிக்கக் கிளம்பின. 1833-ம் வருஷத்தில் இந்த இரண்டு சங்கங்களுக்கும் துரைத்தனத்தார் 20,000 பவுன் நன்கொடை அளித்தார்கள். 1870-ம் வருஷத்தில் ஆரம்பக்கல்விச் சட்டம் ஏற்பட்டு, பதிமூன்று வயதிற்குக் கீழ்பட்ட பிள்ளைகள் கட்டாயமாய் வாசிக்கவேண்டுமென்று சட்டம் ஏற்பட்டது. பள்ளிக்கூடச் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. 1891-ம் வருஷ ஆரம்பக்கல்வி, சம்பளமில்லாமலிருக்கச் சட்டம் அமைந்தது. 1902-ம் வருஷத்தில் கல்வி போர்ட் ஏற்பட்டு ஜில்லா போர்டுளும், முனிசிபாலிடிகளும் கல்வியை ஆதரிக்கும்படி தீர்மானம் ஏற்பட்டது. குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கவும் தேசச் சௌக்கியத்தைப் பார்க்கவும் இப்போது வழி ஏற்பட்டிருக்கின்றன.

3. சின்பீன் (Sein Fein) என்பதற்குத் 'தனிமையாய்விடு' என்பது பொருளாகும். அமெரிக்காவிலிருந்து திரும்பின ஐரிஷ்காரர்கள் அயர்லாந்திற்குச் சுயாதீனம் அடையத் தீர்மானித்துக் கொடுமை செய்கைகளை செய்து வந்தார்கள். அவர்கள் கூடிய சங்கத்திற்கு மேற்கூறிய பேர் வந்தது. 1846-ம் வருஷம் முதல் இது ஆரம்பித்ததாகச் சொல்லலாம்.

4. ராணுவச்சீர்த்திருத்தம்.—தற்கால ராணுவ முறையை இரண்டாது சார்லஸ் நாள் முதல் ஆரம்பித்ததாகச் சொல்லலாம். ராணுவத்தில் பெரிய உத்தியோகங்கள் விலைக்கு விற்கப்பட்டு வந்தன. 1871-ம் வருஷத்தில் கார்ட்வெல் இதை நிறுத்தினான். கப்பல் படையில் இப்பழக்கம் இல்லாமலிருந்ததால் இரண்டும் ஒரேமாதிரியாக இருந்தன படை வகுப்பு ஒவ்வொன்றையும் இரண்டு பிரிவாகச் செய்து ஒரு பிரிவு வெளியில் வேலைக்குப்போய்த் திரும்பினதும் இன்னொரு பகுதி வெளியே வேலைக்குச் செல்லும். சமயத்திற்கு வேண்டி, நகரவாசிகள் வேண்டு

போருக்கு சிறிது காலம் ராணுவப் பழக்கம் கொடுக்கப்பட்டது. இதன்படி மூன்று வருஷத்திற்குத்தான் பழக்கம் ஏற்பட்டதால் அநேகர்கள் பழக்கத்தை அடைந்து சண்டைக்காலத்தில் உபயோகமுள்ளவர்களாயிருந்தார்கள். மற்றக்காலங்களில் அவர்களுடைய சொந்த வேலையைப் பார்த்துவந்தார்கள். 1908-ம் வருஷத்தில் ஹால்டேன் ராணுவச் சீர்திருத்தத்தைச் செய்தான். (a) ஜில்லா ராணுவம் (Territorial Force) அல்லது சம்பளமில்லாத ராணுவத்தை ஏற்படுத்தினான். (b) கையிருப்பு ராணுவம் (Special Reserve) இதுதான் பழய சைனியம். (c) உத்தியோகஸ்தர்களாகப் பழக்கம் அடைந்த ராணுவமும் ஏற்பட்டது. சர்வகலாசாலையிலுள்ளவர்களுக்கு இப்பழக்கம் ஏற்பட்டது. 1914-ம் வருஷத்தில் இச்சீர்திருத்தங்களின் உபயோகம் நன்கு விளங்கிற்று.

5. 1867-ம் வருஷத்திய சீர்திருத்தப்படி பட்டணத்திலுள்ள தொழிலாளர்கள் வோட் கொடுக்கும் உரிமையும், 1884-ம் வருஷத்தில் நாட்டிலுள்ள குடியானவர்கள் வோட் கொடுக்கும் உரிமையையும் அடைந்தார்கள். 1918-ம் வருஷத்தில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண் பிள்ளைகளும், முப்பது வயதிற்கு மேற்பட்ட பெண் பிள்ளைகளும் வோட் உரிமையை அடைந்தார்கள்.

6. **க்ளாட்ஸ்டன் 1809—1898.**—தற்கால மந்திரிகளில் பேர்போனவன். லிபரல் கக்ஷித்தலைவனாய் வெகுநாள் இருந்தான். உள்ளூர் விஷயங்களில் அநேக சீர்திருத்தங்களைச் செய்தான். ரகசிய வோட், ஆரம்பப் படிப்பு, ராணுவ சீர்திருத்தம், வாசிப்பில் மத நிபந்தனைகளை எடுத்தல் இவைகளெல்லாம் அவன் முதல் மந்திரியாய் இருந்த போது ஏற்பட்டன அயர்லாந்து விஷயம் அவனுடைய முக்கிய கவலையாயிருந்தது. இரண்டு நிலச்சட்டங்களைச்

செய்தான். பார்லிமெண்டுச் சீர்திருத்தம், வியாபாரக் கூட்டத்தை அங்கீகரித்தல் இவைகள் தொழிலாளர்களுக்குச் செய்த திருத்தங்களாகும். கடைசி இரண்டு முறைகளில் சுயராஜ்ஜிய மசோதாவை அயர்லாந்திற்காகக் கொண்டுவர முயன்றான். வீணானது கண்டு, தனது முதிர்ந்த வயதினால் ராஜாங்க விஷயங்களை விட்டு விலகினான். ஆங்கிளிகன் மதத்தில் பக்தியுள்ளவனும் கிருஸ்தவர்களின் மீது அனுதாபமுள்ளவனுயிருந்தான்.

7. பீகன்ஸ்பீல்ட் பிரபு. (டிஸ்ரேலி) 1804—1881.—இவன் கன்ஸேர்வெடிவ் கக்ஷித்தலைவனாகி ஜனங்களின் மனிதனுயிருந்தான். முதலில் நூதனமான கதைகளை எழுதியதால் இவன் நல்ல கீர்த்தியை அடைந்தான். இரண்டு முறைகளில் பிரதான மந்திரியாயிருந்தான். இங்கிலாந்தின் பெருமை அதிக ராஜ்ஜியமிருப்பதிலே என்று கருதி சூயஸ்கால்வாயிலுள்ள பங்கை கெடீவ் (எகிப்தின் அரசன்) னிடம் வாங்கினான். 1857-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சீர்திருத்தம் இவனுடைய முயற்சியினால் உண்டானதுதான். பெர்லின் காங்கிரஸில் ருஷியாவின் பேராசையை நிறுத்தி இங்கிலாந்தின் எண்ணத்தை ஐரோப்பாவில் உள்ள எல்லோரும் கேட்கும்படி செய்தான்.

8. போயர்கள் தென் ஆப்பிரிக்காவில் டச்சுக்காரர்களின் சந்ததி ஆவார்கள்.

9. வயதானவர்களுக்கு உபகாரச் சம்பளச் சட்டம் 1908.—எழுவது வயதுக்கு மேலான வேலைக்காரர்களுக்கு வாரத்திற்கு 5 ஷில்லிங் கொடுக்கும்படி ஏற்பட்டது.

10. மாண்டேக். 1917-ம் வருஷத்தில் இந்தியக் காரியதரிசியாக இருக்கும்போது பேர்போன அறிக்கையை

ஆகஸ்ட் 20உல் வெளியிட்டான். இந்தியாவிற்குத் தன்னைத் தானே ஆளும் உரிமையைக் கொடுக்க முயன்று 1919-ம் வருஷத்தில் சட்டம் செய்தான். அந்தச் சட்டம் 1921-ம் வருஷம் முதல் அமுலுக்கு வந்தது. இந்தியர்களுக்கு அவன் பேர் மறக்க முடியாததாகும்.

## கேள்விகள்.

1. க்ளாட்ஸ்டனின் முக்கிய சீர்திருத்தங்களைச் சொல்லுக.

2. டிஸ்ரேலின் முக்கிய எண்ணம் யாது?

3. 'கண்யத்துடன் சமாதானம்' என்பது எப்போது ஏற்பட்டது?

4. அயர்லாந்தின் சுயராஜ்ஜியச் சட்டம் முடிவில் (1921) ஏற்பட்டதை விவரமாய் சொல்லுக?

5. ஏழாவது எட்வேர்ட் 'சமாதானம் செய்பவன்' என்பதை நிரூபிக்க.

6. 1911-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சட்டத்தின் ஷரத்துக்களைச் சொல்லுக.

---

## பதினெட்டாவததிகாரம்.

## இங்கிலாந்தின் புதிய தந்திரம்.

## குடியேற்ற நாடுகள்.

1783-ம் வருஷத்தில் அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் சுயாதீனத்தை அடைந்தன. இங்கிலாந்தின் மந்திரிகள் குடியேற்ற நாடுகளின் உபயோகத்தை நன்கு அறிந்திருந்தார்கள். ஆனபோதிலும் அவைகள் அறு

பவம் முதிர்ந்தவுடன் சுயாதீனத்தை விரும்புவது சகஜம் என்பதை அறிந்து அவைகளைப்பற்றிக் கவனிப்பதில்லை. இன்னும் அனேகர் அமெரிக்கா நடித்ததுபோல் மற்றக் குடியேற்ற நாடுகள் நடிக்குமோ என்று பயம் கொண்டார்கள். இப்படியிருந்தது ஒரு விதத்தில் அந்நாடுகளுக்கு நன்மையாயிற்று. குடியேற்ற நாடுகள் இஷ்டம்போல் விருத்தி அடைந்தன. ஒரு விஷயம் ஞாபகத்தில் வைக்கத் தகுந்ததாகும். அஃது ஒரு நாடாவது அமெரிக்காவைப் போல் நடிக்க விரும்பவில்லை என்பதே. ஒவ்வொரு நாடும் சாம்ராஜ்ஜியத்திற்குள் இருப்பதைப் பெருமையாக கொண்டாடியதுடன் அதை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றப் பூரணசம்மதமுள்ளதாகவு மிருந்தது. அந்நாடுகளுக்கு இப்படிப்பட்ட உணர்ச்சி உண்டாவதற்கு உற்ற காரணத்தை யோசிப்போம்.

சுயாதீனப்போருக்குமுன் தாய் நாடு, குடியேற்ற நாடுகளைத் தனது வியாபாரத்தை விருத்தி செய்வதற்காகத் தோன்றியன என்றே எண்ணி வந்தது. இதன் பொருட்டு அநேக நிபந்தனைகளையும் ஏற்படுத்தியது. உள் நாட்டு விஷயங்களிலும் பிரவேசித்து அவைகளுக்குக் கோபத்தை உண்டாக்கி வந்தது. 1783-ம் வருஷத்திற்கு பிறகு தாய் நாட்டிற்கும் குடியேற்ற நாடுகளுக்கும் இருக்கும் சம்பந்தம் தாய்க்கும், பெண்களுக்கும் உள்ளது போலாகும். எப்படித் தாய் பெண்களுடைய வீட்டு விஷயங்களில் பிரவேசிக்காமல் அவர்களின் க்ஷேமத்தை மாத்திரம் கருதி வருவாளோ அதுபோலவே இங்கிலாந்தும் குடியேற்ற நாடுகளின் உள் விஷயங்களில் பிரவேசிக்காமல் அவற்றின் க்ஷேமத்தை மாத்திரம் கவனித்தது. தாயுக்கு நோய் வந்தபோது பெண்கள் எப்படி நோயிலிருந்து காப்பார்களோ அப்படியே அந்நியர்கள் இங்கிலாந்தின் மேல்

படையெடுக்கும் பக்ஷத்தில் குடியேற்ற நாடுகளும் வேண்டிய உதவிசெய்து தங்களது தாய் நாட்டைக் காப்பாற்ற சித்தமாயிருக்கும். குடியேற்ற நாடுகளை அபாயத்திலிருந்து காப்பாற்றுவதும் தாய் நாட்டின் கடமையாகும். இதுமுதல் இங்கிலாந்து குடியேற்ற நாடுகளுக்குத் தன்னைத் தானே ஆண்டுகொள்ளும் உரிமையைக் கொடுத்து வருகிறது. அவைகள் நியாயமாகக் கேட்கும் வேண்டுகோளை மறுப்பதும் இல்லை. இதைத்தான் இங்கிலாந்து அமெரிக்காவின் சுயாதீனப் போரிலிருந்து தெரிந்துகொண்டது. இப்புது தந்திரமே பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை ஒன்று சேர்த்துப் பலப்படுத்தியதாகும். தாய் நாடு, வெளிநாட்டு விஷயத்தை மாத்திரமேதான் வைத்துக்கொண்டிருக்கிறது. முடிவில் இங்கிலாந்து அடிக்கடி சாம்ராஜ்ஜிய ஆலோசனைச் சங்கங்களைக் கூட்டிப் பொதுவாகச் சாம்ராஜ்ஜிய விஷயங்களைஆலோசிப்பது என்பது ஒருவழக்கமாக வந்துவிட்டது. வியாபாரத்தை விருத்தி செய்வது, சாம்ராஜ்ஜியத்தைக்காப்பது என்ற விஷயங்கள் முக்கியமானவையாகும். இவைகளின் பயன் இரண்டாவது போயர் யுத்தத்திலும் பெரிய ஐரோப்பிய யுத்தத்திலும் நன்கு விளங்கியது. மேற்கண்ட விஷயங்கள் விவரமாய் கானடா, ஆஸ்திரேலியா, நியூஸீலெண்டு, தென் ஆப்பிரிக்கா முதலானவைகள் சரித்திரங்கலிருந்து நன்கு தெரியவரும்.

## கானடா.

1763-ம் வருஷத்திய பாரிஸ் சமாதானத்தின்படி கானடா இங்கிலீஷ்க் காரர்களுக்குச் சொந்தமாகியது. அமெரிக்காவில் நடந்த சுயாதீனப் போருக்குப் பிறகு அநேக ராஜ விச்வாசமுள்ளவர்கள் ஐக்கிய நாடுகளிலிருந்து கானடாவிற்கு வந்தார்கள். இப்படி வந்த இங்கிலீஷ்க்காரர்

கள் மேற்கிலும், பிரஞ்சுக்காரர்கள் கிழக்கிலும் இருந்து வந்தார்கள். இவர்களுக்குள் விவாதங்கள் ஏற்பட்டமையால் இளைய பிட் 1791-ம் வருஷத்தில் தனி பார்லிமெண்டுகளை ஏற்படுத்தினன். ஆனபோதிலும் இவர்களுடைய சச்சரவுகள் அதிகரித்தன. 1837-ம் வருஷத்தில் குடியரசுத் துரைத்தனத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு கலகம் ஏற்பட்டது. இங்கிலாந்திலிருந்து டர்ஹேம் பிரபு சென்று கலகத்தை அடக்கியபின் எல்லாவிஷயத்திலும் 'தன்னைத்தானே ஆளும் துரைத்தன முறையை'க் கொடுக்க வேண்டுமென்று எழுதினன். அப்படியே 1840-ம் வருஷத்தில் டர்ஹேம் சட்டம் ஏற்பட்டு; அதன்படி 'தன்னைத்தானே ஆளும்' உரிமையைக் கானடா அடைந்தது. அதன்படி நிர்வாக சபையார் சட்டசபைக்கு முகாந்தரம் கூறவேண்டியவராயினர். ஆனல், இரண்டு பார்லிமெண்டுகளும் ஒன்று சேர்ந்தன. மறுபடியும் பிரஞ்சுக்காரர்களுக்கும் இங்கிலீஷ்க்காரர்களுக்கும் விவாதங்கள் ஏற்பட்டன. மேலும், பொது விஷயங்களைக் கவனிக்கவும், தேசத்தைக் காக்கவும் ஒரு பொது சபையிருக்க வேண்டுமென்றும் கானடாவிலுள்ள ஜனங்கள் எண்ணினர்கள். 1867-ம் வருஷத்தில் (டுமினியன்) குடியேற்ற நாட்டுச் சட்டம் ஏற்பட்டு அதன்படி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு பார்லிமெண்டும், ஒரு துரைத்தனமும் ஏற்பட்டதுடன், பொது விஷயங்களைக் கவனிக்க ஒரு பொதுப் பார்லிமெண்டும், ஒரு துரைத்தனமும் ஏற்பட்டன. இப்படி நடத்தியதினல் திருப்தி அடைந்த கானடாக்காரர்கள், தங்களது விசுவாசத்தை இரண்டாவது போயர் யுத்தத்திலும், பெரிய ஐரோப்பிய யுத்தத்திலும், மனித உதவியாலும், திரவியக் கொடையாலும் காண்பித்தார்கள்.

## ஆஸ்திரேலியா.

1770-ம் வருஷத்தில் கூக், ஆஸ்திரேலியாவைக் கண்டு பிடித்தார். 1788-ம் வருஷத்தில் குற்றவாளிகளை அனுப்பி வந்த முறையில் இங்கிலாந்து அங்கே குடியேறுவதை ஏற்படுத்திற்று. இப்படி நியூசௌத்வேல்ஸ், க்வீன்ஸ் லெண்டு, விக்டோரியா என்பன ஏற்பட்டன. 1840-ம் வருஷத்தில் குற்றவாளிகளை அனுப்பக்கூடாது என்பது ஏற்பட்டது. அதுமுதல் சுயேச்சையுள்ளவர்கள் செல்ல, மேற்கு ஆஸ்திரேலியா, தெற்கு ஆஸ்திரேலியா என்பன ஏற்பட்டன. 1850-ம் வருஷத்தில் தங்கம் கண்டு பிடிக்கப் பட, 1856-ம் வருஷத்தில் ஒவ்வொருமாகாணமும் தன்னைத் தானே ஆளும் சுயாதீனத்தை அடைந்தது. 1890-ம் வருஷத்தில் மேற்கு ஆஸ்திரேலியாவிற்கும் இவ்வுரிமை ஏற்பட்டது. இங்கும் பொது விஷயத்தைக் கவனிக்கவும், நாட்டைக் காக்கவும் ஒரு பொதுசபை இருக்கவேண்டு மென்று ஜனங்கள் எண்ணி வந்தார்கள். மேலும், பசிபிக் சமுத்திரத்தில் பிரான்சும், ஜர்மனியும் புதுத் தீவுகளைச் சேர்க்க ஆரம்பித்தன. ஆதலால், 1900-ம் வருஷத்தில் காமன்வெல்த் சட்டம் ஏற்பட ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனிப் பார்லிமெண்டும், தனித்துரைத் தனமும் ஏற்பட்டதுடன் பொது விஷயங்களைக் கவனிக்கப் பொதுப் பார்லிமெண்டும் பொதுத் துரைத்தனமும் ஏற்பட்டன.

## நியூஸீலந்து.

ஹப்ஸன் 1840-ம் வருஷத்தில் மௌரிகளுடன் வைடாங்கி உடம்படிக்கையைச் செய்தான். அதன்படி இந்த மூன்று தீவுகளும் இங்கிலீஷ்க்காரர்களுக்குச் சொந்த மாயின. ப்ரிட்டிஷ் துரைத்தார், நியூஸீலந்திலுள்ள

நிலங்கள் மௌரிகளுக்குச் சொந்தமானவை என்றும் ஆனால், அவர்கள் அவைகளைப் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரைத் தவிர மற்ற எவர்களுக்கும் விற்கக்கூடாது என்றும் சட்டத்தை ஏற்படுத்தினர். இதை மறுத்ததால் இருமுறைகளில் கலகம் உண்டாகியது. ஸர் ஜார்ஜ் க்ரே கலகத்தை அடைக்கி இந்தத் தீவைப் பிரிட்டிஷ்காரர்களுக்குத் தப்பித்து வைத்தான். இது 1852-ம் வருஷத்தில் தன்னைத்தானே ஆளும் சுயாதீனத்தை அடைந்தது. 1907-ம் வருஷத்தில் அந்தத் தீவு டமினியன் பதவியை அடைந்தது. இதன் விசுவாசம் இரண்டாவது போயர் யுத்தத்திலும் ஜர்மன் சண்டையிலும் நன்கு தெரியவந்தது. இதற்கு ஆஸ்திரேலியாவுடன் சேர மனமில்லை.

## அயர்லாந்து.

ஐரிஷ் சேர்க்கைச் சட்டத்தினால் ஐரிஷ் ஜனங்கள் சமாதானமாய்விடுவார்கள் என்று எண்ணினவர்கள் மோசம் போனார்கள். விஷயம் என்னவெனில் அல்ஸ்டரிலுள்ள ப்ராடெஸ்டெண்டுகளும், பெரும்பான்மையோரான காதொலிக்குகளும் ஒத்துழையாதவர்களாயிருந்து வந்தார்கள். இங்கிலீஷ் துரைத்தனத்தார் ப்ராடெஸ்டெண்டுகளுடன் சேர்ந்து காதொலிக்குகளின் குறைகளைத் தீர்க்காமல் பிடிவாதமாயிருந்ததால் கஷ்டங்கள் அதிகரித்தன. 1829-ம் வருஷத்தில் ஓடானல் முயற்சி செய்து காதொலிக்கு விடுமுறைச் சட்டத்தைச் செய்ததனால் காதொலிக்குகள் உத்தியோகத்தில் அமருவதுடன் பார்லிமெண்டு மெம்பர்களாகவும் தகுதியானார்கள். இதன் பின் சேர்க்கைச் சட்டத்தைத் தள்ளச் சங்கங்கள் உண்டாயின. ஐரிஷ் குடியானவர்களின் பரிதாபப்படத்தக்க நிலைமை இக்கூட்டங்கள் விருத்தியடையச் சாதகமாயிருந்தது.

ஐரிஷ் அமெரிக்கர்கள், குற்றங்களை ரகசியமாய்ச்செய்து இங்கிலீஷ் துரைத்தனத்தாரைப் பயமுறுத்த எண்ணினார்கள். இங்கிலீஷ் மந்திரிகள் குற்றத்தை அடக்கும் சட்டங்களை ஏற்படுத்தியும் குற்றங்கள் மேலோங்கிவந்தன. 1869-ம் வருஷத்தில் அயர்லாந்தைச் சமாதானம் செய்வது நலமாகும் என்று எண்ணிய க்ளாட்ஸ்டன் மதத்தை ராஜீயத்திலிருந்து பிரித்தான். இதுமுதல் அயர்லாந்தைச் சமாதானத்தால் திருப்திப்படுத்தும் தந்திரம் ஆரம்பித்ததாகச் சொல்லலாம். கிளாட்ஸ்டன் இரண்டு நிலச் சட்டங்களால் குடியானவர்களின் நியாயமான குறைகளை நீக்கினான். கன்செர்வெடிவ் கக்ஷிக்காரர்களும், குடியானவர்களை நிலச்சுவான்தார்களாக ஆக்கும் வழியைத் தேடிவந்தார்கள். குற்றத்தை அடக்கும் சட்டங்களைச்செய்வது வீணான வழி என்று கண்டு அயர்லாந்திற்குச் சுயராஜ்ஜியத்தைக் கொடுக்க நிச்சயித்தான். இதனால் தனது கக்ஷியைப் பிரிவு உண்டாகும்படி செய்துகொண்டான். 1893-ம் வருஷத்தில் இரண்டாவது சுயராஜ்ஜிய மசோதா பொது ஜனசபையில் நிறைவேறியதானாலும் பிரபுக்கள் சபையில் தள்ளப்பட்டது. இவனுக்கு பின்வந்த கன்செர்வெடிவ் கக்ஷிக்காரர்கள், லோகல் போர்ட்டுகளுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்தும், குடியானவர்களை நிலச் சொந்தக்காரர்களாக்க வழி ஏற்படுத்தியும் குற்றங்கள் அடங்கவில்லை. இதற்குள் ப்ராடெஸ்டெண்டுகள் நிறைந்த அல்ஸ்டருக்கும், ஐரிஷ் காதொலிக்குள் நிறைந்த தென்நாட்டாருக்கும் ஒற்றுமையில்லாமையால், அல்ஸ்டர், சேர்க்கைச் சட்டத்தைத் தள்ள மனமில்லாமலிருந்தது. 1914-ம் வருஷத்தில் மூன்றாவது சுயராஜ்ஜியச் சட்டம் நிறைவேறியது. இதை நிறைவேற்ற 1911-ம் வருஷத்தில் பார்லிமெண்டுச் சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதன்படி மூன்று

முறை ஒரு மசோதா பொதுஜனசபையில் நிறைவேறினுல், பிரபுக்கள் சபையின் சம்மதம் இல்லாமலே அது சட்டமாகலாம். இந்தச் சட்டம் அம்முறைப்படியே நிறைவேறிற்று. அல்ஸ்டர் இதற்குச் சம்மதிக்காமல் கலகம் செய்யத் தயாராயிருக்கும் சமயத்தில் ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்தது. இந்த யுத்தத்தால் சட்டம் அமுலுக்கு வராமல் நின்றது. 1916-ம் வருஷத்தில் ஐரிஷ் அமெரிக்கர்கள் சுயாராஜ்ஜியத்தில் திருப்தி அடையாமல் அயர்லாந்திற்குச் சுயாதீனம் வேண்டுமென்று கலகம் செய்து வந்தார்கள். ஐரோப்பிய யுத்தம் முடிவுக்கு வந்த உடன், லாய்ட் ஜார்ஜ், இன்னெரு சுயராஜ்ஜியச் சட்டத்தைச் செய்தான். இதன்படி அயர்லாந்திற்கு இரண்டு பார்லிமெண்டுகளை ஏற்படுத்தி, வடக்குப் பார்லிமெண்டிற்கு (அல்ஸடர்) 42 மெம்பர்களும், தெற்குப் பார்லிமெண்டிற்கு 128 மெம்பர்களும் இருக்கச்செய்தான். ஓர் ஐரிஷ் கௌன்ஸில் ஏற்படுத்தி அதற்கு இரு பார்லிமெண்டுகளும் 20 மெம்பர்களை அனுப்புகிறது என்றும், 46 மெம்பர்களை அயர்லாந்து இங்கிலீஷ் பார்லிமெண்டிற்கு அனுப்புகிறது என்றும் ஏற்பட்டது. ஏதாவது இப்படிச் செய்யச் சம்மதிக்காமலிருந்தால், அரசனுல் ஏற்படுத்தப்பட்ட வைஸ்ராயும் சட்டசபையும் அதை ஆளுகிறது என்று குறிப்பிட்டிருந்தது. சமாதானத்திற்கு வழிதேடுவதாயில்லை. மறு வருஷத்தில் (1922ஹு ஜனவரி மீ 7உ) ஒரு சமாதானம் ஏற்பட்டு அதன்படி ஐரிஷ் துரைத்தனம் நடைபெற்று வருகிறது. "அயர்லாந்தில் ஒரு சுயாதீன ராஜ்ஜியம் ஏற்பட்டு அது மற்ற டொமினியன்கள் போல் இருக்க வேண்டும். சாம்ராஜ்ஜியத்தின் பொறுப்புக்களில் அஃது ஒரு பாகத்தைக் கொடுக்கவேண்டும். இங்கிலாந்து அதைச் சமுத்திரத்தில் காக்கவேண்டும்" என்பது அந்தச்

சட்டத்தின் சாரம். அல்ஸ்டருக்கு இதற்குள் சேர்ந்தாவது தனிமையாகவாவது இருக்க உரிமை கொடுக்கப்பட்டது. அல்ஸ்டர் தனிமையாய் இருக்க இஷ்டப்பட்டால் எல்லை ஏற்படுத்த ஒரு கமிஷன் ஏற்பட்டு ஜனங்களுடைய இஷ்டம்போல் நடத்த உடன்படிக்கை செய்ய ஏற்பட்டு அது பூர்த்தியை யடைந்தது.


## தென் ஆப்பிரிக்கா.

தென் ஆப்பிரிக்கா என்பது கேப்காலனி, நேடால், ட்ரான்ஸ்வால், ஆரெஞ்சுநதி காலனி ஆகியவை கூடியது. 1815-ம் வருஷத்தில் டச்சுக்காரர்கள் நப்போலியனுடன் போர் முடிந்தவுடன் இதை இங்கிலீஷ்க்காரர்களுக்கு உடன்படிக்கைப்படி கொடுத்து விட்டார்கள். இஃது இந்தியாவிற்குச் செல்லும் நடுவழியில் இருந்ததால் பல வருஷங்களாக கப்பல்கள் தங்குமிடமாக உபயோகப்பட்டு வந்தது. அங்குள்ள சுதேசிகளைக் காப்பிர் (Kaffir) என்று கூப்பிடுவதுண்டு. ஏற்கனவே டச்சுக் குடியானவர்களே அங்குக் குடியேறி இருந்தார்கள். இவர்களை இங்கிலீஷ்க்காரர்கள், நாகரீகக் குறைவினுல் போயர்(Boer) என்று அழைத்தார்கள். இவர்களுக்கும் சுதேசிகளுக்கும் ஒற்றுமை குறைவாயிருந்தது. ஆனுல், இங்கிலீஷ் துரைத்தனத்தார் சுதேசிகள் ஆடு மாடுகளைத் திருடுவதை நிறுத்தின போதிலும், அவர்களைச் சமமாக நடத்த எண்ணினதால், போயர்கள் மனவருத்தம் கொண்டார்கள். மேலும், 1838-ம் வருஷத்தில் அடிமைகளைப் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் விடுவித்ததால் போயர்கள் கோபங்கொண்டு ட்ரான்ஸ்வால், ஆரெஞ்சிநதி நாடுகளுக்கு 1836-ம் வருஷத்தில் சென்றுர்கள். இதைத்தான் க்ரெட் ட்ரெக் (Great Trek) என்பார்கள். 1843-ம் வருஷத்தில் நெடாலை இங்கிலாந்து சேர்த்துக்கொண்டது.

சூலு போர்.— ட்ரான்ஸ்வாலிலும், ஆரெஞ்சு நதி நாட்டிலும் உள்ள போயர்களுக்கும், சுதேசிகளான சூலுக்களுக்கும் விரோதம் முற்றியது. இவர்கள் சண்டையில் சாமர்த்தியமுள்ளவர்களாதலால் தங்களை எதிர்ப்பதிலிருந்து இவர்களை நிறுத்துவது போயர்களுக்குக் கஷ்டமாயிருந்தது. இதைக்கண்ட இங்கிலீஷ்க்காரர்கள் பணமில்லாமலும், சுதேசிகள் எதிர்ப்பதைத் தடுக்க முடியாமலும் இருப்பதைக் கண்டு ட்ரான்ஸ்வாலை 1877-ம் வருஷத்தில் தங்கள் நாட்டுடன் சேர்த்துவிட்டார்கள். சுதேசிகள் ஐரோப்பியர்களைத் துரத்திவிடுவார்களோ என்கிற பீதியால் இப்படி இங்கிலாந்து செய்யும்படி நேர்ந்தது. சூலுக்கள் இதைக்கண்டு இங்கிலீஷ்க்காரர்களை எதிர்த்து முடிவில் கீழ்ப்படிந்தார்கள். ஆனபோதிலும் போயர்களுக்கு இங்கிலாந்தின்கீழ் இருக்க விருப்பமில்லாததால் 1881-ம் வருஷத்தில் இங்கிலீஷ் படையை லெயிங்ஸ் நெக் (Laing's Nek), மெஜூபா ஹில் (Majuba Hill) என்ற இரண்டு இடங்களிலும் தோற்கடித்தார்கள். இதன் முடிவாக இங்கிலாந்து அவர்களுக்குச் சுயாதீனத்தைக் கொடுத்தது. இப்படி முதல் போயர் போர் முடிவுக்கு வந்தது.

ட்ரான்ஸ்வாலில் க்ருகர் (Kruger) என்பவன் தென் ஆப்பிரிக்கா முழுவதும் போயர்கள் அதிகாரத்திற் குட்பட்டிருக்க விருப்பம் கொண்டான். அதேசமயத்தில் செஸில் ரோட்ஸ் (Cecil Rhodes) என்பவன் இங்கிலாந்திற்குத் தென் ஆப்பரிக்கா முழுவதும் வரவேண்டிய ஏற்பாட்டைச் செய்தான். 1883-ம் வருஷத்தில் ட்ரான்ஸ்வாலில் தங்கம் விளைவது கண்டுபிடிக்கப்பட்டதால் கேப்காலெனியிலுள்ள இங்கிலீஷ்க்காரர்கள் அங்குச்சென்று பெரிய பணக்காரர்களானார்கள்.

போயர்களுக்கு இதில் பயம் ஏற்பட்டு வெளியூர்க்காரர்களை (போயர்கள் இங்கிலீஷ்க்காரர்களை அழைத்தார்கள்) அதிக வரி கொடுக்கும்படி செய்ததுடன் அவர்களுக்கு யாதோர் உரிமையையும் அளிக்காமலிருந்தார்கள். இதிலிருந்து ஒரு கலகம் ஏற்பட்டு 1895-ம் வருஷத்தில் டாக்டர் ஜெமிஸன்




போயர் சண்டை—தென் ஆப்பிரிக்கா.

(Dr. Jameson) ட்ரான்ஸ்வாலுக்குச் சென்று போயர் களால் சிறைபிடிக்கப்பட்டான். இப்படிச் செசில் ரோட்ஸ் செய்தது கெடுதலில்முடிந்தது. இங்கிலீஷ்க் காரர்களுக்கும் போயர்களுக்கும் மனஸ்தாபம்

முற்றியது. போயர்களும் சண்டைக்குத் தயார் செய்தார்கள். சமாதான முயற்சிகள் வீணானமையால் 1899-ம் வருஷத்தில் இரண்டாவது போயர் யுத்தம் ஏற்பட்டது. அப்போது ஆரெஞ்சுநதி நாடும் அவர்களுடன் சேர்ந்தது. முதலில் இங்கிலீஷ்க்காரர்கள் தயாராயில்லாததால், லேடி ஸ்மித் (Lady Smith), கிம்பர்லி (Kimberley), மேபிகிங் (Mafeking) என்ற மூன்று இடங்களிலும் முற்றுகையில் அகப்பட்டுக்கொண்டார்கள். இவர்களை விடுவிக்கச் சென்ற சைனியங்களும், கொலென்சோ, மேகர்ஸ் பாண்டின், ஸ்டாம்பர்க் என்ற மூன்று இடங்களிலும் தோற்றன. இவைகளைக்கண்டு இங்கிலாந்தில் ராபர்ட்ஸ் பிரபுவும், கிச்சனர் பிரபுவும் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார்கள். 1900-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் போயர் தளகர்த்தனை கிராஞ்சி, பார்டிபர்க் என்ற இடத்தில் சிறைபிடிக்கப் பட்டான். இரண்டு நாடுகளின் பிரதானப் பட்டனங்களும் இங்கிலீஷ்க்காரர்கள் வசமாயின. க்ரூகரும் ஹாலெண்டிற்கு ஓடினன். இரண்டு வருஷம் சண்டை நடந்து முடிவில் 1902-ம் வருஷம் ஜூன் மாதத்தில் வ்ரீனிகிங் (Vreeniging) சமாதானத்தின்படி இரண்டாவது யுத்தம் முடிவிற்கு வந்தது. இரண்டு போயர் நாடுகளும் இங்கிலாந்திற்குச் சொந்தமாயின. தன்னைத்தானே ஆளும் சுயாதீனத்தை அளிப்பதாக இங்கிலாந்து வாக்களித்தது. அப்படியே 1906-ம் வருஷத்தில் அதுவும் அளிக்கப் பட்டது. 1910-ம் வருஷத்தில் டொமினியன் துரைத்தனம் ஏற்பட்டு நான்கு நாடுகளாகிய கேப்நாடு, நேடால், ட்ரான்ஸ்வால், ஆரெஞ்சுநதி நாடு என்பன பொது விஷயங்களுக்குப் பொது பார்லிமெண்டை ஏற்படுத்திக்கொண்டன. ஆனால், சுதேசிகளின் விஷயம் அந்நாடுகளுக்கு விடப்பட்டதால் அவைகள் இந்தியர்களைச் சரியாக நடத்தாமையைக்

கண்டு இந்தியா துரைத்தனத்தார் சர். ஹபிபுல்லா, மகா கனம் வி. எஸ் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் முதலியவர்களை அனுப்பி 1926-ம் வருஷத்தில் கேட்டவுன் சமாதானத்தைச் செய்துகொண்டார்கள். இந்தியாவின் ஏஜண்டு அங்கு போவது ஏற்பட வி. எஸ் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரே முதல் ஏஜண்டாக வேலைபார்த்து வந்தார். இங்கிலாந்து குடியேற்ற நாடுகளின் உள்நாட்டு விஷயங்களில் பிரவேசிப்பதில்லை. பெரிய ஐரோப்பிய யுத்தத்தில் இவைகள் தாய் நாட்டிற்குப் பல உதவிகளைச் செய்தன.

## எகிப்த், சூடான்.

1869-ம் வருஷத்தில் ஸூயஸ் கால்வாய் வெட்டப்பட்டது. இதனால் கப்பல்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வருவதைவிட ஸூயஸ் கால்வாய் வழி பாதிதூரம் குறைந்ததாகையால் இதன் வழியாகவே இந்தியா முதலான இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்தன. 1875-ம் வருஷத்தில் எகிப்தின் அரசன் இஸ்மெயில் பாஷாவிடமிருந்து இங்கிலாந்தின் பிரதான மந்திரி டிஸ்ரேலி ஸூயஸ் கால்வாய்ப் பங்குகளை வாங்கி இங்கிலாந்திற்கு ஒரு செல்வாக்கை ஏற்படுத்தினான். மேலும் கெடீவ்இஸ்மேல் இங்கிலீஷ் பிரஞ்சு ஆகிய இருதேசக்காரர்களிடமிருந்து வாங்கின கடனைக் கொடுக்க மாட்டேனென்றதால் இருதேசக் கப்பல்படைகளும் எகிப்திற்குச் சென்று இஸ்மேலைப் பட்டத்திலிருந்து இறக்கி அவன் மகனைப் பட்டத்தில் வைத்தன. இதுமுதல் அவன் இங்கிலீஷ்க்காரர்களையும், பிரஞ்சுக்காரர்களையும் உதவிக்கு வைத்துக்கொண்டான். 1881-ம் வருஷத்தில் இப்படி ஐரோப்பியர்கள் இருப்பதில் அதிருப்தி ஏற்பட அரபிபாஷா கலகம் செய்தான். அவனும் 1882-ம் வருஷத்தில் டெலெல் கெபிர் என்ற இடத்தில் தோற்றுச்

சிறைபிடிக்கப்பட்டான். இதுமுதல் இங்கிலீஷ் சைனியம் எகிப்தில் வைக்கப்பட்டது. இங்கிலீஷ்க்காரர்களும் கெடீவுக்கு உதவியாயிருந்தார்கள். இவர்கள் இருந்தகாலத்தில் எகிப்த் ஒரு நாகரிக தேசமாக ஆயிற்று. இதற்குக் காரணம் க்ரோமர் பிரபு ஆவான். இதே காலத்தில் சூடானில் ஒரு கலகம் ஏற்பட அதன் முடிவாகக் கார்டன் (Gordon), கார்டூம் என்ற இடத்தில் கொல்லப்பட்டான். 1896-ம் வருஷத்தில் கிச்சினர் பிரபு சூடானைத் திரும்பப்பிடித்தான். 1914-ம் வருஷத்தில் இரண்டாவது அப்பாஸ் ஜர்மெனியுடன் சேர்ந்ததால் எகிப்த் இங்கிலாந்தின் ரக்ஷக ஸ்தலமாய் ஏற்பட்டது. ஆனால் எகிப்திலுள்ளவர்கள் ஸக்குல் பாஷாவின் தலைமையின்கீழ் சுயாதீன உரிமையைக் கொண்டாடினார்கள். 1922-ம் வருஷத்தில் இங்கிலாந்து நான்கு விஷயங்கள் தவிர மற்ற விஷயங்களில் எகிப்த் சுயாதீனமுள்ள தேசமென்று அறிக்கை செய்தார்கள். இப்படிச் சூடான் இங்கிலாந்திற்கு உரிமையுள்ளதாயிற்று. இதில் எகிப்த் திருப்திபடாமல் இருந்தது. 1924-ம் வருஷத்தில் சர் லீ ஸ்டேக் என்பவர் கொல்லப்பட்டதால் இங்கிலாந்து அதிக நிபந்தனைகளை ஏற்படுத்தியது. 1926-ம் வருஷமுதல் முன் உடம்படிக்கையை மாற்ற எகிப்த் ஜனங்கள் முயற்சி செய்துவந்தார்கள். 1929-ம் வருஷத்தில் உண்மையான சுயாதீனத்தை எகிப்திற்குக் கொடுத்துத் திருப்திசெய்யத் தொழிற்கக்ஷித் துரைத்தன மந்திரி ஹெண்டர்ஸன் முயற்சி செய்கிறார். இதனால் எகிப்திலும் இங்கிலாந்து நியாயத்தைச் செய்ய எண்ணம் கொண்டிருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது. இஃது ஒரு குடியேற்ற நாடில்லாவிடினும், குடியேற்ற நாடுகளிடம் இங்கிலாந்து காட்டும் தாராள புத்தி எகிப்தின் விஷயத்திலும் காட்டப்படுகிறது.

## இந்தியா.

1858-ம் வருஷத்தில் இந்தியத் துரைத்தனம் மஹாராணியாகிய விக்டோரியாவின்கீழ் வந்தது. கான்னிங் பிரபு முதல் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டான். 1861-ம் வருஷத்தில் இந்தியா கௌன்ஸில் சட்டம் ஏற்பட்டு அதன்படி ஒரு சட்டசபையும், நிர்வாக சபையும் ஏற்பட்டன. இதுபோல் மாஹாண சட்டசபைகளும் ஏற்பட்டுச் சட்டங்களைச் செய்யும் அதிகாரத்தைத் திரும்ப அடைந்தன. இந்தியர்கள் இதில் திருப்தியடையாமல் அதிகச் சீர்திருத்தங்களை வேண்டினமையால் 1892-ம் வருஷத்தில் இரண்டாவது கௌன்சில் சட்டம் ஏற்பட்டது. இதன்படி சட்டசபை மெம்பர்கள் தொகை அதிகரித்ததுடன், மாஹாணங்களிலிருந்தும் துரைத்தன உத்தியோகஸ்தரல்லாதவர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்ப உரிமையை அடைந்தார்கள். இதுபோலவே மாஹாணச் சட்டசபைகளும், முன்சிபால்டிகளும், ஜில்லா போர்டுகளும், பிரதிநிதிகளைப் பொறுக்கி யனுப்பும் உரிமையை அடைந்தன. கேள்வி கேட்கவும், வரவு செலவு திட்டத்தை விவாதிக்கவும் உள்ள உரிமைகளைச் சட்டசபைகள் அடைந்தன. மூன்றுவது கௌன்ஸில் சட்டம் 1909-ம் வருஷத்தில் ஏற்பட்டது. இதை மிண்டோ-மார்லீ சீர்திருத்தங்கள் என்பார்கள். இதன்படி சட்டசபைகளிலும் நிர்வாகசபைகளிலும், மெம்பர்கள் அதிகரித்தார்கள். ஒவ்வொரு மாகாண நிர்வாகசபையிலும் 4 மெம்பர்களாகி அவர்களுள் ஒருவர் இந்தியராக இருக்கும் உரிமைவந்தது. வைஸ்ராயின் நிர்வாகசபையிலும் ஓர் இந்தியர் மெம்பராக இருக்கும் உரிமையும், இந்தியக் காரியதரிசி சபையிலும் இந்தியர்கள் மெம்பர்களாக இருக்கும் உரிமையும் கிடைத்தன. மேலும், பொது விஷயங்களில் தீர்மானங்களைச்

செய்யவும், வரவு செலவு திட்டத்திலும் அதுபோல் தீர்மானங்களைச் செய்யவும் சட்டசபைகள் அதிகாரத்தை அடைந்தன. 1917-ம் வருஷம் ஆகஸ்ட் 20-ல் இந்தியாவிலுள்ள மிதவாதிகளைத் திருப்திப்படுத்தவும், ஐரோப்பியப் போரில் இந்தியர் காட்டிய விசுவாஸத்தைக் கண்டு இந்தியக் காரியதரிசி பார்லிமெண்டில் இரண்டு விஷயங்களை அறிக்கை செய்தனர். அதன்படி துரைத்தனத்தில் ஒவ்வொரு இலாகாவிலும் இந்தியர்களை அதிகமாயிருக்கும்படி செய்யவேண்டுமென்பதும், இந்தியாவிற்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் தன்னைத்தானே ஆளும் உரிமையைப் படிப்படியாகக் கொடுப்பது பிரிட்டிஷ் துரைத்தனத்தாருடைய விருப்பம் என்பதும் அறிக்கை செய்யப்பட்டன. இதன் முடிவுதான் மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தமாகும். 1919-ம் வருஷத்திய இந்திய துரைத்தனச் சட்டப்படி மாகாணங்களில் ஒதுக்கப்பட்ட இலாகா (ரிஸர்வேட்), மாற்றப்பட்ட இலாகா (ட்ரானஸ்பர்ட்) என்று இரண்டு பிரிவுகள் ஏற்பட்டு ஒன்றுக்கு நிர்வாகசபையும் இன்னொன்றிற்கு மந்திரிகளும் பொறுப்புள்ளவர்களானார்கள். மந்திரிகள் சட்டசபைக்கு முகாந்தரம் கூறவேண்டியவர்களானார்கள். துரைத்தன உத்தியோகஸ்தர் அல்லாதவர்கள் பெரும்பான்மையோராக சட்டசபை இருக்க இடம் ஏற்பட்டது. வரவு செலவு திட்டம் சபையில் வாதிக்கப்பட்டு ஒத்துக்கொள்ளப்படும். இந்தியா துரைத்தனத்தில் இந்தியச் சட்டசபை, இராஜாங்க சபை (கௌன்ஸில் அப் ஸ்டேட்) என்பன ஏற்பட்டன. ஆனால், ராஜப்பிரதிநிதி, சட்டசபையால் தள்ளப்பட்ட வரவு செலவு திட்டத்தைத் திரும்பி அமைக்க அதிகாரம் பெற்றிருக்கிறார். இதிலும் இந்தியர்களுக்குத் திருப்தியில்லாததால்

1928-ம் வருஷத்தில் பார்லிமெண்டார் இந்தியாவில் துரைத்தன விஷயத்தை விசாரிக்க அனுப்பின ஸைமன் கமிஷனுடன் அநேகர்கள் ஒத்துழையாமலிருந்தார்கள். இந்திய சமஸ்தானங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் பட்டவர் கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டு விசாரணை செய்திருக்கிறது. விட்லி கமிஷன் என்ற ஒரு கமிஷன் தொழிலாளரைப் பற்றி ஆராயவும் தோன்றி ஆராய்ந்திருக்கிறது. எல்லோரையும் திருப்தி செய்ய ராஜப்பிரதிநிதி இர்வின் பிரபு இங்கிலாந்திற்குச் சென்று அங்கே உள்ள தொழிற் கக்ஷி மந்திரிகளுடன் கலந்து கொண்டு 1929-ம் வருஷம் அக்டோபர்மீ 31உ ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதின்படி இந்தியா முடிவில் குடியேற்ற நாடுகளின் (டுமினியன்) பதவியை அடையும்படி செய்வது இங்கிலாந்தின் எண்ணம் என்பது வெளியிடப்பட்டது. இந்தியர்கள் கேட்டுக்கொண்டபடி எல்லோரும் கலந்து பேச லண்டனில் ஒரு சங்கத்தைக் கூட்டுவதாகவும், அதில் இந்தியர்கள் தாங்கள் சொல்லவேண்டியவற்றை ஒருமனதாகச் சொல்லும்படியும் குறிப்பிட்டிருக்கிறார். இவற்றால் இங்கிலாந்து, குடியேற்ற நாடுகளாக இல்லாமல் தனக்குள் இருக்கும் பிறநாடுகளுக்கும் நியாயமான காரியங்களைச் செய்யச் சித்தமாயிருக்கின்றது எனத் தெரிய வருகிறது. இங்கிலாந்தின் புதிய தந்திரம் பிறநாடுகளையும் திருப்திப்படுத்தி அவைகளின் நியாயமான வேண்டுகோள்களைக் கொடுப்பது என்பது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இவை மேற்கூறியவைகளிலிருந்து நன்கு வெளிப்படும்.

## பத்தொன்பதாவததிகாரம்.

## மக்களின் நிலைமை.

### பத்தொன்பதாவது நூற்றாண்டும்—பிறகும்.

ஜனங்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டைக் கற்பனுசக்தியும், ஜன நாயகமும் ஓங்கின காலமாகச் சொல்வார்கள். மேலும், இங்கிலாந்தில் ஜான் வெஸ்லி என்ற மதத்தலைவன் கிளம்பிப் பிரசாரம் செய்யத் தொடங்கின காலம் முதல் ஜனங்களிடத்தில் மத பக்தியும், தங்களுடைய வாழ்நாட்களைச் சரியாகக் கழிக்கவேண்டுமென்கிற ஒரு தோற்றமும், ஏழைகளிடத்திலும், பிராணிகளிடத்திலும் கருணை செலுத்தவேண்டுமென்கிற ஒரு விருப்பமும் தோன்றின. அவருக்குப் பிறகு ஜனங்களின் ஒழுக்கம் விருத்தியடைந்தது. துரைத்தனத்தார் கருணை வாய்ந்தவர்களாகமாறியதும், ஏழைகளாகவும் அதிகக் கஷ்டத்தை அனுபவிப்பவர்களாகவும் இருப்பவர்களின் நிலைமையை உயர்த்துவதில் முயற்சியுள்ளவர்களாக மாறியதும் இவருடைய கருத்தைப் பின்பற்றியதால் ஏற்பட்டனவே. ஆனால், ஒரு விஷயம் ஞாபகத்தில் வைக்கத் தகுந்தது. ஒரு கெடுதி ஏற்பட்டு அதை நிவர்த்திசெய்ய வழிதேடுவதைவிட அதைவராவண்ணம் தடுப்பது நன்மையைப் பயக்கும். இந்தக் கொள்கை எல்லோருக்கும் உடன்பாடாகும். ஜனங்கள் சுகாதார விதிப்படி நடக்கவும், நல்ல இடங்களில் வசிக்கவும், ஒழுக்கத்துடன் வாழவும் நன்கு தெரிந்துகொண்டது பத்தொன்பதாவது நூற்றாண்டிலே தான்.

**கற்பனுசக்திக் காலம்.**—பொருள் அறிவின் உதவியால் சாமான்களை உற்பத்தி செய்வதும், வியாபாரம் விருத்தி

யடைவதும் மேலோங்கின. உற்பத்தியான சாமான்களை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்பு வதற்குச் சௌகரியங்கள் ஏற்பட்டன. சீக்கிரத்தில் சமாச் சாரங்களை அனுப்புவது, பிரயாணம் செய்வது, நுட்ப மான ரணவைத்தியங்களைச் செய்வது முதலிய விஷயங் களில் தோன்றிய கற்பனைசக்தியின் மகிமை மேலான தாகும். வாட் (Watt) நீராவியின் சக்தியைச் கண்டு பிடித்தபோதிலும், ஸ்டீபன்சன் (Stephenson) என்பவன் தான் ரெயில் ஓடுவதற்கு அச்சக்தியை உபயோகபடுத்தி னான். அப்படியே 'ராக்கெட்' என்பது முதலில் மான் செஸ்டருக்கும் லிவர்பூலுக்கும் ஓட ஆரம்பித்தது. இது முதல், வாய்க்காலின் உபயோகம் நின்றது. மண்ணெண் ணெயின் உபயோகமும் மின்சாரமும் தெரியவந்தது முதல், மோட்டார் வண்டிகளும், மின்சார விளக்குகளும் உபயோகத்திற்கு வந்தன. 1812-ம் வருஷத்தில் நீராவிப் படகுகள் ஏற்பட்டன. 'காமெட்' படகு 'க்ளைட்' நதி யில் முதலில் சென்றது. 1865-ம் வருஷம் முதல் இரும் பினால் கட்டப்பட்ட புகைக்கப்பல்கள் செல்ல ஆரம்பித் தன. மின்சாரத்தின் உபயோகமாகத் தரையிலும் சமுத் திரத்திலும் கம்பிகளின் வழியாய்த் தந்தி சமாசாரங்களை அனுப்புவது ஆரம்பித்தது (Telegraph—Submarine Cable), கம்பிகளின் வழியாய்ப் பேசுவதும் வழக்கத்தில் வந்தது. கம்பியில்லா தந்தி அனுப்புவதையும் (Wireless) நாம் பார்க்கிறோம். ரணவைத்தியம் செய்வதில் பல அற் புதமான வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. க்ளோரோ பாரம் (Chloroform), அவயவங்களின் உட்பாகங் களை ஆராய்ச்சி செய்தல் என்ற இவைகள் ஏற்பட்டது முதல் ஜனங்களுடைய வியாதிக் கஷ்டங்கள் நிவர்த்தி யாவது சுலபமாயிவிட்டது.

ஜனநாயகம் (Democracy).—1688-ம் வருஷத்திய புரட்சியின்படி பார்லிமெண்டின் அதிகாரம் மேலானது என்பது ஏற்பட்டுவிட்டது. ஆனால், பார்லிமெண்டில் உண்மையிலேயே ஜனங்களின் பிரதிநிதிகள் இல்லை. பிரபுக்கள் சபையின் அதிகாரமே பொதுஜன சபையிலும் மேலோங்கியிருந்தது. மேலும், அரசனும் தனது இஷ்டம் போல் தேர்தல்களில் தன்னுடைய சினேகிதர்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கும்படி செய்து, அவர்களுடைய உதவியால் தனது இஷ்டத்தை நிறைவேற்றி வந்தான். பார்லிமெண்டைச் சீர்திருத்தம் செய்வதற்குப் பிரபுக்கள் சபையிலே தடை மிகுதியாய் இருந்தது. 1832-ம் வருஷத்திய சட்டத்தால் நன்கு தெரியவரும். இந்த முதல் சீர்திருத்தத்தில் வியாபாரிகளுக்கு ராஜ்ஜிய அதிகாரம் கிடைத்தது. பிறகு நடந்த 1867, 1884-ம் வருஷங்களின் சீர்திருத்தங்களால் பட்டிணங்களிலும், உள்நாட்டிலுமுள்ள வேலைக்காரர்களுக்கும் வோட்டுக் கொடுக்கும் உரிமை வந்தது. 1911-ம் வருஷத்திய பார்லிமெண்டுச் சட்டப்படி, பொதுஜன சபையில் தொடர்ந்தாற்போல மூன்று முறைகளில் ஒரு விஷயம் நிறைவேறினால் அந்த விஷயத்திற்குப் பிரபுக்கள் சபையின் சம்மதம் வேண்டுவதில்லை யென்பது ஏற்பட்டது. இதுமுதல் தேசத்திலே பொதுஜன சபைதான் மேலானது என்பது நிலை பெற்றது. 1918-ம் வருஷத்திய 'ஜனப்பிரதிநிதி'ச் (Representation of the People Act) சட்டத்தின் படி, பதினெட்டு வயது நிறைந்த புருஷர்களும், முப்பது வயதான பெண்களும் வோட் கொடுக்கும் உரிமையை அடைந்தார்கள். இப்படி ஜனநாயகம் உண்மையிலேயே ஏற்பட்டுவிட்டது.

முதலாளிகளும்—தொழிலாளிகளும்.—தொழிற் புரட்சி வந்தது முதல் முதலாளிகளுக்கு அதிக லாபம் வந்ததால், அவர்கள் பெரிய பணக்காரர்களானார்கள். ஏழைகளுக்கு வோட் கொடுக்கும் உரிமை வந்தவுடன், தொழிலாளிகள், எல்லாத் தொழிலாளிகளும் ராஜாங்கத்தாரைச் சேர்ந்தன வாயிருக்கவேண்டுமென்று எண்ணத் தொடங்கினார்கள். இதனால், தொழிலாளிகளின் நிலைமை ஒவ்வொருவிதத்திலும் விருத்தியடையும் என்று நம்பினார்கள். இதைத் தான் தொழிலாளிமுறை அல்லது ஏழை துரைத்தன முறை (Socialism) என்பார்கள். ராஜாங்கத்தார் தொழிலாளிகளைச் சொந்தமாக்கிக் கொள்ளாவிட்டாலும் அம் முறையினால் வரக்கூடிய பயனைத் தொழிலாளிகள் அடைந்திருக்கிறார்கள். 1924-ம் வருஷத்தில் பார்லிமெண்டில் தொழிலாளிகளின் கக்ஷி அதிகாரம் வகித்து, மாக்டொனெல்ட் (Macdonald) பிரதான மந்திரிப் பதவியை வகித்தார். அக்கக்ஷியின் முக்கிய எண்ணம் தொழிலாளிகளின் க்ஷேமத்தைக் கருதுவது என்றிருந்தாலும், தேசத்தின் க்ஷேமத்தைக் கவனிப்பதும் தனது கடமை என்பதைத் அது தெரிந்துகொண்டது. 1929-ம் வருஷம் ஜூன் மாதத்தில் மறுபடியும் தொழிலாளிகளின் கக்ஷி அதிகாரம் அடைந்து இப்பொழுதும் மாக்டொனெல்ட் பிரதான மந்திரிப் பதவியை வகித்திருக்கிறார். தற்காலம் இங்கிலாந்தில் மூன்று கக்ஷிகள் இருக்கின்றன. அவை கன்சொர்வெடிவ் கக்ஷி, லிபரெல் கக்ஷி, தொழிலாளிகள் கக்ஷி என்பன. கன்சொர்வெடிவ் கக்ஷியும், லிபரெல் கக்ஷியும் ஒன்று சேர்ந்தால் தொழிலாளி கக்ஷி தனது அதிகாரத்தை இழக்கும்படியான நிலைமையில் இருக்கிறது. இப்படி யிருப்பதால் லேபர் கக்ஷிக்காரர்கள் உத்தியோகத்திலிருக்கிறார்களே ஒழிய அதிகாரத்தில்

இருக்கவில்லை என்று சொல்லப்படுகிறார்கள். (Labour in office and not in power). இம்முறையில், தொழில் கக்ஷி, லிபரெல் கக்ஷியின் உதவியில் நிற்கின்றதால், அது எதனை யும் துணிந்து செய்வது கஷ்டமாகும்.

கல்வி.—பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம் பத்தில் இங்கிலாந்திலுள்ள கவிகளும், உரைநடையில் எழுதும் ஆசிரியர்களும் எல்லோராலும் புகழக்கூடிய நிலைமையில் இருந்தவர்கள். உலக இயற்கையை விரித்து எழுவது என்றமுறை தோன்றியது. வேட்ஸ்வர்த் (Wordsworth) எழுதிய செய்யுள்கள் யாவும் அவ் வழியில் அமைந்ததானவே. உரைநடையில் ஸ்காட் (Sir Walter Scott) எழுதிய நூதனக்கதைகள், எல்லோரும் அடிக்கடி வாசிக்கக் கூடியவைகளாகவும், உண்மை நெறியில் உலகவாழ்க்கையை விரித்திருப்பதால் அக்காலத்து வாழ்க்கை முறையை எளிதில் அறிய துணை செய்வன வாகவும் இருந்தன. விக்டோரியாவின் காலத்தில் எல்லா வழிகளிலும் அறிவு பரவி பல நூல்களும் ஏற்பட்டிருக் கின்றன. டென்னிசனையும், ப்ரௌனிங் கவிகளையும் கற்றவர் ஒருவரும் மறக்கமாட்டார். நூதனக்கதைகள் எழுதுவதில் டிக்கன் ஸை (Dickens)ப்போல் எவராவது உண்டோ என்பது சந்தேகிக்க வேண்டியதாகும். ஒரு பெண் பிள்ளை ஆண் பிள்ளையின் பேருடன் எழுதின கதைகள் அற்புதமானவைகளாயிருக்கின்றன. இப்படியே விக்டோரியா மகாராணியார் காலத்தில் ஜார்ஜ் எலியட் (George Elliot) என்ற ஒரு பெண் பிள்ளை எழுதியதும் அற்புதமாக இருக்கின்றது. இவற்றால் பெண் மகளின் நிலைமை அக்காலத்தில் எப்படி விருத்தியடைந்திருந்தது என்பதும் நன்கு அறியப்படும்.

## சாம்ராஜ்ஜிய ஆலோசனைச் சங்கம்.

1887-ம் வருஷத்தில் மகாராணியின் அரசாட்சியில் ஐம்பது வருஷம் முடிந்ததைக் கொண்டாடும் உற்சவம் லண்டனில் நடக்குங்கால் குடியேற்ற நாடுகளிலிருந்து வந்திருந்த மந்திரிகள் தாய் நாட்டின் மந்திரிகளுடன் ஓர் ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டினார்கள். இது முதல் 'சாம்ராஜ்ஜிய ஆலோசனைச் சங்கம்', அடிக்கடி கூடுவது என்பது வழக்கத்தில் வந்தது. அச்சபைகளில் எப்படித் தாய் நாட்டையும், குடியேற்ற நாடுகளையும் ஒற்றுமைக்குக் கொண்டுவரலாம் என்பதும், ஒரு சாம்ராஜ்ஜியப் பார்லிமெண்டை ஏற்படுத்தி அதற்குக் குடியேற்ற நாடுகளும் பிரதிநிதிகளை அனுப்பி ராஜ்ஜியபாரத்தை நடத்தலாம் என்பதும் முக்கிய விஷயங்களாக இருந்தன. இந்த யோசனை முடிவுக்கு வர அநேக இடையூறுகள் இருந்த போதிலும் அவைகளும் வர வர ஒழிந்து காரியம் சித்தி பெறலாம் என்கிற நம்பிக்கை உண்டாகிக்கொண்டு வருகிறது. பெரிய ஐரோப்பிய யுத்தம் நடக்கும்போது இங்கிலாந்தின் சண்டையை நடத்தக் குடியேற்ற நாடுகள் கூடிய 'சாம்ராஜ்ஜிய சண்டைச் சங்கம்' ஒன்று ஏற்பட்டிருந்தது. வியாபாரத்தைப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் விருத்தி செய்ய அநேக யோசனைகள் நடைபெற்று வந்தன. இப்படிச் செய்வதிலிருந்து வரவர சாம்ராஜ்ஜியப் பார்லிமெண்டு அனுஷ்டானத்திற்கு வந்துவிடும் என்பது திண்ணம். இந்தியாவும் அச்சங்கத்தில் மற்ற நாடுகளுடன் சமமாய் நடத்தப்படும் என்பதை இங்கிலீஷ் துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள்.

# இருபதாவததிகாரம்.

## ஐரோப்பிய மஹாயுத்தம் 1914—18.

ஏழாவது எட்வேர்ட் பட்டம் தரித்தவுடன் போயர் யுத்தத்தைச் சீக்கிரத்தில் சாமாதானத்திற்கு கொண்டுவர முயன்றான். சண்டை நடந்துகொண்டிருக்கும்பொழுதே ஐரோப்பாவிலேயே இங்கிலாந்திற்கு விரோதிகளிருப்பது நன்கு வெளிவந்தது. ஆகையால், இங்கிலாந்துக்கு உள் ஒற்றுமை அவசியமாயிருந்தது. 1879-ம் வருஷத்தில் ஜர்மனியும், ஆஸ்திரியாவும் நேச உடன்படிக்கையைச்செய்து கொண்டது ஐரோப்பாவின் அமைதிக்குக் காரணமாகுமென்று அநேகர் எண்ணி யிருந்தனர். 1892-ம் வருஷத்தில் இடெலியும் முன் சொன்ன இருதேசங்களுடன் சேர்ந்ததால் அதை மூவர் சேர்க்கை யென்று நாம் கூறலாம். (Triple Alliance). ஜர்மனிக்கு இரண்டாவது வில்லியம் சக்கரவர்த்தியானது முதல் இங்கிலாந்திற்கும் ஜர்மனிக்கும் ஒற்றுமை குறையக் காரணம் ஏற்பட்டது. ஜர்மனி சண்டைக் கப்பல்களை விருத்தி செய்தது; கீல்வாய்க்காலை வெட்டிக் கப்பல்களைப் பால்டிக் சமுத்திரத்திலிருந்து வட கடலு (North Sea) க்குக் கொண்டுவர வழி தேடியது. ஜர்மனி துருக்கியில் தனது அதிகாரத்தை அதிகப்படுத்திக் கொண்டு பாரசீகக்கடல் வரையிலும் செல்லக்கூடிய ரெயில் பாதைகளைப் போட்டுக்கொள்ளும் அனுகூலத்தைப் பெற்றது. போயர் வெற்றிகளில் சந்தோஷம் கொண்ட கெய்ஸர் (Kaiser) (ஜர்மன் சக்கிரவர்த்தி) அதைக் குறித்துப் போயர்களுக்குத் தந்தி அனுப்பினது எல்லாச் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்தது. கட்டாய ராணுவப் பழக்கமிருப்பதும், குருப்பில் பெரிய குண்டுகளைச் செய்வதும், சண்டைக்கு வேண்டிய ஆகாயக்கப்பல்களைக் கட்டுவதும்

(Zeppelin), சமுத்திரத்தின்கீழ்ச் சென்று சண்டை செய்யும் கப்பல்களைச் செய்வதும் வரப்போகும் பெரிய போருக்கு ஜர்மனி தன்னைத் தயாரிப்பதுபோலாகும் என்பதும் அறியப்பட்டது. எல்லாவற்றிலும் மேலானது ஜர்மனியின் ஜனங்கள் "பலத்தின் உதவியாலேதான் தேசம் உயர்ந்தநிலைமையை அடைய முடியும்" என்று போதிக்கப் பட்டுவந்ததே ஆகும்.

இங்கிலாந்து மூவர் சேர்க்கையை (Triple Alliance)த் தடுக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டது. 1904-ம் வருஷம் இங்கிலாந்தும், பிரான்சும் உடன்படிக்கையைச் செய்துகொண்டதும், 1907-ம் வருஷத்தில் அவ்விரண்டும் ருஷியாவுடன் உடன்படிக்கையைச் செய்துகொண்டதும் மூவர் நட்பாகும் (Triple Entente). இப்படி இரண்டு கக்ஷிகளாக ஐரோப்பா பிரிந்து நின்றது.

இப்போருக்குற்ற உண்மையான காரணம் ஜர்மனி மற்ற தேசத்தாரைப்போலத் தனக்கும் குடியேற்ற நாடுகளைச் சம்பாதிக்கவும், வியாபாரத்தை விருத்தி செய்யவும் விருப்பம் கொண்டதேயாகும். இது நிறைவேறினால் பிரான்சின் நாடுகளைப் பலாத்காரமாய் பிடித்துக்கொண்டு முதலில் ஐரோப்பாவில் தனது அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொள்வதுடன், பிறகு இங்கிலாந்துடனும் தனது பலத்தை உபயோகிக்க ஜர்மனி எண்ணங்கொண்டது. ஆஸ்திரியாவின் இளவரசும், அவன் மனைவியும் சார்ஜீவோ என்ற இடத்தில் கொலையுண்டது இப்போருக்கு நெருங்கிய காரணமாகும். ஜர்மனி ஆஸ்திரியாவைத் தனக்குக் கருவியாக உபயோகித்துக் கொண்டு சர்வியத் (Servia) துரைத்தனத்தாரை 24 மணி நேரத்திற்குள் இப் படுகொலைக்கு வகைசொல்லும்படி கேட்குமாறு ஆஸ்திரியா சக்கரவர்த்தியைத் தூண்டிவிட்டது. செர்வியர்களை ரத்த சம்பந்தம்

பற்றிக் காப்பாற்றும் கடமையைக்கொண்ட ருஷியா அவர்களுக்கு உதவிபுரியத் துணிந்தது. பிரான்சு ருஷியாவுடன் சேர, ஜர்மனி பஹிரங்கமாய் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து சண்டையை ஆரம்பித்தது. இங்கிலாந்து முதலில் தயங்கி நின்று, பிறகு ஜர்மன் துருப்புக்கள் பெல்ஜியத்தின் வழியாய்ச் செல்ல அனுமதி கேட்பதை உடன்படிக்கைக்கு விரோதம் என்று கூறித் தடுத்துவிட்டது. இப்படி இங்கிலாந்து 1914-ம் வருஷம் ஆகஸ்டுமீ 4உ யில் சண்டையில் தலையிட ஆரம்பித்தது

போரின் புது மாதிரி.—தரையில் சுரங்கங்களை வெட்டி அரண்சண்டை (Trench Warfare) புரிவதும், விஷக் காற்றை உபயோகம் செய்வதும், கப்பல் சண்டையில்லாமல் சமுத்திரத்தின் கீழிருந்து (Sub-marines) ஓடும் கப்பல்களை மூழ்கடிப்பதும், ஆகாயகப்பல்களிலிருந்து வெடிகளைப் போட்டு பட்டணங்களிலுள்ள ஜனங்களைப் பயமுறுத்துவதும் ஜர்மனியின் நூதனமான போர் முறைகளாயிருந்தன. இடெலி எண்ணினபடி ஜர்மனியுடன் சேராமல் இங்கிலாந்துடன் சேர்ந்தது. இதற்குப் பதிலாகத் துருக்கி எதிரிகளுடன் சேர்ந்தது.

சண்டையின் ஆரம்பத்தில் போதுமான படையில்லாததைக் கண்டு, இந்தியாவின் வைஸ்ராயான ஹார்டிஞ்சு ஒரு லக்ஷம் துருப்புக்களை ஜர்மன் படையெடுப்பைத்தடுக்கும் பொருட்டு இந்தியாவிலிருந்து அனுப்பினான். முதலில் மான்ஸ் (Mons) என்ற இடத்திலிருந்து பிரிட்டிஸ் சைனியம் திரும்பும்படி நேர்ந்தபோதிலும், பிறகு மாரன் நதிக்கரையில் நடந்த சண்டையால் விரோதிகளின் சைனியம் முன் வராமல் தடுக்கப்பட்டு நின்றது. குடியேற்ற நாடுகளான ஆஸ்ட்ரேலியா, கானடா, இந்தியா, நியூசீலெண்டு முதலியன வேண்டிய உதவிச் சைனியங்களைக் காலிபொலி

(Gallipoli) தீபகல்பத்திற்கு அனுப்பின. இதில் அநேகர்கள் வீரத்துடன் சண்டை புரிந்து மாண்டார்கள். மெஸபொடோமியாவில் டவுண்செட், கட் என்கிற இடத்தில் கீழ்ப்படிந்தான்.

சமுத்திரத்தில் ஜட்லாண்டு சண்டையில் இருதிறத்தாரும் வெற்றியைக் கொண்டாடினபோதிலும் ஜர்மனியின் கப்பல்கள் சமுத்திரத்தில் மறுபடியும் வாராமையால் அது தோற்றது நிச்சயமாகும். ஜர்மனி 'லூசிடேனியா' என்ற அமெரிக்கர்களின் கப்பலை மூழ்கடித்ததால் அமெரிக்கா இங்கிலாந்துடன் சேர்ந்தது. இதுமுதல் ஜர்மனியின் வீழ்ச்சியைச் சித்தமாக எண்ணலாம். மான்ஸ் என்கிற இடத்திலேயே ஜர்மனி தோற்றுச் சமாதானம் பேச ஆரம்பித்தது. சண்டையை நிறுத்த 1918-ஹு நவம்பர் மீ 11உயில் உத்தரவு ஏற்பட்டது. இப்பொழுது நவம்பர் மீ 11உயில் 11 மணிக்கு 5 நிமிஷம் வேலைகளை நிறுத்துவது இதுபற்றியே. ஐக்கியநாடுகளின் அக்கிராசனுதிபதியாயிருந்த வில்சனின் முயற்சியால் இப்பெரும் போர் முடிவுக்கு வந்தது. 1919-ம் வருஷம் ஜூன் மீ 28உ-ல் நிறைவேறிய வெர்ஸெ (Versailles) உடன்படிக்கை ஐரோப்பாவில் அமைதியைக் கொண்டுவந்தது. உலகத்தில் இனிமேல் சண்டையேற்படுவதைக் குறைக்கச் சர்வதேசச் சங்கம் (League of Nations) ஒன்று ஏற்பட்டுப் பஞ்சாயித்துக்களாக நின்று தேசத்தவர்களுடைய விவாதங்களைத் தீர்க்கின்றது. இந்தியாவும் அச்சபையில் ஒரு மெம்பராய் இருக்கிறது. ஜர்மனியும், ஆஸ்திரியாவும் குடியரசு நாடுகளாயின.

சர்வதேசச் சங்கம் :—சண்டைக்குப் பிறகு சர்வதேச சங்கம் எல்லா தேசங்களும் அடங்கியதாகும். இதை நடத்த ஒரு நிர்வாக சபை ஜினீவாவில் இருக்கிறது. இச்சங்கத்

திற்கு அதில் சேர்ந்த ஒவ்வொரு தேசமும் ஒரு பிரதிநிதி அனுப்பலாம். இது தவிர சர்வதேச கௌன்ஸில் ஒன்று உண்டு. இது அமெரிக்கா, பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம், பிரான்சு, இடெலி, ஜெபான் இன்னும் நான்கு தேசத்தவர்களின் பிரதிநிதிகளடங்கியதாகும். பின்வரும் முக்கியமான விஷயங்கள் தீர்மானிக்கக் கூடியவைகளாகும். சண்டைக் கப்பல்களைக் குறைத்தல்—சண்டைசாமான்கள் செய்தல் ஆலைகளை அடக்குதல்—ஒரு தேசத்தை இன்னொருவர் அபகரிக்காமை—மத்தியஸ்தத்தில் விவாதங்களைத் தீர்த்தல்—சர்வதேச நியாயஸ்தலத்தை ஸ்தாபித்தல். சேராத தேசமும் இச்சங்கத்தில் சேர்ந்து விவாதத்தை தீர்த்துக் கொள்ளலாம். இப்படி இனிமேல் உலகத்தில் யுத்தங்களைத் தடுக்க இது ஒரு வழி ஏற்பட்டது.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 1 | 1261 | 1621 |
| 14 | 25 | தாதலால் | ததலால் |
| 51 | 6 | 1551 | 1651 |
| 53 | 10 | 1560 | 1660 |
| 67 | 3 | 1679 | 1689 |
| 68 | — | 88 | 68 |
| 68 | 9 | 1792 | 1692 |
| 79 | 11 | டாபால் | ட்ரபால்கர் |
| 81 | படம் | ஸ்தபானிஷ் | ஸ்பானிஷ் |
| 85 | 25 | அகடை | அகஸ்டஸ் |
| 86 | 6 | Gullivers | Gulliver's |
| 89 | 26 | சேர்கை | சேர்க்கை |
| 90 | — | எலிஜபெத | எலிஜபெத் |
| 92 | 2 | ஹனோவர் | ஹனேவர் |
| 95 | 24 | 1616 | 1716 |
| 96 | 5 | ஸ்டான்ஹோ | ஸ்டான்ஹோப் |
| 97 | 19 | ன்னுடைய | தன்னுடைய |
| 98 | படம் | வரல் போல் | வால்போல் |
| 103 | 27 | பாண்டியில் | பாண்டிநாயில் |
| 111 | 5 | கஷடம் | கஷ்டம் |
| 112 | 16 | தேஷ்யாக | யாக |
| 117 | 26 | மைனர்க் | மைனர்க்கா |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 121 | 1 | குபெஸ் | குபெக் |
| 121 | 7 | பங்கரஸ்ஸில் | பங்கர்ஸ்ஹில் |
| 123 | 18 | பாயினிஸ் | பாயினிங்ஸ் |
| 127 | 15 | பிரான்சிஸ்க் | பிரான்சிஸ் |
| 129 | 14 | 1973 | 1793 |
| 136 | படம் | நெல்லன் | நெல்ஸன் |
| 145 | 14 | தீபகப்பல் | தீபகல்பம் |
| 146 | 19 | ஹஸ்கியன் | ஹஸ்கிஸன் |
| 150 | 8 | வாய்கால் | வாய்க்கால் |
| 156 | 18 | உறியது | உரியது |
| 175 | 6 | வியாபரம | வியாபாரம் |
| 191 | 16 | வெர்சேல்ஸ் | வெர்சே |
| 192 | 25 | இருந்தன் | இருந்தன |

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186201
சென்னை-600 008

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.

*Copies can be had of :—*

1. **The Author**

or

2. **Messrs. V. S. Venkataraman & Co.,**

**Educational Publishers,**

**KUMBAKONAM.**

THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.